தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# பாளையப்பட்டுக்களின் வரலாறு

## தொகுதி - I

தமிழ்நாடு அரசு
கீழ்த்திசை நூலகச்
சுவடி

பதிப்பாசிரியர்
க. குழந்தைவேலன் எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்
டாக்டர். இரா. நாகசாமி

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981.

First Edition: 1981
T. N. D. A. Pub. No. 83

© Tamilnadu State Department of Archaeology

**Palayappattukkalin Varalaru, Vol. I**

954.82

Editor
**K. Kulandaivelan, M.A.**

8351a
25.6.87

General Editor
DR. R. NAGASWAMY

Price Rs. 6-75

Printed and Published by the State Department of Archaeology
on behalf of
Oriental Manuscripts Library, Madras.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதி களிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக் கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக் கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங் களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல் களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப் பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத் திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும் ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங் களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

**செ. அரங்கநாயகம்**
*27-12-1980*

C. ARANGANAYAGAM
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

# INTRODUCTION

The manuscripts published under this title "Palayappattukalin Varalaru" were collected by Col. Mackenzie, the well known collector of historical documents and Literary manuscripts. These are well known to historians as *Mackenzie Manuscripts* and are now preserved in the Government Oriental Manuscripts Library, Madras. Summaries of these Manuscripts have appeard in English and the Madras University has published one volume in English edited by Dr. T. V. Mahalingam. Even in this edition only the summary of the texts are given.The entire collection has not been published in original so far. We are now publishing the entire collection in original in four volumes.

A perusal of the text shows that, Mackenzie collected these family history of the erstwhile Palayappattu Pattakkārars and Zemindars, to prove their claim for titles and previleges and hence these are the most valuable documents which show the transition from the native administrative set up and life to the colonial yoke and how steadily the independence of the local lords were eroded. It is interesting to note that many of these families were able to give sufficient account of their ancestors. Most of them were able to recollect as far back as 16th century and some upto 14th century, beyond which the tradition is unable to bear any authenticity. In some cases, they plainly said that they have lost their family history in the political unrests and efflux of time. Many of the decendents of the families are still alive though reduced in their status.

The collection of the family history of the erstwhile local chiefs, besides throwing light on their way of functioning, provides ample evidence on the social customs and manners, that were prevalent in 16th to 18th centuries A. D This aspect has not been fully utilised by Sociologists and hope that this series will provide the basis for further research.

**Dr. R. Nagaswamy**

# உள்ளடக்கம்


1. அந்தியூர் தாலுக்கா சரம்பள்ளி கணக்குப்பிள்ளை கைப்பீது. 1
2. ஆண்டிப்பட்டி பாளையக்காரர் பொம்மநாயக்கன் வமிசாவளி 11
3. ஆயக்குடி ஜமீன்தார் கொண்டம நாய்க்கர் வமிசாவளி 18
4. ஆவலப்பன் பட்டி ஆவலப்ப நாயக்கன் வமிசாவளி 35
5. ஆவுடையார்புரம் பாளையக்கார் வமிசாவளி 39
6. அம்மையனாய்க்கனூர் ஜமீன்தாரி வம்முசாவளி 48
7. ஊற்றுக்குழி பாளையக்காரர் வம்சாவளி 39
8. ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டருக்கு எழுதிய கடிதம் 57
9. எமக்கலாபுரம் ஜமீன்தாருடைய வமுஸ்தாவழி கணக்கு 72
10. எறியோடு வல்லக்கொண்டமநாயகர் வமிசாவளி 77
11. காக்காவடி வேங்கடாசலநல்லண்ணக்கவுண்டன் வமிசாவளி 82
12. காங்கையம் பல்லவராய கவுண்டன் வம்முசாவளி 86
13. காங்கய மன்றாடியார் வமிசாவளி 92
14. கொப்பையனாய்க்கனூர் ஜமீன்தாரி வம்முசாவளி 105
15. கோட்டைக்காடு ஒடுக்கம் கறுப்ப தம்புறான் வமுசாவழி விபரம் 112
16. சல்லிப்பட்டி பாளையக்காரன் ஏரம நாயக்கன் வமிசாவளி 115
17. சிஞ்சுவாடி பாளையக்காரர் சம்பே நாய்க்கர் வமிசாவளி 120
18. தவசிமேடு ஜமீன்தாறி வம்முசாவழி கணக்கு 123

# அந்தியூர் தாலூக்கா சரம்பள்ளி கணக்குப் பிள்ளை கைப்பீது

## டி. 2955

கோயம்புத்தூர் ஜில்லா அந்தியூர் தாலுக்கா சரம்பள்ளி (கிராம)க் கணக்குப்பிள்ளை எழுதிக் கொடுத்த கைபீயத்து பூருவத்தில் கெட்டி (கோடி) முதலியாருடைய விவரம்-

முன்னாலே பெரியவர்கள் சொல்ல கேள்வினாலே கணக்கு காளிப்பிள்ளை யெழுதிய கைபீயத்துகள் :-

பூர்வத்தில் இந்தப் பிராந்தியத்தில் சாலிவாகன செகாபுத்தம் 1200-க்கு மேல் வேடர்கள்[ன்] பாளையக்காரராய் இராச்சியம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அந்த வேடர் ராச்சியம் பண்ணது சேர சோழ பாண்டியர்க்குப் பிற்காலம் வேடர் பாளையப் பட்டுயிருந்தது.

ஷை வேடற் றாளையில் பொடிராசு கெட்டியன் நாளது அசலு பேருபட்டது - சக்கர நுனுக்கம் - 1-சரம்பள்ளியில் தென் மனை காவேறிபுரம் அந்தியூரு இந்த யிடங்களில் அவாள் கட்டிவிச்ச கோட்டைகள் (இருக்கின்றன) - (யிறுக்குது).

இன்னும் இது முதலான யிடங்களிலே தேவஸ்தானம் முதலானது பிரசித்தம் பண்ணிவிச்சுயிருக்கிறார்கள்.

அந்த வேடனுடைய செனங்களும் அவாள் பரம்பரையா யிருக்கப்பட்ட யிடங்கள் முதலான(து)(வை) விபரமாய் தெரியவில்லை. அதுகளுக்கு தற்காலம் இருக்கப்பட்ட சாசனங்கள் சமீபத்தில் ஒண்ணும் யில்லே. அந்த வேட(னுடைய)(ர்கள்) ஆண்டு வந்த பட்டங்களிலே குண்ணவேடன் யென்னப்பட்டவன் அமராவதி பட்டணம் என்று தன்னுடைய பட்டணத்திற்குப் பேர் விச்சுக்கொண்டு இராச்சியபாரம் பண்ணிக்கொண்டு யிருந்தார். அந்த அமராவதி பட்டணத்தில் குண்ணவேடன் வம்சத்தில் சிறிது பேர்கள் ஆண்டு யிருக்கிறார்கள்.

மேலே யெழுதப்பட்ட அமராவதி பட்டணம் யென்னப்பட்டது நாளது அமறகுந்தியென்று பேர் வரப்பட்டு சேலத்து சீற்மையில்

ஓமனூரு தாலுக்காவில் அமறகுந்தியென்று பேறு யிருக்கிறது. அந்த வேடன்னுளேயில் இருக்கப்பட்ட ஒரு பட்டணம். அந்த பட்டணம் இப்போ ஒரு மேடா (மோடா) யிருக்கிறது. இப்படிக்கு வேடர் வெகுபேர் ராஜ்ஜியம் பண்ணியிருக்கிருர்கள். அது தங்கள் விசாரணேயில் சகலமும் தெரியவருகிறது.

அதற்கு பிற்காலும் சாலிவாகன சகாப்தம் 1800-க்கு மேல் மதுரை பாண்டிய சமஸ்தானத்துக்கு கர்த்தராகிய திருமலே நாயக்கர வர்கள் துரைத்தனத்தில் அவரிடத்தில் காரியகர்த்த யோக்கிய மாயிருந்த கொமாற யென்றும் கெட்டி யென்றும் ரெண்டு பேர் அண்ணன் தம்பிகள் ஊழியம் பண்ணிக் கொண்டுயிருந்தபோது அவாள் இடத்தில் ரொம்பவும் பிரீதியாயிருக்கும் காலத்தில் ஒரு நாள் ஆலயத்தில் மேல்படி ஞயக்கரவர்கள் அப்பியங்கஸ்நானம் பண்ண பொன் ஆலயத்தில் அவருடைய கீரிடம் முதலான ஆபரணங்கள் இங்கே வச்சுயிருக்கிறதே இந்த ஊழியம் பண்ணப்பட்ட தம்பியான கெட்டியன்.........ருசாவினுடைய கீரீடம் முதலான ஆபரணங்கள் வஸ்திரங்கள் தாவன கறீச்சுக்கொண்டு ராசாவினுடைய படுக்கை மேல் சாஞ்சுக் கொண்டு இருந்து அதுக்குமேல் ராஜாவினுடைய சிம்மாசனத்தில் நித்திரை பண்ணிஞன்.

அந்த சமயத்தில் ராசாவுக்கு ஊழியம் பண்ணிக் கொண்டு யிருந்த அண்ணனுன் கொமார யென்குறவன் முன்னுதாக வந்து ராசாவுக்கு அனுஷ்டானத்துக்கு வேண்டிய வஸ்தாபரணங்கள் எடுத்து கொடுப்பதற்காக அரண்மனே முன்னுக்காக வந்தான்.

வந்த விடத்தில் இந்த தம்பியான கெட்டி ராசாவினுடைய ஆபரணங்கள் வஸ்திரங்கள் முதலானதுகள் தறிச்சு கொண்டு சிம்மா சனத்தில் இருக்கிறவனேப் பாராமல் தன்னுடைய ஊழியத்தில் சாக்கிரதையாயிருந்தான்.

ருசாவானவர் திருமலே நாயக்கரவர்கள் அப்பியங் கண்ட ஸ்தானமான உடனே அரண்மனேக்குப் போகிறபோது தன்னுடைய ஆபரணங்கள் முதலானது ஊழியக்காரன் தரிச்சுக் கொண்டு சிம்மாசனத்தில் மேல் நித்திரை போகிறதை பார்த்து யெழுப்பாமல் வந்து விட்டார்.

மறுபடி ராசாவானவர் போசனத்துக்குப் போன சமயத்தில் தம்பியானவனேக் காணேமே யென்று தேடிக் கொண்டு வந்தயிடத்தில் தம்பி அலங்காரத்துடனே சிம்மாசனத்தில் இருந்ததைப் பார்த்து-ரொம்பவும் மனசுக்கு விசனம் தோன்றி ராசா யிதுவழியாய் பார்த்துப்

போயிருப்பார் என்றும் இனிமேல் ஆக்கினை பண்ணிவிப்பார் என்றும் பயிஷு தோன்றி தம்பியை யெழுப்பி கீரீடம் முதலான ஆபரணங்கள் எல்லாம் அவ்விடத்தில் கழட்டிவிச்சுப் போட்டு அண்ணன் தம்பி ரெண்டு பேரும் மதுரையை விட்டுப் பராரியாய்ப் புறப்பட்டு வந்து அமராவதி பட்டணத்து பாளையக்காரன் சீர்மைக்கி சேர்ந்த காடையப் பேட்டைக்கி வந்து ஒரு நந்தவனத்தில் படுத்துக் கொண்டார்கள். அவாளுடைய சிரமத்துனுல் சூரியன் உதிச்சு பிரகாசமாகுரவரைக்கும் நித்திரை போயிக் கொண்டுயிருந்தார்கள்.

அந்த சமயத்தில் நாக சர்ப்பம் வந்து யிந்த தம்பியான கெட்டி யென்னப்பட்டவனுக்கு நிழலாய் முத்தித்து காத்துயிருந்தது. அந்த சமயத்தில் அந்த நந்தவனத்துக்கு கர்த்தராகிய ருகவன் மயிர் வேலை பண்ணப் பட்டவன் வந்து பார்த்து இந்த ஸர்ப்பம் விஷந்தீண்டி யிருக்கும் என்று மனசுக்கு தோன்றி ஷெடி நாவிதன் கை சப்தம் பண்ணினன். அந்த ஸர்ப்பம் தானே போச்சுது.

இவாளை யெளுப்பி னவிதன் கா..... டயான் யென்குரவனுக்கு சந்தானம் இல்லாதபடியினலே அவர்களை அதறணை பண்ணி சமலாபமா விசாரிச்சு தன்னிடத்தில் வச்சுக் கொண்டு யிருந்து தன்னுடைய வயித்துனுடைய ஷெடி தொழிலை கற்பிச்சுக் கொடுத்து வச்சுக்கொண்டு இருந்தான்.

இப்படிக்கு ஷெடி தொழிலில் சௌக்கியமாய் இருக்கிற காலத்தில் அக்காலத்துப் பாளையப்பட்டுக்குக் கர்த்தரான வேடர் வமுசத்தில் அமராவதி பட்டணத்தில் குன்னவேடர் என்னப் பட்டவனுக்கு மு......கு பொளவை ருசாபுன்னு வந்து உபத்திராப் பட்டுக் கொண்டுயிருந்தார். அந்த சமயத்தில் இந்த கெட்டி யென்னப்பட்ட பண்டித தொளுலளான அந்த பாளையக்கார வேடனுக்கு - மொகல் - மாமுகம் அளேப்பிவிச்சு இலுப்புனலே பக்ஷம் குடுங்கள் பண்ணி அந்த தகடுகளுக்கு துவாரங்கள் விட்டு அந்த மாமுசங்களையும் விச்சு அந்தயிலுப்புக் குடுக்கணும்.

முதுகிலே வச்சுக் கட்டி மூணுகட்டு கட்டின யெடத்தில் ரெனுமா ராச்சியாய் முதுகுலே துவாரம் இருந்து விழுந்து மூங்கில் கொளலினல் தான் அதினலேயிருக்கப்பட்ட சீயிகளையும் உறிஞ்சு உமிஞ்சி போட்டான். அதனலே அந்தப் பாளையக்காரனுக்குச் சரீரம் சொந்த மாச்சுது.

அதுக்கு மேல் அந்தப் பாளையக்காரனுக்கு இந்த கெட்டி வேடத்தில் ரொம்பவும் சந்தேமாயி இவனுடைய சேமலாபம்

விசாறித்து ஓளுகுருன யென்ன பேருபாதி பண்ண போரே யென்றும் எனக்குப் புத்திர சந்தானம் இருக்கிறது ஆனாலும் என்னுடைய ருசியத்துக்கு வடக்கே போகிறேன் என்று சொல்லி என்னுடைய சரீரத்தில் இருக்கப்பட்ட சீயை உறிஞ்சு ராச்சியம் பண்ணப்பட்டபடியினாலே நீ யின்று போல் கெட்டி யென்கிற பேரும் கொடுத்து அமராவதி பட்டணத்துக்குச் சேர்ந்த ராச்சியங் களையும் கொடுத்து விட்டு தான் புறப்பட்டுப் போனான்.

சாலிவாகன செகாபுத்தம் 1400-க்கு மேல் அமராவதிக்கி சேர்ந்த சீர்மை பாளையப்பட்டுக்குடையோன் கெட்டி யென்ற பேர் பெத்து வெள்ளாள சீயாத்தியான படியினாலே கெட்டி முதலியார் யென்று பேர் வந்து பாளையக்காரனாயி சீர்மையை அனுபவிச்சுக் கொண்டு வரும் காலத்தில் அவன் பாளையப்பட்டுக்குச் சேர்ந்த நாடு சீர்மை விஸ்தாரம் என்னவென்றால்

பவானி குடல்துரை அது வடகரை அஞ்சுனாடு-1-காவேறிக்கி யெள்ளகாப்பட்ட புலாசனாடு-1-ருசிபுரம்னாடு-1-இந்த நாலு நாட்டுக்குச் சேர்ந்த சீர்மைகளை பாளையக்காரர் அதிபதியாய் இராச்சியம் அனுபவிச்சுக் கொண்டு வரும் காலத்தில் அவன் பண்ணப் பட்ட கெடிகள் அடியாரெங்கள் விவரம்.

ஓமலூரு -1- கோட்டை -1- ஷெ பூவாள் நாட்டில் சாரமங்கலம் தேவஸ்தானம் கைலாசநாதரவர்களுக்கு அனேகம் திருபணைகள் முதலானதுகள் கட்டிவிச்சு தன்னுடைய தரும பிரீதியாக வேணும் என்று அனேக சிலாவிகிதங்கள் எழுதிவிச்சு யிருக்கிறான்.

வடகறே னாட்டிலே அந்தியூரு சாம்பள்ளி இங்கெட்டிகளுக்கு பஷதியாயி தொடையங்களுங் கட்டிவிச்சு கெடிகள் பஷ்தி பண்ணினான்.

பவானிகூடல் முதலான பிரசித்தி தேவஸ்தானங்களுக்கு அனேக மதிப்பனை முதலானதுகள் பண்ணிவிச்சான்.

சீயபள்ளி கெடியல் காவேறிக்கி அடுத்த கெருகு அக்கரெயில் மத்துகுறி யென்று ஒரு மலை அந்த மலைமேல் குறுக்கமாயி அந்த துருவத்து மலைமேல் தேன் பூச்சிகள் வீடு கட்டிக் கொண்டு விஸ்தார மாய் தேன் உண்டாக்குறபடியினாலே மதுகிரி யென்றும் தமிழில் தேன்மலை யென்றும் பேர் வரப்பட்டது.

அந்த துருக்கத்தே கெட்டி முதலியார் தெறு போட்டு கனவாய் கட்டி கம்படத்திப் பண்ணிவிச்சுக் கொண்டுயிருந்தார்.

ஷெ சீயளி கெட்டி முதலியார் வமுசத்தில் அமராவதி பட்டணத்தில் அந்த பாளையப்பட்டு சீர்மை ஆண்டு வந்த பட்டங்களுடைய விபரம்:-

சாலிவாகன சகாப்தம் 1400-க்கு மேல் ஆயிரத்தி அயினூறு வரைக்கும் ஆண்டுவந்த அவங்களுடைய பேருகள்

1 முதல் பட்டம் சீயாளி கெட்டி முதலியார் பட்டம் வருஷம்
2 இம்முடி கெட்டி முதலியார் பட்டம் வருஷம்
3 கொமார கெட்டி முதலியார் பட்டம் வருஷம்

இந்த மூணு பட்டக்காரரும் அனுப்பிவிச்சுக்கொண்டு வரும் காலத்தில் மைசூரு சமஸ்தானத்துக்குக் கர்த்தராகிய ஓடயறவர்கள் காரியத்துக்குக் காத்தராகிய பாகிலி கேப்பய்யரவர்கள் தளவாயினும் பெரியவற்கள் வந்து கொமார கெட்டி முதலி மேல் சண்டை பண்ணின போது யுத்தத்தில் கொமார கெட்டியை...........

இந்த கொமார கெட்டி முதலியார் அவர்கள் பட்டமாண்டு கொண்டு வரும் காலத்தில் இந்த கெட்டி முதலியாரவர்களுடைய தருமஸ்தானங்களை மைசூரு சமஸ்தான கருத்தராகிய சகோ தேவருச ஓடயறவர்கள் ஒன்னுடைய சீர்மையை நான் பார்க்க வேணும் என்கிறதாக யெழுதி அனுப்பிவிச்சார். கொமார கெட்டி யென்னப்பட்டவன் மைசூரு கருத்தற்கு அப்படிதானே பார்க்கலாம் என்கிறதாக யெழுதி அனுப்பிவிச்சார். அப்போ மைசூரு கர்த்தர் தமக்கு பொதலாயி பாகிலிகெப்பயரவர்கள் தளவாயி அப்பய்யறவர்கள் ரெண்டு பேரையும் சிறிது ...... தேயும் கூட்டியனுப்பிவிச்சார்.

அவாள் இருவரும் இந்த பாளையப்பட்டுக்கு வந்து பாளையப்பட்டில் இருக்கப்பட்ட கெடிகளையும் துருங்களையும் சீர்மைகளையும் பார்த்து இந்தச் சீர்மை நல்லாயிருக்கிறது யென்று இததேயென்குலாவகச் சொல்லி அப்பணையாஞல் கீள்ளளுக்குள்ளே யெழுதியனுப்பிவிச்சு விட்டார்.

இந்த கொமார கெட்டி முதலியார் என்னப்பட்ட பாளையக்காரன் மைசூரு கர்த்தர் வருகிறுன் என்னும் படியாயி அவர்க்கு பிரிதியான வஸ்து வாகனங்கள் முதலானதும் தருவிச்சு கொண்டு யிருக்கும் யெடத்தில் அவாள் காரியனுக்காரர்கள் வந்தபடியினுலே இவாளுக்கு ரொம்பவும் மரியாதை பண்ணிவிச்சார்.

......................

1 பான கெப்பய்யற் தளவாயி அப்பையரவற்கள் இருவரும் இவ்விடம் எல்லாம் பார்த்துக் கொண்டு கெட்டி முதலியாரவர்களி

டத்தில் மரியாயி சொல்லிக் கொண்டு புறப்பட்டு ......... ஊருக்குப் - போகறதாயி சாஞ்சுப் போனுர்கள்.

கொமார கெட்டி யென்னப்பட்டவரும் அவாள் சாஞ்சுப் போனுங்கோ யென்னும் படியாயி அவர் தன்னுடைய அரண் மனேயில்தான் இருந்தார்.

..................

ஓமலூரு கெடியில் கெட்டி முதலியாருக்குக் காரியகர்த்தராகிய (தகுனுததகாறுடையான) இரகுநாத (கோடி) யென்னப் பட்டவன் ஓமலூருக்கு கெட்டியாக இருந்தான்.

இவாள் மைசூருக்கு சாஞ்சுப் போன தளவாயி அம்பைய்யன் பாதவி கெப்பய்யன் இருவரும் இந்த கெட்டி முதலி பாளையப்பட்டு யெல்லேயிலே முக்காத வழி போயிக் கொண்டு யிருக்கிற யெடத்தில் முன்னுல் ரகசியமாயி-நாம் இந்தப் பாளையப்பட்டுக்கு யெழுதின சேதிக்கி அந்தப் பாளையப்பட்டத்தை வாங்கிக் கொண்டு செயஸ்தம்பம் போட்டு வரச் சொல்லி கறுத்தனுடைய நீறும் வந்தது.

..................

அந்தச் சனத்தில் ருகோனுத்திரியாயி புறப்பட்டு தம்முடைய சேனே கூட்டத்தின் படிக்கொண்டு கெட்டி முதலியாருடைய பாளேயப்பட்டிக்கி இருக்கப்பட்ட கெடிகளே சரம்பள்ளி - 1 - ஓமலூரு - 1 அனத்தகிறி - 1 - அந்தியூரு - 1 - இந்த நாலு கெடியிலேயும் அவாளாவாயேமாற - யிருக்குற வேளேபார்த்து கெடிகள் எல்லாம் மதம்மநாதம் பண்ணிக்கொண்டு ஓமலூரு - தா... ... ... ங்கலத்தில் முகாமாயிறுக்குர கெட்டி முதலியாரை கயிப்புடியாயி புடிச்சுக் கொண்டார்கள்.

அப்போ இந்த வச்சனே யிந்தப் பாளேயப்பட்டுக்குத் தெரியாமல் இருந்து இந்த பித்துறீ தெறியாமல் இருந்து இந்த சமயத்தில் அந்தட்சணம் கெட்டி முதலியாருக்கு மச்சினனுன தளவாயி ரெகுனுதக் கவுண்டன் தன்னுடைய சூரத்தனத்தாலே மைசூரு சமஸ்தானத்தாரோடே யுத்தமும் பண்ணினுர். செயகாலம் இல்லாத தினுலே இந்த பாளேயக்காருடைய செனமும் அங்கங்கே பராரியாய் இருந்தது.

அப்போ மைசூரு சமஸ்தானத்தார் ரகுநாதபாளேயரையும் கையிபுடியாயி பிடிச்சுக் கொண்டார்கள்.

அப்போ கோமாரகெட்டி முதலியானரையும் இரகுநாதப் பாளேயக்காரனேயும் இருவரையும் மைசூரு சமஸ்தானத்துக்குக் கர்த்த

ராகிய காரியக் கறுத்தற் பாகிலி கெப்பய்யன் மகள் யாயி அம்மையப் பனையும் சம்மாரம் பண்ணிப் போனார்கள்.

..................

அப்பாளையக்காரன் தம்முடைய சீமை முன் சபையினில் அவாள் சொல்லப்பட்ட கவி பாட்டு

கறுக்குடுது யென்மனது கையிலாசனுதா !
உறுக்குது சத்தே மனதினில் ஒறயாதோ தெய்வமே !
மனதில் கற்கும் இந்த மயிசூராரை வறவெழுது யென்னயிடத்தில்
விடிதிவிட்டு யென்னபலன்க கொண்டேன்

சித்திரமும் கலத்திரனும் திருமகலும் கோபுரமு ஓமக்கு
யித்தனையும் கட்டிவிச்சு என்னபலன் கண்டேன்.
கறுக்குடுது யென்மனது கையிலாச நாதா

இதுக்கு அர்த்தம்—கோடி (கெட்டி) முதலி யென்னப்பட்ட பாளையக்காரன் தரும குண நூலியாயி தெய்வக் கர்த்தியங்கள் பண்ணிக்கொண்டு யிருந்தவ னைபடியினாலே மைசூரை தந்தா ரென்றறிவிச்சு அவாளே தான்.........படியினாலே நிந்தாஸ்துதியாயி சொன்னார்.

அந்த பாளையக்காரன் சொல்லப்பட்டது ரெண்டாவது கவிப் பாட்டு.

புத்தியுள்ள றகுணுதன் போசன் தளவாயி மச்சான் கோடெயயே சீ றிகொ-யில்லாம-யேமாந்து அவனிறுந்தானே கோட்டெவிட்டு அவன் போனான்.

விட்டு விட்டு நாம் போனோம் வெளயாட மேலேறல சீர்மை வெட்டவழியாச்சுதே குடுது யென்பல்லு கயிலாசனுத்தா

இப்படிக்கு அனேகமாயி தெவத்துமேல் நொந்து கொண்டு அனேக பாட்டு சொல்லியிருக்கிறான்

..................

ஷ்டி இந்த மூனும் பட்டக்காறுடைய பாட்டன் (மொதல்) (முதல்) பட்டம் சீயாழி (கெட்டி) (கோடி) முதலி (யென்னும்)யார் என்னப்பட்டவரும் அவனுடைய தெய்வ பக்தியினால் ருசீபுரத்தில் தேகத்தே விட்டு தாரமங்கலத்தில் ரகுனாத சுவாமி சன்னதியில் போய் சகலமான செனங்களும் பார்த்துக்கொண்டு யிருக்கிறபோது உதிச்ச சீயாமத்துக்குள்ளே கால சந்தி பூசை வேளையில் அயிக்கமானார் என்று முன் இருந்த பெரியவாள் சொல்லப்பட்ட கேள்வி உண்டு.

ஷெ கெட்டி முதலியாருடைய வமுசத்துனுடைய சங்கதிகளும் அவாள் பட்டங்களுடைய வமுசமும் இது முதலானதும் தாரமங்கலத்தில் சில தேவஸ்தானத்தில் மதகளி ஸ்ரீசிலாவிதமாயி மெளுதியிறுக்குரது

அந்த தாரமங்கலம் என்னப்பட்டது சேலம் சீமையில் ஒமலூரு தாலுக்காவில் சேரப்பட்டது.

இதல்லாமல் கெட்டி முதலியார் பாளையக்காரராய் பறுவத்துவம் பண்ணிக்கொண்டு வரும் காலத்தில் அலயாமலையில் கீழே அடிவாரத்தில் ஒரு பாரையில் ஒரு கை உள்ளே போகும் படியாயி ஒரு சுரங்கம் பண்ணி அதில் ஒரு சங்கிலிப் போட்டு உள்ளே யென்னமோ போட்டு யிருக்கிறது.

இது செனங்கள் இழுத்தால் ரெண்டு முழம் வரைக்கும் வருகிறது அயினூறு செனங்கள் புடிச்சி யிழுத்தாலும் அந்த யிழுப்பு சங்கிலி இரண்டு முழத்துக்கு மேல் வருகிறது யில்லை. விட்டு விட்டவுடனே திடீர் என்று உள்ளே விழுகிற சப்தம் கேழ்க்கிறது.

கோக்கு இறுந்தான் பாளீ குவைகளு மங்கறடு போன அங்கீண்டு பொன் நீங்கேயிலே பொன்னிவ தெண்டு பொன் ரங்கியில்லே அனந்த வள்ளம் அனலாமலையில்லை

..................

இதுவுமல்லாமல் சரம்பள்ளி தேவஸ்தானத்திலேயும் இது யின்னும் யிருக்கப்பட்ட கெடிகளிலேயும் கெட்டி முதலியார் நாளையில் சேகரம் பண்ணப்பட்ட சலவை கற்கள் சதுரமாயி மூணு கெஜத்துக்குச் சதுர கற்களாயி அனேகமாயி இருக்கிறது. 1807 ஸு ஏப்ரல் மீ 30 எழுதி விச்சுது.

கெட்டி முதலியாறுக்கு பிறுக்காலத்தில் உண்டானதிற்கு கவிப் பாட்டு:

வன்னத்தடுக்கு வடாமகலே மன்னறுக்கு
அடங்காத மஷதச கட்டாறி
..............................

வணங்காத கெட்டி மொதலியென்று பெறப்பட மன்ன பாண்டி சமஸ்தானத்துக்குக் கர்த்தராகிய திருமலைநாயக்கரவர்கள் இந்த கெட்டி முதலியாருக்கு பாளையக்காரர் தூது யென்று கேள்விப்பட்டு தம்மிடத்தில் ஊழியம் பண்ணப்பட்டவன் என்று அவித்தியாயி தோணி சிறிது தனத்தேயும் கொடுத்து தளவாயி ருமபய்யன்வரானே

ரத - கஜ - துரக - பதாதி தளத்துடனே கெட்டிமுதலியை புடிச்சுக் கொண்டு வரச்சொல்லி யனுப்பிவிச்சார். அப்போ அந்த கெட்டி முதலியார் என்னப்பட்டவர் தளவாயி நறசப்பய்யனேயும் தனத்தேயும் எகிறிச்சிப்போட்டார். தளவாயி நறசப்பய்யன் ஷெ மதுரை சமஸ் தானத்துக்கு (யென்னுன்) கெட்டி முதலியாரை புடிச்சுக் கொண்டு வர என்னுல் ஆகமாட்டாது ......யென்று யெழுதி அனுப்பிவிச்சார். அப்போ திருமலே நாயக்கரவர்கள் நம்மிடத்தில் ஊழியம் பண்ணிக் கொண்டுயிருந்தவனுக்கு பிறபலத்துக்கு யேது யிருந்தபடியினுலே நம்ம கிரீடம் முதலான ஆபரணங்கள் வச்சுக்கொண்டான் என்னும் அப்படிப்பட்டவனே நாமே வச்சுக்கொண்டுயிருக்கவேணும் என்று மனசுக்குச் சந்தோஷந்தோன்றி கெட்டி முதலியாருக்கு நாயக்கரவர்கள் நீ முனே யெடத்தில் முன்னுல் இருந்த படியினுலே இப்போ உனக்கு பாளேயக்காரர் ராஜயோகம் வந்ததையும் உன்னுடைய கீர்த்தியுங் கேட்டு ரொம்ப சந்தோஷ படுகிறோம் நீயி ஒரு தரம் வந்து மனம் கண்டு போகவேண்டும் என்று ரொம்பவும் எழுதினுர்.

கெட்டி முதலியாருக்கு திருச்சிருப்பள்ளி-மதுரை சமஸ்தானம் நாயக்கரவர்கள் நிறுபம் வந்தபடியினுலே முதலியிடம் சீயாளி கெட்டி முதலியார் என்னப்பட்டவர் நிறுபத்தைப் பார்த்துக் கொண்டு அதில் வணக்கமாய் எழுதி தரப்பட்டதாயும் அறிஞ்சு கொண்டு நாம் மதுரை சமஸ்தானத்துக்கும் போகிவிட்டு வரவேணும் என்று தோன்றி சகலமானவஸ்து வாகன முதலானதும் எடுத்துக் கொண்டு.................
மதுரை சமஸ்தானத்துக்குப் புறப்பட்டு வந்தார்.
..........................................
..........................................

மதுரை சமஸ்தானத்துக்கு அதிபதியான திருமலே நாயக்கரவர்கள் கெட்டி முதலியார் வருகிறுர்கள் என்று சேதி கேட்டு யெழுபத்தி ரெண்டு பாளேயக்காரரையும் அழைப்பிச்சார்.

கெட்டி முதலியார் மதுரை சமஸ்தானத்துக்கு வந்தவுடனே சகல மரியாதியுடனே அவர் கொண்டு வரப்பட்ட சேனேயும் அவரையும் ஆனே மேல் வரச்சொல்லி உத்திரவு பண்ணி வணங்காதவனே வணங்கப்பண்ண வேணுமென்று மனசுக்குத் தோணப்பட்டு தன்னுடைய அசுனவாசலுக்கு அனேகமாயி யிருக்கப்பட்டவன் குனிஞ்சுவரும் படியாய் பாளேயம் பண்ணிவிச்சார். அப்போ கெட்டி முதலியா ரானவர் ஆனேமேலே போகிற போது அந்த அகார வாசலுக்குப் போற போது முன்னுக்கும் குனியாமல் பிண்ணுக்கு மல்லாக்காயி படுத்துக் கொண்டு ஆனேயைக் கொண்டு போய்விட்டார். ...............

திருமலை நாய்க்கரவர்கள் கெட்டி முதலியார் கொண்டு வரப்பட்ட நதுருகளையும் வாங்கிக் கொண்டு அங்கே தானே யெழுபத்திரண்டு பாளையக்காரரையும் இந்த கெட்டி முதலியாரையும் இவ்விடத்துக்கு வறவேன்னும் சொன்னுர். ..............................

திருமலை நாயக்கரவர்கள் கெட்டி முதலியாரை தன்னுடைய யோஜனையாலும் தன்னுடைய கையில் யெடுப்பிவிக்க வேணும் என்று நிரைச்சு யெழுபத்திரெண்டு பாளையக்காரரையும் போஜனத்தில் வரப்பட்ட யெஜமானர்களே வரவேணும் பின்னை ஒருத்தர் வரக்கூடாது யென்றும் பாளையக்காரரை மாத்திரம் அழைப்பிவிச்சு யிலைப் போட்டு சகல பதார்த்தங்களும் பட்சன போசனத்துக்குப் பரமாரபோது கெட்டி முதலியார் என்னப்பட்டவர் (சொரையெலயெ) சுர இலையைக் கொண்டு வந்து துரையன போட்ட யிலையை தள்ளிப் போட்டு தான் சுரயிலையைப் போட்டுக் கொண்டு போஜனம் பண்ணு கிறபோது அந்த சொரையிலை நன்ருய் வெந்து கீரையாயி நன்ஞயி சமஞ்சுயிருந்தது. கெட்டி முதலியார் அந்த யிலையோடே பட்சிச்சு விட்டார்கள். எல்லாரும் போஜனம் பண்ணின பிற்பாடு அவாளவால் போஜனம் பண்ணயிலையைக் கையில் எடுத்துக் கொண்டு போக வேணும் என்று துரையப்பனை ஆச்சுது. அந் பிறகாரம் எழுபத்தி ரெண்டு பாளையக்காரரும் இலையை யெடுத்துக்கொண்டு புறப் பட்டார்கள்.

இந்தக் கெட்டி முதலியார் என்னப்பட்டவர் இலையைப் பட்சித்தும் போட்டு கையை வீசிக்கொண்டு புறப்பட்டார்கள். அப்போ மதுரை சமஸ்தான துரை அவர்கள் (பார்த்து) இந்தக் கெட்டி முதலியாரைப் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு பகுவகுமானங்கள் பன்னிவிச்சார்கள். இந்த கெட்டி முதலியாருடைய வமிசாவளி

1 முதல் சீயாளி கெட்டி முதலி யென்றும்
2 இரண்டாவது இரகுநாத கெட்டி யென்றும்
3 இம்முடி கெட்டியென்றும்
4 புணக்கன் கெட்டி யென்றும்
5 வணங்காமுடி கெட்டி முதலி யென்றும்
6 கொமார கெட்டி முதலி யென்றும்

இந்த ஆறு பேர்கள் வமிசத்திலே இராச்சியம் பண்ணினது. பதின்மூன்று தலைமுறைவரையில் இராச்சியம் பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

★

# ஆண்டிப்பட்டி பாளையக்காரர் பொம்மநாயக்கன் வமிசாவளி

## டி. 3138

தாராபுரம் துக்குடி அரவக்குறிச்சி தாலுக்காவுக்குச் சேர்ந்த ஆண்டிப்பட்டி பாளையக்காரர் பொம்மநாயக்கருடைய வமிசாவளி முதலான கைபியத்து என்னவென்றால்,

பூர்வத்தில் குந்தி தேசத்திற் கிராமத்திற் குடியிருப்புக்காரா யிருக்கப்பட்ட கம்பளசாதியில் தோத்திரத்தில் "மூத்தம நாயக்கன்" என்கிறவன் சேவகம் சேவித்துக்கொண்டு இருக்கும் நாளையில் அவ் விடத்தில் சிறிது குஞ்சுகுழந்தைகள் பந்துஜனம் உண்டானவள் ஆனபடியினாலே ஜீவனத்து மார்க்கம் இல்லாமல் பந்து சனங் களுடனே புறப்பட்டுக் காவேரிக்குத் தெற்கு முக்காத வழியில் இருக்கிற "தேவர்மலை" என்று பேர்பட்டு இருக்கிற விடத்தில் ஆல மரத்தின் கீழே இறங்கியிருந்தார்கள். அந்நாளையில் கிடையிலிருந்து பால் கொண்டு வருகையிலே கைதடுக்கிப் பாற்பானை தவறி கீழே விழுந்தது. விசனத்துடனே யிருக்கும் வேளையில் அந்த பால் தவறி விழுந்த விடத்தில் ஸ்ரீமன் நரசிங்கமூர்த்தி சுவாமி யிருக்கிறோம் என்று சொப்பனம் ஆச்சுது.

அந்நேரத்தில் அந்தவிடத்தைச் சோதித்துப் பார்க்கும் இடத்தில் நரசிங்கமூர்த்தி பெருமாள் உண்டான படியினாலே பூசை பன்னினார்கள்.

மேல் எழுதப்பட்ட மூத்தம நாய்க்கனுக்குப் பிள்ளை அஞ்சு பேர்கள் (1) சக்கம்சாமே நாயக்கன் (2) திருமலை முத்து நாயக்கன் (3) கெட்டப்ப நாயக்கன் (4) சக்கம் பொம்ம நாயக்கன் (5) தோட்டம நாயக்கன்

இந்த அஞ்சு பேரும் தேவர்மலையிலே யிருந்து வெகு சனங்கள் உள்ளவர்களாய் சமுசாரம் பிரிச்சுக் கொண்டு 1. சக்கமசாமய நாயக்கன் மணல்வாடிக்குப் போனான். 2. திருமலை மூத்தநாயக்கன் முள்ளாடிக்குப் போனான். 3. கெட்டப்ப நாயக்கன் தோட்டம நாய்க்கன் இவர்கள் ரெண்டு பேரும் அக்காலத்தில் சம்ரட்சணை பண்ணிக்கொண்டு யிருந்தபோது மாட்டுக்களையும் ஓட்டிக்கொண்டு

தெற்கே வரிசை நாட்டுக்குப் போய்விட்டார்கள். 4 சக்கம பொம்மயனுயக்கன் தன் குஞ்சு குளந்தையை அனேச்சிதமாய் கூட்டிக் கொண்டு பல்லாநத்தத்துக்கு வந்து சேர்ந்தான்.

அதன் பிற்காலம் சக்கன் பொம்மநாயக்கன் பத்திரகாளி என்கிற துறங்கியடைய நிலமை செய்துகொண்டு யிருந்தான். அதன் பிறகு ...கூடிய தேசாதிபதியான சந்திரசேகரபாண்டிய ராசர் அவர்கள் சமடசமத்தில் போயிச் சேர்ந்து சமஸ்தானத்தில் சேவுகத்தனமாய் இருந்து சீவனம் பண்ணிக்கொண்டுயிருக்கும் நாளையில் ஒரு நாள் சமயத்தில் சந்திரசேகர பாண்டிய (மன்னர்) ராசா அவர்கள் சமசமத் தில் பேட்டி பண்ணிக் கொண்டு தன்னுடைய சமுசாரங்களுடைய பரிதாபத்தை யெல்லாம் அறிக்கை பண்ணிக்கொண்டு என்னையும் என்னைச் சேர்ந்த சனங்களையும் காப்பாற்ற வேணுமென்று மனுவு கேட்டுக் கொண்டான் அந்நேரத்துக்கு பாண்டிய ராசா மிகவும் இவனுடைய பேச்சுகளுக்குச் சந்தோஷப்பட்டு உனக்கு என்ன வேணுமென்று கேட்டபடியினுலே எனக்கு ஆரண்ணியமான பூமியை விட்டால்...... பண்ணிக்கொண்டு கிராமம் உண்டு பண்ணிக் கொண்டு சமஸ்தானத்திலே இந்த மட்டும் பண்ணின வேலைகளுக்கு ஆசராய் நடந்து கொண்டு வருகிறேன் என்று சொல்லிக் கொண்டான்.

சந்திரசேகர பாண்டிய ராசாவானவர் மிகவும் சந்தோஷப்பட்டு ஆரண்ணியமாய் இருக்கப்பட்ட பூமியைக் கொடுத்தால் அதிலே கிராம பூமி உண்டு பண்ணிக் கொண்டு அரண்மனைக்குக் கூடுதலையான சேவகம் செய்துகொண்டு யிருக்கிறவனுக்கு எந்த பூமி விடலாகு மென்று உத்தி செய்தபடியினுலே சக்கன பொம்ம நாயக்கன் சொல்லிக் கொண்டது கொங்கு இருபத்து நாலு நாட்டிலே சேர்ந்த பூமிகளிலே எடச்சி கணுவாயிக்கு வடக்கு மல்லபுரம் நாவிதன் குட்டைக்கு மேற்கு குறவன் பாதைக்குத் தெற்கு சேந்தமங்கலம் கிராம எல்லைக்குக் கிழக்கு இந்த நான்கெல்லைக்கு உள்பட்ட பூமியை அரண்ணியமானது அந்த ஆரண்ணிய பூமியை எனக்கு உத்திரவு செய்ய வேணுமென்று கேட்டுக்கொண்டபடியினுலே சக்கம்ம பொம்ம நாயக்கனுக்குப் பொகுமதி பண்ணிக்கொண்டு இருபத்து நாலு நாட்டுக்குச் சேர்ந்த அரண்ணியத்தில் நீ கேட்டுக்கொண்ட அரண்ணியமான பூமி எங்க மலை உள்ளட்ட ... கன உண்டுபண்ணிக் கொண்டு உன் புத்திர பௌத்திர வம்சபாரம்பரையமும் சுகத்தில் அனுபவிச்சுக் கொண்டு அரமணைக்கு வேண்டும் காரியத்துக்குக் கட்டளையிட்டபடிக்கு சேவகம் பண்ணிக்கொண்டு வாவென்று கட்டளையிட்டு அனுப்பிவிச்சார்கள்.

கலியுக சகாப்தம் 4428 பாண்டிய ராசா அவர்கள் உத்திரவு படிக்கு கொங்கு இருபத்து நாலு நாட்டுக்குச் சேர்ந்த தன்னுடைய சாசனத்தைப் பத்து சனங்களேச் சேர்த்து வீடுகள் கட்டிவிச்சு கூம்பூரு என்கிற கிராமமும் உண்டுபண்ணி நரசிங்க பெருமாள் தேவஸ்தானம் உண்டுபண்ணி கூடியிருப்புக்-காரராய் இருந்தார்கள். ...

அதின் பிற்காலம் கலியுக சகாப்தம் 4533 பொம்மயநாய்க்கர் பல்லாநத்தம் குடியிருப்புக்காரராய் இருக்கும் நாளில் அக்காலத்துக்கு பாண்டிய தேசாதிபதியான கோட்டிகம்மராசம் நாயக்கர் குமாரன் விசுவனுத நாய்க்கர் அவர்கள் சமடசமத்தில் போய் பேட்டி பண்ணிக் கொண்டு தன்னுடைய பெரியோர்கள் சேவகத்திருணிகள் முதலானது களெல்லாம் அறிக்கை பண்ணிக்கொண்ட யிடத்தில் மிகவும் சந்தோஷப்பட்டு அகாலத்துக்கு நறபதி சமுஸ்தானதிபதியான பெனுகொண்டையாளப்பட்ட ராச்சியாதிபதியான விசய போக தேவமகாராயர் இவர்கள் சமடசமத்து ... தீட்டிக் கொண்டு போய் பொம்ம நாய்க்கன் என்கிறவன் சேவகத்தில் திராணி உண்டானவன் னென்று சொல்லி தம்மிடத்தில் சேவகம் பண்ணிக்கொண்டுயிருக்கும் படியாகவும் காடு வெட்டி உண்டுபண்ணின கிராமமும் முதலானதுகள் முன்னுலே பா -- -- -- -- யவு செய்தபடிக்கு உத்தரவு செய்விக்க வேணுமென்று சொல்லிக் கொண்டார்கள்.

அந்த நாளேயில் ராயர் அவர்கள் சக்கம் பொம்மநாயக்கனேப் பார்த்து நீ அந்த அம்புரா தொரை கையிலே வைச்சுக்கொண்டு யிருக்கிருயே இதில் என்ன -- -- -- -- -- --

செவுகதாஷ்ட்டிமி செயிவாயென்று கேட்டதுக்கு அறமணே யாறுக்கு எவ்விடத்திலே சத்துராதிகள் இருக்கிருர்களோ அவர்கள் பேரிலே கொண்டு யெரிந்தேனல் அப்போ தெரியவரும் என்று சொன்னுன். இப்படிக்கு செவுகதாட்டிமியாய் சொல்லுகிருயே இப்போ யிறும்பு துக்காப்பறியை அம்புருதூணியில் இருபிறமும் தட்டகுறுவ யெயிதால் உன் செவகதாட்டிமெயயை அறியலாமென்று சொன்னுர்கள்.

சக்கம் பொம்மநாயக்கன் இருப்புக் கொப்பரையை யெடுத்துக் கவுக்கச் சொல்லி அம்புராதூணியில் அம்புயெடுத்து வில்லிலே பூட்டி யிருந்த கொப்பரையை யிருபுறமும் தட்ட குருவியே யிருந்தது ......

ராயர் அவர்கள் அதனுலே மிகவும் சந்தோஷப்பட்டு- ...... சாமதுமாக வெண்டயம் முத்துதுருயி ........ ரணை ........ பூ சத்திரகுடை ...... வெ ...... னீல கொடை பசல செங்கடால் கெருட ...

... ஙல் - அனும்மத்தடால் இரங்கல் லாட்டம் - பல்லாக்கு உபயசாமரம் ... பஞ்சவர்ணபாவாடை ...குஞ்சகாளாஞ்சி வெள்ளி தீபட்டி வெட்டுப் பாவாடை ... மகற தோறணம் ஒத்தைக் கம்பம் - கூடாரம் - குதிரை மேலடங்கா நகாரு வீரசின்னம் தக்காளம் பூரிகை தாரை வாகார நவபத்து பட்ட ருசாகான் கட்டியம்......இது முதலான சகல வெகுமதி களும் கொடுத்து பட்டணபிரவேசம் பண்ணிவிச்சு பட்டாபிஷேகம் பண்ணி ராயர்பாளையக்கார் என்று பேரும் கொடுத்து பட்டத்து ஆயுதமும் கொடுத்தார்கள். அப்பொழுதே உன் பாளையப்பட்டுக்கு நீ போயிருந்து விசுவநாதநாயக்கரவர்கள் காரியத்தில் சாக்கிரதையாய் நடந்து கொண்டு வரவேணுமென்று கட்டளையிட்டு உன் வம்சப் பரம்ரையாய் பாளையப்பட்டு அனுபவிச்சுக் கொண்டு வரச் சொல்லி உத்தரவு கொடுத்தார்கள்.

ராயர் அவர்கள் சமுகத்திலே சகல வெகுமதிகளும் பெற்று ராயர் பாளையக்காரரென்று பேர் பிரசித்திப்பட்டு சக்கம பொம்ம நாயக்கன் ஊர் வந்து சேர்ந்து தெத்துபட்டி கிராமம் - 1 - மஞ்சிபள்ளி கிராமமும் - 1 - அஞ்சாவுடையான் பட்டி - 1 - மஞ்சிபண்ணி கிராமம் - 1 – ஈசநத்தம் 1. அம்மாம் பட்டி - 1 - ஆலா ... றது பட்டி 1. அஞ்சா வுடையான் பட்டி 1. சின்ன மறுதபள்ளி 1. திருகோரணம் 1. கும்பூரு 1. இதுகளிலே குடியேற்றி கிராமங்களுக்கு பேர் உண்டு பண்ணி... டகநதியில் அணைகட்டி நஞ்சை மாவிடை மறவிடை தோப்புகள் உண்டாக்கி ரங்கமலே மல்லிகார்ச்சுனசுவாமி குடகமாநதி கரையில் ஒற்றை பனை நிழலில் பெரிய நாயகி அம்மன்......ாறுக்கு - நரசிங்கப் பெருமாள் அனுமத்தப் பெருமாள் வரதராஜப்பெருமாள் இப்படிக்கு ஊர்களிலே உண்டான விஷ்ணு ஸ்தலம் சிவ ஸ்தலம் முதலான வெளங்கத் தக்கதாக ஆக்கிரமம் உண்டு பண்ணி கொடுத்து பிராமணாளுக்கு மானிய முதலானது கொடுத்துக்கொண்டு தருமங்கள் செய்து கொண்டு பிரசித்திப் புருஷளாய் பட்டம் ஆண்டுக் கொண்டு வந்த அந்த நாள் முதல் சக்கம பொம்ம நாயக்கன் பாளையப்பட்டு என்கிற பேர் பிரசித்திப்பட்டு பட்டம் ஆண்டு கொண்டு வந்தவாளு டையை பேர்களும் பட்டமங்களுடைய வரிசை வருஷம் இதின் கீழே எழுதப்பட்டதில் தெரியவருகிறது.

சாலிவாகன சகாப்தம் 1354 க்கு கலியுகம் 4533 முதல் ...

| | | |
|---|---|---|
| 1 | சக்கம பொம்ம நாயக்கன் பட்டம் | வருஷம் 20 |
| 2 | இவர் குமாரன் பெரிய தம்பி (பெரிய தம்பி) பொம்ம நாய்க்கன் பட்டம் | வருஷம் 25 |

| | | | |
|---|---|---|---|
| 3 | இவர் குமாரன் ஆண்டி பொம்ம நாயக்கன் பட்டம் | ஆண்டு | 15 |
| 4 | இவர் குமாரன் சிறுக்காம பொம்ம நாயக்கன் பட்டம் | ஷ | 25 |
| 5 | இவர் குமாரன் தாத பொம்மநாயக்கன் பட்டம் | ஷ | 13 |
| 6 | இவர் குமாரன் கருமந்தன்னு பொம்ம நாயக்கன் பட்டம் | ஷ | 26 |
| 7 | இவர் குமாரன் கதிற பொம்ம நாயக்கன் பட்டம் ஆண்ட | ஷ | 38 |
| 8 | இவர் குமாரன் இம்முடிபொம்ம நாயக்கன் பட்டம் ஆண்ட | ஷ | 37 |
| 9 | இவர் குமரான் பெரிய தம்பி பொம்ம நாயக்கன் பட்டம் | ஷ | 65 |
| 10 | இவர் குமாரன் குமாரபொம்ம நாயக்கன் பட்டம் ஆண்ட | ஷ | 50 |
| 11 | இவர் குமாரன் வண்டபொம்ம நாயக்கன் பட்டம் ஆண்ட | ஷ | 41 |
| 12 | இவர் குமாரன் சிறுகாரம் பொம்ம நாயக்கன் பட்டம் ஆண்ட | ஷ | 13 |
| 12 | | | 370 |

சாலிவாகன சகாப்தம் 1354 ஷ முதல் சகாப்தம் 1724 ஷ துந்துபி வருஷம் பாளையப்பட்டு ஆதீனம் உப்பின ஷ 3070 ஆண்டு வந்த பட்டம் 12. என்னுடைய பெரிய தாயாருடைய பிள்ளை சிறுக்காம பொம்ம நாயக்கன் பட்டம் வரைக்கும் ஷ 370.

மேல் எழுதப்பட்ட வம்ச பரம்பரையிலே பன்னிரண்டு பட்டதாருடைய சவுரிய அவுதாரிய காம்பீறியங்களுடைய வயனங்கள் இது எழுதியிருக்கிறதில் தெரியவருகிறது..............

ரெண்டான் பட்டம் பெரிய தம்பி பொம்ம நாயக்கன் நாளையில் அக்காலத்தில் பாண்டிய தேசாதிபதியான விசுவநா தனுயக்கர் அவர்களுடைய தயவு ரொம்பவும் சம்பாதிச்சுக் கொண்டு இருக்கும் நாளையில் தன்னுடைய பாளையப்பட்டிச் சேர்ந்த ரங்கமலை மல்லிகார்ச்சுன சுவாமிக்குப் பூசை பண்ணப்பட்ட ஆண்டிகள் கூடி இருப்பாய் இருந்த ஊரிலே கோட்டையும் போட்டுக் கொண்டு குல தெய்வமாய் இருக்கப்பட்ட மாலமடமங்கள் உண்டு பண்ணிக்

கொண்டுயிருந்த படியினாலே அந்த ஊருக்கு ஆண்டிபட்டி என்றும் நாளது வரைக்கும் ஆண்டிப்பட்டி பொம்மநாயக்கன் பாளையப்பட்டு என்றும் பேர் பிரசித்தியாய் வரலாச்சுது.

மூனாம் பட்டம் ஆண்டிபொம்மநாயக்கன் நாளையில் அக்காலத்தில் பாண்டிய சமஸ்தானத்துக்கு கர்த்தராய் நாயக்கரவர்கள் கட்டளை யிட்டபடிக்கு தம்முடைய பாளையப்பட்டுக்கு அறமனைக்கு காணிக்கைகளும் கொடுத்துக் கொண்டு ராயர் சமஸ்தானத்திலே பெற்ற பிருதுகள் ஆயுதங்கள் முதலானதுகளையும் பாளையப்பட்டுக்குச் சேர்ந்த கிராமங்களிலே சகலமும் அனுபவிச்சுக் கொண்டு யிருந்தார்...

இதன் பிற்காலம் ஆறும் பட்டம் கருமங்கண்ணு பொம்ம நாயக்கன் நாளையில் அக்காலத்தில் ராச்சியாதிபதியான நாயக்கர் அவர்கள் நாளையில் கி..த்து பாளையப்பட்டுக்காரர்கள் எல்லாம் புறப்பட்டு வந்து பெரியதாராபுரம் கொளிஞ்சிவாடி முதல் ஆறு நாட்டிலேயும் அடிச்சமாடு பிடிச்ச செரையுமாக கொள்ளையிட்டுக் கொண்டு போகும் நாளையில் அந்த சமயத்தில் கருமங்கள பொம்ம நாயக்கன் ஜனங்களும் கூடப்புறப்பட்டு கிளக்கத்துப் பாளயக் காரருடனே யுத்தம் பண்ணி ஆறு நாட்டிலேயும் கொள்ளையிட்ட மாடுகள் சிறைகள் முதலானதுகளை திருப்பிக் கொண்டு வந்தார்.

அந்த சமயத்தில் அறு நாட்டிலேவுள்ள நாட்டார்கள் அனைவரும் எங்கள் நாட்டிலே கொள்ளை போனமாடுகள் சிறைகள் திருப்பிக் கொடுத்து வகமானித்தபடியினாலே உங்கள் வசம் பரம்பரைக்கும் இந்த ஆறு நாட்டிலேயும் பாதிகாவலு பட்டவர்த்திக்கு அறமனை அறிஞ்சு நடந்து வரும்படியாக பட்டயமும் கொடுத்தபடியினாலே பாதி காவலும் பட்டவர்த்தியும் உண்டாச்சுது.

இதன் பிற்காலம் ஏழாம் பட்டம் கதிர்பொம்மநாயக்கர் நாளை யில் அக்காலத்தில் தங்கள் பெரியோர்கள் சம்பாதிச்ச பாளையப்பட்டு பாதிகாவல் முதலானதுகளை அனுபவிச்சுக் கொண்டு யிருக்கும் நாளை யில் ராயர் சமஸ்தானத்திலே உண்டான பிருதுகள் ஆயுதங்களுடனே கூட புறப்பட்டு மதுரை சமஸ்தானத்துப் போய் நாயக்கரவர்கள் பேட்டி பன்னிக்கொண்ட விடத்தில் இவர்களுடைய வீரபராக்கிரம சேவுக தான்மைகள் எல்லாம் கேட்டு சந்தோஷப்பட்டு வெள்ளி கட் டின பாலா பாஷிங்கம் முத்து குச்சு கனகதாண்டிகை இந்த வெகு மதிகளும் கொடுத்து இதுமுதல் உன்வசம் பாரம்பரியமாய் நவராத்திரி கொலுவு யிருந்து கொண்டு வாவென்று சொல்லி இம்முடிகதிர பொம்ம நாயக்கர் என்று பேரும் கொடுத்து அனுப்பிவிச்சார்கள். அதுமுதல் இம்முடி என்னப்பட்ட பேர் வரப்பட்டது

அந்நாள் முதல் எங்கள் ஆண்டிப்பட்டு கிராமத்துக்குச் சேர்ந்த தேத்துப்பட்டி கிராமம் -1- மஞ்சுவள்ளிகிராமம் -1- ஈசநத்தம் கிராமம் -1- அம்மாபட்டி கிராமம் -1- ஆலாமரத்துப்பட்டி கிராமம் -1- அஞ்சாவுண்டான்பட்டி கிராமம் -1- எறுமாறுபட்டி கிராமம் -1- சின்ன மஞ்சவள்ளிபட்டி கிராமம் -1- கும்பூரு கிராமம் -1- திருக்கோரணம் கிராமம் -1- இந்தப் பத்து கிராமத்திலே வரப்பட்ட வரி மானங்கள் எல்லாம் அனுபவிச்சுக் கொண்டு ஆறு நாட்டிலே உள்ள பாதிகாவலும் பட்டவர்த்தியும் அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

இதின் பிற்காலம் பதிஞேராம் பட்டம் தொப்பனூருன் இம்முடி வண்ட பொம்மநாயக்கர் நாளையில் ஆண்டிபட்டியை விட்டு அம்பாபட்டி கிராமத்துக்குச் சேர்ந்த மஞ்சஜ செங்கறனுவிப்பட்டியில் மாலை மடமுகட்விடிச்சு பேட்டை உண்டுபண்ணிக்கொண்டு சர்க்காரிலே கட்டுப்பண்ணினபடிக்கு பெஷகசு சர்க்காருக்கு செலுத்திவிச்சு கொண்டு பட்டம் ஆண்டு கொண்டு வந்தார்கள்.

மகா ராச ராசஸ்ரீ கும்பினியார் அவர்கள் கடாட்சத்திஞலே மான மரியாதைகள் அறிஞ்சு ருத்திரோத்காரி வருஷம் தை மாதம் 15-ஆம் தேதி சுக்கிரவாரம்நாள் பட்டம் கட்டிவிச்சபடியிஞலே கும்பினி சர்க்காரிலே கட்டுப்பண்ணினபடிக்கு நடந்து கொண்டு என் பாளையப் பட்டுக்கு ஆயக்கட்டு பேரீஜில் அஞ்சில் ரெண்டு பங்கு ஜாரியாய் தயவு பண்ணியிருக்கிறபடியிஞேலே அஞ்சில் ரெண்டு பங்கு அனுபவிச்சுக் கொண்டு துரை அவர்கள் கடாட்சத்துக்குப் பாத்திரனுய் பெரியதம்பி பொம்மநாய்க்கன் என்ற பேர் உள்ளவனுய்க் காத்து இருக்கிறேன்.

என் பாளையப்பட்டுக்குச் சேர்ந்த நாற்பாங்கு எல்லைக்குள் பட்ட பூமியில் வகையரு 248 பா. தீர்வை ஷெி 508 புறு ஷெி அந்தனேலம் இராமகிரி பாளையப்பட்டு "சாமையநாயக்கன்" எல்லைத் தகராறு செய்து கட்டிக்கொண்டு இருக்கிருன். (கும்பினி) கம்பெனி சர்க்காரிலே என் மானம் மரியாதைகள் அறிஞ்சு காப்பாற்றி இரக்ஷிக்க வேண்டிக் கட்டுப்பண்ணினபடிக்கு நடந்துவரக் காத்துஇருக்கிறேன்.

(1807) ஆயிரத்து எண்ணூற்று ஏழாம் வருஷம் ஆகஸ்டு மாதம் 30 முப்பதாம் தேதியில் ஆண்டிப்பட்டி பாளையக்காரர் - பெரியதம்பி பொம்மையநாயக்கன் ஒப்பிதம்.

✱

# ஆயக்குடி ஜமீன்தார்
# கொண்டமநாயக்கர் வம்சாவளி

## டி. 2851

*மகாருசருச ஸ்ரீ கர்னெல் காலன்மக்கிஞ்சி சாயபு சறவியர்ஜன்றல் யிண்டியாதுரை அவர்கள் மச்சூருக்கு தரியாபத்து நிட்டலனுயன்னு அய்யற்.*

*கோயம்முத்தூர் ஜில்லா திண்டிக்கல் வகைரு தாலுக்கா ஆயக்குடி பாளெயப்பட்டு ஜமின்தாரி கொமாற கொண்டமனுயக்கர் மிகவும் வணக்கத்துடனே சலாம் செயிது எழிதிக் கொண்ட விண்ணப்பம் என்ன மென்றல்என்னுடைய பாளெயப்பட்டு உண்டானதும் வம்சா வழியின் வழியும் கெழ்வியுள்ள விவரங்கள் யிதின்கீழே எழிதிவரு குரது.*

*பூர்வத்தில் என் வமுஷஸ்தனுகிய பெரிஓபளகொண்டமனுயக்கர் னூளெயில் அக்காலத்தில் சாலிவாகனசகம் 1321... கலியுகம்4500 யிதின் மேல் செல்லாநின்ற விக்கிறம வருஷத்தில் வடக்கே - ராஜ ராஜ டில்லி பாச்சாயி சமஸ்தானத்தில் சிறுதுபாறுக்கும் - குதிரைக்கும் சற்தாருக சேவுகம் செய்து கொண்டு யிருந்தாற்கள். அப்படியிருக்கும் னூளெயில் மருட்டி தேசத்து ருசாக்களாகிய சின்னபந்து பெரியபந்து என் குறவாள் பேரில் ராஜ ராஜ டில்லி பாச்சாயி தண்டு சேகரம் செயிது [வேடர் என்றும் கம்பளத்தார் என்றும் சொல்லப்பட்ட ஒன்பது கம்பளத்தில் சேற்ந்தவாள் மிக கோத்திரஸ்தராகிய] ஷெடி யாரை செயித்து தேசத்தை கைவசப்படுத்தி கொள்ளும்படியாயி யோசித்து சற்தாருகிய பெரிஓபளகொண்டமனுயக்கரை அழைச்சி சொன்னது னமக்கு தோப்பாபணம் குடாமலும் வசவிறஷிக்கி வருமலும் யிருக்குற சின்னபந்து பெரியபந்து என்குறவரை கைவசப்படுத்தவேணு மென் றும் உம்முட ருணுவையும் னம்முட காசருனுவையும் சேர்த்துக் கொண்டு யிந்த க்ஷணமே நீர் பயணப்பட்டு போயி அந்த ருசாக்களெ வசப்படுத்திக் கொண்டு வரவேணுமென்று நிறுஉத்திரவு ஆச்சிது.*

*அப்படியே சம்மதிச்சுக் கொண்டு வெளிபரப்பட்டு தம்முட ஜாகைக்கு போயி போசனம் செயிவிச்சிகொண்டு பாக்ஷாயி வுத்திரவும் படி ருணுக்களெல்லாம் ஆயுதம் முகஸீதுடனே சேகரம் செயிது*

கொண்டு பயணம் பொரைப்பட்டு போயி ஷெ மருட்டி தேசத்துக்கு ஒரு நாழிகை வழிக்கி சமிபமாக டேருக்கள் போட்டு பாளையம் எறங்கிக்கொண்டு தம்முடைய ஸ்தானுபதிகளை அழைத்து இதோ சமீபமாக இருக்குற மருட்டிய தேசத்து ருசாக்கள் யிடத்துக்குப் போயி எங்கள் சர்தாராகிய பெரியொபயகொண்டப்பனுயக்கர் தளசேகரத்துடனே ராஜ ராஜ டில்லி பாச்சாயி சமக்ஷமத்திலிருந்து கோட்டைக்கு வெளியில் பாளையம் எறங்கி யிருக்குறுர்கள். நீங்கள் சமாதானமாக தோப்பாபணம் குடுக்குரீர்களா அல்லது உயுத்தத்துக்கு வருகிறீர்களா என்று அறிந்து வாரீங்கள் என்று நிறுவுத்திரவு குடுத்து அனுப்பிவித்தார்கள். அந்த க்ஷணமே ஸ்தானுபதிகள் போயி சமாச்சாரமெல்லாம் தெரியப்பட சொன்னதில் ஷெ மருட்டி தேசத்து ருசாக்கள் அனேகம் கோபத்துடனே சொன்னது நீங்கள் ஸ்தானுபதித்துவமாக வந்தபடி யினுலே ஆக்கினை செயிகுறது யுத்தமெல்லா ஆகையால் இதோ உயுத்தத்துக்கு வருவோம் என்று உங்கள் சற்தாருக்கு தெரியப் படுத்தச் சொல்லி சொல்லி அனுப்பினுர்கள். அந்த மெரைக்கி சர்தார் உடனே ஸ்தானுபதிகள் வந்து அரிக்கைப் பண்ணினுர்கள்.

சர்தாருகிய பெரியஓபள கொண்டப்பனுயக்கருக்கு ரெும்பவும் கோபம் வந்து ருணுக்களை அழைத்துக் கொண்டு ஆயுதமுஸ்திதுடனே தயாராக யுத்ததத்துக்குப் பரப்பட்டு கோட்டையை அடுக்குற போது இது சமாச்சாரம் மருட்டிய ராசாக்களுக்கு தெரியலாகி மிகவும் ஆக்ரோஷத்துடனேகூடி தளங்களுடனே புறப்பட்டு கோட்டைக்கு வெளிப்படுகுற போது இருவர் தளங்களும் நெருங்கி மகாயுத்தமாகுற போது யிந்த பெரிஓபள கொண்டமனுயக்கருடைய ருணுக்களிலும் பாக்ஷா காசா ருனுக்களில் ரொம்ப ஜனம் எரைந்து போயிவிட்டது. ஆகையால் - யின் பெரிஓபய கொண்டப்பனுயக்கருக்கு ரெும்பவும் கோபம் வந்து கையிலே பட்டா வாங்கிக் கொண்டு அனேகம் ஜனங்களை சேதப்படித்தி சின்னப்பந்து என்குற ருசாவை கைப்பிடியாக பிடிக்குறபோது, மேற்படி சின்னபந்துருசா கைலயிருந்த பட்டாவினுலே விசிரணத்தில் பெரியொபய கொண்டப்பனுயக்கருக்கு வலது புஜத்தில் காயமாச்சிது. அதுவும் பாருமல் அந்த சின்னபந்து என்குற ருசாவையும் பிடிச்சிக் கொண்டு தன்னுடைய டேருவுக்கு வந்து சேற்ந்தார். அப்போ அஸ்தமானமாச்சிது. பிற்பாடு தம்முடைய ருணுக்களிலும் பாச்சாயி காசருனுக்களிலும் காயம்பட்ட பேர்களெல்லாம் அழைத்து காய முதலானதுகளை பந்தோபஸ்து பண்ணிவிச்சி போசனத்துக்கு போகிறபோது மருட்டிய ருசாவாகிய சின்னபந்துவை அழைத்து வரச்சொல்லி சமாதானமாக சொல்லுகிருர் ஞமானுல் பாச்சா அவரிடத்திலிருந்து வந்து இவ்விடம் சீர்மையும்

பந்தோபஸ்து பண்ணிவிச்சிபோட்டு தோப்பாபணமும் வசூல் செயிதுகொண்டு போக வேணுமென்று வந்ததே தவிர உங்களிடத்தில் யுத்தத்துக்கு வரயில்லை ஆகையால் முன்னும் சமாதானமாக சொல்லி அனுப்பி வைத்தோம். அதுவும் நீங்கள் கேழ்க்காமல் யுத்தத்துக்கு ஏற்பட்டீர்கள். இப்பவும் நீறும் அகப்பட்டுக் கொண்டீர் உம்மையும் நாளை தினம் பாக்ஷா சமுகத்துக்கு அனுப்பி வைக்கப் போறோம். இன்னம் ரெண்டு தினத்தில் அவரும் ஆப்படு கொள்வார்போலே யிருக்குது. ஆகையால் யிது ருசாக்களுக்கு சரியில்லை யிப்பவும் பெரியபந்து ருசாவுக்கு நீர் ஆள் அனுப்பிவைத்து தோப்பாபணம் நிகுதிசெயிது குடுக்கும்படியாயி சமாதானம் செய்தால் உத்தமம் நாமும் பாக்ஷாயி அவாளுக்கு தங்களுடைய பிரதாபம் ரெம்பவும் சொல்லிக் கொள்ளு வோம் என்றதில் அவரும் சமாதானமாக சம்மதித்தார். அப்பால் அவருடைய ஸ்தானுபதியை அழைத்துவரச் சொல்லி சொன்னது பெரியபந்துருசா அவாளுக்கு னம்முடைய ஷேமம் சொல்லி தோப்பாபணம் நிகுதிபண்ணி குடுக்கும்படியாயி சமாதானம் பண்ணி வரச்சொல்லி அனுப்பிநூற் அப்பால் பெரியஒபயகொண்டப்பனு யக்கரும் சின்னபந்துருசாவும் சமாதானமாயி ஆலிங்கணம் பண் ணிக்கொண்டு யிருவருமாக போசனம் பண்ணிக்கொண்டிருக்கையில் பெரியபந்துருசாவிடத்துக்கு போன ஸ்தானுபதி வந்து சமாதான மாக சமாச்சாரம் சொன்னபடியினாலே யிருவரும் சந்தோசமாக யிருந்து அப்பால் செயினித்திக் கொண்டார்கள்

மறுநாள் உதயத்தில் பெரியபந்து ருசாவினிடத்திலிருந்து மனுஷற் வந்து சமாதானமாயி பெரியபந்துருசா அழைக்குறார் என்று சொன்னதில் சுபகரமாயி சின்னபந்துருசாவும் பெரியஒபயகொண்ட மனுயக்கரும் தளசேகரத்துடனே புறப்பட்டு மேற்படி ருசாவின் அரைமனை சமீபமாக போகச்சே அவரும் எதிர்கொண்டு வந்து அழைத்துக் கொண்டுபோயி அனேகமுபசாரம் செய்து தோப்பா பணம் நிச்சயித்துக் குடுத்து அனுப்பிவித்தார்கள். அப்பால் அவடம் விட்டு புரைப்பட்டு ா ா டில்லி பாச்சவினுடைய சமுகத்துக்கு வந்து இது சமாச்சாரங்களெல்லாம் அறிக்கை செய்ததில் மகா சந்தோசத்துடனே அனேக பூஷணுதிபிறுதுகளும் குடுத்ததென்ன மென்றால்

உபய விண்சாமறம்
வெள்ளக் கொடை
வெள்ளக் குதிரை
வெள்ளட ாயல்

யிவ்வளவும் குடுத்து பின்னேயும் அதிக சம்பளம் செயிது வைத்தார்கள். இப்படியிருக்கையில் ஒருனாள் தினத்தில் பாட்க்ஷாயி ஆகப்பட்டா நின்றவர் வீதிவிளாசம் வருகையில் எங்கள் தெருவிலெ என் மச்சுனனாகிய சின்னெபனாயக்கற் வாசல் முன்பாக நின்ற பெண்ணே பாத்து யிச்சைப்பட்டு அரைமனேக்கு போனவற் என் மச்சுனனாகிய சிங்காசனக் காவல் சர்தாற் மேற்படி சின்னெபநாயக்கரை அழைத்து சொன்னது உங்கள் பந்துக்களில் ரூபவதியான பொண் யிருக்குதென்று தோணுகுறது. அதை நீற் னமக்கு விவாகம் செயிது குடுக்கவெணு மென்று சொன்னதில் அவற் சொன்னது எங்கள் சாதி மகா கட்டுள்ள தாகையால் பெண் குடுக்கத்தகாது. ஆஜறது மன்னிப்பு குடுக்க வேணுமென்று றொம்பவும் கேட்டுக் கொண்டதில் கோபமாயி சொன்னது. நீற் னமக்கு அந்த பெண்ணே ஞானதினம் விவாகம் செயிது வைய்யாவிட்டால் பலொத்காறமாக செயிது கொள்ளுவே மென்று சொன்னர். உடனே அவர் வீட்டுக்குவந்து யிது சேதியை பந்துக்களானவரிடத்திலேயும் அறிக்கை செயிது சகலரையும் ருவுக்கு ருவே அழைத்துக்கொண்டு வலசைக்கூடை சகிதமாயி போகையில் பாக்ஷாவினுடைய மனுஷாள் பின்துடர்ந்து வந்தார்கள். யிப்படி முன்னுது பின்னுதாயி போகையால் மத்தியிலே வருகிற நதியானது பிறவாகம் பொருந்திய யெறச்சலுடனே போறதைக் கண்டு மயங்கி எங்களுடைய குலதைய்வமாகிய பெருமாளே பிராத்திச்சிக்கொண்டு நின்றதில் அக்கரையிலும் இக்கரையிலும் நின்ற புங்கமரங்கள் யிரண்டும் ஒன்ருயி பிறிதிச்சுகூடுச்சிது. எங்கள் பந்துக்கள் அனேவரும் உடனே அதின்பேரில் யேறி அக்கரை போயிசேர்ந்தார்கள். அப்பால் பின்னுலே வந்த பாக்ஷாயிசனம் புங்கமரங்கள்பேரில் ஏறுகுறபோது மரங்கள் நட்டமாக நிமிர்ந்துக்கொண்டது. அவாளும் அக்கரையில் நின்றுவிட்டார்கள். அப்பால் புரைப்பட்டு ருயர்சமஸ்தானமாகிய ஆனே கொண்டி தேசத்தில் விஜயநகர பட்டணத்துக்குப் போயி ஒருசத்திரத்தில் யெறங்கிகொண்டு யிருந்தார்கள். அப்படி நாலஞ்சுனாள் யிருக்கையில் அவாள் வற்தமானம் அறிந்து சமஸ்தானத்து காரியஸ்தர் ருயர் சமஷ்மத்தில் அறிக்கை செயிதார்கள். உடனே ருயர்வர்கள் மனுஷாளே அனுப்பிவித்து வரவழைத்து நீங்கள் யார் எங்கே வந்தீர்கள் என்று கேட்டார்கள். அப்போ அவாள் சொல்லி கொண்டது நாங்கள் பாக்ஷாயிடத்திலயிருந்த சற்தார்கள். எங்களுடைய ஜாதி மகாபந்து கட்டுள்ளது. அதில் பாக்ஷாயி அவர்கள் விவாகம் செய்யவேணு மென்றதில் சம்மதமில்லாமல் பிறப்பட்டு வந்துவிட்டோம் என்று அவாளுடை செரித்திறங்களேயும் சொல்லிக் கொண்டதில் றொம்பவும்

சந்தோசத்துடனே அவாளுக்கு யிருப்பிடமும் குடுத்து சிறுது வெகு மதிகளையும் செயிதுவிச்ச தென்னவென்றால்

வெள்ளைப்பக்றடால்
சூலடால்
குதிரைக்கி முன்செல்லி பின்செல்லி அண்டத்துமணி
கொலுவல்லயத்தில் ஒத்தைமணிக் கட்டின வாலா
வீரகண்டாமணி
சிங்க கொடி
மகற கொடி
அனுமகொடி
கெறுட கொடி
யியொட்டி
சாமுத்திறெக வெண்டயம்
குதிரைக்கி முன்கால் சிலம்பு முத்துமாலே முத்துதுறுயி டிக்கேமபற
செவத்தப்பட்டு சுறிட்டி
வெள்ளயப்பட்டு சுறிட்டி

யிந்த விருதுகளும் குடுத்து னம்முடைய ருணுக்களில் சிறிது சனங் களுக்கு சற்தாருக யிருங்கள் என்நு உத்திரவு செயிது பெணுகொண்ட இலாக்காவில் அகோபளம் என்குற ஊரும் அதைச்சேர்ந்த நிலவழிக் கிராமங்களும் சற்வமானியமாக விட்டுக்குடுத்து சற்வசாக்கிரதையாயி காத்திருக்கும்படியாயி ருயசிங்காசனத்துக்கு கர்த்தருகிய ருசா ருசா அம்பதேவ மகாருயர் அவர்கள் வுத்திரவு குடுத்தார்கள்

அதே மெரைக்கி வுத்திரவு பெத்துக்கொண்டு கொலுவு முகிந்த வுடனே அனுப்பிவிச்சிக்கொண்டு சாகைவந்து சேந்து மத்தாளுள் காலமே மேற்படி பெரிஒபய கொண்டமனுயக்கரும் அவர் மச்சுனருகிய சின்னெபனுயக்கரும் அவர் தாயாதிகருகிய பொடிதோப்பனுய்க்கரும் மூன்று பேரும் தங்களுக்கு விட்டு குடுத்திருக்குற கிருமங்களுக்கு போயி சுத்திபார்க்கும் போது அகோபளம் என்கிற ஊரில் விஷ்ணுஸ்தளம் இருந்ததைக் கண்டு அனேகம் சந்தோஷத்துடனே கோவிலுக்குப் போயி சுவாமிதெரிசினம் பண்ணிக்கொண்டு ஸ்தலத்தில் தானே வீடு வாசல் உண்டு பண்ணிவிச்சி கொண்டு மேல் சொல்லிய அரைமனை அலவலிலெயும் அதிசாக்கிறதையாயி இருந்தாற்கள் யிப்படி யிருக்கும் ஞளையில் பழனிமலேக்கி அதிபதியருகிய ஸ்ரீலொககற்தாவான தெண்டாயுதக் கடவிளாற் கிறுபை புறந்து சொற்பபணம் சாதிச்ச தென்னமென்றால் ஞமாளுல் மதிரைக்கி மேற்கே என்காத வழி தூறத்தில் யிருக்குற சிவகிறியின் பேறில் வாசம் பண்ணுகுறேம்.

ஆனுல் அந்த கிறியை சுத்திலும் வனுந்திறமான காடாருண்ணியமாக யிருப்பதினுலேயும் யின்னம் கொஞ்ச நேறத்தில் யிந்த ருயற் சமஸ் தானத்தில் இருக்குற கற்தாக்களாகிய சமக்ஷமத்தில் யிருக்குற கொட்டியமனுகம ணுயக்கற் பாண்டிய தேசமாகிய மதுருபுறிக்கி வருகுருற். அந்த முகாந்திறத்திலெ உங்களையும் வரைவழிக்குறேம். அப்பால் னம்முடய கிறியை குறித்து பூமியெ கேட்டுக்கொண்டால் கிடைக்கும். அப்போ கிறியை சுத்திலும் பட்டி பாளையும் கட்டி கொண்டு னம்முட சான்னியத்தியமஸ்துதி செயிதுக்கொண்டிருப் பிற்கள் என்று சொறப்பனமாச்சிது.

உடனே அது செதி ருயர் சமக்ஷமத்தில் விண்ணப்பம் செயிது கொண்டதில் பிற்பாடு னுலஞ்சு தினத்தில் மதுரை பாண்டிய ருசாவுக்கும் சோள ருசாவுக்கும் உயித்தமாயி பாண்டியருசா நிறுவ வறிக்கமாட்டாமல் எடுப்பட்டு ருயர் சமஸ்தானத்துக்கு வந்து அறிக்கை செயிதுகொண்டாற். உடனே ருயரவர்கள் யோசித்து கற்தாக்களாகிய கொட்டியமனுகமனுயக்கரையும் என் முன்னெற் ஆகிய பெரியஒபயகொண்டமனுயக்கரையும் சின்னெபனுயக்கரை யும் பொடிதோப்பா னுயக்கரையும் அழைத்து கொட்டியமனுகம னுயக்கரை பாத்து சொன்னது. பாண்டியன் சமஸ்தானத்தில் அனேக செல்லியம் னடப்பதுனுலே நீறும் இவாளுமாக போயி அவடத்து செலியம் ஒடிக்கி பந்தோபஸ்து செயிது வாறுமென்று...உத்திரவு ஆச்சிது அதெ மெரைக்கி யிவாளும் அரைமனைவிட்டு வெளிப்புறப்பட்டு தளசேகரத்துடனே மதுரைக்கு வந்து யிவடம் செல்லியங்கள் எல்லாம் ஒடுக்கி வைத்தார்கள். அதின் பெரில் கற்தாக்களாகிய கொட்டிய மனுகமனுயக்கர் அவர்களுக்கு மீனுக்ஷி சுந்தரேசுவரர் சன்னிதானத்து தெரிசினம் முக்கியமாக எண்ணி அவடம் சீர்மையை கைவசப் படுத்திக் கொண்டு யிருக்கவேணுமென்று யோசித்தார். அது அரிந்து னுகம னுயக்கறிடத்தில் என் முன்னெற்கள் கேட்டு கொண்டது யிவடம் செலியங்கள் தீர்ந்ததுனுலே னுங்களிருக்க கூடாது ருயர் சமூகத்திலெ அறிக்கை செய்யவேணுமென்றதில் னும் வறதக்கதில்லை நீங்கள் பொயி அரிக்கை செயிதுக் கொள்ளலாமென்று சொன்னுர் உடனே பொரப்பட்டு யிது செதியெ ருயர் சமுஸ்தானத்தில் வந்து சமக்ஷ மத்தில் அரிக்கை செயிததில் ஆயாசம பெறந்து சமுஸ்தானத்தில் கூட்டிய சபையைபாத்து கொட்டியம னுகமனுயக்கர் தலையை கொண்டு வறப்பட்ட சமர்தன் யாரென்று கெட்டரற்களப்போதெ அந்த சபையிலிருந்த ஷெ கொட்டியமனுயக்கர் குமாரன் விசுவனுத னுயக்கன் எழுந்து னுனே வந்து அவர் தலையை கொண்டு வருகுரேனென்றதில் சிறுது ஜனங்களை செகரம் செயிது அனுப்பினுர் அவறும் உடனே

மதுரைக்கி வந்து தகப்பனுடனே எதிற்து உயித்தம்பண்ணி அவரை கயிபிடியாக பிடித்திகொண்டு ருயற் சமுகத்தில் ஒப்பிவித்தாற். அப்பால் ருயறுக்கு கோபம் வந்து சிறசாக்கினை செயிவென்றதில் விசுவனாத ஞயக்கர் கத்தி உறிவி ஓங்கினாற் ஓடனெ ருயரவர்களுக்கு சந்தோஷம் வந்து ஷெ வுத்திரவை நிருத்திவைச்சி ஞகம ஞயக்கறவர்களுக்கு எதாபிறகாறம் கொட்டியம் உத்திறவு குடுத்து அவற் குமாரன் விசுவனாத ஞயக்கறுக்கு மதிரை பட்டமும் கட்டிவிச்சி அறிய ஞயக முதலியாறுக்கு தளகற்த்துத்வமும் குடுத்து என் முன்னொற்களை அழைத்து விசுவனாத ஞயக்கறுக்கு சொல்லி யிவாள் சமற்தானாகையால் கூடவெ அழைத்து கொண்டு போயி அவடம் பூமிகளை பந்தொபஸ்து செயிது யிவாள் கோரிய ஸ்தளத்தில் பூமியை குடுமென்று உத்திறவு ஆச்சிது அதெ மேரைக்கி அவாள் பின்னுடனே வலசே சகிதமாயி பறப்பட்டு மதுருபுறிக்கி வந்து—அரியனாயக முதலியார் அவற்கள்-72-கொத்தளத்துடனே கோட்டை போட்டதின் பேறில் எங்கள் முன்னோற்கள் பழனி ஸ்தளத்தை சுத்திலும் பூமியை குறித்துக் கொண்டு கேட்டு கொண்டதில் திருமஞ்சண வாசலுக்கு பிரதக்ஷணமாக ... 63 கொத்தளம் காவலும் குடுத்து கேட்டுக்கொண்ட பூமியையும் குடுத்து வெகுமதிகளும் செயிதார்கள். செயித பிறதுகள்

வெடிக்கி ஒத்தைமுக செல்லி
கொடைமேல் கொடை
பூசெக்கிறகொடை
செக்றவாளகொடை
மகறதோறணம்
றணவாசிங்கம்
வெள்ளிதடிகட்டியம்
உபயபூச்சக்கிறகொடை
யாசளமெல்வெள்ளி அவுதா
ஒட்டைகைமேல் நகாரு

யிதுகளை எல்லாம் குடுத்து அனுப்பி வைத்தாற்கள்

அப்பால் அவாளிவடம் வந்து தண்டகாறுண்ணியவனமாக யிருந்த ஞளது பச்சனாயக்கன்பட்டிக்கும் தென்கிழக்கு ஆலவிறுக்ஷத்தின்னடியில் வலசை எறங்கிபொசனம் செயிததில் அஸ்த்மானமாச்சிது ருத்திரியும் அவடத்திலிருக்குமளவில் என் முன்னாருகியபெரிஓபயகொண்டமனாயக்கர் சொர்பனத்தில் குலதைவமாகிய அகொபளப்பெருமாள் வந்து னும் உன் வல்சுடனெ கூடவந்தோம் யிந்த ஆலவிருக்ஷத்தின்னடியிலிருக்கும்படியான மனசுஉண்டாகி

எழுந்தருளியிருருடுமென்று சொற்ப்பணமாச்சிது அன்னேறமே எழிதிருந்து பாற்கும்பொது அப்படியெ சுவாமி உண்டாயிருந்தாற் அதுகண்டு அவடத்திலே கோவிலுகட்டி ஊரும் உண்டாக்க வெணு மென்று நினைத்ததில் ஒரு தாதன்பெறில் ஆவெசம் வந்து யிவடத்திலெ உளர உண்டாக்க வேண்டாமென்றும் னமரு சிறு கோவிலும்கட்டி ஒரு தாதனையும் வச்சி பூசியுமென்றும் னம்முடைய கோவிலுக்கு தென்மேற்க்கு ஒரு நாழிகை வழி தூரத்தில்ஒரு எடை பொண் அவளுடைய ஞயகனுக்கு சாதம் கொண்டு வந்து வைத்து காத்திருக்குருள். அவளைகண்டு கேட்டால் ஊற் கட்டுகுறத்துக்கு யெடம் சொல்லுவான் ளென்று உத்திறவு ஆச்சிது. அதே மெரைக்சி வந்து கண்டு அந்த பொண்ணையும் கேட்டதில் அந்த எடபொண் சொன்னது. அனுதினமும் யிந்த ஆறண்ணியத்தில் வாசமாயிருப் பதினுலே இவடத்தினுலே ஊருண்டுபண்ணினுல் உத்தமமென்று சொல்லி ஆனுல் யிவடத்தில் கட்டுகுற ஊருக்கு ஞமகறனமென்ன வென்று கேட்டால் யிதுதான் ஆயர்புறியென்று சொன்னுள்

அன்மெரைக்கெ அந்த வனத்திலே ஊருண்டுபண்ணி ஆயர்புறி என்று பேரும்வைச்சி அவடத்திலே வாசமாயிருந்தாற் அவற் நித்தி யப்பட்டி ஆலடி பெருமாள் தெரிசனத்துக்கு போயிவருவாற் ஒரு ஞள் தினத்தில் அவற்சொற்பனத்தில் ஞம் அயர்புறிக்கு வருகுறேம் அந்த எடய பொண் யிருந்த யிடத்தில் திருப்பணி முகித்து குடு மென்று உத்திரவு ஆச்சிது. அதே மெரைக்கி அந்த எடபொண்ணு யிருந்த எடத்தில் அம்மன் திருப்பணியும் எடபுறத்தில் சுவாமி திருப் பணியும் முகித்து ஆலடிபெருமாளை தியானம் செயிது பிரதிஷ்டையும் பண்ணி அகோபளேசுறபெருமாளென்று ஞமகறனம் வைச்சு ஒருதாதனையும் அதற்கு பூசித்து வரும்படியாயி நேமித்தாற் கொட் டையும் போடுவிச்சி.

இப்படிக்கி முதலாவது பெரியொபய கொண்டமஞயக்கற் தோற்த்தனம் செயித ஞு 31 ரெண்டாவது பட்டம் மேற்படி குமாரனுகிய ஓபய கொண்டம ஞயக்கர் ஞளையில் சிறிது அரண்ணியக் காடுகளை வெட்டி ருசுவு பண்ணி விச்சி குடிபடை சேற்த்து அகோப ளேசுற பெருமாள் கோவில் முன் மண்டபமும் கட்டிவைச்சிருக்கும் ஞளெலெ ஒரு ஞள்தினத்தில் தெற்கே மலேலே யிருக்குற பட்டி வேலப்பஞகுரவற்ஷெ ஓபள கொண்டமஞயக்கரிடத்தில் சொற்ப்பனம் சாதிச்சது யென்ன மென்றுல்

வடக்கே காங்கய ஞட்டில் யிருந்து சிறிது வெள்ளாளர் பஞ்ச காலத்தை பத்தி எடுபட்டு வலசக்கூட சசிதமாயி னூறுவீட்டுக் காரர் உன்னிடத்துக்கு வருகுருற்கள் அவாளுக்கு நீ வேண்டிய ஒத்தாசை செயிது ஞமிருக்குற மலையில் ஊருண்டு பண்ணிவிச்சிக் குடுமென்று உத்திரவு ஆச்சிது. அப்படியே அவாளும் வாரஞள் உள்ளாக வந்து தங்கள் தாவந்தம் சொல்லிக்கொண்டதில் மேற்படி ஒபளகொண்டமஞயக்கரும் சுவாமி உத்திரவுபடிக்கி மலைமேல் மேலபள்ளமென்றும் பெரும்பள்ளமென்றும் கவுஞ்சி என்றும் யிந்த மூணு ஊர் உண்டு பண்ணிவிச்சி ஷெ குடிகள் யிருக்கும்படியாக செயித பிற்பாடு சொந்த பூமியை யிஞமாக அனுபவிச்சிக்கொண்டு கொத்தளமும் காவல் கார்த்து கொண்டு கற்தாக்களுக்கு குமாற வற்க மாக னடந்து கொண்டு யிருவத்திஅஞ்சி வருஷம் தொறத்தனம் செயிதாற் ௵25.

மூன்ருவது பட்டம் ஷெ குமாறஞகிய குமாற கொண்ட மஞயக்கற் ஞளையில் அவறும் சிறுது பூமிகளை ருசுவுபண்ணி விச்சி ஒபளாபுறம் என்குற கிருமமும் கட்டி குடியேத்திவிச்சி பின்னையும் வருககிறிமலை சாற்வாய் யானைகள்யிருந்து கொண்டு பல சேதம் செயிகுறத்துஞலேயும் தெண்டாயுதபாணி சன்னதிக்கி பாதை மாற்கங்கமாக பொகுற செனங்களை செல்லியம் செயிவதையும் ஓடிக்கி வச்சிக்கொண்டு சொந்தபூமி யிஞமாக அனுபவிச்சுக் கொண்டு கொத்தளமும் காவல் காத்துக்கொண்டு தொரைத்தனம் செயித ௵ 40 ஷெ ஒபளாபுறம் கோட்டையும் போடுவிச்சாற்

ஞலாவது பட்டம் ஷெ குமாறஞகிய ஒபளகொண்டமஞயக்கர் ஞளையிலும் சிறுது பூமிகள் ருசுவு செயிது கள்ளர் சில்லரைகள் ஓடிக்கி வைச்சி கொண்டு சொந்த பூமியை யிஞமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளம் காவல் காத்துக்கொண்டு தொரைத்தனம் செயித வருஷம் 18 அஞ்சாவது பட்டம் மேற்படி குமாரகொண்டம ஞயக்கர் ஞளையில் பின்னையும் சிறுது பூமிகளை ருசுவு செயிது கொண்டு தென்திசை ஞேக்கி வருககிறிமலை சாறவாயி வேட்டை மாற்கம் பொயிவருகுற போது மத்தியில் ஊருக்கு சமிபமாயி வேலா மறத்தடியில் ஒரு லிங்க மிருந்தது கண்டு அவடத்தில் நின்று தெரிசினம் செயித முன்னுக்கு மேற்படி மறத்தடியிலிருந்த செங்கம் புத்துலயிருந்து ஒரு மொயல் பொறப்பட்டுது. அப்போ வெட்டைஞயிகளை விட்டு மெரட்டினதில் அந்த முசலானது கொஞ்சம் தூரம் ஓடித் திரும்பி ஞயை முடிக்கி அகப்படாமல் பொயிவிட்டதை கண்டு அவடத்தில் புது ஆயக்குடி என்குற ஊரும் கட்டி அரைமனை

யும் உண்டாக்கி தென்பாரிசம் நின்ற விற்மறத்தடியில் கொளமும் வெட்டிவைச்சி விற்குளமென்று ஞமகறனம் வைச்சி வேலாமறத் தடியில் யிந்த லிங்கத்தையும் ஊற்மத்தியில் பிரதீஷ்ட செயிது பூசைக்கி பிறுமமணனேயும் வைத்து அந்த சிவபூசை செயிகுற பிறும் மணனுக்கு சிறிது நிலமும் விட்டு புது ஆயக்குடி கிறுமத்து சுத்திலு கோட்டை போடுவிச்சி தம்முடைய பாறம்பறிமான பூமியை யினுமாக அனுபவித்து கொத்தளமும் காவல் காத்துக்கொண்டு தொரைத்தனம் செயித ஷ 23.

ஆறுவது பட்டம் மேற்படி குமாறனுகிய முத்து கொண்ட மனுய்க்கர் ஞளேயில் பெரிய கொளமென்றும் னடுகொள மென்றும் உண்டு செயிது வருதாபட்டனமாத்தில் அணைவாயிக்காலுண்டு பண்ணி மேற்படி குளத்துக்கு தண்ணீர் வரும்படி செயிது சிறுது பூமியை நஞ்சை சாகுபடிசெயிவிச்சி அமரம்பூண்டி என்குற ஊரும் கட்டி கோட்டையும் போடுவிச்சி இப்படிக்கி தொரைத்தனம் செயித ஷ 27.

ஏழாவது பட்டம் மேற்படி குமாறனுகிய பகடால் கொண்ட மனுயக்கர் ஞளேயில் குமாற னுயக்கன் குளம் வெட்டிவிச்சி மெல் கோட்டை என்குற ஊரும் கட்டிவிச்சி தொரைத்தனம் செயிதது ஷ 25

எட்டாவது பட்டம் ஷை குமாறனுகிய ஓபளகொண்டமனுயக்கர் ஞளேயில் எற்றமனுயக்கன்பட்டி என்குற கிறுமமும் அமறம்பூண்டி கிறுமத்தை சேற்ந்த கரிசல் குளமும் கஞ்ச னுயக்கன்பட்டியும் ருக்குவாறபட்டியும் உண்டுபண்ணிவிச்சி தொறத்தனம் செயித ஷ 11

ஓன்பதாவது பட்டம் ஷை குமாறனுகிய எற்ற கொண்டமனுயக்கர் ஞளேயில் பொட்டம்பட்டி என்குற கிறுமமும் ஆயக்குடிக்கி சேந்த தேவனுயக்கன் குளமும் உண்டுபண்ணிவிச்சி சிதம்பற பட்டருக்கு ஒருமாவு நிலமும் ருமாயணசாஸ்திரியாருக்கு ஞல்ரை மா நிலமும் திருமல அய்யருக்கு ரெண்டுமாநிலம் யிப்படிக்கு பிறும் மனுளுக்கு தாறுதத்தம் பண்ணிவிச்சி தொரைத்தனம் செயித ஷ 17

பத்தாவது பட்டம் ஷை குமாறனுகிய முத்தியாலு கொண்ட மனுயக்கர் ஞளேயில் கணக்கம்பட்டி கிறுமமும் பட்டிக் குளமும் மாபுளனுயக்கன் குளமும் உண்டு பண்ணி சிதம்பர அய்யர் மகன் சுப்பய்யனுக்கு மூனு மாவு நிலமும் தாறுதத்தம்பண்ணி அவரும் தொரைத்தனம் செயித ஷ 25

பதினொன்றாவது பட்டம் ஷெ குமாரனாகிய கொட்டு கொண்டம நாயக்கர் நாளையில் சிந்தல வலசை என்குரப்பட்டி உண்டாக்கி ஸ்ரீரெங்கம் வேதவியாசபட்டருக்கு அஞ்சி மா நிலம் தாருதத்தமும் செயிது தொரைத்தனம் செயிதது வருஷ 30

பனிரெண்டாவது ஷெ குமாரனாகிய குமாரகொண்டம நாயக்கர் நாளையில் கோம்பைபட்டி என்குற கிறாமும் ஊமைகுமார சேர்வை காறன் குளமும் சொடப்ப நாயக்கன் குளமும் உண்டுபண்ணி தொரைத்தனம் செயித வருஷ 18

பதிமூன்றாவது பட்டம் ஷெ குமாரனாகிய பெரிஓபள கொண்டமநாயக்கர் நாளையில் ஆரண்ணியமான சிறிது காடுகளும் வெட்டிவைச்சி சிறுது பூமி சாகுபடிசெயிது வைச்சி தொரைத்தனம் செயித வருஷ 15

பதினாலாவது பட்டம் மேற்படி குமரனாகிய குமாற கொண்டம நாயக்கர் நாளையில் பாப்பான்குளம் வாயிக்காலும் உண்டு பண்ணி பற மேசுரப்பட்டருக்கு நாலு மாவு நிலமும் பழைஆயக்குடியில் அக்கிற ஹாறமும் உண்டு பண்ணிவிச்சி பின்னேயும் பெருமாகுளமும் பச்சள நாயக்கர்பட்டி கிறாமம் உண்டு பண்ணிவிச்சி அதைபடி ஆயக்குடி ஸ்ரீஅகோபளபெருமாளுக்கு தேவதான மானியமாக குடுத்து ஷெ தேவஸ்தானத்துக்கு கேசுவய்யங்காரை ஸ்தானிகம் நேமிச்சி படித் தரம் முதலான நேமுகம் செயிது பெத்துள சாஸ்திரியாருக்கு நாலு மாவு நிலமும் பழனியூர் முத்தயறுக்கு ஒரு மா நிலமும் சுப்பா சாஸ்திரிக்கி வேதவிற்தி ஒரு மா நிலமும் தாருதத்தம் செயிது ஸ்ரீரெங்கம் வேதவியாச பட்டறய்யங்காறுக்கு மூணு மாவு நிலமும் அண்ணவய்யறுக்கு ஒரு மாவு நிலம் சேஷய்யருக்கு ஒரு மாவு நிலமும் பழனியூர் குப்பய்யருக்கு ஒரு மாவு நிலமும் யிப்படிக்கு பிறமணாளுக்கும் குடுத்து பின்னேயும் மயிசூறுர் திண்டிக்கல் வரைக்கும் கற்த்தார்கள்

சீர்மையை வியாபிச்சியிருந்தினாலே- கற்த்தாக்களாகிய திருமல நாயக்கரையும் தளவாயி ரூமப்பய்யரையும் சனத்தையும் அனுப்பின போது எல்லா பாளையக்காரரையும் வறித்துகுற முன்னுக்கு னம் முடைய பெறியோற் குமாறகொண்டம நாயக்கற் போயிருந்ததில் தண்டு சிலவுக்காக னம்முட பாளையப்பட்டுக்கு கலிபணம் 5000 அய்யாயிரம் கலிபணம் கேட்ட விடத்தில் னம்முட பெரியோர் மொழிந்து பேசி கலிபணம் 3000 முவ்வாயிரம் கலிபணம் ஒப்பிக் கொண்டு குடுத்து சிறுது ஜனத்தோடே சன்மானமாக வந்தாற். ரெண்டாவதும் திருமலே நாயக்கற் சேதுபதி பேரில் தண்டு சேகறம் பண்ண முன்னுக்கு னம்முட பாளையப்பட்டுக்கு கலிபணம் 2000 ரெண்

டாயிரம் பணம் வாங்கிகொண்டு நீறும் வறவேணு மென்றதிஞலே ஊம்முட பெரியோரும் கூட்டிபோயி அந்த சண்டைக்கி சகாயிச்சி சேதுபதியாக ருசியானதின் பிறகு அனுப்பிக் கொண்டு வந்தார். முணுவது தஞ்சாவூருர் பேரில் விசையரங்க சொக்ககனுத ஞயக்கர் சண்டைக்கி போகுறபோதும் கூடபோயி பிரயாசப்பட்டு அவாள் ருசியானதின் பிறகு அனுப்பு மேல்ஊருக்கு வந்தாற் யிப்பபடிக்கு தொரத்தனம் செயிதஞூ 31.

பதினஞ்சாவது பட்டம் மேற்படி குமாரனுகிய கறுத்த கொண்டம ஞயக்கர் ஞளையில் ஸ்ரீரெங்கப்பட்ணம் அயிதர் ஞயக்கன் திண்டிக் கல்லுக்கு வந்த முன்னுக்கு ஷெ கறுத்த கொண்டம ஞயக்கரை வர வழித்து யின் பாளையப்பட்டுக்கு கலிபணம் 4000 ஞலாயிரம் கலிபணம் நிகுதி செயிது வாங்கிக்கொண்டு போனுர் மேல்கோட்டை கிருமத்தை சேந்த வேப்பம்பலசை செல்லப்பகவுண்டன்பலசை யிந்த ரெண்டு கிருமமும் ஒன்று செயிது யிப்படிக்கி தொரத்தனம் செயித ஞூ 23.

பதினுறுவது பட்டம் ஷெ குமாரனுகிய குமார கொண்டம ஞயக்கர் ஞளையில் பறிக்கி வெங்கிட்டருயர் திண்டிக்கல்லுக்கு சுபயாக வந்து பாளையக்காரரை தரிவிச்ச முன்னுக்கு மேற்படியாரை தரிவிச்சி வகையிருப்பு தீர்த்துக் கொடுத்தது கலிபணம் 5000 அய்யாயிரம் கலி பணம் ஞூ 1க்கு குடுக்கும்படியாயி நெமுகமாயி அதை மீறுசாயபும் அதை துகைபட்டி தீர்புசெய்தார். யிப்படி அவர் தொரைத்தனம் ஞூ21

பதினெழாவது பட்டம் ஷெ சகோதரம் தம்பியாகிய ஒபள கொண்டமஞயக்கர் ஞளையில் திண்டுக்கல் சுபாசைதுசாயபும் ஷெ நிகுதி படிக்கி நிச்சயிச்சிகொண்டு பின்னேயும் ராஜராஜமருலொடு தொரை ரெங்கமதுரை உஞ்சிதுரை யிவர்கள் கலக்டர் ஞளையில் வகை யிருப்பு ஞூ 1க்கு கலிபணம் 10000 பதினுயிர கலிபணம் நேமிச்சி கொண்டு பரமேசுர வாத்தியாறுக்கு ஒரு மா நிலமும் அய்யாவய்ய னுக்கு அரைம்மா நிலமும் தாருதத்தம் செயிது குடுத்து தொரைத் தனம் செயிதது ஞூ 16.

பதினெட்டாவது பட்டம் மேற்படி சிருதொகப்பனுர் குமார னுகிய என்னுடைய தோப்பனுர் பெரிஒபளகொண்டம ஞயக்கர் ஞளையில் ம ஈ ஈ மேஸ்தர் ஆரடிசுசாயபு அவர்கள் திண்டுக்கல்லுச்கு கலக்கட்டர் துரைத்தனத்துக்கு வந்த முன்னுக்கு டிப்புவின் பேரில் ஜெற்னல் புரேன்துரையும் நிசாமல்லி சர்தார்களுமாக தண்டெ டுத்து ஸ்ரீரெங்கப்பட்டண பயணத்துக்கு தாருபுரத்தில் வந்து எறங்கி கொண்டு மேஸ்தர் ஆறடிசுதுரையை வரைவழித்து பேசினதில் அவாள் என்னுடைய தோப்பனுரையும் தொண்டமான் மனுசரையும்

தருவிச்ச முன்னுக்கு என்னுடைய தோப்பனும் அயினூரு செனத்துடனே தாருபுரத்துக்கு போயி கலக்டரையும் ஜரணல்தொரைகளையும் கண்டதில் சந்தோஷத்துடனே என் தோப்பனுற் பின்வந்த சனத்தில் தாருபுறத்தில் யிரனூறு செனமும் காங்கயத்தில் முன்னூரு சனமும் டாணயம் வக்கும்படியாயி உத்திரவு குடுத்தார்கள் டாணயும் சிறுது னுளிருக்கயில் ஸ்ரீரெங்கப்பட்டணம் கோட்டை கைவசமானதின் பிறகு ஜனங்களை உத்திரவு குடுத்து அனுப்பிவைத்தாற்கள். பின்னையும் வெகுமானப்பட்ட கும்பினியாறுக்கு ரெம்பவும் விரோதியாகிய விருபாக்ஷிகுப்பன் னுயக்கன்பேரில் ம ா ா. மேஸ்தர் ஆறடிசுதுரை அவர்களும் கர்ணல் யின்னிசுதுரை அவர்களும் விருபாக்ஷியில் வந்து யிரங்கிகொண்டு என் தோகப்பனுரை தரிவிச்சு கும்பினி காரியங்களுக்கு செனங்களை குடுத்து ரெம்பவும் ஒத்தாசை செய்ய சொன்னதில் அந்தப்படிக்கி அனேக ஒத்தாசைசெயிது பின்னையும் பெரிமறுதை சின்னமறுத சேர்வகாரன் அவாள்பேரிலெயும் தண்டு சேகறமாயி போறபோது கூடவே முன்னூறு செனமும் ஒரு சேர்வைகாரனையும் கூடவே அனுப்பிவிச்சதில் சிறுவயல் காளையார்கோவில்வரைக்கும் தெண்டு சேவிச்சி அவாளகப்பட்டதின் பேரில் ஊருவந்து சேர்ந்தார்கள். இதற்கு முன்லார்டு ஆல்பெட்டுதுரை அவர்களும் ஜரனல் பிளாயிட்டுதுரை அவர்களும் திண்டிக்கல்லில் வந்துயிருக்குற சமயத்தில் என் தொகப்பனுரையும் என்னையும் வரவழித்து மகாருசஸ்ரீ லாற்டு ஜரணல் துரை அவர்கள் பேட்டி ஆயி கும்பினிக்கி ஜாக்கிரதை செயுறவாளென்று சந்தோஷத்துடனே எனக்கு ஒரு பதக்கமும் வெகுமதி பண்ணி சுமட்டி குமார கொண்டமனுயக்கறு என்று பேரும் குடுத்தார்கள்.

மேஸ்தர் ஆறடிசுதுரை அவர்கள் பைமாசிக்காறரை யனுப்பி அளவு கண்டது 25 பாகம் செங்கிலியால் என் ஆயக்குடி பாளையப்பட்டு கிழக்கு விருபாக்ஷிக்கும் ஆயக்குடிக்கும் பொதுவான னல்லதங்கா ஓடைக்கி கிமேற்க்கு வடக்கு பழனி தாலுகா மறுசலம்பு பூவலாம்பட்டி எல்லை வரைக்கும் தெற்கு மேற்க்கு யிடும்பன்மலை கலிங்கிப் பாறை வரைக்கும் கிழக்கு தெற்கு பெருமலை மேல்மலை கிறுமம் உள்பட வடகரை ருமபத்திறனுயக்கனவர்க்கு சேந்தவிட்டி பள்ளத்துக்கு வடக்கு

யிதின் னுற்பாங்கு எல்லை உள்பட்ட உத்தெசம் கிழ் மெல் வழி னுழிகை 5. தெர்கு வடக்கு மலை உள்பட பெருமலை மேல் வடகரை ருமபத்திறனுயக்கனவர்க்கு செந்தவிட்டி பள்ளவரைக்கும் வழி னுழிகை 15யிந்த னுலுசதிரத்தில் தெற்கு பாகம் மலை கிறுமம் உள்

பட்ட சேந்த எல்லே ஆயக்குடி பாளேயப்பட்டு என்று சொல்லப் படுகுறது.

புது ஆயயக்குடி கிருமம் - வுபகிருமம் - 5
அமரம்பூண்டி கிருமம் - வுபகிருமம் - 2
மேல் கோட்டை - கிருமம்வுப - கிருமம் - 2

எற்ற ரமஞயக்கன்பட்டி கிருமம் - வுபகிருமம் -
கணக்கன்பட்டி - கிருமம் - வுபகிருமம்
பொட்டம்பட்டி கிருமம் - வுபகிருமம் -
கொமப்பட்டி கிருமம் - வுபகிருமம் -
பச்ளஞயக்கன்பட்டி கிருமம்
தெவஸ்தானம் கிருமம்
அஹெசலி கிருமம் - 8 - தாகலி கிருமம் - 10
அஹெசலிதாகலி கிருமம் - 18...
கிழக்கு மேற்க்கு - 25...ல...1
தெர்க்கு வடக்கு 25...ல...1...
ஆக மாறுகிழ்மெலு தென்வடலு...1 ஆ

து ஒட்டு காடு மேடு நஞ்சை புஞ்சை உள்பட அளவு குழி-4513 க்கு பொறம்போக்கு து 6629½... தேவதாயம் பிரம்மதாயம் ஊழியம் வகைக்கு.. து 2373½ ...

ஆக மொத்தம் பொறம்போக்கு வகைக்கு 9003½
நீருஞ்சைக்கு 4338½...

புஞ்சைக்கு 30841க்கு ஆக நஞ்சை புஞ்சைக்கு 36,179½க்கு மேல் என்றென்றைக்கும் ஒரே நிச்சயமாகத் தீற்த்துகொண்டது. சற்க் காருக்குக்கு ஸூ 1க்கு குடுக்குற பணம்...4,795 பணம் 33 கூடுதல் 77...

மெல் எழிதினதற்ப்படிக்கி அளவுகண்டு சர்க்காற் தரிசி னஞ்சை புஞ்சை போக நின்ற நிலங்களுக்குக் கூடி பறுக்கட்டுப்பட்டிக்கு குல பெறிசு பணம் 1க்கு கலி பணம் 16க்கு ஆக உள்ள கலி பணம் 1987 பணம் 4க்கு ... சொற்ஞதாயம் மாவடை பாசிவகைக்கு ... 246 பணத் துக்கு ... மலே கிருமம் 3க்கு குத்தகை ... டை ... 70...பணம்...

ஆக அயன் கலி பணம் ஷெ 11,300 - 4 பணம் 4க்கு 100க்கு 30 வீதம் தள்ளி அயன் புஞ்சை 7912, 9000...

என் ஜாதியான வேட கம்பளத்தாரில் முன் பெரியோர்கள் ஆயக்குடி பாளேயப்பட்டு தொரைத்தனம் செயிதவர் பேர்கள் முதலான யினவழி வருஷங்கள் யிதின்கீழ் எழுதிவருகுறது - பட்டம் 18

வாக்கியப்படிக்கி சாலிவாகன செகம் ஹூ, 1321க்கு கலியுகம் 4500க்கு விக்கிரம ஹூ முதல்-சகம்-1732க்கு கலி 4911க்கு பிரமேதூத ஹூக்கும் ஹூ 411க்கு பட்டங்கள் விவரம்.

பெரிஒபையகொண்டமஞயக்கர்
விக்கிரம ஹூ முதல் சாதாரனஹூ வரைக்கும் பட்டம்... ஹூ 31

ஓபளகொண்டமஞயக்கர்
விரோதிகுறுது ஹூ முதல் யுவ ஹூ வரைக்கும் பட்டம் ஹூ 25

குமாரகொண்டமஞயக்கர்
தாது ஹூ முதல் ருக்ஷச ஹூ வரைக்கும்... 40

ஓபளகொண்டம ஞயக்கர் னள ஹூ முதல் ஸ்ரீமுக ஹூ வரைக்கும் 18

குமாரகொண்டம ஞயக்கர்
பவ ஹூ முதல் துன்முகி ஹூ வரைக்கும் 23

முத்துகொண்டம ஞயக்கர்
ஏவிளம்பி முதல் றுதிரொதுகாரி ஹூ வரைக்கும் 27

பகடால்கொண்டம ஞயக்கர்
ரக்தாக்ஷி முதல் சர்வதாரி ஹூ வரைக்கும் 25

ஓபளகொண்டம ஞயக்கன் விரோதி முதல் விகாரி வரைக்கும் 11

எற்றகொண்டம ஞயக்கர் சார்வாரி முதல் னள ஹூவரைக்கும் 17

முத்தியாலுகொண்டம ஞயக்கர் பிங்கள முதல் விஷு ஹூ வரைக்கும் 25

கொட்டுகொண்டம ஞயக்கர்
சித்திர பானு முதல் விரோதிகிருது வரைக்கும் 30

குமாரகொண்டம ஞயக்கர் பரிதாவி முதல் சுக்ல ஹூ வரைக்கும் 18

பெரிஒபளகொண்டம ஞயக்கர்
பிரமொதூத முதல் தாரண ஹூ வரைக்கும் 15

குமாரகொண்டம ஞயக்கர் பார்த்திவ முதல் ருக்ஷச ஹூ வரைக்கும் 31

கறுத்தகொண்டம ஞயக்கர் னள முதல் வகுதானிய ஹூ வரைக்கும் 23

குமாரகொண்டம ஞயக்கன் பிரமாதி முதல் விகாரி ஹூ வரைக்கும் 21

ஓபளகொண்டம ஞயக்கர் சார்வரி முதல் ருக்ஷச ஹூ வரைக்கும் 16

பெரிஒபளகொண்டம ஞயக்கர்
னள முதல் பிரமொதூத ஹூ வரைக்கும் 15

---

411

---

என் முன்னொர்களாகிய பதினெட்டு பட்டம் ஆண்டு வந்த பாளையப் பட்டு ஆதினத்தில் என் தொகப்பனுறிருக்கும் போதே எனக்கு பட்டம் கட்டி வைத்து ருசாங்கம் னடத்திய பத்தொன்பதாவது பட்டம் கட்டி குமாறகொண்டம ஞயக்கன் என்குற ஞன் சாலிவாகன செகம் ஹு 1733க்கு கலியுகம் ஹு 4912க்கு செல்லாநின்ற பிறசோது பத்தி ஹு முதல் ஆயக்குடி பாளையப்பட்டு பாத்தியஸ்தனுக ருசாங்கம் னடத்திக்கொண்டு என் தொகப்பனுர் நிச்சயிச்சி கொண்டபடிக்கி என் பாளையப்பட்டுக்கு ஹு 1க்கு புஞ்சை 4795½க்கு 97 வருஷா வருஷம் சற்காறுக்கு செலிதிவைச்சுகொண்டு ஆயக்குடி ஜமீன்தாற் என்று சற்காரில் வைத்த பேருடனே ஆசற்யிருக்கிறேன்.

யிதல்லாமல் பூற்வத்தில் வடக்கேயிருந்து வந்த மூன்றுபேற் சறுதாற்களாகயிருந்தவாள் ஒரெ சாதியானதுனுலேயும் ரெம்பவும் சமிப பந்துயன மானதுனுலேயும் ஒரெ மனுசாகவும் ஒரு கட்டுப் பாடாக அவடத்திலெயிருந்து பொறப்பட்டு வந்து யிவடங்களிலும் பழனியில் சின்னேபஞயக்கனும் ரெட்டயம்பாடியில் பொடி தோப்பாஞயக்கரும் ஆயக்குடியில் என் முன்னேர்களும் யிப்படிக்கி மூன்று பாளையப்பட்டுக்கு மூன்று பேரும் தொரைத்தனம் செயிது வருகிற ஞளேலேயும் அந்த ரெண்டு பாளையப்பட்டுலேயும் எங்களுக்கு ஸ்ரீகளே கொள்வனே குடுப்பனே உண்டு. பொடிதொப்பாஞயக் கறும் பழனி சின்னெபஞயக்கறும் ரெண்டு பெரும் தாயாதி அண்ணன் தம்பி வறிசையில் ரெட்டயம்பாடி பொடி தோப்பா ஞயக்கன் பெரிவீட்டுக்காரனும் பழனி சின்னேப ஞயக்கர் யிளேய வீட்டுக்காரனெங்குற மறியாதை என்று சொல்லப்படுகுறது.

யிதல்லாமல் என் பாளையப்பட்டுலே பாறம்பறியமாக பட்டங் கள் நடந்து வந்த வறிசையிலும் பட்டமாகுர வயணம் யெப்படி என்றல் பட்டக்காரருக யிருக்கப்பட்டவற் தன்னுடைய செரிறம் பறலோகத்துக்கு நினவாகு மென்குற முன்னுக்கு ரெண்டு ஞழி முன்னே பெரிகுமாரனுகியவனுக்கு மங்களஸ்தானமாயி சகலா பரணங்களும் அலங்கறிச்சிருக்கும் பட்டத்து ஆயுதமெடுத்து குமாரன் கையில் குடுக்குறது பட்டத்து ஆயுதம் கையில் வாங்கிகொண்டு சாவடியில் னடனுடகசாலேயுடனே கொலுவு தீற்ந்துயிருக்குரது பட்டக்காரனுனவர் தன்தகப்பனே பார்க்கக்கூடாது. தொகப்பன் தெவிகமான விசாரத்தை வெளியில் காண்பிக்க கூடாது. தெயிவகெதி யானவர் கர்மாதிகாரமெல்லாம் எளேயபுள்ளேகளே சேரும் யிப்படிக்கி னடக்கப்பட்ட மாமுல் யிதல்லாமல் என் தொகப்பனுர் பெரிஒபளகொண்டம ஞயக்கர் ஆனவற் ௱௱ பேரிஷ்துரை அவர்கள்

மதிகைக்கி கலக்ட்டருக வந்த முன்னுக்கு அக்ஷய ஷூத்தில் ரெட்டயம்பாடி முட்டா கிருமம் 17 கூடி னம் முட்டா வெகுமானப் பட்ட கும்பினியார் ஏலம்போட்ட சமயத்தில் (பணம்) விடை 502. குடுத்து ரெட்டயம்பாடி மிட்டா ஏலத்திலே எடுத்தபடியினாலேயும் ஷூ 1 க்கு, மிட்டா பெரிசு (பணம்) விடை 3422 (மயிலி) பணம் 21 காசு 65 நிச்சயப்பட்டிக்கு வருஷா வருஷம் கிஸ்திப்படிக்கி சற்காருக்கு பணம் செலிதி வைத்திக்கொண்டு அந்த ரெட்டயம்பாடி மிட்டாவும் ஞானெ ஆண்டுக் கொண்டு வருகுறேன்

வெகுமானப்பட்ட கும்பினியார் கடாக்ஷத்துக்கு பாத்திரனாக சற்காறிலெ கட்டளையிட்டபடிக்கி அதிசாக்குரதையாயி சர்க்காறு காறியங்கள் னடத்திக்கொண்டு என் பேரில் தயவு செயிது உத்திரவு செய்யப்பட்ட கட்டளை கேழ்க்கும்படியாயி ஆயக்குடியில் காத்து யிருக்குரேன்.

| | |
|---|---|
| 1816 ஷூ ஏப்ரல் மீ 16உ க்கு<br>யுவ ஷூ சித்திரை மீ 5உ | ஆயக்குடி ஜமீன்தார் கமிட்டி குமாரக் கொண்டம னாயக்கன். |

# ஆவலப்பன்பட்டி ஆவலப்பநாயகன் வமிசாவளி

## டி. 3042

தாராபுரம் தாலூக்கா ஆவலப்பன்பட்டி பாளையப்பட்டு ஆவலப்ப நாயக்கன் எண்ணப்பட்ட பாளையக்காரன் வமிசாவளி முதலான கைபீயத்து என்னவென்றால்

வராக நாடு, பூர்வத்தில் யாதவ குலத்தில் உத்பத்தியான ஒன்பது கம்பள குலத்தில் தொட்டி, தொட்டிய கம்பளச் சாதியில் டில்லி பாதுஷாஹா சீமை விட்டு இராயர் ஸமஸ்தானம் அடுத்துக் குமார வர்க்கமென்று பேர் பிரசித்தி பெற்ற குச்சிலி பொம்ப நாயக்கர் மக்களில் இரண்டாம் பிள்ளையான சோதெய நாயக்கன் என்கிறவனுக்கு அக்காலம் இராயர் சமஸ்த்தாளுதிபதியான இராயர் அவர்கள் அவருடைய செவுறிய பராக்கிரமங்களுக்குச் சந்தோஷப்பட்டு தட்சிண பிறதேசத்திலே கள்ளர்-சில்லரை வுபத்திரவங்களை மட்டு பண்ணினவர்களுக்கு அவாளவாள் மெகந்து-செய்யப்பட்டயிடங்கள் அவாளவாளுக்குச் சாசுவிதமாய்க் குடுப்பிவிக்கிறோமென்று சொல்லி உத்திரவு கொடுத்து கணுவாய்க்குக் கீள்பட்ட பிறதேசத்திலே-சில்லரைகள்-மட்டக்கி-அந்தந்தப் பூமி அவரவர்களுக்கு-பாளையப்பட்டு ஆண்டு வரும்படியாக னிகுதி செய்குர சமயத்தில் யென் வம்சஸ்தனுன சோதி ஞய்க்கனுக்கு பல்லாக்கு உபசாமறம், சுறுட்டி, சூரியபாண அனுமந்த டால், மகற டால், கெருட டால், பஞ்சவர்ண டால், சிவ சங்கற டால், சந்திர காவி டால், பச்சகுடை, ரணகமகனும், ரண பாஷிக்கம், நிகளம், சாமதுரோகற வெண்டயூம், வீரகட்டாமணி, வீர வெண்டயம், கொத்து சறப்பணி, முத்தொட்டி, பச்சொட்டி, கலிகிதுருயி, ஆனே மேலம்பாறி, ஒட்டகை மேல் பேறிகை, குதிரை மேல் டக்கா, யெருது மேல் தம்மட்டம் இவை முதலான பிருதுகள் வாத்தியங்களும் கொடுத்து குமார பட்டத்து சோதெயனுயக்கர் என்று பேரும் கொடுத்து ஆனேமலே சறவுலே நீ மெஹந்து செய்யப்பட்ட பூமிக்கு நீயே பாளையப்பட்டாய் ஆண்டு கொண்டு வரச் சொல்லி பட்டம் கட்டினுர்கள்.

குமாற பட்டத்துக்கு சொதெ (ய) ஞயக்கர் யென்று பேர் பிரசித்தி பட்டவராய் தெற்கு நோக்கி வந்து தாருபுரத்துக்கு கிழக்கு

ஆம்பிறவதிக்கு தெற்கு பொன்னூதிமலே சமீபத்துலே காட்டிலே வந்து யிறங்கி காடுகளை வெட்டி வச்சு பௌளுர்முகல்லூறு யென்று வூறும் கட்டிவிச்சுக் கொண்டு பாளையப்பட்டு ஆண்டு வந்தார்.

அவர் குமாரன் ஆவுல சொதெய ஞயக்கற் ஞளேயிலே அக் காலத்தில் ருயற் அவற்கள் கட்டளேயிட்டபடிக்கு ஆணேமலே சறுவிலே கானல் வளி தடங்களிலே கள்ளற் முறகச்சாதி உபத்திரவங்கள் யெல்லாம் மட்டடக்கிப் போட்டு ஆணேமலேக்குக் கிழக்கு காதவளி தூரத்தில் கீள் மேல் ஞளிகை ஞலு தென் வடல் மூணு நாளிகை வளி இந்தச் சதுரத்தில் கானல்களுலே செடிகளே வெட்டி குடிகளே யேத்தி வூறுகள் உண்டு பண்ணி ஆவலப்பன்பட்டி யென்று தன் பேராலே கிறும ஞமதேயம் வச்சு ஆவலப்பன்பட்டி ஆவலப்பனுயக்கற் யென்று பாளேயப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வந்தார்.

அந்தனுள் முதல் சாலிவாகன சகாபுதம் **1318** முதல் சகாபுதம் **1715**க்கு ஞூ *397* பட்டமங்களுடைய வரிசைகளும், அவாளவாளுடைய நடத்தையளும் இதின் கீளே யெருதி வறுகுரது.

குமார பட்டத்து சொதேய ஞயக்கற் மூலனுறுலே பாளேயப் பட்டு பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

| | | |
|---|---|---|
| *1* | . அவுற சொதேய ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *49* |
| *2* | . யிவற் குமாரன் குமாரசோத தேனுயக்கற் பட்டம் ஆண்ட | ஞூ *38* |
| *3* | . யிவர் குமாரன்-பெரிய சோதேயதனுயகற் பட்டம் ஆண்ட | ஞூ *36* |
| *4* | . யிவற் குமாரன்-ஆவுல சொதேய ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *29* |
| *5* | . யிவர் குமாரன்-பங்காரு சோதேய ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *24* |
| *6* | . யிவர் குமாரன்-குமார பட்டத்து ஆவலப்ப நாயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *30* |
| *7* | . இவர் குமாரன்-சோதே ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *19* |
| *8* | . இவர் குமாரன்-தம்பி-குமார பட்டத்து சொதேய ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *23* |
| *9* | . இவர் குமாரன்-ருும சொதேய ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *35* |
| *10* | . இவர் குமாரன்-நாகய சொதே ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *32* |
| *11* | . இவர் குமாரன்-சின்ன சொதேய ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *27* |
| *12* | . யிவர் குமாரன்-வேலாயுத ஞயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *18* |
| *13* | . யிவர் குமாரன்-குமார பட்டத்து சொதேனுயக்கர் பட்டம் ஆண்ட | ஞூ *15* |
| *14* | . யிவற் குமாரன்-ருயே சோதே ஞயக்கற் பட்டம் ஆண்ட | ஞூ *22* |
| **14** | | ***397*** |

ருயற் சமுஸ்தானத்து ருயற் சிம்ஹசனதிபதிகள் நாள் முதல் முகலுனூறும் ஆவலப்பன்பட்டியும் ரெண்டு பாளையப்பட்டாஇ சுத்த சாதியாஇ ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வந்தார்கள்.

மதுரையாற் நாயக்கர் அவர்கள் நாளையிலே ஆவலப்பன்பட்டி முகலனூறு இந்த ரெண்டுக்கும் வருஷம் ஒன்றுக்கு நிகதி ருசகோபாலி 1350 பணம் நிகுதி செய்தபடியினலே வருஷப் பிரதியும் னிகதி படிக்கு மதுரை சமுஸ்தானத்துக்குப் பணம் செலுத்திவிச்சுக்கொண்டு முகலனூற் ஆவலப்பன்பட்டி இந்த ரெண்டும் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வந்தார்கள்.

மயிசூறு சமுஸ்தானத்து சீற்மை சேர்ந்து யிருந்த சமயத்தில் அக் காலத்தில் மயிசூறு சமுஸ்தானத்து கர்த்தாக்கள் ஆவலப்பன்பட்டி முகலனூறு இந்த ரெண்டுக்கும் வருஷம் ஒண்ணுக்கு ருசகோபாலி 1500 (பணம்) னிகுதி செய்தபடியினலே னிகுதிப்படிக்கி நடந்துகொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவித்துக்கொண்டு வரும் நாளையில் மறு படி கற்த்தாக்கள் நாளையிலே முகலனூறு அறமனைக்கு செலுத்தி கொண்டு ஆவலப்பன்பட்டிக்கு நிகுதி செய்தபடியினலே நிகுதிபடிக்கு பணம் செலுத்திவிச்சுக்கொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

இப்படிக்கு வம்ச பரம்பரையாய் அந்தந்தக் காலத்தில் அறமனையாற் கட்டு பண்ணினபடிச்கி நிகுதிப் பணம் செலுத்திவுச்சுக் கொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு டிப்பு சுல்தான் நாள் வரைக்கும் பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வந்தார்கள்

யென் தம்பி, பதினலான் பட்டக்காரனை ருமசோதனயக்கற் தெயிவ கெதியான பிற்பாடு ஆனந்த வருஷத்தில் நாடுற் பாளையப் பட்டு கூட்டி பட்டம் கட்டி ஆவுலசோதி னயக்கரென்று பேர் விளங்கி கொண்டவனய் மகாருஜ ருஜஸ்ரீ கும்பினி துரை அவர்கள் கடாட் சயத்துக்குப் பாத்திரனய்க் காத்துக்கொண்டுயிருந்து துரைகள் கடாட்சம் செய்து ஆவலப்பன்பட்டிக்குச் சேர்ந்த கிரும வுபகிருமமு வுள்பட பதினென்னிலேயும் கண்டு முதலான பேறீசுலே சிப்பந்தி சாதல்வாறு தேவாதாயம் பிரம்மாதாயம் நீங்கலாக பத்தில் மூணு யெனக்கு சாறி பண்ணி கிருமங்கள் யென்வம்சம் பண்ணியிருக்கிற படியினலே வருஷப் பிரதியும் கண்டு முதலானபேறிசுலே பத்தில் யேளு அறமனைக்குச் செலுத்திக்கொண்டு யென் குஞ்சு குளுந்தை யென்னைச் சேர்ந்த சனம் சயிதமாய் தயவு செயிது யிருக்கிற சாறியிலே னூத்தி அன்பதுசனம் காலட்சேபம் பண்ணிக்கொண்டு ஆவலப்பன் பட்டியிலே குடியிருப்புக்காரனய் துரை அவர்கள் தயவிற்குப்

பாத்திரனாய் கட்டளையிட்டபடிக்கு நடந்துகொண்டு ஆஜரிலே காத்துக்கொண்டுயிருக்கிறேன்.

இதுக்குத் தகவலாகி யிறுக்கப்பட்ட ஆதரவுகள் முதலானதும் காலாந்திரங்களிலே ராசிகங்களிலே கை தப்பிப் போய்விட்டது யெங்கள் வமிச பறம்பரை கேள்வியினாலேயும் அனுபோகத்திலேயும் அறியப்படுத்திக்கொள்ளலாயிற்று.

ஆவலப்பன் பட்டி, ஆவுலு சொதைய னாயக்கன் ருசுவு.

-0-

# ஆவுடையார்(ப்)புரம் பாளையக்காரர் வம்சாவளி

## டி. 3134

பூர்வத்தில் வெகுநாளாய்ப் பாளையப்பட்டாயிருந்து சிறிது நாள் பாளையப்பட்டு எடுப்பட்டுப் போய் இருந்தது. அப்புறம் சாலிவாகன சகப்தம் 1300-க்கு சித்தார்த்தி ஸூ எங்கள் வமிசத்தில் ஒருத்தர் மதுரைக்குப் போய் அக்காலத்துக்கு மதுரை சமஸ்தானாதிபதியான "வரகுணராம சிந்தாமணிபாண்டிய ராசர்" அவர்கள் இடத்திற் போய்ப் பேட்டி பண்ணிக்கொண்டு அவர்கள் தயவுக்குப் பாத்திரனாய் வெகுநாள் காத்திருந்து அவர்கள் கடாட்சம் பெற்றுக்கொண்டு அவர்கள் இடத்தில் அறியப்பண்ணிக்கொண்டது என்னவென்றால், என் பாளையப்பட்டு வெகுகாலமாய் எங்கள் வம்சபரம்பரையா நடந்து வந்த பாளையப்பட்டை எங்கள் சீமையை அல்லாளவாய்க் கட்டிக் கொண்டு இருக்கிறபடியினாலே என் பாளையப்பட்டை எனக்கு வாங்கிக் கொடுத்து என்னை ரட்சிக்கவேண்டுமென்றும் என்னுடைய சௌரிய பராக்கிரமுரான சுவாமி பிறத்தியராயமாய் பிரபுக்கள் தயவுக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளுகிறதும் சித்தத்துத் தெரியவரும் என்றும் அனேகமாய் அறிக்கை செய்து கொண்டபடியாலே அகில இராசியாதிபதியான வரகுணராமசிந்தாமணி பாண்டியராசர் அவர் களுக்கு ரொம்பவும் தயவு வந்து சிறிது நாளையில் உன்னுடைய சீமையை ஒனக்கு குடுக்குரோம் னியி காத்துக்கொண்டு யிருயென்று கட்டுபண்ணிறுற்கள் அந்தப்படி போகிறுன் அவர்கள் தயவுக்குப் பாத்திரராய்க் காத்துக் கொண்டு யிருந்த சமயத்தில்,

அந்த சமயத்தில், மதுராபுரிப்பட்டணத்துக்கு மேல் புறத்தில் ரெண்டு கோசலை தூரத்தில் இருக்கப்பட்ட நாகபருவதத்தில் ஒரு பதினறடி வேங்கைபுலியானது வந்து இருந்து கொண்டு வெகு உபத் திரவம் பண்ணுகிறதும் அனேக ஜனங்களை சங்காரம் பண்ணுகிறதும் இப்படி அனேக உபத்திரவம் பண்ணுகிறதென்று அந்தப் பருவதத் திற்குச் சமீபமான யிடங்களில் இருக்கப்பட்ட ஜனங்கள் இந்த உபத் திரவம் பொறுக்கமாட்டாமல் இராஜாயிடத்தில் வந்து அறிக்கை செய்துகொண்டார்கள். அந்த க்ஷணமே ராஜா வெகு ஆக்குறகத் துடனே புறப்பட்டுப் போய் அதைச் சம்மாரம் பண்ணிப் போட்டு

வரவேணுமென்று சதுரங்க பல சேனையோடையும் புறப்பட்டு நாக பருவதம் சமீபத்துக்குப் போய் அந்த மிருகம் இருக்கப்பட்ட குகை வாசல் கிட்டபோய் நின்றுக்கொண்டு தங்கள் இடத்தில் சேவிக்கப் பட்ட ஜனங்களைப் பார்த்து இந்த குறகைக்குள்ளே போய் இந்தப் புலியைச் சம்மாறம் பண்ணின பேருக்கு சிறிது கிராம பூமிகள் கொடுத்து அனேக வெகுமதிகளும் பண்ணி யெங்களுடைய பேறும் கொடுக்கிறோமென்று கட்டளை பண்ணினார்கள்.

அப்போ சிறிது பேர் ஆயுதபாணிகளுடனே புறப்பட்டு நாங்கள் இந்தப்புலியைச் சம்மாரம் பண்ணுகிறோமென்று ஒவ்வொருத்தராய் அந்த குறகையில் பூந்து போகப் போக போன பேரை எல்லாம் அந்த வேங்கைப் புலி எல்லாரையும் சம்மாறம் பண்ணிக்கொண்டு வந்தது. அந்த சமயத்தில் ராஜா அவர்கள் எங்கள் வம்சாளைப் பார்த்து உன்னுடைய பராக்கிரமம் பார்க்கிற தருணமான படியினாலே நீ ஒருவனும் இந்த குறகைகுளே போய் இந்தப்புலியைச் சம்மாரம் பண்ணிப் போட்டு வந்தால் முன்னாலே நீ அறிக்கை செய்துக் கொண்டபடிக்கு நடப்பிவிச்சுக் கொடுக்கிறோமென்று கட்டளைப் பண்ணினார்கள். அந்தப்படியே சம்மாரம் பண்ணுகிறேனென்று இன்றைக்கு ஆதீனமாச்சுது என்று அனேக சந்தோஷத்துடனே அதிதீக்ஷணமாய் இருக்கப்பட்ட ஆயுதங்களை கையிலே எடுத்துக் கொண்டு தட்டியினுத்துக் கட்டிக் கொண்டு ஆனையிடத்தில் போற சிங்கமானது போலவே அந்த குறகையில் பூந்து போற போது இவரைப் பார்த்து அந்தப் புலியானது கெர்ச்சனைப் பண்ணி அஷ்ட்டகாசம் செய்து எட்டி அடிக்கவந்த சமயத்தில் இவர் அந்த ஒன்றை ஒப்பிவிச்சுக் கொண்டு தன்கையில் இருக்கப்பட்ட கட்டாறி யினாலே அந்தப்புலியை சம்மாறம் பண்ணிப் போட்டு வெளியே வந்த மாத்திரத்தில் அந்த இராசாவுக்கு அனேக சந்தோஷமாய் அவரு வர குணராம சிந்தாமணி புலித்தேவன் என்று கிதாபும் கொடுத்து தன் கிட்ட வரச்சொல்லி கையைப்பிடித்துக்கொண்டு உபசாரம் செய்து சொர்ணமயமாய் இருக்கப்பட்ட சீமைக்கு மாட்டமல் வச்சிர பல்லக்கும் கொடுத்து கூட்டிக் கொண்டு பட்டணத்து வந்த கொலுவு இருந்து கொண்டு மீனக்கொடி, பச்சைக்குடை, உபசாமரம், வெள்ளித்தடி யிது முதலான பிருதுகளுங் கொடுத்து வஸ்திரங்கள் பட்டுகள் பீதாம் பரங்கள் கொடுத்து புராதனமாய் நடந்து வந்த பாளையப்பட்டு மூன்றையும் கொடுத்து அனுப்பி விச்சார்கள். அந்தப்படி சீமையை வைத்துக்கொண்டு வரகுணராம சிந்தாமணி புலித்தேவன் என்று பேரும் படைத்துக் கப்பம் செலுத்தி வந்து இருந்து கொண்டு சேரனுடைய சீமையெல்லாம் பந்தோபஸ்து கொண்டு பிரபுக்கள்

கடாட்சத்துக்குப் பாத்திரனாய் நடந்து கொண்டு அதிகாரத் தானத்துடனே பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வந்தது ௵ 46 அதன் பிறகு அவரவர் லோகம் நடந்தார்.

அதின் பிற்க்காலம் சாலிவாகன சகாப்தம் 1346 ஆம் ௵ அவர் குமாரன் வடக்காத்தான் புலித்தேவன் பட்டம் கட்டிக்கொண்டு பாளையப்பட்டு ஆண்டுகொண்டு வந்தார். அக்காலத்துக்கு பாண்டிய சமஸ்தானம் எடுபட்டுப்போய் பிற்காலம் இராயர் சமஸ்தானத்திலே யிருந்து நாகம் நாயக்கனவர்கள் இந்த தேசத்துக்கு அதிகாரத்துக்கு வந்தார்கள். அப்போ வடக்காத்தான் புலித்தேவன் நாகம்நாய்க்கனவர்கள் சமஸ்தானத்துக்குப் போய் பேட்டி பண்ணிக்கொண்டதில் இவர்களுடைய பராக்கிரமங்கள் எல்லாம் விசாரிச்சும் அப்போ பிரதியட்சமாயி இவர்களுடைய சௌரிய காம்பீரங்களெல்லாம் வந்தது. வெகு சந்தோஷப்பட்டுக் கொண்டு புலித்தேவனைப் யார்த்து நீ பாத்ராயிருக்கிறாய், பாண்டிய ராசாக்களுக்கு எப்படி நடந்து கொண்டாயோ அந்தப்படிக்கு இப்பவும் எங்கள் உத்தரவுப்படிக்கு நடந்து கொண்டால் அபிமானமாய் வைத்துக்கொண்டு இருக்றோமென்று உத்திரவு கொடுத்து வஸ்திரங்கள் பூஷணங்கள் அனேக வெகுமதிகள் பண்ணி அனுப்பிவிச்சார்கள். உத்திரவு வாங்கிகொண்டு எதாஸ்தானத்துக்கு வந்து அவளவாள் ஆக்கியானசாரத்துக்குத் தக்கதாய் நடந்துகொண்டு வத்தார். சிறிது நாளைக்கு பிற்காலம் நாகம்ப நாய்க்கர் அவர்கள் குமாரன் விசுவநாத நாயக்கர் அவர்களுக்கு ராஜீயாதிபத்தியும் வந்து இவர்களுடைய ராஜீயாதிபத்தியமும் அரிய நாயகமுதலியார் அவர்கள் தளகர்த்தராய் பிரதானிகமும் நடந்து கொண்டு வருகிறபோது வடக்காத்தான் புலித்தேவன் சிறிது திரவியங்களும் திவ்வியமாய் இருக்கப்பட்ட ஆபரணங்களும் முத்து ஆரங்களும் கொண்டுவந்து மதுரை சேனாதிபதியான விசுவநாத நாயக்கரவர்கள் சமஸ்தானத்துக்கொண்டுபோய் அவர்களுடைய தரிசனம் பண்ணினயிடத்து அவர்கள் தங்களுடைய தகப்பனாருக்கு இவர் ரொம்பவும் இதவாய் வேண்டினவனாய் இருந்தார் என்றும் விசாரித்துக் கொண்டு அவர்கள் கொண்டுவந்து வச்ச காணிக்கைகள் எல்லாம் அங்கீகரிச்சு எடுத்துக்கொண்டு இவரை கிருபாதிறக்ஷயாய் நமஸ்கரித்து நீ எங்கள் தகப்பனாருக்கு எவ்வளவு விகிதனோ அந்தப்படியே எங்களுக்கும் வியிதனாயிரும் என்று சொல்லி அனேக வஸ்திரங்கள் பூஷணங்கள் வெகுமதி பண்ணி மதுராபுரிக்கோட்டைக்கு வடக்கு புறத்தில் திருமஞ்சன தர்வாசவுக்கு கிழக்கு முதல் படிச்சு பிறதிஷணமாய் இருபத்திரண்டாம் கொத்தளம் காவல் பார்த்துக்கொண்டு வரச் சொல்லி அப்பனை கொடுத்து சேர்த்த மாம்ர சிறிது கிராமங்களும்

சிறிது திசைகாவில் கிராமங்களும் கொடுத்து அனுப்பிவிச்சார்கள். இந்தப்படி அவர்களுடைய சன்னிதானத்தின் கப்பலை வாங்கிக் கொண்டு தன் பாளையப்பட்டுக்கு வந்து ராசா அக்கியானுசார பிரகாரம் தப்பாமல் நடந்துகொண்டு சிவசாதுன்மதஸ்தராய் இந்தப் படி பாளையப்பட்டு ஆண்ட ஷு 34 ஷு பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அவரவர் பரலோகத்தே அடைந்தார். அதின் பிற்காலம் அவரவர்கள் சகாப்தம்.

இவர் குமாரன் வரகுணராம சிந்தாமணி வடக்காத்தான் புலித் தேவன் பட்டம் கட்டிக்கொண்டு விவேகச் சாலியாய் வாரச பாரம் பிரியமாய் ஆண்டு மதுரை சமஸ்தானுதிபதியா சித்தானுவிர்த்தியாய் நடந்துகொண்டு மாமூலாய் நடந்து வரப்பட்ட கிராமங்களும் திசை காவல் கிராமங்களும் தானுபவிச்சுக்கொண்டு தங்களுடைய கொத் தளம் காத்துக்கொண்டு இந்தபிரகாரம் அந்தபாளையப்பட்டு துரைத் தனம் பண்ணிக்கொண்டு இருந்த ஷு 35 ஷு அதின் பிறகு பரலோக பிராப்தி அடைந்தார்.

அந்த சமயத்தில் இவர் குமாரன் சமசதிதேவன் பட்டம் கட்டிக் கொண்டி பாளையப்பட்டு ஆண்ட ஷு 24

அகின்பிறகு இவர் தம்பிக் காத்தப்பத்தேவன் தங்களுடைய பெரியவாள் நடந்துகொண்ட பிரகாரம் சமஸ்தானுதிபதிகளுடைய சித்தானுசாரபிரகாரம் அவர்களுடைய ஆத்தியப்படிக்கு நடந்து கொண்டு பட்டம் ஆண்டுகொண்டு வந்த வருஷம் 28.

அதின் பிற்காலம் அவர் குமாரன் காத்தப்புலிக்க தேவன் துரைத் தனம் ஆண்ட வருஷம் 10.

இவர் குமாரன் சித்திரபுத்திரதேவன் பட்டம் கொண்ட வருஷம் 28
இவர் குமாரன் காத்தப்பபுலித்தேவன் பட்டம் ஆண்ட ஷு 25
இவர் குமாரன் சித்திரபுத்திரதேவன் துரைத்தனம் ஆண்ட ஷு 63

அதின்பிறகு இவர் குமாரன் காத்தப்பபுலித்தேவன் பட்டம் கட்டிக் கொண்டு சீமை ஆண்டுக்கொண்டு வந்தபோது கர்நாடக சமஸ் தானம் அதாவது கர்நாடக அரசாட்சி வீழ்ந்துபோய் துருக்கர் துரைத் தனமாய் பெரிய நவாபு "மாபூ சுல்தான்" அவர்கள் இந்த பிரத்தியும் சீமைக்கு ஆனுர்கள். அந்த தருணத்தில் காத்தப்பப்புலித்தேவன் அவர்களைக் கண்டு பேறம் பண்ணிக் கொண்டு அவர்களிடத்திலும் அனேக வெகுமதிகளை வாங்கிக் கொண்டு அவர்களுடைய அப்பணைப்

பிரகாரம் யதாஸ்தானவிடத்தில் நவாபு மாபுசுகானுர் அவர்களுக்கும் அவர்கள் தம்பி மகமத் அலிகான் அவர்களுக்கும் சமாதானம் இல்லாமல் இருந்தபடியினுலே பெரிய நவாபுமாபூசுசான் அவர்சள், அவர்கள் பேரில் ரொம்பவும் தயவு செய்து யிருந்தபடியினுலே மகமது அலிகான் அவர்கள் ஈஸயல்கானரை அனுப்பிவிச்சு அவரை காத்தப்பப் புலித்தேவனுடனே யுத்தம் பண்ணி அவரை எடுத்துப்போட்டார்சள். அப்போ காத்தப்பப் புலித்தேவன் எடுப்பட்டுப் போய் இராமநாத புரம் சீமை போய் இருந்தார்கள். அந்த சமயத்தில் என் சீமையை சர்க்காரிலே சிறிது மதத்து பாளையக்காரர்களுமாய்க் கட்டிக் கொண்டார்கள். அப்போ அந்தத் தருணத்தில் காத்தப்பப் புலி தேவன் ராமநாதபுரம் சீமைக்குப் போய் இருந்தவிடத்தில் நவாபு சாயபு அவர்களுக்கும் மபூசுல்தான் அவர்களுக்கும் சமரசமில்லாமல் இருந்ததில் சென்னப்பட்டணத்துலே இருந்து நவாபு சாயபு அவர்கள் காகிதமும் முத்திரைத்தாளும் வந்து காத்தப்பப்புலித்தேவனை பட்டணத்துக்குக் கூட்டிக்கொண்டு போனுர்கள். அந்த சமயத்தில் இவர்க்குப் போய் நவாபுசாயபு அவர்கள் பேட்டியும் பண்ணிக் கொண்டுயிருந்தபோது மகமது இஸபல்கான் அவர்கள் பேரில் நவாபு சாயபு அவர்கள் தண்டு யெடுத்து வந்து யெங்கிட மறுதூர் கோட்டை யின் பேரில் யுத்தம் பண்ணி இசபல்கானை கைப்பிடியாய் பிடிச்சுக் கொண்டு வந்து அந்தப் பட்டணத்தில் (அந்தப் பட்டணத்தில்) தட்சின ராச்சியம் போய் இருந்து போது நவாப் அவர்கள் தளவாய் முதலி வரையும் பாளையக்காரயையும் பிடிச்சு பாளையங்கோட்டையிலே கைது பண்ணி அந்தச் சமயத்தில் காத்தப்புலிதேவனையும் புடிச்சு கைது பண்ணிபோட்டு போய் விட்டார்கள். இவர் துரைத்தனம் ஸ்ரீ 42.

சதறி-காத்தப்ப புலித்தேவன் மகா பகவபகுத்தன், தின பிறதியில் அருண உதயத்து யெழுந்திருச்சி பிராதாஸ்நானம் பண்ணி மகா சுசீலனுய் இருந்து கொண்டு வெகுபிரபலமாய் இருக்கப் பட்ட தேவபிராமணுளை தருவிச்சி ரசிதமயமான ஆசனங்கள் பேரில் உக்காத்த வேளை அவர்கள் பாதங்களுக்கு சுவர்ண ரசித புஷ்பமங் களாலே அர்ச்சனை செய்து அவரவர்கள் மனசுக்குத் தக்கினவயிரங்கள் தட்சனை தாம்பூல மங்கள சகிதமாய் தம்மத் தையருக்குக் கொடுத்து அவர்களுடைய பாததீர்த்தம் வாங்கிக் கொண்டுப் பரசபட்டச பற மானத்துடனே அவர்களுக்கும் இன்னும் வந்த பிராமணுளுக்கும் அன்னம் வஸ்திரம் பட்டி தாக்கீது செய்து சகல முஸ்திகளுங் கொடுத்து அதின்பிறகு வெகு நேமத்துடனே சிவபூஜை செய்து அதின் பிறகு சாப்பிடுகிறது. இவரிடத்தில் சம்பளத்தில் யிருக்கப்பப்பட்ட வீரூருள் பெறமுசருயிப்பார்கள் அவாளுக்கு ஒருத்தருக்கு 12 மாக்

காலால் கலம் 81 பட்ட கலத்தில் ஆறுகலம் நெல்லும் அன்பது வேளையும் அவாளுடைய சம்சாரத்துக்கு வேணுமான மட்டுக்கும் புடவைகளும் குடுக்கிறது எந்த வேளை பார்த்தாலும் வாத்தியார் பிர சங்கத்துடனே இருக்கிறதே தவிற அரை நிமிஷ மாகிலும் விறுதா காலட்சேபம் பண்ணுகிறது இல்லே. இது தவிற ஆராதிரத்திலே கவனம் மகா சமர்த்தனெய்ச் சொல்லுவர். தியாகம் கேட்ட பேர் களுக்கு நூறு பொன் இருநூறு பொன் கொடுக்கிறது பிரம்மச்சாரி களை யாரைக் கண்டாலும் அவர்களுக்குக் கன்னிகாதானம் பண்ணு கிறது. இதுவல்லாமல் இவர் மகாசூரன். இவருக்கு அப்போ வயசு பதினெட்டு உண்டு. அப்போ சிவகிரி பாளையக்காரன் மூவாயிரம் பவுசு உடனே வந்து இவர்கள் இலாகா கிராமங்களிலே வந்து மாடு களை கொள்ளையிட்டுக் கொண்டு போகிறபோது இவர் கிட்ட வந்து அந்த தருணத்தில் இவர் இலாகா மனுஷர் அங்கேஅங்கே போய் இருந்தார்கள். அப்படி இருக்கையிலும் இவர் மகா சுத்த வீரரான படியாலே சகல ஆயுதத்துடனே தான் ரெண்டு மனுஷனுடனே யேகுற சிவகிரியாளாடுகள் ஓட்டிக்கொண்டு போகிறபோது இந்த விதமாய் பிரபுகள் பகையாளி மேலே போறது கேட்டு சறுது சென் னூத்தி அன்பது சனம் ஆயுதபாணிகளாய் புறப்பட்டு இவர்கள் இடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

இந்த சனத்தோடே வாயு வேகமாய் போய் சிவகிரிபாளையக் காரர் அழுக்காறுகொண்டு மூவாயிரம் பேர் வீரருடன் வந்து இவர் நாட்டு" மாடுகளையெல்லாம் கொள்ளையடித்துப் போனார்களாம். (இதுவே நம் தமிழ் நாட்டுப் போர் முறையில் பண்டைய வழக்காறு போலும்) அத்தருணம் இவர் தன் "பாலா"வை யெடுத்து நூற் றைம்பது போர் வீரர் புடை சூழ்ந்து வர்ச்சென்று அச்சிவகிரியானைத் துரத்துக்கொண்டு போய்க் கிரீடை யொத்துப் போர் புரிந்தாராய் பகைவரை வெள்ளித்தள்ளிப்போட்டு குத்தி தள்ளுகிறபோது அந்த சனங்கள் உறுவடிச்சுகொள்ளுகிறபோது புலித்தேவனுக்கு ரெண்டு மூணு காயம் பட்டத்து அது றவா பண்ணமல் தனஞ்சயன் சயிதமாய் உட்புகுந்து அனேகம் பேர்களை சம்பாரம் பண்ணுகிறபோது சிவகிரி பவிசு நிக்கமாட்டாமல் சில்லா சிதருயி முறிஞ்சி ஓடினார்கள். அப்போது புலித்தேவன் தன்சனத்தை ஒறுசமை பண்ணிக்கொண்டு அதில் பாதி சனத்தை முறிஞ்சி ஓடுகிற சிவகிரி ஜனத்தை கூறுக்காட்டி கொன்ன சொல்லி முன்னே அனுப்பிவிச்சு தக்கின சனத்தைக் கூட்டிக் கொண்டு தான் பின் தொடர்ந்துபோய் துறத்தி சம்ஹாரம் பண்ணின விதம் கத்திகளினாலும் பாலாவுனாலும் வெட்டுகிறதும் குத்தி தள்ளுகிறதுமாய் இந்தப்படி பின் துடர்ந்து சம்ஹாரம் பண்ணிக்

கொண்டு வாரபோது சிவகிரியாறு போற பேறு போங்கள் என்று ஒருத்தருக்கொருத்தர் திரும்பி பார்க்காமல் ஓடுகிறபோது புலித் தேவனும் பின்துடர்ந்து சம்ஹாரம் பண்ணிக்கொண்டு போனார். இந்தப்பிரகாரம் சிவகிரி கோட்டை வரைக்கும் துரத்திக் குத்தின போது வாசுதேவ நல்லார் முதல் சிவகிரி கோட்டை வரைக்கும் பிணக்குவியலாய்க் குவித்துத் தமது ஆநிரையை மீட்டுக்கொண்டு வாகை புனைந்தார். புலித்தேவன் சேனத்தில் அன்பது சனம் மீதமாய் போனார்கள். இந்தப் பிரகாரம் பராக்கிரமம் பண்ணின நாள் முதல் எழுபத்திரண்டு பாளையக்காருக்கு புலிதேவன் என்றால் சிம்மஸ்வப்பன மாயிருக்கிறது. இதுவல்லாமல் வெட்கம் சொல்லு கோட்டை மண்ணு கோட்டை இசபன்கான் அவர்களுக்கு புலித்தேவன் பேரில் ஜிந்தாயி பாளையக்காரர் நாற்பதினாயிரவரையும் மலையாளியினர் ஐயாயிரம் பேர்களையுந் துணையாகக் கொண்டு போர் புரிகையிலே இப்புலித் தேவரும் ஒரு மண்கோட்டையிலே தங்கியிருந்து ஒரு மூன்று வருட காலம் வரையிலும் நாடோறும் இரவு பகலாய்ப் போர் புரிந்து பகை வரை விழக்காட்டினார். இங்ஙனமாகப் பகைவருடன் போர் புரிந்து ஒரு தனி வீரராய் இருந்து மொத்தம் (42) நாற்பத்திரண்டு வருடம் பட்டம் ஆண்டார்.

பாளையக்காரர் சைனியம் நாற்பதாயிரம் சைனியம் மலையாளத்து சைனியம் ஐயாயிரம் ஜனங்களும் ஆகற்றுட்டகசனம் 45000 சனங் களும் பதினைந்து பட்டாளப் பாளையரும் மூவாயிரம் குதிரையும் இத் தினை பவுசோடே இசபன்கானர் அவர்கள் புலித்தேவன் கோட்டை பேரில் போய் இறங்கி யுத்தம் பண்ணுகிறபோது புலித்தேவன் பகல் எல்லாம் கோட்டையிலே இருந்து யுத்தம் பண்ணுகிறது. இந்த சபன் கானறவர்கள் கோட்டையை நாலு பாரிசங்களும் மொறஞ்சா போட்டு அதின் பேரில் பீரங்கி எடுத்துக் கட்டி சுடுகிறபோது அந்தக் குண்டு பட்டால் கோட்டை ஒரு ரவையாகிலும் இடியாது இல்லை இந்தப்படி சண்டை பண்ணிக்கொண்டு இருக்கிறபோது புலிதேவன் சைனியம் கோட்டைக்குள்ளே யிருந்து நெலமாலிகன் பண்ணிக்கொண்டு அந்த வழியிலே இருநூறு முந்நூறு சைனியம் போய் அந்த வழியிலே போய் மொறஞ் சாவுலே இருக்கப்பட்ட சைனியங்களைக் குத்தி தள்ளிப் போட்டு பீரங்கிகளையும் இழுத்துக்கொண்டு கோட்டை வந்து சேருகிறது. இதுவல்லாமல் ராத்திரி வேளையிலே புலித்தேவன் அம்பாரி பேரிலே இருந்துகொண்டு வாயிரம்செதை கொண்ட அனேக தீபட்டி களுடனே பகையாளி சேனையிலே பூந்து சின்னபின்னம் பண்ணி அனேக சனத்தை அடிச்சு திரும்பி கோட்டை வந்து சேருகிறது. இந்தப்படி ஒரு மண்ணு கோட்டையிலே இருந்து கொண்டு 63000

பவுசோடே மூணு ஷ்டு கீமுதமாய் யுதம் பண்ணினர். இது முதலான தாய் (இது முதலானதாய்) இன்னும் ஆனேக பராக்கிரமங்கள் பண்ணியிருக்கிரர் என்று ருஞ்சியத்துலே இருக்கப்பட்ட சனங்கள் பிரக்கியாதியாய் சொல்லிக் கொள்ளுவார்கள்.

அதின் பிற்காலம் இவர் குமாரன் சித்திரபுத்திர தேவன் திறனை வல்லி சீமை அதிகாரம் சையிது மஹமதுகான் அவர்களிடம் போய் காத்துக் கொண்டுயிருந்து பேட்டி பண்ணிக்கொண்டு பூர்வத்து சங்கதிகள் நடக்கப்பட்ட சங்கதிசளும் அறியப்பண்ணிக்கொண்டயிடத்தில் அவர் கேட்டு இந்த சங்கதிக்கு நவாபு ஸாஹேபு றவர்களுக்கு எழுதி அனுப்பி விச்சதுக்கு என்னுடைய ஸோததகிருமு ஆவுடயாபுரம் விட்டுக் கொடுக்கச் சொல்லியும் தக்கின கிருமு பூமிகள்..... ஞலே விடுகிறேமென்றும் எழுதிவந்ததாயி ஆளபுரம் வீடு ஷ்டு 1க்கு ஐந்நூறு பொன் காணிக்கை கொண்டு......சொல்லி அப்பணே குடுத்து அந்தப் படியிலே வந்து சிவகிரிபாளையக்காரன் பின்பு சிறிது பாளையக்காரரையும் சமைபண்ணிக்கொண்டு சித்திர புத்திர தேவனுடனே யுத்தம் பண்ணி அவரைத் துரத்திப் போட்டு பாளையம் கட்டிக்கொண்டான். அதின்பிறகு மகா ராஜ-ராஜ ஸ்ரீ கும்பினியார் அவர்கள் ராச்சியாதிபதிகளாய் வந்த பிற்பாடு திறனெ வெல்லி சீமைக்குக் கலெக்டராய் வந்த மஹான் "அறவான்சாகிப்" அவர்களிடத்து சித்திரபுத்திர தேவன் போய் கண்டு எல்லா சங்கதிகளும் சொல்லிக் கொண்ட விதத்தில் அவர்களுக்குக் கிருபை வந்து பூர்வத்து சங்கதிகளெல்லாம் விசாரிச்சி அந்த சங்கதிக்கு கமட்டிக்கு எழுதி அனுப்பி விச்சு உத்தரவு தருவிச்சுக் கொண்டு சிவகிரியான் கட்டிக் கொண்டு யிருந்த கூடலூர் பனையன்றூர் சர்க்காரிலே சபுத்தி பண்ணியிருந்த ஆவுடையார் புரமும் தாருகாபுரம் பட்டக்குறிச்சியும் விடுவிச்சு கொடுத்து நெல்க்கட்டு செவ்வலுலே வீடுகட்டிக்கொண்டு யிருக்கச் சொல்லி ஷ்டு 1க்கு பொன் 1505 கொடுத்துக்கொண்டு வரச் சொல்லி கும்பினி மொஹ..... னு பண்ணின கவில் நாமா-காகிதமும் கொடுத்தார்கள். அந்தப்படி சித்திரபுத்திர தேவன் பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி வந்த வருஷம் 26.

அப்பொ சாலிவாகன சகாப்தம் சதர்ஸ்ரீ சித்திர புத்திர தேவனுக்கு ஆன் சந்ததியில்லாதபடியினலே அவருடைய சகோதரர் கல்லியாணம் பண்ணிக் கொண்டிருந்த இராசாமி தேவனேச் சித்திரபுத்திர தேவனுக்கு அவசான காலத்திலே தருவித்து நீ யெனக்குத் தாயாதியானவன் அதுவுமல்லாமல், மாப்பிள்ளையானபடியினலேயும் நமக்கு ஆண் சிசு இல்லாத படினலேயும் உமக்குப் பட்டம் கட்டுகிறேம்.

என்று சொல்லிப் பட்டங்கட்டிப் போட்டுப் போனார்கள். அது முதற் கொண்டு இந்தப் பதினாலு வருஷமாய் கம்பெனிக்கு உண்டான தோபா கொடுத்துக் கொண்டு பாளையம் பட்டு அனுபவித்துக் கொண்டு வருகிறேன்......

எழுதியது நிட்டல நாயுடு குமாஸ்தா (in Telugu)

★

# அம்மையனுய்க்கனூர் ஜமீன்தாரி வம்முசா வழி

## டி. 3846

இந்த அம்மைய னுயக்கர் வம்முசாவழி கணக்கு தாம்பூரப் பட்டயத்திலிருந்து பாறத்து யெழுதிக்கொண்ட நகல்

...வ சங்கதிகளுடைய வற்தமானமும் வமுசாவழிகளுடைய விபரமும் பெஞ்சமாக்கய னுயக்கர் பாளையப்பட்டும் அம்மைய னுய்க்கனூருக்கு சுப ஸ்ரீ சாலியவாகன சகார்த்தம் 157 கலியுகார்ப்பிதம் ௵ 4536 யிதன் மேல் செல்லாநின்ற நள ௵ சிர்ரவணசுத்தம பஞ்சமியுஞ் சுக்கிரவாரமும் அனுஸ நட்சேத்திரமும் பால்வாகரணமுங் கூடிய சுபயோக சபதினத்தில் மகாருசமானிய ஈருயரவர்கள் சமஸ்தானத்தில் யெங்களுடைய பெரியோர்கள் பெஞ்சைமாக்கய னுய்க்கர் சேவுகஞ் சேவிச்சுக்கொண்டு யிருந்தார். அவர் அப்படியிருக்கையில் வடக்கேயிருந்து ருயர் சமஸ்தானத்தை யெடுபடுத்த வேணுமென்பதாய் டில்லிபாச்சா பாளையமும் சிறுது ருசாக்களும் சோமதளமும் வந்து ருயர் சமஸ்தானம் யெடுபட்டு போறதாக யிருக்குற முன்னுக்கு ஸ்ரீ கொட்டியம் நாகம னுய்க்கரவர்கள் குமாரன் விசுவனுத னுய்க்கர் படைவெட்டப் போறமுன்னுக்கு எங்களுடைய பெரியவர் பெஞ்சைமா னுய்க்கரும் எங்கள் சனமும் கூடப்போய்ப் பாளையத்தில் அனேகம் சண்டை செய்து அனேகஞ்சனங்களை யிறக்கக் கொடுத்து அவர்களையுஞ் செயித்து உத்திரவாதம் பண்ணினதில் ஸ்ரீ விசுவனுத னுய்க்கர் அவர்களுக்கு சந்தோஷம் வந்து எங்களுக்கு அனேக வெகுமதியளுஞ் செய்து திரும்ப ருயரவர்கள் சமஸ்தானத்தில் பெஞ்சை மாக்கய னுய்க்கரை ரொம்பவும் சந்தோஷப்பட்டதில் ருயரவர்கள் இவனுக்குச் சிறுது கிருமம் பூமி விட்டுக் குடுத்து உன்னிடத்தில் சேவுகம் யிருக்கட்டுமென்று உத்திரவு கொடுத்தார். அதே மேரைக்கு அவர்களிடத்தில் அனேக னுளாகக் காத்திருந்தார். அதின்பிறகு பாண்டியன் தேசம் மதுருபுரிக்கி விசுவனுத னுய்க்கரவர்களுக்கு பட்டாபிஷேகமானதின் பிறகு தளவாய் அரியனுயக முதலியார் அவர்களும் விசுவனுத னுய்க்கரும் யிருபேருமாக மதுருபுரிக்கு வந்து முன் பாண்டியன் போட்டிருந்த கோட்டையை சுற்றி விலாசமாய் 72 கொத்தளத்துடனே கோட்டைப்போட்டு 72 கொத்தளத்துக்கும்

72 பாளையக்காரரையும் நேமுகஞ் செய்குறது. திருமஞ்சன வாசலுக்குப் பிறதட்சணமாய் வடக்கு மூலேயில் அன்பதாம் கொத்தளங் காற்கச்சொல்லியும் மதுருபுரிக்கு வடமேற்குச் சிறுமலேயும் அதில்ச் சேர்ந்த நெல்வழிக்கிருமங்களும் விட்டுக் குடுத்து அதற்கு நாமகறணம் அம்மையனுய்க்கன் பாளையமென்று பேரும் கொடுத்து ஆரணியம்மான வனத்தில் சிறுமலே அடிவாரத்தில் கோட்டைப் போட்டுக்குடுத்து விட்டுக்குடுத்த கிருமங்களுடைய பேர் விபரம்

வேடசந்தையூர் வெள்ளோடு பச்சைமலன்கோட்டை சம்பு துரைக்கோட்டை ஒருத்தட்டு கிருமம் மாளையகவுண்டன்பட்டி எத்துலூட்டு சித்தர்நத்தம் மேட்டுப்பட்டம் மட்டப்பாரை பள்ளப் பட்டி குல்லலக்குண்டு குலசேகரன்கோட்டை தனிச்சியம் இதில் சேர்ந்த பூமியும் விட்டுக்கொடுத்து சகலவெகுமதியுஞ் செய்து பின்னே யும் வெள்ளேக்குதிரை வெள்ளேசுருட்டி, வெள்ளேபாவாடை, வெள்ளே வெண்சாமறம் வெள்ளேடால் யிவ்வளவுங்குடுத்து அனுப்பிவிச்சார்கள். அந்த முன்னுக்கு ஆதியில் பெஞ்சைமாக்கய ஞயக்கர் பட்டம் யிருந்தது வருஷம் 13.

2வது பட்டம் அவர் குமாரன் அம்மையலக்கம ஞயக்கர் பட்டம் அவர் பெண்சாதி யெறம்மாள் மேல்ப்படி குமாரன் வல்லாளமாக்கய ஞய்க்கன் அப்போது வகையறுப்புக்குடுத்தது சக்கரம் 1000 பணம் ஷெ அம்மையலக்க ஞய்க்கர் பட்டமிருந்தது ஷ 22.

அவர் ஞளேயில் நடந்த சங்கதியள் யிவடம் சந்தையூர் மகா ஆரணியம்மான யெலந்தவனமாக யிருந்தது அந்த வனத்திலே இடையர் பசும்மாட்டு தொழு போட்டிருந்தார்கள். அப்படியிருக் கையில் ஒரு தொழு வாசலில் ஒரு யெலந்தமரம் பெரிய மரமாக யிருந்தது. அந்த யிடையன் தொழுவிலிருந்து பசுவின் பால்கறந்து கொண்டு வருகிறபோது யெலந்தமரத்து தூரத பால்களெல்லாம் மரத்துத் தூரிலே கொட்டி கவுள்ந்து போகும் இது நிமித்தியம் அந்த மரத்தை வெட்டினன். வெட்டுகிறபோது மரத்துக்குள்ளே சுயம்புவாய் ஒரு லிங்கம் முளேத்து இருந்தது. அந்த லிங்கத்தின் பேரில் இடையன் வெட்டினக் கோடாலிப்பட்டு இந்தகுறி கண்டது. உடனே யிடைய னுக்கு கண் தெரியாமல் போச்சுது. அந்தச் செய்தியை யிடையர் அம்மையலக்கம ஞய்க்கரிடத்திலும் கர்த்தாக்களாகிய விசுவநாத நாய்க்கரிடத்திலும் அறியச்செய்தார்கள். அப்போது அவாளிரண்டு பேருந் தொழுவாசலிலே வந்து பாற்கிறபோது ஒரு யிடையன் பேரில் தெய்வம் வந்து முன்வெட்டின யிடையனுக்குக் கண்ணுங்குடுத்து

அந்த லிங்கத்தின் பெயர் கதரீஸ்பர ரெண்டு சொல்லி அந்தயிடத்தில் கோவிலுங்கட்டித் தினசரி பூசித்து வரச்சொல்லி உத்தரவு ஆச்சுது. அந்த மேரைக்கிப் பூசையும் நடப்பிவிச்சார்கள்.

3-வது பட்டம் அவர் குமாரன் வல்லாளமாக்கய ஞய்க்கர் மேல்ப்படி பெண்சாகி காமலம்மாள் மேல்ப்படி குமாரன் கொந்தி பொம்மள ஞய்க்கர் அவர் பட்டமிருந்தது வருஷம் 15.

அவர் நாளையில் நடந்த சங்கதி ஒருத்தட்டுக்கிருமத்தில் சாலைப் பாதைக்கு மேற்கு வெள்ளைக்காட்டுக்கு கிளக்கு குருஞத சுவாமி கோவில் கட்டினது யிதுவல்லாமல் திண்டிக்கல்ச் சீர்மை தாடிக் கொம்பிலிருந்து சக்கர ருயரென்கிறவர்கள் திண்டிக்கல்லை சுத்தி யெட்டு சிவ தலமிருந்ததை விஷ்ட்டுணு ஸ்தலமாகச் செய்த முன்னுக்கு யிந்தச் சந்தையூர் கதரீஸ்பரர் கோவிலையும் விஷ்ட்டுணு ஸ்தலமாகச் செய்து கதரி நரசிங்கப்பெருமா ளென்கிறப் பேருங்குடுத்து அது முதல் விஷ்ட்டுணு ஸ்தலமாச்சுது. பின்னையும் கற்ஞடகத் துரையவர் களுடைய பள்ளையத்துப் பால்பசுக்கள் மதுரை வடக்கு வாசல் அகிள மேட்டில் மேய்ந்துக் கொண்டிருக்கும் போது கீள்நாட்டு கள்ளர் வந்து பசுக்களையெல்லாம் பிடித்துக் கொண்டு போகையில் அந்தச் செய்தி தனிச்சியம் கிருமம் அஞ்சு கோட்டையார் அறிந்து மேல்ப்படி அஞ்சுகோட்டைச் சேர்வைக்காரரும் சேவுகரும்......னசேகரத்துடனே போய் கல்லந்திரி யென்குற ஊரையுஞ்சுத்தி வளைந்து பசுவுகளை யுந்திருப்பிக் கொண்டு சிறுது கள்ளரையும் வெட்டிக் கள்ளர்......... யளைப்பொதி பிடித்துக் கொண்டு மதுரையில் கற்ஞடக துரையவர் கள் சமுகத்தில்க் கொண்டுபோய் ஒப்பிவிச்சார்கள். அப்போது கற்ஞடகத் துரையவர்களுக்கு சந்தோஷம் வந்து அம்மைய வல்லாளம் ...... யக்கரை வரவழைத்து அனேகம் வெகுமதியுஞ் செய்து சாம...... வெண்டையமும் வீரகண்டாமணியும் தண்டிகை முன்கொடைசிங்க முகமுங் குடுத்து ஷெ தண்டிகைக்கு உம்பளம் விட்ட கிருமம் .. மங்கலம் முடுக்குச் சீர்மையில்க் கல்லாதது யோவார்பட்டி ச......ஞய்க்கனூர் பேதக்காலிங்கமஞய்க்கன்பட்டி குய்யமஞய்க் கனூர் ஆக 6 கிருமம் விட்டுக் குடுத்து மீஞட்சி சன்னிதியில் சங்கிலி மண்டபம் முதல்க் கொண்டு கேகுனனுவார்ங்கோட்டை வரைக்கும் வைகை தீரத்தில் உள்ள அரமனை கிருமங்களெல்லாங் காவலுங் குடுத்து காவலுக்குள்ள நஞ்சை புஞ்சையும் விட்டுக்குடுத்து சொற்ஞதாய வெடிகை வேண்டுகோலும் நஞ்சை புஞ்சைக்குள்ள சுபந...... முங்காவலுக்கு விட்டுக்குடுத்து பின்னையும் மதுரையில் கூடலளகியப் பெருமாள் கோவில் ரத உச்சகத்துக்கு கொடியேறின ஞள் முதல் ரத

83519

உச்சவம் வரைக்கும் அம்மையவல்லாளமாக்கய ஞயக்கரை வரவழைத்து வைத்துக் கொண்டு தினசரி மாலேயும் போட்டுப் பரிவட்டமுங்கட்டித் தீர்த்தப் பிறசாதமுங் கொடுத்து ஒன்பதா:ம் ஞள் தேர்வட்டம் பிடிக்கிற முன்னுக்கு இவர் கையிஞலே தேங்காய் தொட்டுக்குடுத்து ரதம் ஓட்டிவைக்கிறது ரதம் நிலேக்கி நின்றவுடனே அறுதிப் பரிவட்டமுங் கட்டித் தீர்த்தப் பிறசாதமும் மாலேயும் குடுத்து உபசாரத்துடனே அனுப்பிவிக்கிறது.

4-வது பட்டம்...பொம்ம ஞய்க்கர் அவர் பெண்சாதி வீர முத்தம்மாள் மேல்ப்படி குமாரன் பொன்னய ஞய்க்கர் காமயஞய்க்கர் அவர் பட்டமிருந்தது ௵ 28.

அவர் நாளேயில் நடந்த சங்கதி குருவித்துரைச் சித்திரத்து வல்லவர சுவாமிக்கி ரதம் உண்டுபண்ணி ரதம் ஒட்டிவிச்சார்கள்.

5-வது பட்டம் பொன்னய ஞய்க்கர் பெண்சாதி கிஷணம்மாள் அவர் தம்பி காமய ஞய்க்கர் மேல்ப்படி பெண்சாதி சின்னயெறம்மாள் பொன்னய ஞய்க்கர் மகன் பேர் லக்கய ஞய்க்கர் பொன்னயக்கர் பட்டமியிருந்தது ௵ 24.

6வது பட்டம் அதின் பிறகு லக்கம ஞயக்கர் சிறுபிள்ளேயாக யிருந்தவரை பட்டம் கட்டிவைத்தார்கள். அவர் பட்டம் ௵ 1.

அப்போது நடந்த வயணம் பட்டக்காரனுடைய...யாரகிஷ்ணம்மா ளிடத்தில் துற்போதனேகளாக மேல்ப்படி...பந்துசனங்களாக யிருந்த பேர் சொன்னது உன்னுடைய கெ...காமயஞயக்கன் உன்னேயும் உன் பிள்ளேயையும் கொன்றுபோட்டு தா... மிருக்கிறதாக யெத்தனஞ் செய்திருக்கிறன். அவனேக் கொண்டு போட்டால் உன் மகனுக்குப் பட்டம் நிலேக்குமென்று சொன்னமாத்திரத்திலே தன்கொழுந்தன் காமயஞய்க்கனே அபகடமாய் கொன்று போட்டாள். அந்தச் செய்தி காமய ஞக்கர் பெண்சாதி யெறம்மாள் அறிந்து தீக்குழியில் குதிக்கிரதற்கு யெத்தனஞ் செய்து மக்கப்பட்டம் நிலேயாமல் தாயாதி பட்டமா...க வேண்டியதென்று சாபமிட்டு உடனே அக்கினியில் மூள்கிஞள் அந்த சாபத்திஞலே பட்டத்துக்கு யிருந்த குழந்தையுந் தெய்வீகமாச்சுது அதுமுதல் தாயாதிப் பட்டமாச்சுது.

ஏழாவது தாயாதிக்காரஞகிய வங்காறு சின்னஞய்க்கரைப் பட்டங்கட்டி வைத்தார்கள். மேல்ப்படி பெண்சாதி வங்காரம்மாள் ஷெ குமாரன் கொன்னவாய்க் கதிரிஞய்க்கர் சினயஞயக்கர் பொன்னுச் சின்னஞய்க்கர் வங்காறு சின்னஞயக்கர் ஆ பேர்கள் 4 வங்காறு சின்னள ஞய்க்கர் ௵ 20.

அப்போது நடந்த சங்கதி வகையறுப்புச் சக்கரம் 2000 பணம் அப்போது மதுரையில் கற்ருடகத் துரையளாகிய திருமலே ஞய்க்கரவர்கள் திருசுரபுரத்துக்குப் போகவேண்டியதாய் அவர்கள் பல்லக்குப் போகிகளாகிய ஆணைக்கட்டி அக்கலபோயஃளயும் குலவப்போய்அஃள யும் வரவஃளத்து மூன்று ஞளேக்குள்ளே போய்த் திரும்புவையாயென்று கேள்குறபோது யெங்களாலே நிறுபாகமில்லே. அம்மைய ஞய்க்கர் ஸதாஞதிபதியும் போகியளும் வந்திருக்கிருர்கள். அவர்களாலே ஆகுமென்று சொல்ல அப்படியே திருமலே ஞய்க்கரவர்கள் யிவடத்துப் போகியஃள ஞகேழ்க்க நல்லதென்று பல்லக்குக் கொண்டு திருசுர புரத்துக்குப்போய் மூன்று ஞளேயில் மதுரைவந்து சேர்ந்தார்கள். அப்போது போகியள் பேரில் ரொம்பவும் சந்தோஷப்பட்டு ரெங்கா ரெட்டியாரிடத்தில் சொல்லி வெகுமதியுஞ் செய்து சிறிது கிராமம் பூமி விட்டுக் குடுக்கச் சொல்லி சொன்ஞர்கள். யிவ . . ம் அளகபோயஞம் கம்பபோயஞம் கேட்டுக்கொண்டது. யெங்களுக்கு கிருமம் பூமி தேவையில்லே. யெண்ணெண்ணேக்குஞ் சீவனம் நடந்து வரும் படியாய்த் தங்கையாறும் அதில்ச் சேர்ந்த கேணியளும் பண்ணிமுட்டி முதல் வைகையாத்தில் விளாம்பட்டிக் கருப்பணசுவாமி கோவிலுக்கு மோ ... நெல்லித் தோப்பு வளுக்குப்பாரை வரைக்கும் மச்சங்கள் பிடித்துச் சீவனம் பண்ணும்படியாய் உத்திரவு குடுக்கவேணுமென்று கேட்டார்கள். அந்தப்படியே கற்தாக்களாகிய திருமலே ஞய்க்கரவர்கள் தா...சனப் பட்டையத்தில் எழுதிக் கொடுத்து சீவனம் நடக்கும் படி செய்தார்.

எட்டாவது பட்டம் அவர் குமாரஞகிய பெரிய சக்களஞய்க்கர் பட்டமாக வந்தார். மேல்ப்படி பெண்சாதி ...யெறம்மாள் ஷெ குமாரன் பெரியமுத்தளஞய்க்கர் சின்னமுத்தளஞய்க்கர் யிஃள...யோசின்னம்மாள் மேல்ப்படி குமாரன் கதிறிஞய்க்கர் குமாறுஞய்க்கர் ஷெ யெரிசக்களஞய்க்கர் பட்டமிருந்தது வஷ 25

9வது தாயாதிக்காரஞகிய வயித்தியப்ப ஞய்க்கர் பட்டமாக வந்தார். ஷெ பெண்சாதி சின்னயெறம்மாள் ஷெ குமாரர் பெத்தள ஞய்க்கர் வயித்தியப்பஞய்க்கர் பட்டம் வஷ 38.

அவர் ஞஃளயில் நடந்த சங்கதி மதுரையில் மீஞட்சி சுந்தரேஷ் பராளதெரிசினத்துக்குப் போயிருந்தபோது சுவாமிக்கித் தினசரி உச்சிக்கால வேஃளயில் அபிஷேகம் நெய்வேத்தியம் நடக்கும்படியாய் சுவாமி கோவிலில் முன்பிறகாறம் வடக்கு நெட்டில் கடம்ப மரத்துக் கிளக்குத் தெற்குப் பார்த்த அறக்கட்டஃள உண்டுபண்ணி அதற்கு உள் தீபமும் செய்துக் குடுத்து சுத்தக் கிரையத்துக்கு மூஞு தோட்டமும் மதுரையில்த்தானே வாங்கிவிட்டு நடப்பிவிச்சி வருகிருர்கள். பின்ஃன

யும் ஆதியில் யிந்த ஆதிக்கமுண்டான ளுள்முதல் அமட்டரைக் கீழ்கோட்டை தொப்பம்பட்டி யிந்த மூன்றும் யெங்கள் பாளையத்தில் வெள்ளோடு பச்சை மலன்கோட்டை சமபுதுக்கோட்டை யிந்த மூன்று கிருமத்தில்ச் சேர்ந்த உபகிருமாகயிருந்தது. யிப்போது சிறுது ஞளைக்கிப் பிற்பாடு இந்தப் பாளையப்பட்டு தாயாதி பட்டமான பிறகு சந்துக்கண்டு வேளைகண்டு அந்த மூனூரிலேயும் யிருந்தபேர்கள் அலாதாயத்துண்டு பாளையப்பட்டு செய்து கொண்டார்கள்.

10வது தாயாதிகாரனுகிய பெரிய சின்னள ஞயக்கர் பட்டமாக வந்தார் ஷெ பெண்சாதி யெறனுகம்மாள் அவர் பட்டம் யிருந்தது ௵ 25.

அப்போது நடந்த சங்கதி மதுரையில் அறக்கட்டளைக்கி உபரிக் கட்டளையாக நடப்பிவிச்சார்.

11-வது பட்டத் தாயாதிக்காரனுகிய பெத்தள ஞய்க்கர் மேல்ப் படி பெண்சாதி...மலம்மாள் கொண்டாயி அம்மாள் ஷெ குமாரர் குழந்தைவேலுஞய்க்கர், கனகயஞய்க்கர், பொன்னயஞய்க்கர், பொம் மாச்சிஞய்க்கர், லக்கயஞய்க்கர், ஆக-ஆண்சனம் 5-பெண், பாப்பாயி அம்மாள் அவறஞ்சியம்மாள் ஆக-பெண்சனம் 2. பெத்தளஞய்க்கர் பட்டம் யிருந்தது ௵ 20.

12வது பட்டம் தாயாதிக்காரனுகிய பெரியமுத்தளஞய்க்கர் ஷெ பெண்சாதி வங்காரம்மாள் சிக்கம்மாள் ஷெ குமாரன் பெரியகாமள ஞய்க்கர் ஷெ பெரிய முத்தளஞய்க்கர் பட்டமிருந்தது ௵ 27.

அப்போது நடந்த சங்கதி கதிரி நரசிங்கப்பெருமாள் கோவில் முன்பாக யிருக்கிற லாகடம் 1. சந்தையூர் கன்னிமார் கோவில் குறுநாதசுவாமி கோவில் முன்பாகயிருக்குற லாகடம் 1. யிந்த மூன்றுங் கட்டி வைத்தார்கள்.

13-வது பட்டம் தாயாதிக்காரனுகிய கதிரிஞய்க்கர் ஷெ பெண்சாதி சின்னக்கண்ணம்மாள் ஷெ குமாரன் சக்களஞய்க்கர் ஷெ கதரிஞய்க்கர் பட்டமிருந்தது ௵ 18

அப்போது நடந்த சங்கதி சந்தையூருக்குந் தெற்குப் பெருமாள் கோவிலுக்கும் தேரோட்டி வைத்து ஷெ கோவிலுக்கு முன்பு யிருக்கிற தெற்பக்குளத்தில் மைய்ய மண்டமும் கட்டி வைத்து ...ரையில்க் கூடழகிய பெருமாள் கோவிலுக்கும் வெகுஞளாய் ...றதேரையும் ஓட்டி வைத்தார்.

14-வது பட்டம் தாயாதிக்காரனாகிய கொன்னவாய்க் கதரி னாய்க்கர் ஷெ பெண்சாதி முத்து ரெங்கம்மாள் அவர் பட்டம் யிருந்தது ஷெ 3

அப்போது நடந்த சங்கதி ஷேஷா .. கலாபத்தில் சந்தையூர்ப் பெருமாள் கோவில் பூசையில்லாமல் அடைபட்டுப் போச்சுது. அப்போது வகையறுப்பு சக்கரம் 3000 பணம்

15-வது பட்டம் தாயாதிக்காரனாகிய சின்னளனாய்க்கர் ஷெ பெண் சாதி குமார சின்னம்மாள் ஷெ குமாரன் காமளனாய்க்கர் வீரசின்னம் மனாய்க்கர் பாப்பயனாய்க்கர் சின்னயனாய்க்கர் ஆக ஆண்சனம் 4. பெண், வங்காரம்மாள் நச்சாறம்மாள் அவர் பட்டம் ஷெ 6.

16-வது பட்டம் தாயாதிக்காரனாகிய குழந்தைவேலுனாய்க்கர் ஷெ பெண்சாதி வள்ளியம்மாள் ஷெ குழந்தை வேலுனாய்க்கர் பட்ட மிருந்தது ஷெ 15.

அப்போது நடந்த சங்கதி வரிக்கி வெங்கிட்ட ருயர் வேடசந்தை யூரை கட்டிக் கொண்டார்.

17-வது பட்டம் தாயாதிக்காரனாகிய காமனாய்க்கர் அவர் பெண் சாதி வங்காறுசின்னம்மாள் அப்போது நடந்த சங்கதிமுன் ஷேஷருயர் கலாபத்தில் அடைப்பட்டிருந்தப் பெருமாள் கோவிலுக்கு சம் பாட்டினை பண்ணி பூசை நடப்பிவிச்சார். அவர் பட்டம் இருந்தது ஷெ 18.

18வது பட்டம் தாயாதிக்காரனாகிய வீரசின்னம னாய்க்கர் ஷெ பெண்சாதி பூச்சம்மாள் அவர் பட்டம் ஷெ 4.

19வது பட்டம் ஷெ யாகிய னரசிம்ம னாய்க்கர் ஷெ பெண்சாதி கன்னம்மாள் அவர் பட்டம் யிருந்தது ஷெ 1-

20வது பட்டம் ஷெ யாகிய குமாரன் சிங்குனாய்க்கர் மேல்ப்படி பெண்சாதி கிஷ்ணம்மாள் பாப்பம்மாள், கிஷ்ணம்மாள் மகள் யெற சின்னம்மாள் வங்காறு பெத்தம்மாள் ஆக பெண்சனம் 2.பாப்பம்மாள் மகன் கனகனாய்க்கர் ஆருமுகனாய்க்கர் ஷெ குமாரசிங்குனாய்க்கர் பட்டம் யிருந்தது ஷெ 7.

அப்போது நடந்த சங்கதி பழனி தலத்தில் மடங்கட்டி வைத்தார் பின்னையும் விக்கலமங்கலம் கல்லூத்துகுய்யமனாய்க்கனூர் உள்ளிட்ட கிருமங்கள் தண்டியலுக்கு விட்டிருந்த (கிருமம் அ)தைத் தீபானத்தில் மதுரைக்கி ,அமுலாக வந்த அப்பாலுக்கான் கட்டிக்கொண்டார்கள்.

21வது பட்டம் ஷெ யாகிய பெரியகனக ஞய்க்கர் ஷெ பெண்சாதி வல்லக்கொண்டம்மாள் அவர் பட்டம் ஷ 1.

22வது பட்டம் ஷெ யாகிய சக்களஞய்க்கர் ஷெ பெண்சாதியோ நாகம்மாள் வீரமுத்தம்மாள் யோநாகம்மாள் குமாரன் சொக்கலிங்க முத்தையஞய்க்கர் வீரமுத்தயஞய்க்கர் குமாரன் கதிரிஞய்க்கர் ஷெ பெண் பிள்ளையளில் பாப்பாயி அம்மாள்...யம்மாள் சின்னக் கண்ணம்மாள் ஷெ சக்களஞய்க்கர் பட்டம் ஷ 8.

அப்போது...டிக்கல்லில் மீறுசாயபு வகையறுப்புத் தீத்துவிட்டது. கலி 31...பணம் 23வது ஷெ யாகிய சொக்கலிங்க முத்தைய ஞய்க்கர் பட்டம் ஷ 1.

24வது பட்டம் ஷெ யாகிய சங்கரகுமாருஞய்க்கர் அவர் பெண்சாதி அழகு தாயம்மாள் ஷெ குமாரன் கதிரிவெங்கிட்டநாரசிங்கஞயக்கர் ஷெ குமாரத்தி...தனுரெங்கம்மாள் பெத்தாயியம்மாள் சங்கரகுமார ஞய்க்கர் பட்டமிருந்தது ஷ 16.

25வது பட்டம் ஷெ யாகிய கதிரிஞய்க்கர் ஷெ பெண்சாதி அக் கலம்மாள் பாப்பாயி அம்மாள் ஷெ அக்கலம்மாள் குமாரன் ருமசாமி ஞய்க்கர் ஷெ குமாரத்தி பொன்னம்மாள் மந்தயம்மாள் அவர் பட்டம் யிருந்தது ஷ 3.

அவர் நாளையில் நடந்த சங்கதி திண்டிக்கல்லில் வெள்ளக்காறத் துறையுளாய் மக்களுட்டுதுரை ரெங்கதுரை உஞ்சிதுரை ஞளையில் கையருப்பு கலி பணம் 3600

26-வது பட்டம் ஷெ யாகிய கனகஞய்க்கர் ஷெ பெண்சாதி பெத்தாயி அம்மாள் பாப்பாயியம்மாள் யெறம்மாள் ஷெ யெறம்மாள் குமாரத்தி வங்காறு பெத்தம்மாள் அவர் பட்டமிருந்தது ஷ 19.

அப்போது நடந்த சங்கதி சந்தையூர் கதிரிநரசிங்கப்பெருமாள் கோவிலுக்கு திருமதிகை கட்டி வைத்தார். ஒரு தட்டு கிருமத்தில் குருஞதசுவாமி கோவிலுக்கு வடக்கிலுள்ள சமுத்திரக்குளமும் வெட்டி அதற்குக் கிளக்கு மருகாலில் கல்லுமண்டபமும் உண்டு பண்ணி வைத்தார். குலசேகரன் கோட்டையில் மலைமேல்ப் பொன்னும் பெருமாள் கோவிலுக்கு கலச கம்பம் நாட்டி வைத்தார். ருச தானியில் அரமனைவாசலுக்கு முன்னுதாக கல் ஆசார அரமனைக் களஞ்சியம் கட்டி வைத்தார். பழனித்தலத்தில் முன் மண்டபஞ் சீரண மாகயிருந்ததைக் கெட்டி மச்சுக் கட்டிவைத்தார். ஷெ மடத்துக்கு

தாம்பரசாசனம் உண்டுபண்ணி வைத்தார். பின்னையுந் திண்டிக்கல் சீர்மைக்கி அமுலாகவந்த ருசமானிய ஸ்ரீஸ்ரீ ஆறடீசுசாயபு துரை யவர்கள் சீர்மையை 25 பாகம்......கிலியால மலை, கற்டுபாறை, அனுதி கூசு, ஆறு ஓடை, சகலமானதுகளும் அளந்து பைமேஷ் செய்து ஓலிசு கூம்போட்டு சந்தையூரில் கையி...ச் சேறிபண்ணித் தீர்பு செய்தது உசூர் கச்சேரிக்கும் ஷத்தாகி...ருயர் நரிஹறிருயர் ரகுநாதருயர் சேது ராயர் தம்பி வெங்கிட்டருயர் யிவர்கள் வந்து குடியளுக்கு யினவழிப்பட்டயமும் கொடுக்கத் தீர்மானஞ் செய்தது. சீர்மை ஆய கூடு செமாபந்தி பிறகாறம்...றபோக்கு அனுதிகூசு மானியம் கெநீர் அயனூர் நீற் இ 100-9408 பணம் இலக்கம் சற்காறுக்கு 100 பணத்துக்கு 70 பணம் ஆக நிகுதி 6585 பணம் 6...பாளையக்காரருக்கு 100 பணம்... 30 பணம் ஆக பங்கு...2822 பணம்... இந்த படிக்கி தீத்துக் குடுத்து வந்தார்கள்.

27-வது பட்டம் நாளது நடப்பில் ஷெ யாகிய கதிரிஞய்க்கர் ஷெ பெண்சாதி பெரியக்க அம்மாள் பொம்மம்மாள்...சதம்மாள் பெரியக் கம்மாள்குமாரன் ருமபத்திரஞய்க்கர் சக்களஞயக்கர் ஆக ஆன்சனம் 2. பெண் யெறம்மாள் மீஞட்சியம்மாள் முத்தம்மாள் ஆக பெண்சனம் 3. பொம்மம்மா குமாரன் முத்தளஞய்க்கர் வீரமுத்தம்மாள் குமாரன் வயித்தியப்பஞயக்கர் 24-ம் பசலிவரைக்கும் கடனுடன் பட்டு பணமுஞ் சற்காருக்குச் செலுத்திவிச்சுக் கொண்டு வருகிறேன். பாளையப்பட்டும் அனுபவித்துக் கொண்டு வருகிறேன். -கதரிஞய்க்கன்.

★

# ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டருக்கு எழுதிய கடிதம்

டி. 3045

ஊத்துக்குளி பாளையகாற் காலிங்கருயகவுண்டற் பேறக்கு யெளுதப்பட்ட கடிதாசிக்கு நக்கல்.

ஸ்ரீமது சகல குண சம்பன்னரான சகல தரும பிரீதி பாலகளுன பந்து சன சிந்தாமணியனுன அகண்டித லட்சுமி பிரசன்னரான வெகு சன பரிபாலகரான நித்தியரத்னதான விநோதகாரன் மகாமேருவுக்குச் சரி சமான தீரரான ராஜ ராஜஸ்ரீ ஊற்றுக்குழி காலிங்கராயக் கவுண்டர் அவர்களுக்கு ராஜமான்ய ராஜஸ்ரீ பாலக்காட்டுக் கோட்டை மேசர், கமண்டர், சேமிசு ரமலிசாயபு அவர்கள் மெத்த சலாம் பெம்பாயில் பவுசு தாற மகா ராஜஸ்ரீ ருசமானிய ருசஸ்ரீ சகல பவுசுக் கெல்லாம் பெரிய செர்னல் அவர்கள் சித்தியோட்டுசாயபு அவர்கள் ா செண்ட்ருள் அட்டலீ சாயபு அவர்கள் மலையாளத்துக்கெல்லாம் கமசலசாயபு துரை அவர்களும் இவர்களெல்லாம் ஒரு மனதாக யோசனை செய்து நமக்கு அப்பணை தந்தார்கள். உங்களுக்குச் சொல்லச் சொல்லி வும்முடைய காரியத்துலே மெத்த மெத்த சந்தோஷமாய் தங்கள் மனசிலே யென்ன காரியம் வேண்டியிருந்தாலும் வெகு மானப்பட்ட யிங்கிலீசு கம்பெனி சர்க்காரரோடே ருசியாக யிறுக்க வேணும் சொல்லியிருந்த பிரகாரத்துக்கு அதே மேரைக்கி நமக்கு அப்பணையாச்சுது. அது காரியத்துக்கு இப்போ சறுக்காறு காரியத்துலே தாங்கள் குமுக்கு செயிது நடக்கவேண்டிய காரியத்துக்கு யிப் பச்சம் மான படியனுலே தாங்கள் அறியவேண்டி தங்களுக்கு தாகீதியாக யெளுதி யிருக்கிறோம். பின்னையும் நமக்கு அப்பனையாத் தங்களுக்கும் தங்கள் வகையிலே தங்களை சேர்ந்த கவுண்டமாரும் தங்களுக்குச் சினேகிதமாக யிருக்கிற கவுண்டமாற் ஆருர் தங்களைச் சேர்ந்து யிருக் கிறுர்களோ அவர்களும் தாங்களுமாக கும்பினி சருகாறத்துக்கு யெந்தப் பிறகாறம் குமுக்குச் செய்வீர்களோ அந்தப் பிறகாரம் பிரயாசப் பட்டு நடந்துகொள்ள வேணுமோ அந்தப்படி நடக்க வேண்டியது அந்தப்படி நடந்துகொண்டால் தங்களுட குமுக்கு வேண்டி தங்களுக்கும் தங்கள் குஞ்சு குளந்தையள் தங்கள் சிற்மையும் மோதலும் தங்களைச் சேர்ந்த கவுண்டமாரையும் யிதுக்கெல்லாம் தங் களுக்கு வேண்டி யிங்கிலீசு கும்பினி சறுகாற் வுங்களை வச்சு ரெட்சிக்

குரா போலே நம்முடவசம் வும்மிட சீமையும் தங்களையும் கும்பெனி சர்க்கார் உள்ள வரைக்கும் ரட்சிக்கிறுப் போலே செய்து தருகிறோம் தங்கள் கையிலே யெந்தப் பிரகாரம் ஆகுமோ பாலக்காட்டுச் சேரியி லிருக்கிற சனத்தோடே கூடி தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களும் நமக்குத் துசுமனுக யிருக்குரவளை அலாக்கு செய்யவேணுமென அப் படிக்கு செய்யவும் அல்லாதே போனுல் திண்டுக்கல்லுலே பவுசுகளத் தோடே கூடனிண்ணு தாங்கள் செயிவிக்குரதானுல் செய்யவும் இல்லாதே போனுல் பளனியிலே யிறுக்குர பவுசோடே கூடனிண்ணு செய்தாயானுல் செய்யவும் அல்லாதே போனுல் தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களுமாக அவனை யெந்தப்படி வேசாரு செய்யவேணுமோ அந்தப்படி செய்யவும் மஹாருசஸ்ரீ சென்னல் சிற்றியொட்டு சாயபு அவர்களும் ருசஸ்ரீ செனறல் அட்டலீ சாயபு அவர்களும் கமசல சாயபு அவர்களும் யிவற்கள் முன்னிதாக தங்களை யெந்தப்படி பெரியவராக்கி வக்க வேணுமோ அந்தப்படி யாக்கி நடப்பிச்சி குடுக்கிறோம். தங்கள் மனசும் நம் மனசும் ஒன்றுக யிருக்கிற படியினுலே தங்கள் காரியக் காரர் ஒருத்தர் நம்மண்டையிலே எந்நேரமும் பிரியாமல் காத்து இருக்கிறுப் போலே செய்யவும்.

சர்க்கார் காரியம் எந்த வேளை எந்தப்படி வருமோ ஆனபடி யினுலே தங்கள் மனுஷரைப் பிரியாமல் இருக்கச் செய்யவேண்டியது தாங்கள் இவிடத்துக்கு எந்த வேளை வந்தாலும் தங்களைக் காணுகிறது மெத்த சந்தோஷம்.

1799 ஹு மார்ச் மீ 1வ இதன் கீழ்ச் சயின மொகருடனே தஸ்தா வேசாய் மேல் எழுதப்பட்டம் தலப்புகளுக்கு இங்கிலீஷினுலே எழுதி யிருக்கப்பட்டுயிருக்கிறது.

—0—

# ஊற்றுக்குழி பாளையக்காரன் காலிங்கராயன் வமிசாவளி

## டி. 3044

தாராபுரம் துக்குடி பொள்ளாச்சி தாலூக்கா ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராய கவுண்டர் என்னபட்ட வருடைய வமிசாவளி முதலான கைபீது,

என்ன வென்றால் :-

பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்டை மண்டலத்து வேளாள ரென்று பேர் பிரசித்திப்பட்ட நற்குடி நாற்பத் தெண்ணாயிரம் பசுங் குடி பன்னீராயிரம் ஆக அறுபதுனாயிரம் சோத்திரக்காரர்களில் பிற் காலம்-ரிஷபகிரி-சோழராஜா மகளை முறை சரிந்த சேர ராஜா-பாணி கிரஹணம் பண்ணிக்கொண்டபடியினாலே-அந்தச் சமயத்தில் நற்குடி-நாற்பத்தி யெண்ணாயிரம் குடியில்-எண்ணாயிரம் குடி சீதனம் கொடுத்த படியினாலே-அப்போ வரப்பட்ட வேளாளருக்கு-தென் திசை நோக்கி வந்த படியினாலே-தென் திசை வேளாளரென்று பேர் வரப் பட்டது......

சேர தேசத்துக்கு வரப்பட்ட வேளாளருக்கு-சேரனுக்கு கொங்கண ரென்னும்-பேர் இருக்கிற படியினாலே-கொங்கு வேளாள ரென்றும்-கொங்குயிருபத்தினாலு நாடு யென்றும்-யேற்படுத்தி இறுக்கும் நாளையில்-அக்காலத்தில்-யென் வம்சஸ்தனான-காலிங்க கவுண்டன் என்கிறவன் பூந்துரை னாட்டுக்கு-காணியாள (னுஇ) (னுக்கு) மேல்கரை முப்பத்தி ரெண்டு-கிருமத்துக்குச் சேர்ந்த-வெள்ளொடு குடியிருப்புக் காரனாயி-தம்முடய இஷ்ட தெய்வமான-சர்வேஸ்வர பாடகவல்லி நாச்சாற்-தேவஸ்தானம் சீறனோதாரணம் பண்ணிக் கொண்டுயிருந்தான்...

பூந்துரை னாட்டுக்கு-னாட்டானாஇ-வெள்ளொட்டு குடி இறுப்புக் காரனாஇ யிறுக்கும் னாளையில்-கங்கை குலம்-சர தந்த கோத்திரம் காலிங்க கவுண்டன்-யென்குர-தன்னுடைய குமாரனுக்கு-கலியாணம் பண்ண வேணுமென்று நினைச்சு-மாமன் மச்சுனனான-பண்ணகுலத் தாளி வீட்டுலே-பெண் கேட்டு கலியாணம் செய்யத் தக்கதாக யோசிச்சு-பெண் சம்மதமாகி அந்த ருத்திறி சாப்புடுகுரதுக்கு சமயல் பண்ணுகிறவன் வந்து இவற்களுக்கு சமயல் பண்ணுகுரதுக்கு

யெந்த அரிசி போடுகிறது யென்று கேட்க அவாள் கம்பு வெளயிற சீற்மையிலே யிறுக்குர பேர்களுக்கு யெந்த அரிசி யென்று தெரிய போகுது பரறிசி தானே போடு போவென்று சொல்ல அது சேதி ஷெி காலிங்க கவுண்டன் கேட்டு அவாள் வீட்டிலே சாப்புடாத படிக்கு இறுந்து நெல்லு வெளையும்படியாக நீர் பாங்கு உண்டு பண்ணிக் கொண்டு உங்கள் வீட்டு பெண் கொண்டு சாப்பிடுகுரோ மென்று செபுதம் கோறிக்கொண்டு வந்துதம் ஊறுலே வந்து சேர்ந்து மனதிலே சூடு தோணி இருக்கும் நாளெயில் இவர் இஷ்ட தெய்வமான சர்வேஸ் வரரை தன்னுடைய அபீஷ்டம் சித்த வேணுமென்று நினைச்சுயிருக்கும் வேளெயில் ருத்திரி சொப்பனத்திலே ஒரு விருத பிராமண ரூபமாய் வந்து இந்தச் சர்ப்பம் போரவளியாக வாக்கியால் வெட்டி வைக்க சொல்லி காரணமாக சொப்பணமாச்சுது அந்த சொப்பன மான வுடனே கண் முளிச்சு பாற்கும் மிடத்தில் ஒரு சர்ப்பம் பிரதிட்சமாக யிருந்தது. தான் கண்டு இருக்கப்பட்ட சொப்பனத்தை கண்டு அறிய வேணுமென்று நினைச்சு வீடு விட்டு வெளிஇலே வந்த சமயத்தில் சற்ப்பம் இவனை கண்டு முன்னே நடந்தது. அந்த சற்ப் பத்தைத் துடர்ந்து போய் யிந்த வழியாக போகுதென்று அட யாளங்கள் போட்டுக்கொண்டு வருகிற போது கொடுமுடி சேத் திரத்தில் சர்ப்பம் நிண்ணுது.

அந்தச் சற்ப்பம் போன (பாக்குலே வாக்கியாலு வெட்டி வைக்க வேணுமென்று னினைச்சு பவானி ஆத்திலே குறுக்க அணை கட்டி வைக்க வேணுமென்கிறதாக நினைச்சு யிருந்த சமயத்தில் பவாணி கூடல் ஸ்தளத்துக்கு மேல் புறத்தில் பவானி யாத்துலே சர்ப்பம் குறுக்கே படுத்துக்கொண்டது. அந்த யிடத்துலே அணைக் கட்டி வைக்க வேணுமென்று பவானிக் கூடலுக்கு வடக்கே ஊருச்சிமலையும் தடமும் சுத்த கிறயத்துக்கு வாங்கி அணை கட்டுகுர சமயத்தில் வெள்ளை வெட்டுவெற் யென்ங்குற பாளையக்காரன் அணை கட்டுகுர யெல்லை தன்னதென்று சண்டை பண்ணின படியினலே வெள்ளை வேட்டுவரை செயிச்சு அணையும் கட்டி வெகு திறவியங்கள் செலவளிச்சு சற்பம் போகியிருந்த அடயாளங்களை பிடிச்சு வாக்கியால் வெட்டி கொடுமுடி வரைக்கும் வாக்கியால் வெட்டி வச்சு பவானி அணை முதல் கொடுமுடி ஸ்தளத்து ஆத்து வரைக்கும் முக்காத வழி தூர்த்துக்கு சற்ப்பம் போன போக்குலே வாக்கியால் வெட்டின யேழு காதவளி நடை கோணக் கோணலாக வாக்கியால் வெட்டி வச்சான்.

அந்தச் சற்ப்பம் போன போக்குலே வாக்கியால் வெட்டி வச்சு பவானி ஆத்துலே-சற்ப்பம் படுத்துயிறுந்த யிடத்திலே-அணையும்

கட்டிவிச்ச படியினுலே காளிங்க கவுண்டன் யென்னும் பேற்வரப் பட்டு பிரசித்திப் பட்டவனுய் இருக்கும் நாளையில் முன்னுலே சபுத்தம் கோறியிறுக்கப்பட்ட பெண்ணை குலத்துலே தன்புள்ளைக்கு கலியாணமும் செயிது கொண்டு அம்ச புருஷனுயி தெய்வ கடாட்சத்துனுலே சற்ப்பத்து னுமதேயமான காளிங்கரென்கிற நாமதேயமும் வேளாள சாதியானபடியினுலே கவுண்டர் என்கிற நாமதேயமும் ரெண்டு நாமதேயமும் சேர்ந்து காளிங்க கவுண்டன் யென்குர பேற் பிறசுத்திப் பவருயி தான் கட்டி வச்ச அணைக்கு காலிங்ககவுண்டன் அணை யென்றும் காலிங்கக் கவுண்டன் வாக்கியா லென்றும் தான் உண்டு பண்ணின நீற்ப்பாங்கு நிலத்தில் வெளயப்பட்ட காலிங்க நெல்லு யென்று வெளயப் பண்ணி சம்மந்த பாத்தியங்களுஞ் செய்து கொண்டு யிருந்தான்.

இப்படி வாக்கியால் வெட்டி அணை கட்டி பிள்ளைக்கு கலியாணம் பண்ணுகிற வரைக்கும் சபுதம் கோரி தீட்சை வளத்துக் கொண்டு யிருக்கும் சமயத்தில் தெய்வ கடாட்சத்தினுலே மனுேபீஷ்டம் நெறவேறி யிருக்கும் சமயத்தில் ஒரு நாள் ஆயாசத்துடனே நித்திரை பண்ணிக்கொண்டு யிருக்கிற சமயத்திலே ஒரு னுசுவண் திட்சை மயிரை வாங்கி போட்டு நிலைக்கண்ணுடியை யெதிரே வச்சு வணக்கத் துடனே நிண்ணுக்கொண்டு யிருந்தான். நித்திரை தெளிஞ்சி நெலை கண்ணுடி பார்த்தவுடனே ஆயுஷகாறம்மாகி யிருந்தபடியினுலே சந்தோஷம் வந்து நாசுவனை பாத்து உனக்கு என்ன வேணுமென்று கேட்டார். அந்த னுசுவன் யென் பேர் வெளங்கியிறுக்கும்படியாக பண்ண வேணுமென்று மனுவு கேட்டுக் கொண்டபடியினுலே தாம் கட்டிவிச்ச அணையோடும் தாம் இறுக்கப்பட்ட காலிங்கன் பாளையத் துக்கு தென்பிறம் நாசுவன் பேருலே வூரு உண்டுபண்ணி னுசுவன் பாளையமென்றும் பேர் விளங்க பண்ணி அந்த னுசுவனுக்கு அந்த பாளையம் சர்வமானியமாகக் கொடுத்தார்.

இப்படிக்கு காலிங்கருயக் கவுண்டர் யென்கிற பேர் பிரசித்திப் பட்டவராய் வெள்ளோட்டு குடியிருப்புக் காரராயி பூந்துரை னுட்டு நாடாதிபத்தியம் தாம் உண்டு பண்ணின அணை வாக்கியால் பரிபாலனம் பண்ணிக் கொண்டு புள்ளை புள்ளை தலை முறைக்கும் காலிங்க கவுண்டன் என்கிற நாமதேயம் உண்டானவர்களாய் யிறுந்தார்கள்.

பவானி கூடலுலே கலிங்கக் கவுண்டன் யென்கிறவன் அணைகட்டி வச்சு மேற்பிடுறத்தி பண்ணினது. கலியுக சகாபுதம் 2000 காலிங்க கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அணைஇலே ஷெடி கவுண்டனையும்

சற்ப்பத்தேயும் சிலா பிறதிமை ரூபமாக கல்வெட்டி வச்சு சிலாசாசனமும் யெளுதியிருக்குரது அந்த அணை போட்டு யிறுக்கப்பட்ட இடத்தில் குடிகள் பறம்பரையாஇ வறுஷயிறுதியும் உச்சவம் பண்ணிக் கொண்டுவருகுரது வருஷப்பிரதியும் காலிங்கக் கவுண்டன் பிறிதிமைக்கி பூசை நெய்வேத்தியம் பண்ணிக்கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாண்மை வெளேஞ்சுக் கொண்டு வருகிறது. இப்படி ஈஸ்வரர் அனுக்கிறஹத்துநாலே மூர்த்திகரம் உண்டாகி யிருக்கிறது.

இஸ்வரு அனு;க்கிறஹத்துனுலே காலிங்க சவுண்டன் யென்ங்குர அம்சைபுறஷன் வம்ச பரம்பரையிலே காலிங்ககவுண்டற் யென்று பேர் வச்சுக் கொண்டு வருகிறது.

இப்படி காலிங்ககவுண்டர் என்கிற பேர் பிரசித்திப் பட்டவர்களாய் பலாட்டியனுய் வெள்ளோட்டு பூந்துரை னுடாதிபத்தியம் ஆண்டு கொண்டு வரும் நாளேயிலே கொங்கு இருவத்தினலு நாட்டுக்கும் பட்டக்காறர்களாகி யிறுக்கப் பட்டவற்கள் சரியிறுப்பும் சரிமறியாதிகளும் குடுக்கப்படாது யென்று சொன்னதுனுலேயும் பூர்வத்தில் சேரமாம்பெறுமாள் சா[த்]தந்த கோத்திரகாறர்களுக்கு கார் விடிக்கை நாடு பிறவும் பண்ணி கொடுத்து யிருக்கிற படியினுலேயும் நாட்டு, பட்டக்காரர்கள் சரிமரியாதி நடக்க மாட்டாதென்று சொல்லிக் கொண்ட படியினுலே வெள்ளோடு விட்டு மணவெருப்புனுலே ஆணைமலே சரிவிலே தங்கள் காணியாட்சியான காவிடிக்கநாடு காடு கொண்டு வனமாயிருந்ததில் தங்கள் பசுமாடுகளே விட்டுயிருந்து மாடுகளே சம்ரட்சணே பண்ணுகுரதுக்காக தங்கள் சனங்கள் இருந்த படியினுலே காவிடிக்க நாட்டு வனத்துக்கு வந்து மாடுகளேயும் பாத்து மா(ட்)டுகளுக்கு சமரட்சணேக்காக பட்டிகளும் போடுவிச்சு அஞ்சாறு காளேகளும் கட்டிவிச்சு கொங்கு யிருவத்திநாலு நாட்டுக்கும் பாளேயப்பட்டுகளுக்கும் இவற்களுக்கெல்லாம் அதிகமறியாதெகள் உண்டு பண்ணிக் கொள்ள வேணுமென்று நினேச்சு ருயசமுஸ்தானத்துக்குப் போனுர்.

ருய சமுஸ்தானத்தில் காத்துக் கொண்டு யிருக்கும் நாளேயில் பனிரெண்டு வருஷம் வரைக்கும் ருயரவர்கள் பேட்டியில்லாமல் கய்யிலே கொண்டு போன திரவியங்களெல்லாம் செலவழிந்து போய் கஷ்டப்பட்டுக் கொண்டு அதிவெஸனத்தை அடைஞ்சவனுய் தன்னுடைய இஷ்ட தெய்வத்தைப் பிராத்தனேச் செய்து கொண்டு மனவயிரத்தை அடஞ்சவனுய் பெனுக்கொண்டை பட்டணத்துக்கு வெளியிலே தென்புறம் காளி கோவிலிலே போய் செத்திரமாக படுத்துக் கொண்டு யிருந்தார்.

சுத்தவுபவாசத்துடனே காளிகோவிலிலே யிருக்கப்பட்ட காலிங்க கவுண்டன் சொப்பனத்துலே பனிரெண்டானுள் ருத்திரி ருயற் குமாரனுக்கு சித்த பிறம்மை பிடுச்சு அது னிவாரணம் யில்லாமல் யிருக்கிறபடியினுலே நீ என்னுடைய சன்னியதானத்தில் இருக்கப்பட்ட விபூதியை கையிலே கொண்டு போய் அந்த சித்தப் பிறமையாயிருக்கப்பட்டவன் பேரில் போட்டால் சித்த பிறமை தீந்து ருச குமாரனுக அரமனே போய் சேர்ந்து யிருப்பான் ருயர் அவர்கள் உன் பேரிலே சந்தோஷமாய் உன் மனோ பீஷ்டம் சித்தி யாகும் என்று சொப்பனமாச்சுது.

அந்தச் சொப்பனத்தை கண்டவுடனே பனிரெண்டு நாள் பட்டினி யிருக்கப் பட்டவன் விபூதி யெடுத்துக் கொண்டு பெனு கொண்ட பட்டணத்துக்கு வந்து இது சொப்பணத்து சோதனே பாத்து கொண்டு வறுகுர சமயத்தில் ருசகுமாரன் பட்டணத்து வீதிகளிலே சித்த பிறமை பிடிச்சு தன்னபோலே திறியுர குறிப்பை கண்டுபிடிச்சு ருசகுமாரன் பேறிலே காளியெ நினேச்சு விபூதி போட்டன் அந்த விபூதி தூளி ருசகுமாரன் பேறிலே விளுந்தவுடனே சித்த பிறமை தெளிஞ்சவனுய் ருச சின்னம்ங்களுடனே அரமனே க்குப் போய்ச் சேர்ந்தார்.

அக்காலத்தில் நரபதி சிம்ஹ ஸனுதிபதியான பெனுகொண்டை விசயநகரம் ஆளப்பட்ட தேவருயர் அவர்கள் தம்முடைய குமாரனுன வனுக்கு சித்த பிறமை விடுதலே பண்ணினவனே தரிவிக்கச் சொல்லி மந்திரி பிரதானிகளுக்கு உத்திரவு செய்த படியினுலே அந்த சமயத்தில் தரிவிச்சு ருயற் அவற்கள் ரொம்பவும் சந்தோஷத்துனுலே காலிங்க கவுண்டனே பாத்து உன் சென்மபூமி முதலான விர்த்தாந்தம் என்ன வென்று கேட்குமிடத்தில் பவானி கூடல் சமீபத்தில் உண்டு பண்ணின அணே வாக்கியால் வரலாறு முதலாகிய சங்கதிகளும் தெயிவ கடாட் சயத்துனுலே காலிங்க கவுண்டன் என்கிற பேர் வரப்பட்ட வரலாறும் கொங்கு இறுவத்தினுலு நாட்டுலே பட்ட குறுப்பு காரற்கள் பாளேயக் காற் சமானவசி மறியாதிகள் தாள்வு நடக்கப்பட்டு சமுஸ்தானத்துலே காத்து கொண்டுயிருந்து காளிகாதேவி அனுக்கிரஹம் பண்ணின நாள் வரைக்கும் வரலாறு அறியப்பண்ணிக் கொண்டபடியினுலே ருயற் அவர்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு உன்னுடைய நாம தேயம் என்ன வென்று கேட்டார்கள் அப்பொ பேற் அறிய பண்ணிக் கொண்டபடியினுலே ருயற் அவர்கள் உத்திரவு செய்து என்னுடைய வம்சம் உத்தாரம் பண்ணியிறுக்குரபடியினுலே யென்னுடைய பேற் தெயிவ கடாட்சயத்துனுலே உண்டாகிய பேருடனே ருச கடாட்சயத்

துனுலே குடுக்கப்பட்ட ருச சபுதத்துடனே காலிங்கருய கவுண்டன் யென்று பேற் வச்சு உனக்கு யென்ன வேணுமென்று கேட்டார்கள். அந்த சமயத்தில் யென் காணியாட்சியான ஆனைமலை சாற்வுலே காவிக்கை நாடு யென்னப்பட்ட பூமியை தயவு செய்ய வேணுமென்று கேட்டுக் கொண்டார்.

ருயரவற்கள் கடாட்சம் செய்து யாளி, சிமஹல்லா பல்லாக்கு, உபய சாமரம், சுறுட்டி, சூறியபான ஆல வட்டம், வெள்ளைக் கொடை பச்சக் கொடை, பஞ்சவர்ண கொடை, பஞ்சவர்ண வெட்டுப் பாவாடை, அனும டால், கெறுட டால், மகர டால் பசவசங்கர டால் பஞ்ச வற்ன டால், ஆனை மேல் பேறிகை, ஒட்டகை மேல் நகாறு, குதிரை மேல் டங்கா, யெருது மேல் தம்பட்டம், தாரை, சின்னம், யெக்காளம், பூரிகை, சிக்குமேளம் இது முதலான வாத்தியங்கள் பிறுதுகளும் கொடுத்து ரண பாஷிகாம் கலிகிதுருயி, முத்தொண்டி, பஞ்சொண்டி, ஒண்டிரெக்கு வீரசங்கிலி, ஞக்ககாணும் புலி சேறமம், கரடிமயிற் வக்கியபிரீ, தங்களிகளம், வீர கண்டாமனி, சாமதுரோஹாவெ[ண்]டை யும் தங்க மிஞ்சு யிது முதலான ஆபரணங்கள் எல்லாம் அலங்கறிச்சு குதிரைச்கு புலி தோல் மொமட்டு, அண்ட கல்வி, முகசல்லி, பக்கசல்லி, கால் தண்டை கலிகி துருயி இது முதலான ஆபரணங்கள் தறிச்சு பட்டத்து குதிரையென்று நெமுகம் செய்து பட்டண பிறவேசம் பண்ணிவிச்சு ஆனைமலை சறிவிலே காவிடிக்கை நாட்டு பூமிக்கு நீயே மானசதாரனுக ஆண்டு கொண்டு சந்திராதித்தர் உள்ள வரைக்கும் வம்ச பரம்பரையாய் மானசபுத்ரனுக ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வர வேணுமென்று பட்டாபிஷேகம் செய்து பட்டத்து ஆயுதம் கையிலே கொடுத்து அறுபத்து நாலு அமர காரரை நேமுகம் செய்து இரட்ட வாள், பச்ச ஈட்டி, கறீட்டி, வெள்ளி ஈட்டி, தங்க கட்டு துப்பாக்கி வெள்ளி முலாம் துபாகி சீனுமானுடை இது முதலான ஆயுதங்களும் கொடுத்தார்கள்.

முன்னுலே நாகூர் பாளையப்பட்டு பட்ட குறுப்புக்காற்கள் சரிச மான மறியாதெ குடுக்குரது யில்லை யென்று சொன்ன மனவெறுப்பு னுலே ருயசமுஸ்தானத்திலே காத்துயிருந்து தெய்வ கடாட்சத்துனுலே சகல பிறுதுகள் ஆயுதங்களும் உண்டாய் காவிடிக்கை நாட்டுக்குப் பாளையக்காரனுக காலிங்க ராய கவுண்டர் என்கிற பேர் பிரசித்திப் பட்டவராய்ப்பட்டு கட்டியங்களுடனே புறப்பட்டு ஆனைமலை சறவுலே வனுந்திரத்திலே தம்முடைய மாட்டுப் பட்டிகள் இருக் கப்பட்ட யிடத்தில் சேர்ந்து அரமனையுங் சட்டி வீடுகள் உண்டு பண்ணி பூர்வத்தில் வனத்திலே மாடுகளுக்கு ஆதாரமாக தோண்டி

யிருக்கப்பட்ட ஊற்றுக் குளிகள் இருக்கப்பட்ட யிடத்தில் ஊர் கட்டி விச்சபடியினுலே ஊத்துக்குளி யென்று கிராம நாமதேயம் உண்டாய் ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவனுய் இருந்தார்கள்.

இராயர் சமுஸ்தானத்திலே காலிங்கராயக்கவுண்டர் என்கிற பேர் தெய்வ கடாட்சத்துனுலேயும் ராஜ கடாட்சத்துனுலேயும் பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப்பட்டு பாளையப்பட்டு உண்டான ளுள் முதல் சாலிவாகன சகாபுதம் 1120 முதல் சகாபுதம் 1712 வரைக்கும் ஷு 582க்கு பட்டங்களுடைய வரிசைகளும் அவாளவாளுடைய சறியேகளும் இதன் கீளே எழுதி வருகிறது.

வம்ச பரம்பரையாய் தெய்வ கடாட்சத்துனுலேயும் ராஜ கடாட்சத்துனுலேயும் காலிங்கராய னென்கிற பேர் வமுச பரம்பரையாய் பட்டகாரர்களுக்குப் பேர் உண்டாகி வருகிறது.

தெய்வ கடாட்சத்துனுலே சர்ப்பம் போன போக்கு வாய்க்காலும் வெட்டிவிச்சு அணையும் கட்டிவிச்சு காலிங்கராய னென்கிற பேர் பிரசித்திப்பட்டு வமுசா பிவிற்த்தியிலே காலிங்கருய னென்கிறவர் காவிடிக்க ளுட்டுக்கு மனசுபுதாரருயி காலிங்கருய னென்கிற பேரிலே ஊத்துக்குழி பாளையக்காரர் என்று பட்டாபிஷேகம் அனவருடைய ளுள் வரைக்கும் வெகுகாலமான படியினுலே வமுசங்கள் ஒளுகாயி தெறி(ய)வில்லெ அணைக்கும் வாக்கியாலுக்கும் காலிங்கராயன் அணை யென்றும் கலிங்கராயன் வாக்கியால் என்றும் பேர் பிரசித்தி படலாச்சுது.

1. காலிங்கருயக் கவுண்டர் — பட்டம் ஆண்ட ஷு 50
2. யிவர் குமாரன் நஞ்சய காலிங்கருய கவுண்டர் — பட்டம் ஆண்ட ஷு 40
3. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கருயக் கவுண்டர் — பட்டம் ஆண்ட ஷு 21
4 இவர் குமாரன் நஞ்சய காலிங்க ராயக்கவுண்டர் — பட்டம் ஆண்ட ஷு 20
5. இவர் குமாரன் காலிங்கருயக் கவுண்டர் — பட்டம் ஆண்ட ஷு 19
6. இவர் குமாரன் நஞ்சய காலிங்கருயக்கவுண்டர் — பட்டம் ஆண்ட ஷு 21
7. இவருடைய தம்பி அகத்தூர் காலிங்கருயக் கவுண்டர் — பட்டம் ஆண்ட ஷு 12

8. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 23
9. இவர் குமாரன் நஞ்சய காலிங்கருயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 21
10. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கருயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 16
11. இவர் குமாரன் காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 9
12. இவர் குமாரன் நஞ்சய காலிங்கருயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 26
13. இவர் குமாரன் விருமாண்டை காலிங்கருயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 30
14. இவர் தம்பி அகத்தூர் காலிங்கருயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 11
15. இவர் குமாரன் காலியங்கருயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 20
16. இவர் குமாரன் ஈஸ்வர மூர்த்தி வண்ருயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 6
17. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 15
18. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கருயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 31
19. இவர் குமாரன் விறுமாண்டே காலிங்கராயக்கவுண்டர்
பட்ட ஆண்ட ௵ 23
20. இவர் குமாரன் பிள்ளை முத்துகாலிங்க ராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 13
21. இவர் குமாரன் சின்னய காலிங்கருயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 19
22. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 20
23. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 30
24. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 26
25. இவர் தம்பி நஞ்சய காலிங்க ராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 12

26. இவர் குமாரன் காலிங்கருயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 29
27. இவர் குமாரன் நஞ்சய காலிங்கருயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 2
28. யிவற் தம்பி அகத்தூற் காலிங்கருயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 4

| | |
|---|---|
| 28 | 582 |

முதல் பட்டக்காரஞன காலிங்கருயகவுண்டர் நாளேயிலே ஊத்துக்குளிபுரமும் உண்டுபண்ணி ஊத்துக்குளி பாளேயக்கார் என்று பேர் பிரசித்திப் பட்டவராய் கோங்கேளு சிவாலயம் முதலாகிய ஸ்ரீரங்கம், சிதம்பரம், கும்பகோணம், மாயவரம், திருக்கடையூர், ஆவுடையார்கோயில், ராமேஸ்வரம், தற்ப்பசேனம், மதுரை, பழனியாண்டவற் பிறதட்சணமாஇ யிராத பிற திரத்து மஹாஸ்தளங்கவெல்லாம் யாத்திரை செய்து அந்தந்த ஸ்தலங்களுக்கு தர்மங்கள் தானங்கள் பண்ணி யாத்திரங்கள் தீர்ந்தவுடனே ஊற்றுக்குழிக்கு வந்து ருய சமுஸ்தானத்திலே தமக்குப் பிரசன்னமான யிஷ்ட தெய்வத்தைக் கோரி பிரார்த்தனேப் பண்ணி அகத்தூர் அம்மனென்று நிதர்சனமாகப்பட்ட தேவாலயம் சீரஞேத்தாரணம் பண்ணி அகத்தூர் அம்மனென்று பேர் பிரசித்திப்படும்படியாய் பூசை நிவேத்தியங்கள் செய்விச்சுக்கொண்டு ராயசமுஸ்தானத்திலே தமக்கு மானசபுத்திரர் இலாகாவுக்குச் சேர்ந்த வாரக்க ஞட்டு யெல்லே பள்ளத்துக்குத் தெற்கு, நல்லுறுக்க நாடு பாலாத்துக்கு வடக்கு, புங்குலுக்கே நாடு தாளக்கரை பள்ளத்துக்கு மேற்கு, கம்பால்துரை மணலியாறுக்குக் கிழக்கு இந்த நான்கெல்லேக்கு உள்பட்ட கீழ் மேல் நாற்காதம் தென் வடல் இருகாதம் இந்த அத்து காரவடிக்க ஞட்டு காடுகளே யெல்லாம் வெட்டிவச்சு அந்தந்த யிடங்களிலே நீர் பாங்குவுண்டு பண்ணி வீடேத்தி ஊர்களும் உண்டு பண்ணிக்கொண்டு நஞ்செய் புஞ்செய் நிலங்களும் திட்டப்படுத்தி நாடு, வூர் பாளேயப்பட்டுகளுக்கு யெல்லாம் அறமனேயிலே அதிக மரியாதைக்காரனுய் ஊற்றுக் குழி பாளேயக்காரர் என்று பேர் பிரசித்தி பட்டவர்களாய் அதி தற்ம்மசாலியாய் பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்.

ரெண்டான் பட்டக்காரஞன நஞ்சய காலிங்கராயகவுண்டர் நாள் முதல் எட்டாம் பட்டக்காரஞன காலிங்கருயக் கவுண்டர் நாள் வரைக்கும் ஊற்றுக்குழி பாளேயக்கார் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் வமுசபரம்பரையாய் பண்ணப்பட்ட தருமங்களேப்

பரிபாலனம் பண்ணிக்கொண்டு அந்தந்த காலத்திலே ருய சமுஸ் தானுதிபதிகள் கட்டளையிட்டபடிக்கு சமுஸ்தானத்திலே ஆசருலே யிருந்து நடந்துகொண்டு மானசபுத்ரராய் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வந்தார்கள்.

ஒன்பதாம் பட்டக்காரனுன நஞ்சய காலிங்கராயர் கவுண்டர் நாளையில் அக்காலத்தில் பாண்டிய சிம்ஹாஸனுதிபதியாக விசுவனுத னுயக்கர் எழுந்தருளியிருக்கிற நாளையில் சமுஸ்தானத்துக்குச் சேர்ந்து யிருந்த பாளையக்காரர்களை யெல்லாம் பேட்டிக்குத் தருவிச்சு மதுரைக் குப் போயிருக்கும் நாளையில் அக்காலத்தில் தட்சண பிறதேசத்து திறன்னவல்லி சீற்மையிலே அஞ்சுகோட்டை போட்டுக்கொண்டு அஞ்சிருசாக்காள் என்றவாள் சமுஸ்தானத்து பிறபுக்களை நிராகரிச்சு யெதிற்பாளையம் போட்டுக்கொண்டு யிருக்கும் நாளையில் அந்த சமயத் தில் நாய்க்கரவர்கள் உத்திரவுபடிக்கு யென் வமுசஸ்தனுன நஞ்சய காலிங்கருய கவுண்டற் சேனசேகரத்துடனே திரன்னவல்லி சீமைக்குப் போய் அஞ்சிருசாக்களுடனே யுத்தம் செயிது ஒரு கோட்டையிலே யிருக்கிற அஞ்சிருசா வெட்டி போட்டு கோட்டை கைவசம் பண்ணிக் கொண்டு யெதிராளி தலையும் கொண்டுவந்து னுயக்கரவர்கள் சன்னிய தானத்துலே வச்சாற். அப்போ னுயக்கரவர்கள் நீ பராக்கிரமசாலி யென்று ரொம்பவும் சந்தோஷப்பட்டு தங்க னிகளத்தில் சுவற்னத் துலே தலை போலே பண்ணிபோட்டு யெதிருளி தலையென்று காலுக்கு போடுகுர பிறுதும் குடுத்து பருக்கிறம நஞ்சய காலிங்கருய கவுண்டர் என்று பேரும் கொடுத்து ஆடயாபரணங்கள் முதலான ஆபரணங் களும் குடுத்து சகல வெகுமதிகளும் பண்ணி மதுரை ஆஸ்தான கோட்டைக்கு அன்பத்தி ஒருன் கொத்தளத்துக்கு சனம் வயிக்கும் படியாக னிகுதி செய்து பாளைப்பட்டு கிருமங்களை சுத்த சாரியாக அனுபவிச்சுக் கொண்டு வரும்படியாக நிகுதி செய்த படியினுலே அந்த நாள் முதல் பதினெட்டாம் பட்டம் அகத்தூர் காலிங்கருயக் கவுண்டர் நாள் வரைக்கும் மதுரை ஸமுஸ்தானத்து கற்த்தருகிய னுயக்கர வற்கள் பரம்பரையிலே கட்டு பண்ணின நிகுதி படிக்கு அரமனைக்கு நடந்து கொண்டு வமுசபரம்பரையாய் பாளையப் பட்டு ஆண்டு அனு பவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

பத்தொன்பதாம் பட்டக்காரனுன விருமாண்டே காலிங்கருயக் கவுண்டற் நாளையில் அக்காலத்துக்கு மயிசூரு சமுஸ்தானுதிபதி களான கற்த்தாக்கள் ருசியபிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வரும் நாளையில் யென் வமுசஸ்தனுன யிருவத்தி மூனும் பட்டக்கார நஞ்சய காலிங்கருய கவுண்டற் நாள் வரைக்கும் மயிசூற் சமுஸ்தானத்துக்கும்

மதுரை சமுஸ்தானத்தாறுக்கும் கணுவாஇக்குக் கீள்ப்பட்ட கெடி களுக்காக யுத்த சன்னுஹமாக யிறுந்தாற்கள்.

இருவத்தி மூணும்பட்டக்காரனுன நஞ்சய காலிங்கருய கவுண்டற் நாளேயில் கணுவாயிக்குக் கீள்ப்பட்ட கெடிகள் எல்லாம் மயிசூறு சமுஸ்தானத்துக்குச் சேர்ந்துயிருக்கும் நாளேயில் அக்காலத்தில் மயிசூறு ஸமுஸ்தானத்துக்குக் கர்த்தராகிய இம்முடி ருஜஒடயர வற்கள் பேட்டிக்குப் போய்இருக்கும் நாளேயில் அக்காலத்தில் மயிசூறு சமுஸ்தானத்துக்குச் சேர்ந்த கொடகற் சமுஸ்தானத்துக்கு யெதுத்து யிருக்கிருர்கள் யென்று யென் வம்சஸ்தாற்களில் சன சேகரத்துடனே குமுகு போகச் சொல்லி வுத்திரவு ஆனபடியினுலே சன சேகரத்துடனே கொடகுருசாவின் பேறிலே போய் யுத்தம் செய்து செயிச்சு வந்தார்கள்.

அப்பொ மைசூர் சமஸ்தான கர்த்தாக்கள் ரொம்பவும் சந் தோஷப்பட்டு அஷ்டகோண தண்டிகைக்கு தங்கமுலாம் பூச்சு, யெட்டு கலசத்துடனே தண்டிகையும் கொடுத்து ஆடையாபரணங்களும் கொடுத்து ஊற்றுக்குழி பாளேயப்பட்டுக்கு அக்காலத்தில் சேர்ந்து யிருந்த கிராம(ம்) ஒன்பதுக்கும் வருஷம் ஒண்ணுக்கு ருசகொபாலி ... 1750 பணம் ணிகுதி செயிது உத்திரவு செய்தார்கள் அந்த நாள் முதல் என் சகோதரமான நஞ்சய காலிங்கருய கவுண்டர் அகத்தூர் காலிங்கராய கவுண்டர் பட்டம் ஆண்டுகொண்டு வந்த நாள் வரைக்கும் மயிசூறு சமுஸ்தானத்தார் கட்டளேயிட்ட நிகுதிபடிக்கு அரமனேக்கு நடந்துகொண்டு ஊத்துக்குளி பாளேயக்காற் யென்ங் குறவாளாய் பட்டம் ஆண்டு கொண்டு வந்தார்கள்.

பூற்வம் முதலாக யென் வமுசஸ்திலுள்ள பாளேயப்பட்டு ஆண்டு கொண்டு வரப்பட்டவர்கள். செவுறிய வுதார கெம்பீர குணுதிசயங்கள் உள்ளவர்களாகி யிறுந்து மத்த பாளேயக்காற்களிலே அந்தந்த காலத் திலே அரமனேக்கு நிருகரிச்சு யிறுக்கப்பட்டவர்களேயும் தமக்கு யெதிறி யாயிருக்கப்பட்டவர்களேயும் மட்டடக்கி கொண்டு ஊத்துகுளியிலே கோட்டையும் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு கால்தளம் அய்யாயிரம், ஹுறு குதிரை, ஆயுதங்கள் வச்சு யிருக்கப்பட்ட சனு... அய்யாயிரம் ஒரு கட்(ட)கம் யானே யிதுகளுடனே ஆனேமலே கானல் களிலே அனேகள் பிடிச்சு அரமனேக்கு குடுத்து கொண்டு அரமனேயார் கட்டளேயிட்டபடிக்கு நடந்து கொண்டு அரமனேயாற் கட்டளேயிட்ட ஆனேமலே மாறச்சிணுயகம் பாளேயம் பாதிகாவலும் முன்னுள் மூலே பொதிக்கு வீருயன் ஒரு பணமும், மதிப்பு பலசரக்கு பொதி ஒண்ணுக்கு ஒரு ரூபாயும் மகமை நடந்து வந்தபடியினுலே அந்த பாதிகாவலும்

மகமையும் அனுபவிச்சுக் கொண்டு அரமனையிலே கட்டு பண்ணின நிகுதி பணமும் செலுத்தி வச்சுக்கொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வரும் நாளையில் யென் முப்பாட்டனுற் நாளுலே பாதிகாவல் விட்டு போஇ மலையாளத்து கோளிகூடு ருசாவின் பேறிலே யுத்த சணுகத்துலே யெலைபள்ளியிலே விளுந்து போஇ விட்டாற். யென் தொப்பனுற் நாள் முதல் சுங்கம் மகமை நடந்து வந்தது.

என் தமையனுர் இரண்டு பேர் நாளையிலேயும் டிப்புசுல்தான் அங்காமி னுள் வரைக்கும் ஒரு நிகுதியில்லாமல் சில்லரை கள்ளற் அங்காமிகளுக்கும் தொந்தரைகள் பட்டு கொண்டு யிருந்தேன்.

பூற்வம் முதலாக வமுசாவளி முதலானதுகளுக்கு தகவலுகள் உண்டான ஆதரவுகள் முதலானதுகளும் கலாந்திரங்களிலே ருசீகங் களிலே கை சோற்ந்து போய் விட்டபடியினுலே அகப்பட்ட-பூற்வத்தி- பளமுனி கிறந்தங்கள் நாலேயும் ஒளுகுகள் நாலேயும் பரம்பரையிலே அனுபவித்து கேள்வினுலேயும் தெரிஞ்சு கொண்டு கைபீது தெரியப் படுத்தி கொள்ளலாச்சுது.

கலியுகாபுதம்-4811-க்கு மேற் செல்லானின்ற விரோதிகிருது ஞு மாசி மீ 4உ தேதி சுபதினத்தில் யெனக்கு பட்டமாய் குமாரசாமி காலிங்கருய கவுண்டன் யெண்ணப்பட்ட பேர் விளங்கி கொண்ட வனுக யிருந்து டிப்புசுல்தான் துரைதனத்தில் சில்லரை கள்ளர் தொந்தரைகள் பட்டுக் கொண்டுயிருக்கும் நாளையில் மஹா ருஜ ருஜ ஸ்ரீ-கும்பினி துரைத்தனமாகுரது யென்று ரொம்பவும் சந்தோ ஷத்தை அடைஞ்சவராய் குஞ்சு குளந்தையளை யெல்லாம் பெம்பாயி சீற்மையிலே வச்சு போட்டு, நான் ஊத்துக்குளியிலே ஹஜூருலே காத் துக்கொண்டு கும்பினி தயவு கோரியிருக்கும் நாளையில் சித்திருர்த்தி வருஷத்திலே மஹா ருச ருச ஸ்ரீ பாலக்காட்டு கோட்டை மேசற் கமாண்டர் செமீதுரமலி சாயபு அவர்கள் மஹா ருச ருச ஸ்ரீ பெம் பாயி பவுசுதாற்களுக்கு யெல்லாம் பெரிய சேர்வை துரைகளாகிய சித்தியோட்டு சாயபு அவற்கள் மஹா ராச ஸ்ரீ செனரல் அட்டலி சாயபு அவற்கள் மேல்யெளுதப்பட்ட தொரையள் யென் பேரிலே கடாட்சம் செய்து வந்தபடியனுலே நானும் தொரையள் கடாட் சயத்தும்படி நடந்துகொண்டு வந்தவனு யிருந்தபடியினுலே யென்னி டத்தில் பூற்ன தயவாக கடாட்சம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

மஹா ருச ருச ஸ்ரீ கும்பினி துரையள் கடாட்சம் செய்து யென் மான மரியாதிகளை பரிபாலனம் பண்ணி ஊத்துக்குளிக்குச் சேர்ந்த ஒன்பது கிருமத்துக்கும் கண்டுமுதலான பேறீசுலே சாதஸ்வாற்

சிபந்தி தவிர பத்தில் மூணு பாளையத்தார் மிருசிபத்தில் மூணு சாரி செயிது யிருக்கிறபடியினாலே சாதஸ்வாற் சிபந்தி தவிற பத்தில் யேளு சர்க்காருக்குச் செலுத்திக் கொண்டு யென் பட்டத்து ஆயுதங்கள் தயவு செய்து இறுக்கிரபடியனாலே சாரி வூத்துக்குளி பாளையகாற் யென்று பேராய் யிறுக்குறேன்.

மஹா ராஜ ராஜஸ்ரீ கும்பினி துரை அவர்கள் கடாட்சயத்துக்குப் பாத்திரனாய் குமாரசாமி காலிங்கராயகவுண்டன் என்கிற பேர் உள்ளவனாய் என்வம்ச பரம்பரையிலே சம்ரட்சனை பண்ணப்பட்ட வாளுடைய சந்ததியிலே சேரப்பட்ட அடுத்த சன்மசயிதமாய் முந்நூறு சனத்துக்கு அஹமனனியாணியாய் காலட்சேபத்துக்கு மார்க்கமாய் நடப்பிவிச்சுக் கொண்டு துரையள் கட்டளையிட்டபடிக்கு நடந்து கொண்டு ம.-ா.ா, ஸ்ரீ கம்பனி துரையள் கடாக்ஷத்துப் பாத்திரனாக இருக்கிறேன்.

ஊற்றுக்குழி காலிங்கராயக்கவுண்டன் ருசு.

★

# எமக்கலாபுரம் ஜமீன்தாருடைய வமுஸ்தாவழி கணக்கு

## டி. 3841

இந்த யெமக்கலாபுரம் வம்முஷாவற்த்தி கணக்கு ஓலைபட்டயத் திலிருந்து எழுதினது.

கலியுகம் 4520 சாலிவாகன சகார்த்தம் 1341 மகாறுசமானிய ருயஸ்ரீ ருயரவர்கள் சமஸ்தானத்தில் ருயரவர்கள் ருச்சியபரிபாலனம் பண்ணுகிற முன்னுக்கு என் முன்னோர்கள் காமவாரகுலத்தில் காமுலக்கயனுயக்கர் கூடலூர் தேவனும்பட்டணத்தில் குடியாயிருந்து நாட்டான்மை பெரியதனஞ் செய்துக்கொண்டு இருக்கையில் ருய ரவர்கள் சமஸ்தானத்தில் லாயத்தில் ஒரு குதிரை மா நதேசி யென்குற வண்டனுகிய குதிரையிருந்தது. அந்தக்குதிரைக்கிட்ட ஆள் அடுத்துப் போய் லகம் போடவும் சீனிவைக்கவும் நில்லாது ஷெ குதிரையேறி திருப்புகிறதற்காக ருயரவர்கள் நிருபங்கள் சீர்மைக்கி வந்ததில் யென் முன்னோர்கள் காமுலக்கயனுய்க்கர் ருயரவர்கள் சமஸ் தானத்தில்ப் போய்இருக்கும்போது ஷெ சமஸ்தானத்தில் கூடியிருக்கப் பட்ட சனங்களுக்கெல்லாங் குதிரையேறித் திருப்பும்படியாய் அறிக்கைச் செய்தார்கள். அப்போது என் முன்னோர் காமுலக்கய் னுய்க்கர் ருயரவர்களுக்குச் சலாஞ் செய்துக்கொண்டு லாயத்தில் நிற்கிற குதிரைக்கி லகமுங் குடுத்து சீனியில்லாமல் வரிகுதிரை மேலேறிக் கொண்டபோது அகாடி பிச்சாடி கயறுகளையுந் தும்பு விட்ட மாத்திரத்தில் எங்கும் நில்லாமல் மூனு நாள் வரைக்கும் வடக்கு மூலை காடுகண்டது செடிகண்டது யெங்கும் போய்ப் பின்னையும் நாலா நாள் ருயரவர்கள் சமஸ்தான முன்னிலைக்குக் கொண்டு வந்து சாதகமான குதிரை போலே தானே நடத்தினதில் ருயரவர்கள் வெகுசந்தோஷப் பட்டு மானதேசி யென்குற வண்டனுகிய குதிரை மேல் கொண்ட காமுலக்கனுய்க்கர் என்குறப் பேருங்குடுத்து சிங்கமுகப் பல்லாக்கு, பஞ்சவற்ன வேட்டுப்பாவாடை, சந்திரகாவி வேட்டுப்பாவாடை, உபய வெண்சாமறம், சந்திரகாவி டால், அனுமந்த டால், சூல டால், சிவத்தப்பட்டு, சுருட்டி, உபய பூச்சக்கிறக்குடை, குடை மேல்க் குடையும், வீரகண்டாமணி விருதும், சாமத்துரோக வெண்டையம் கைய்யில்மயில்க்களுத்து தஸ்தாமுதுகில் யெம்வலை, முத்துத்துருய்,

முத்துமோகனமாலே, கண்ட கோடாலி, கொளு, வல்லேயத்தில்ஒத்தை மணிக்கட்டிய வாலா யித்தையாதி விருதுகளுங் குடுத்து, ஒட்டகைமேல் நகரு, ஆனேமேல் அம்பாரியுங் குடுத்து, சிறிது வெகுமதியளுஞ்செய்து, கூடலூர் தேவனும்பட்டணமும் பாளேயப்பட்டாக இனும் விட்டுக் கொடுத்து, அனுப்பிவிச்சார்கள். அப்போது பாண்டிய தேசத்தில் பாண்டியருசாக்கள் துரைத்தனம் யெடுபட்டு ருயரவர்கள் கொட்டியம் ஞகமனுய்க்கரவர்களுடைய குமாரனுகிய விசுவனுதனுய்க்கரவர்களே வர வழைத்து மதுருபுரிக்கிப் பட்டம் கட்டி அனுப்பிவிக்கிற போது என் முன்னோர்கள் ஷ‍ி மான்தேசியென்கிற வண்டனுகிய குதிரை மேல்க் கொண்ட காமுலக்கயனுய்க்கரை வரவழைத்து நீ நல்ல சேவகனுன படியினுலெ நீ விசுவனுதனுய்க்கர் கூட தெக்ஷணபூமிக்குப் போக வேணுமென்று உத்தறவான மேரைக்கிக் கூடவந்து சிறுமலேக்கு வடக்கு ஆரணியமான காடும் அதுக்கு வடக்கு எமக்கலாபுறம் யென்ற ஊரை யடுத்து வடபுரம் வலசை யிறங்கினத்தில் குலதெய்வமாகிய கூட(ட)ல்அழகியபெருமாள் லிங்காகாரமாய் அவடத்தில் தானே யிருந்து கொண்டுது, குலதெய்வமாகிய ஆகாச கன்னிமாரும் ஷ‍ி சிறுமலே அடிவாரம் ஆரணியமானக் காட்டில் நிலேயாயிருந்து கொண்டுது. அப்படி கொலதெய்வம் தனது நிலேயாயிருந்து கொண்ட படியினுலே ஷ‍ி யிடத்தில் தானே வலசையை நிறுத்திப்போட்டு ஷ‍ி விசுவனுதனுய்க்கரிடத்துக்கு மதுருபுரி பட்டணம் போய்ச் சேர்ந்ததின்பிறகு ஷ‍ி விசுவனுதனுய்க்கரவர்கள் சிறுது சனங்களுங் குடுத்து கோட்டைக்கிக் கெட்டி பத்திரமாய்க் காவலாக மதுருபுரி கோட்டையில் தாணயம் யிருக்கச் சொல்லி உத்திரவு கொடுத்தார். அதே மேரைக்கி கெட்டிபத்திரம்ஆக காவலாகக் கோட்டையில் யிருக்கும்போது ஷ‍ி விசுவனுதனுய்க்கரவரர்களுக்கு யெதிரியாகிய குலசேகரனுகிறவன் படையெடுத்துப் பாளேயம் வந்து யிறங்கியிருந்த போது ஷ‍ி குலசேகரன் பாளேயத்தில்பேரில் சண்டைக்குப் போற தற்கு விசுவனுதனுய்க்கர் அவர்கள் உத்திரவு வாங்கிக்கொண்டு ஷ‍ி பாளேயத்தில் போய்ச் சண்டை செய்து அனேகம் தளங்களேயும் வெட்டி முறியஅடிச்சு வருகிற போது ஷ‍ி யெதிரி ஒளிந்திருந்து மான் தேசியென்குற வண்டனுகிய குதிரைமேல் கொண்ட காமுலக்கயனுய்க் கரை வெட்டிக் காயப்படுத்தினதால் தெய்வீகமானுர். அப்பால் விசுவனுதனுய்க்கரவர்கள் ஆள்விட்டு விசாரிச்சு புரோ(கி)தத்தை யெடுத்து தகனஞ்செய்தார்கள். அப்பால் வலசையிலிருந்த அவரு டைய குமாரனுகிய அனந்தப்பனுய்க்கரை மதுருபுரிக்கி வர வழைத்து உன்னுடைய தகப்பன் சண்டையிலிறந்து போன படியினுலே நீ மலேக்கவேண்டியதில்லே யென்று ருயரவர்களுடைய

சமஸ்தானத்திலே குடுத்த விருதுசளல்லாமல் பின்னுஞ்சிறுது விருதுகள் குருதைக்கி ஒத்தைமுகச் சல்லி, முன்கால் வெண்டையம், சிங்கமுகவெண்டையம், கல்லனையி, முன்சல்லி, பின்சல்லி, சிங்கமுசத்துருய் அண்டத்துமணி, புலித்தோல் முகமுட்டு வெடிக்கி ஒத்தைச் சல்லி, முன்கைச்சல்லி யித்தையாதி விருதுகளுங் குடுத்து வேண்டிய வெகுமதியளுஞ் செய்து சிறுமலைக்கி வடக்கு......மேற்கு.

யெமக்கலாபுரங்கிருமம் 1. கெர்ப்பைகிருமம் 1. சாணுறப்பட்டிக் கிருமம் 1. பஞ்சைப்பட்டி கிருமம் 1. இந்த கிருமங்களுக்குச் சிருமலையில் துற்கையம்மன் கல்ச் சிலைக்குக் கிளக்குப்பட்ட மலையும் இனும் விட்டு யெமக்கலாபுரம் பாளையப்பட்டென்று பேருண்டுபண்ணிக் குடுத்து ஊருக்கு அனுப்பிவிச்சார்கள்.

அதேமேரைக்கு ஊருக்கு வந்து யெமக்கலாபுரம் காமுலக்கணுய்க்கரென்று பட்டப்பேரிட்டுக்கொண்டு அரமனைக்கிக் குமாறவற்க்கமாக நடந்து வருவதில் கற்ணுடகத் துரையள் மதுருபுரிக் கோட்டைப் போட்டுக் கோட்டைக்கி 72 கொத்தளமும் போட்டுவிச்சுப் பாளையக்காறரைக் கொத்தளங் காற்கும் படியாய் அவரவர்களுக்குக் கொத்தளம் பிரிவு நிஷ்கரிசை செய்ததில் ஷெ காமுலக்கயணுய்க்கர் குமாரன் அனந்தப்பணுப்க்கருக்கு திருமஞ்சணவாசல் பிற்தெக்ஷணமாக ஏழாங்கொத்தளம் பிரிச்சுவிட்டு சிறுது சனங்களும் வைச்சுக்கொள்ளச் சொல்லியும் உத்திரவு குடுத்து ஷெ சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாறவற்கமாக நடந்து கொண்டு 30 ஷூ பாளையப்பட்டு துரைத்தினம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானுர். அப்பால் 2-ம் பட்டம் அவர் குமாரன் காமுலக்கயணுய்க்கருக்குப் பட்டமாகிச் சொந்த பூமியை அனுபவித்துக் கொண்டு கொத்தளமுங் காவல் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 35 ஷூ பாளையப்பட்டுத் துரத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானுர். அப்பால் 3-ம் பட்டம் லகுமயணுய்க்கருக்கு பட்டமாகிச் சொந்த பூமியை யினுமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளகாவல்க் காத்துக்கொண்டு பாளையப்பட்டு துரத்தனம் பண்ணிக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துக்கொண்டு 17 ஷூ மிருந்து அதின் பேரில் தெய்வீகமானுர்

அப்பால் 4-ம் பட்டம் அவர் குமாரன் அனந்தப்பணுய்க்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளங்காவல் காத்துக்கொண்டு 75 ஷூ துரத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானுர். அப்பால் 5-ம் பட்டம் அவர் குமாரன்

காமுலக்சயனுய்ச்சருக்குப் பட்டமாகி சொர்த பூமியை இனுமாக அனுபவித்துக் கொண்டு சொத்தளமுங் காவல் காத்துக் கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 27 வரு பாளையப் பட்டு தூரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர். அப்பால் 6 ம் பட்டம் அவருடைய குமாரன் லகுமனுய்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காவல் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாகநடந்துக் கொண்டு 33 வரு பாளையப்பட்டு துரத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர்.

அப்பால் 7ம் பட்டம் அவருடைய குமாரன் அனந்தப்பனுய்க் கருக்குப் பட்டமாகிச் சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளமுங் காவல் காத்துக் கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துக்கொண்டு 25 வரு பாளையப்பட்டு துரத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர். அப்பால் 8ம் பட்டம் அவருடைய குமாரன் காமுலக்கனுய்க்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக் கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 65 வரு பாளையப் பட்டு துரத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர். அப்பால் 9ம் பட்டம். அவர் குமாரன் வகுமனுய்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளமுங் காத்துக் கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துக்கொண்டு 30 வரு பாளையப்பட்டு துரத்தனம் பண்ணி அதின் பேரிலே தெய்வீகமானுர். இந்தப்படி 9 பட்டக்காரரும் கற்னுடக சமஸ்தானம் உள்ளவரைக்கும் மகன் மகன் தலைமுறையாய் சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக் கொண்டு வருகையில் ஸ்ரீரெங்கப்பட்டணத்து மைசூர் கற்னுடக துரையவர்கள் திண்டிக்கல் சீர்மைக் கட்டிக்கொண்ட முன்னிலைக்கி ஷெ லகுமனுய்க்கர் குமாரன் அனந்தப்பனுய்க்கருக்கு பட்டமாகிச் சொந்த பூமியை இனுமாக அனுபவித்துக் கொண்டிருக்கையில் திண்டிக்கல் சீர்மை அமுல் வரிக்கி வெங்கிட்ட ருயரவர்கள் இந்தப் பாளையப் பட்டுக்கு தோப்பாப்பணம் நிகுதி செய்து ஷெ 100 பணம் ஞகத்தீத்து நிகுதி செய்து அரமனைக்கி அதே மேரைக்கிப் பணங்கட்டிக் கொண்டு 20 வரு பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானுர்.

அப்பால் அவர் குமாரன் காமுலக்கயனுய்க்கருக்குப் பட்டமாகி ஐய்தர் சாயபு நாளையில் முன்பகுதி 100 பணத்துக்கு மேல்...... 50 பணம் உபரி கூட்டி...130 நிகுதி செய்விச்சுக் குடுத்தார்கள் அதே

மேரைக்கு 130 பணம் செலுத்திவிச்சுக் கொண்டு சொந்த பூமியை அனுபவித்துக் கொண்டு 21 ஹு துரத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானூர். அப்பால் அவருடைய குமாரன் அனந்தப்பனுய்க் கருக்கு பட்டமாகி மீறுசாயபு நாளையில் சையதுசாயபு திண்டிக்கல் சீமை அமுல் வந்த முன்னிலையிக்கி பணம் பகுதி செய்த 150 பணம் மேல் உபரி ... 300 பணம் கூட்டி ஆக ... 300 பணம் நிகுதி செய்தார்கள். அந்த மேரைக்கி அரமனைக்கி ... 300 பணம் குடுத்துக் கொண்டு வருகையில் தெய்வீகமானூர். அப்பால் அவருடைய குமாரன் லகுமனுய்க்கராகிய எனக்கு பட்டமாகி சவுமிய ஹு வரைக்கும் சொந்த பூமியை அனுபவித்துக் கொண்டு வந்தேன். சாதாருண வருஷம் கும்பினியாரவர்கள் திண்டுக்கல் சீர்மை துரத்தனத்துக்கு வந்த மகாருசமானிய ருச ருசஸ்ரீ மக்களுட்டுதுரையவர்கள் அதிகாரத்தில் என் பாளையம்பட்டுக்கு முன் னிகுதி செய்து குடுத்து வந்த ... 300 பணம் மேல் உபரி .. 150 பணம் கூட்டி ஆ ... 450வகையருப்பு பணம் நிகுதி செய்துவிச்சபடிக்கு அதே மேரைக்கி துன்மதி ஹு வரைக்கும் சற்காருக்குச் செலுத்திவிச்சுக்கொண்டு வருகையில் துந்துமி ஹு பைமேஷ் சமாபந்தி நிகுதி செய்விச்சு தீர்வை ... 1620 பணம் ...... பணமும் 1212 ம் பசலி முதலில் 1220 ம் பசலி வரைக்கும் சாடாவாய் சற்காருக்கு செலுத்திவிச்சுக் கொண்டு வந்தேன். பைமீ சி— முன்ம் பாரமாயி விளுந்தபடியினுலெயும் மாமூலாய் சேர்ந்து வரப் பட்ட பூமியில பைமேஷ் செய்குறபோது சிறுது நிலங்களை யெல்கைத் த்கருறென்று அமானியாயில் நிறுத்தி யிருக்குறபடியினுலேயும் காச்சல் உபத்தித்தினுலே சிறுது குடிகள் மரணமாய்ப் போன படியினுலே குடியள் பத்து ஹு அதிய தீர்வைகள் குடுத்து கைமெலிந்து, ஓடிப் போய் விட்ட படியினுலேயும் என் ...... சாகுபடி நஷ்ட்டம் வந்து பணம் செல்லாத நிமித்தியம் பிறசோற்பதி ஹு முதல் கும்பினியிலே சப்திபண்ணி யிருக்குறூர்கள் சீர்மைக்கித் தீர்வை சவுக்கியஞ்செய்து இப்போது நூதனமான தகருற் பூமியெல்லாம் மாமூல்படிக்கி சேர்த்துக்கொடுத்து அடியேன் பேரில் கும்பினியார் தயவுவைத்து காப்பாத்தி லட்சிக்கவேண்டியது.

# எறியோடு
# வல்லக் கொண்டம நாயக்கர் வமிசாவளி
## டி. 3012

எறியோடு (ஈரோடு) பாளையப்பட்டு ஜமீன்தாரி குழந்தைவேல் வல்லக் கொண்டம நாயகர் வமிசாவளி :- தறியாபத்து நிட்டல நாயக்கன் அய்யன் முன் கர்தாக்களாகிய திருமலே நாயக்கர் அவர்கள் நாளேயில் அவர் தளவாய் இராமப்பையர் அவர்கள் சமஸ்த்தாதிகாரமும் செய்து கொண்டிருக்கும் போது சுக்காம் பட்டியில் ராஜதானியாய் பாலமுக்கொண்டு முத்தைய்ய நாயக்க ரவர்கள் தம்பி கோணக்க முத்துவல்லக் கொண்டம்ம நாயக்கர் சிறு நாயக்கராகப் பட்டமாய் இப்படி இருச்கும் போது ஷெ சுக்காம் பட்டி ஜமின்தார் ஆகிய பாலமுத்தைய்ய நாயக்கர் வகையராப் பெண்டுகள் சிறு நாயக்கராகிய கோணக்கமுத்து வல்லக் கொண்டம்ம நாயக்கர் பேரில் விரோதமாய் இவர் சாப்பிடுகிற அன்னத்தில் மருந்து வச்சுக் கொல்லனும் என்று நினேச்சு பச்சன ... த்தில் வச்சி சாதம் வைக்கும்போது யிவர் நித்தியமும் நாய்கள் பேறில் ... இறுப்பார். அந்த ஞயிகளுக்கு முன்னே சாதம் வச்சி பிற்பாடுதான் சாப்பிடுகுறது. அந்த மெரைக்கே அன்னேக்கும் நாயிக்கி சாதம் வைக்கவும். அந்த சாதம் திண்ணு அது அங்கன தானே செத்துப் போச்சுது. இத்தை இவர் பார்த்து இந்த சமாசாரம் பண்ணினது சொல்லுங்கள் என்று தான் சாப்பிடாமல் குதிரையேறிக் கொண்டு எறியோடு வந்து சேர்ந்தார்.

எறியோடு கிராமத்தில் நாட்டாண்மைக் காப்பிளியனுகிய காள கவுண்டன் இடத்தில் மேற்படியார் வந்துசேர்ந்த உடனே அவனிடத்தில் நடந்த சமாசாரம் சொல்லி இனிமேல் என்றும் அன்னம் தேவஇல்லே ......... மென்று சொன்னுர். இது சமா சாரம் ஷெ கிராமம் நாட்டாண்மைக் காளக்கவுண்டன் கேட்டு தன்னுடைய சொந்த ஆஸ்தியை செலவு செய்து ஷெ கிராமம் எறியோட்டில் ஓர் ராத்திரிக்குள்ளாக மண்கோட்டையும் கட்டி அதில் அரண்மனே கட்டி வச்சிருக்குது. கொஞ்சம் சேவுகத்தில் சேகரம் செய்து இவரை எஜமான ஸ்தானமாக வச்சிக்கொண்டு ஒரு மாசத்துக்குப் பின்பு பெரும்பள்ளிக்கோட்டை பேறில் சண்டைக்கிப் போயி சண்டை செய்து ஷெ கோட்டையும் கட்டிக்கொண்டு அந்தக்

கோட்டையில் யிருந்துகொண்டு யிருந்தார். அப்பால் நல்லமனு கோட்டைக் கிராமம், பாடியூர், கொளத்தூர், மகறம்பாடி, மல்லுவாற் பட்டி, ஆலகுவாரபட்டி சீருமனேத்தம், சித்தூர், இந்த பத்து கிராமமுங் கட்டி எறியோட்டில் பிறியாதி ஷூ மாசி மாதம் ஷெ கிராமம் நாட்டாண்மைக் காளக்கவுண்டனும், அவனைச் சேர்ந்த காப்பிலியரும் ஷெ கிராமம் நாட்டாண்மை காரரும் கூடி...யகாற்ற அம்மை நாயக்கர் என்று சொன்னூர்.. கன்னிவாடி அப்பைய்ய நாயகரும் இவர்கள் எல்லாரும் கூடி மேலெழுதிய பாலமுக் கொண்டு கோணக் களுத்து வல்லக் கொண்டம நாயக்கருக்கு சுபதினத்தில் பட்டம் கட்டி வச்சார்கள். அவர் கர்தாக்களாகிய திருமலே நாயக்கரவர்கள் உத்தரவு படிக்கி நடந்துகொண்டு வகை தீற்ப்பு கலிபணம் 4000 பணம் கொடுத்துகொண்டு வந்தார். அவர் பட்டம் ஷூ 30. ரெண்டாவது பட்டம் மேற்படியான் மகன் கறுங்கண்வல்லக்கொண்டம்ம நாயக்கர் நாளையில் தென்னம்பட்டி கிராமம் 1 பாகநேத்தம் கிராமம் 1 கொம் பேறும்பட்டி கிராமம் 1 பிலந்து கிராமம் 1 இந்த நாலு கிராமமுங் கட்டி கைவசப்படுத்திக்கொண்டு மேலெழுதிய பாகநேத்தம் கிராமத்தில் விஸ்தீரனமாய் பனிரெண்டு கொத்தளத்துடனே கோட்டையும் கட்டி அதுவே ருஜதானியாக யிருந்துகொண்டு அவர் பட்டம் ஷூ பத்து. மூனுவது மேற்படியார் மகன் ஆறுமுகவல்லக் கொண்டம்ம நாயக்கர் நாளையில் சிங்காரக்கோட்டை கிராமமும், கால்லபட்டி, வேலாயும் பாளையம், புத்தாற்கோம்பே, பஞ்சந்தாங்கி, அயிலூர் இந்த ஏழு கிராமுங்கட்டி வசப்படுத்திக்கொண்டு அயிலூர் ருஜதானியாக கோட்டையும் கட்டிக்கொண்டு மைசூரறுக்கும், திண்டுக்கல்லில் வகை தீற்ப்பு...5000 பணம் குடுத்துக்கொண்டு அவர் பட்டம் ஷூ முப்பது.

ஞலாவது பட்டம் மேற்படியான் மகன் முத்துக்குமாறவேல் வல்லக் கொண்டம ஞயக்கர் நாளையில் மேற்படி தீர்ப்புபடிக்கி கலி...5000 பணம் திண்டுக்கல்லில் ஆரணி ராமநாயக்கருக்கு செலுத்திக் கொண்டு அவர் பட்டம் ஷூ 40. அஞ்சாவது மேற்படியான் மகன் முத்துகுமாறுவேல் வல்லக்கொண்டம நாயக்கர் நாளையில் மேலெழுதிய வகை தீர்ப்புக்கு பணம் செலுத்திக்கொண்டு அவர் பட்டம் ஷூ பத்து. ஆறுவது மேற்படியார் மகன் முத்துக் குமாறுவேல் வல்லக் கொண்டம நாயக்கர் நாளையில் ஷெ வகை தீர்ப்பு மேறைக்கே திண்டுக்கல்லில் மீறுசாயபு அவர்களுக்கு பணம் செலுத்திக் கொண்டு அவர் பட்டம் ஷூ 10. மேற்படியார் நாளையில் எறியோடு சீர்மையை ஜபுதி செய்து இருந்தபோது அவர்கட வூரில் போயிறுந்தார். ஜபுதி ஷூ 9.

நாய்க்கர் நாளேயில் கர்னல் லூட்டு துரையவர்கள் திண்டுக்கல்லில் பேறில் சண்டை செய்து திண்டுக்கல் கைவசப்படுத்திக் கொண்டிருந்த போது ஷெ முத்துக்குமாறுவேல் வல்லக்கொண்டம நாயக்கரிடத்தில் ஷெ கற்னல் லூட்டு துரையவர்களேக்க...... கேட்டுக்கொண்டதில் அவர்கள் பட்டம் கட்டி வச்சார்கள். இப்படியிருக்கும் ஞளேயில் மறு படியும் சையிது சாயபு திண்டுக்கல்லுக்கு வந்தவுடனே யெரியோட்டின் பேரில் சண்டை செய்து ஷெ முத்துக்குமாறுவேலு வல்லக்கொண்டம நாயக்கரைப் பிடித்துக் கொண்டு திண்டுக்கல் மலே மேலே போட்டு வச்சார். மலே மேலே அஞ்சு வருஷம் இருந்தார். அப்போ ஷூ வயசு 12. இப்படி இருக்கும் நாளேயில் சாதாரண வருஷத்தில் மேஸ்தற் மகுலூட்டு துரையவர்கள் திண்டுக்கல் கைவசப்படுத்திக் கொண்ட முன்னுக்கு மேலெழுதிய வல்லக்கொண்டம நாயக்கர் பேரில் தயவு செய்து கும்பினியார்க்குப் பிள்ளே என்று பட்டமும் கட்டி வைச்சி வகை தீர்ப்பு கலிடை 7000 பணம் தீர்ப்பு செயிது போ(ர்)டுக்கு அனுப்பிவிச்சார்கள். மேலெழுதிய சாதாரண ஷூ முதல் நள வரைக்கும் பட்டம் ஆண்டுக் கொண்டு வருகையில் மேஸ்தர் ஆறடிசுதுரை அவர்கள் திண்டுக்கலுக்கு...ருக வந்திருந்த போது ஷெ ஜமீன்தாரன் திண்டுக் கல்லுக்கு வரச் சொல்லி உத்திரவு குடுத்ததில் ஷெ ஜமின்தார் சிறு பிள்ளேயானதினுலேயும் காற்பாறி புத்தியில்லாதவனுலேயும் வுத்திரவுக்கு மாறு உத்திரவு வாறதில்லே என்று சொன்னதினுலே திருச்சிரு புறங்கோட்டையிலிருந்து ரெண்டு பட்டாளம் சண்டைக்கி வந்த போது ஷெ ஜமின்தார் ஓடிப் போயிட்டார். அப்போ சீற்மை ஜபுத்தி செய்துக் கொண்டதின் பிறகு உடனே ஓடிப்போயிருந்த ஜமின் தார் திண்டுக்கல்லுக்கு வந்து ஆறடிசுதுரை அவர்கள் யிடத்தில் வந்து விளுந்தார். அப்போது துறையவர்களுக்குத் தயவு வந்து மாதம் 1க்கு நூறு ரூபாய் சம்பளம் செய்து குடுத்து உடமையும் இனிமேல் விடப் படும் என்று உத்தரவு செய்திருந்தார்கள். அப்பால் மேஸ்தற் பேரிசு துரையவர்கள் வந்த முன்னுக்கு ஷெ ஜமின்தார் முத்துக் குமாறுவேல் வல்லக்கொண்டம நாயக்கரை மதுரைக்கி வரச் சொல்லி உத்தரவு வந்து இவர் போயி மேஸ்த்தற் பேரிசு துரையவர்களேக் கண்டு சொல்லிக் கொண்டதில் அவர் சொன்னது. நீ ஆஜராய் யிரு என்று சொல்லி இருந்தார்கள். அவர் துந்துபி வறுஷத்தில் மதுரையில் தெய் வீகமாய்ப் போனுர்கள். ஷெ ஜமீன்தாருக்கு பிள்ளேயில்லாததுனுலே அவருடைய சகோதரமான சின்னசாமி வல்லக்கொண்டம நாயக்கரை தருவிச்சு மேற்படியார் சம்பளம் ரூபாய் 100 எனக்கு நடந்து வந்தது. இப்படி இருக்கையில் ஒரு வருஷத்துக்கு பின்பு என் அண்ணனை முத்துக் குமாரவேல் வல்லக்கொண்டம்ம நாயக்கர் உடைய பெண்

சாதி சின்னக்கண்ணம்மாள் எங்கள் பட்டத்துக்கு அலங்குறதமாய் விருதுகளுடைய சேர்ந்த தங்க நகைகளைக் கேட்டதில் அம்மாள் சொன்னது. ஜமின்தார் பட்டத்துக்கு ஒன்னுடைய மகனை எனக்கு குடுத்தால் பட்டமும் கட்டி வைச்சி என்னெடத்தில் யிருக்கிற ஆஸ்தியும் குடுக்கிறேன் என்று சொன்னார்கள்.

இதுமேல் ஒண்ணுக் கொண்ணு விரோதமாயி மேஸ்தர் பேரீசு துரையவர்கள் கிட்ட சொல்லிக் கொண்டதில் நீங்கள் இறு பேறும் ராஜிபட்டு வருகிறவரைக்கும் ... 80... ரூபாயாக்கி அமானிலே வச்சி... 20 ... ரூபாய் சின்னக்கண்ணம்மாளுக்கு குடுத்து வருகுறார்கள். ஷை பாளையபட்டுக்கு கிழக்கு ஆறு மாகாணம் எல்கை, சீவல்க் கறட்டுக்கு மேற்கு, வேடச்சற்தையூர், சேகறம், வெள்ளை, பொம்மனப்பட்டி எல்கைக்கும் கிழக்கு; சாமயனுயக்கர், ராமகிரி, சேகறம், நாககோட்டை எல்கை. எல்கை ஆறுக்கும் தெற்கு; திண்டுக்கல் சேகறம் செட்டி னுயக்கன்பட்டி எல்கை பாறைக்கும் வடக்கு இந்த நான்கெல்கைக் குள்பட்ட பூமி விஸ்தீரணம் வுத்தேசம் கீள்மேல் நாளிகை 15 நாழிகை 10 இதில் அகப்பட்ட கிராமங்கள் விவறம்.

1. எரியோடு
2. பாகனேத்தம்
3. பெரும்பள்ளி
4, நல்லமனுக்கோட்டை
5, பாடியூர்
6. கொளத்தூர்
7. ஆலத்துவாரப்பட்டி
8. மாறம்பட்டி
9, மல்லதுவாரப்பட்டி
10. சீராமனத்தம்
11. சித்தூர்
12. தென்னம்பட்டி
13. பேலாத்து
14. கொம்பேறுபட்டி
15. கொல்லம்பட்டி
16. சிங்காரக்கோட்டை
17. வேலாயுதம்பாளையம்
18. புத்தூர்
19. பெரிய கோம்பே
20. பஞ்சந்தாங்கி
21. அயிலூர்

ஆக கிராமங்கள் இருபத்தொன்று 21. ஷை வகையில் ஷை கிராமங் களில் சேர்ந்த பாகனேத்தம் கணக்கு நாச்சிமுத்துப் பிள்ளை 1816 வரு சூலாய் மீ 30௳ எழுதிவச்ச வரலாறு.

★

# காக்காவாடி வேங்கடாசல நல்லண்ணக் கவுண்டன் வமிசாவளி

## டி. 3037

வெங்கல னுட்டுப் பட்டக்காரரான காக்காவாடி பட்டக்காரர் வேங்கடாசல நல்லக் கவுண்டன் கயிபீது புக்கு.

தாராபுரம் துக்குடிக்குச் சேர்ந்த அரவக்குறிச்சி தாலுக்கா மவுசே 'காக்காவாடி' கிராமத்திலேயிருக்கும் வேங்கடாசல நல்லண்ண கவுண்டன் என்னப்பட்ட பட்டக்காரனுடைய வம்சாவளி மொதலான கைபீயது என்னவென்றல் :-

பூர்வத்தில் குறுகுல வம்சமான க்ஷத்திரிய சாதியில் ஸ்ரீ காளஹஸ்திபுரத்தில் வாஸஸ்த்தனை ஈசுவர கடாட்சத்தினலே பூஜை பண்ணிச் சுவாமியினுடைய அனுக்கிரகம் பெற்ற 'கண்ணப்ப நாயனர்' என்கிறவருடைய வேட்டுவச் சாதியில் காளஹஸ்திபுரத்துக்கு ராஜாவான ' நாகராசர் ' என்னப்பட்ட வமிச பரம்பறற்களிலே 'முத்துராஜாக்கள் கூட்டம்' என்று பேர் பிரசுத்தி பட்டவர்களாய் இருக்கும் நாளேயில், அக்காலத்தில் கொங்கு தேசமான சேரன் ருச்சியத்தில் சில பிராமணுள் செட்டியள் காணியாட்சிகாரருய் இருக்கிற நாளேயில் அக்காலத்தில் ராச்சயாதிபதிகளான சேற, சோள, பாண்டிய மூன்று ராசாக்களிடத்திலேயு மிருக்கப்பட்ட காறியஸ்தாள் மூணுபேரும் சீமைகளிளே குடிகளே மிகவும் அங்காமி பண்ணிக்கொண்டு இருக்கும் நாளேயில் அங்காமிக்கு பொறுக்கமாட்டாமல் குடிகளான சில பிருமணுள் செட்டியள் போயி பாண்டிய ராசா அவர்களிடத்தில் மனுவு சொல்லிக் கொண்டு அவாளே மூன்று பேரையும் செயிக்கிறதுக்காக யெளுவது தண்டிகைக் காறகளிலே முத்துராசா கூட்டத்தில் பெரிய ஊறுலே குடியிருக்கும் நல்லண்ணன் யென்னப்பட்டவனே அளப்பிச்சு அங்காமி நிவற்சு பண்ணசொன்ன படியினலே அவன் போய் மூன்று பேரையும் செயிச்சப்படியினலே பாண்டியராசா பட்டமுங் குடுத்து பட்டப்பேர் விளங்கும்படியாக கிதாப்பு.பிறுதுகள் முதலானதுகள் யிதின்கீள் யெளுதி வறுகுறது.

பாண்டிய தேசாதிபதியான சவுந்திரபாண்டிய ராசா அவர்கள் நாளேயில் ஓட்டியனே செயிச்சபடியினலே தேசிகாறன் காளஹஸ்திகாரன் யிருவறுக்கும் பட்டமுங் குடுத்து பல்லக்கு, வுபசாமரம், சுறுட்டி

வெட்டுப்பாவாடை, ட...கர்ர டகார், சாமதொரோகறவெண்டயம் இது முதலான பிறுதுகளும் குடுத்து வெங்கலநாடு யென்னப்பட்ட நாட்டை(கு) கிரமங்களை விட்டு பாளையகாறதனமாய் நெமுகம் பண்ணியிருந்தார்கள்.

அக்காலத்தில் பாளைகற் பிறுப்புத்துவகாரனை தேசிகாறன் காளஹஸ்தி ராசனுடைய சகோதரனை நீலியப்பக்காரன் நல்லண் ணக்காரன் இறுவரும் பாண்டியராசா அவர்கள் கடாட்சயத்துனலே பட்டமுங் கட்டிக்கொண்டு வெங்கல நாட்டு ஆம்பருவதி தென்ங் கரை பட்டக்காரரென்று பேர் பிரசித்தி பெற்றவர்களாயி இருந்தார்கள்.

பாண்டியருசா அவர்களுக்கும், சேரராசா அவர்களுக்கும் துயுத்தப்பட்டு அக்காலத்தில் பாண்டியராசா அவர்கள் தம்முடைய லாகாவில் இருக்கப்பட்ட பாளையக்காரரை வரச் சொல்லி உத்திரவு செய்துயிருக்கும் வேளையில் அந்தச் சமயத்தில் வெங்கலநாட்டு ஜனங் களை வெட்டிக்கு வெற(க்)கு வெட்டிக் கொண்டு வறச் சொல்லி உத்திரவு செயிது யிருக்கும் வேளையில் அது வேலை செயிகுரதில்லை யென்று பிறிதிவாதித்துக்காக காலை வெட்டி வேக பண்ணினர்கள். அதுநாலே யிந்த நாட்டுக்கு வெங்கால னடென்று பேர் கொடுத் தார்கள்.

இப்படிக்கி பட்டம் ஆண்டு வருங்காலத்தில் பொகுநாளானபடி யினலே தலைமுரைகள் இத்தனையென்று தெரியவில்லை.

சாலிவாகன சகாபுதம் 1383க்கு சித்திரபானு ஷூ முதல் பட்டம்ங் களுடைய வரிசைகளும் அவாளவாளுடைய நடத்தையளும் இதன் கீழே யெழுதி வருகிறது.

1. முதல் தலைமுறை செட்டி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷூ 32
2. யிவற் குமாரன் நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷூ 28
3. யிவர் குமாரன் நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷூ 26
4. யிவர் குமாரன் செட்டி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷூ 23
5. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷூ 21
6. யிவர் குமாரன் வெங்கிட்டாசல நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷூ 34

7. யிவர் குமாரன் பெரிய நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷ 23
8. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷ 29
9. இவர் குமாரன் பெரிய நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷ 28
10. யிவர் குமாரன் செட்டி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷ ?
11. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷ 17
12. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ஷ 33

12 300 ?

சாலிவாகன சகாப்தம் 1709க்கு பிலவங்க ஷ வரைக்கும் பட்டம் ஆண்டு 12க்கு ஆண்டு ஷ 326. முதல் தலைமுறை பட்டக்காரனுன செட்டி நல்லண்ணக் கவுண்டன் நாளையில் தன்னுடைய சகோதராள் தேசிகரன் யிடத்தில் பிறிவு பண்ணி கொண்டு பட்டக் காறனென்று பேற் பிரசுத்தி பட்டவராய் காக்காவாடி கே(ா)ட்டை முதலானதுகள் உண்டு பண்ணி கொண்டு சிறிது சனம்ங்களுடனே சறுகாறுக்கு யென்றும் வூளியம் செயிது கொண்டு கிராமமும் அனுபவிச்சுக் கொண்டுயிருந்தார்கள்.

அதின் பிற்க்காலம் ஒன்பதாம் தலைமுறைகாரரான பெரிய நல்லண்ணக் கவுண்டன் நாளையில், அக்காலத்தில் ராச்சியாதிபதியான மதுரை சமுஸ்தானத்துக்கு கர்த்தராகிய நாயக்கரவர்கள் குட்டத்து துரைத்தனத்தில் பாளையப்பட்டுகாரர்களில் ராமகிரி சாமயனுயாக்கர் ...ளை முளிங்கி முந்தேனுயகாள் யிறுவது சீமைகளிலே சில்லரை பண்ணி அங்காமி பண்ணி கொண்டுயிருக்கும் நாளையில் அறமனையாற் உத்திரவு படிக்கு அவாளை செயிச்சு அங்காமியை நிறுத்தினபடியனுலே நாயக்கரவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு பொகுமதி பண்ணி முத்து துருயி பிறுது கொடுத்தார்கள்.

பணிரெண்டான் தலைமுறைகாறனுன பட்டக்காரன் யென் தோப்பனுன பசுபதி நல்லண்ணக்கவுண்டன் நாளையில் அக்காலத்தில் மயிசூறு சமுஸ்தானத்துக்கு கர்த்தாக்களுடைய காரியத்துக்கு கர்த்தரான தளவாஇ நஞ்சருசயற் நாளையில் திரிச்சினுப்பள்ளியாற்

பேரிலே பாளையம் எடுத்து போறபோது சிறிது சனங்களுடனே கூட வறச்சொல்லி உத்திரவு செய்தபடியினுலே கூடா போய் இருக்கும் சமயத்தில் திருச்சிணுப்பள்ளிக்குச் சேர்ந்த சமயபுரத்தில் திருச்சிணுப் பள்ளியாருக்கு ரஸதுகள் சேந்துயிருந்தபடியினுலே அப்போ மைசூர் கர்த்தாக்களிடத்தில் ஒபளிகாரனுன அயிதரல்லிகான்னேயும் பசுபதி நல்லண்ணக் கவுண்டனேயும் இருவரையும் தருவிச்சு அந்த ரஸ்துகளே யெல்லாம் பிடுங்கிக் கொண்டுவரச் சொல்லி உத்திரவு பண்ணினுர்கள்

சமயபுரத்திலே யிருந்த திருச்சிணுப்பள்ளியார் ரஸ்துகளுக்கு காத்துயிருந்த சமைங்களே அடிச்சு துறத்திவிட்டு அந்த சறுதாரனேயும் வெட்டி ரஸ்துகளே எல்லாம் பிடுங்கிக் கொண்டு தளவாய் நஞ்சய ருசயற் அவர்கள் இடத்தில் கொண்டு வந்து வச்சபடியனுலே தங்களேயும் பதக்கம், முத்து, ஒட்டி முதலான பொகுமதிகள் பண்ணினுர்கள்.

சாலிவாகன சகாபுதம் 1710க்கு யென் தொப்பனுருன பசுபத்தி நல்லண்ணகவுண்டர் தெய்வகதி அடைஞ்சார். அன்னேறத்தில் கீலக ஸூ ஆனி மீ" 15வ புதன்கிழமை நாள் அக்காலத்தில் டிப்புசுல்தான் துரைத்தனத்தில் அறன்மனேயாற் கட்டளேயிட்டபடிக்கு நாடனேவரும் கூடி பட்டமுங்கட்டி வேங்கிடாசலநல்லண்ண கவுண்டன் எண்ணப் பட்ட பேர் விளங்க பண்ணினுர்கள்.

முன்னுலே பூர்வத்தில் எங்கள் வமிசத்திலே யெங்களுக்கு பட்டய வர்த்தியாஇ வெங்கில நாட்டு கிராமங்களிலே புஞ்சை தோட்டம் வுள்பட பெரியலூரு நஞ்சையிற் காணி 30. இது சருவமானியமாகி நடந்து வந்து "டிப்பு சுல்தான்" நாளேயில் செபுத்தி பண்ணிக் கொண்டார்கள்.

ஷெ மகா ராஜ ராஜஸ்ரீ "கும்பினியார்" அவர்கள் தயவுக்குப் பாத்திரனுயி காக்காவாடி குடியிருப்புக் காரனுயி குடித்தனம் பண்ணிக்கொண்டு காத்துயிருக்கிறேன்.

வெங்கடாசல நல்லண்ணக் கவுண்டன் ருசுவு.

# காங்கையம் பல்லவராய கவுண்டன் வமிசாவளி

## டி. 2965

தாராபுரம் துக்குடி காங்கயம் தாலூக்கா கசுபா காங்கயத்திலே யிருக்கும் பல்லவராய கவுண்டன் என்னபட்ட பட்டக்காரனுடைய வமிசாவளி முதலான கய்பீயது என்னவென்றால் :-

பூர்வத்தில்ச் சோழ தேசத்தில் தொண்ட மண்டலத்து வேளாளர் என்று பேர்ப்பட்ட னற்குடி 48000 பசுங்குடி 12000 ஆக 60000 கோத்திரக் காறர்களில் னற்கூடி 48000 கோத்திரத்தில் 8000 கோத்திரக்காரர் சோள ராசாவை சேறராசா கேட்டுக்கொண்ட படியினாலே 8000 கோத்திரக் காரரையும் சேர ராசாவுக்குக் கொடுத்தார். அப்போ தொண்ட மண்டலத்துலேயிருந்து தென்திசை நோக்கி வரப்பட்ட வேளாளருக்கு தென்திசை வேளாளர் என்று பேர் வரப்பட்டவர் களாயி சேர தேசத்தில் வந்து யிருந்த விடத்தில் பூறவத்தில் இந்தச் சேர தேசத்தில் குடித்தனம் பண்ணப்பட்ட மாவிலவன், பூவிலவன், காவிலவன், வேடன், வெட்டுவன் இந்த சாதிகளுக்கு யிறுக்கப்பட்ட காணிகளிலே இந்த வேளாளருக்கு பாதி பிறிச்சு யெடம் பண்ணி குடுத்தார்கள்.

அக்காலத்தில் கொங்கு வேளாளரென்றும் யிருபத்து நாலு நாடு யென்றும் யேற்பட்டு யிருக்கும் காலத்தில் அந்த நாளையிலே பூந்துறை நாட்டில் சித்தெளுந்தூற் எண்ணப்பட்ட கிராமத்தில் குடியிருப்புக் காரனாய் இருக்கப்பட்ட வேளாள சாதியில் செங்கண் கோத்திரத்தில் லிங்கண்ண னெனப்பட்டவனுக்கு நாலு புள்ளையள் புரந்து யிருக்கும்நாளையில் அந்தப் புள்ளைகளிலே ஒருவன் மாடு மேய்ச்சுக் கொண்டு யிருக்கும் நாளையில் காங்கயம் கிராமத்தில் அக் காலத்தில் காங்கயத்துக்கு காணியாளராயிறுக்கப்பட்ட பெருங்குடி கோத்திரத்தில் வேல்கவுண்டன் யெண்ணப்பட்டனுக்கு சுவேத வற்னனுமாயி ஒரு பெண் புறந்தபடியனாலே அந்தப் பெண்ணை கலியாணம் பண்ணிக் கொண்டவனுக்கு தன் காணியிலே காணியாட்சி குடுக்கிறோமென்று சொல்லியிறுந்த சமயத்தில் சித்தெளுந்தூறு லிங்கண்ணன் (என்பான்) மாடு மேச்சுக் கொண்டுயிருந்தவன் கலியாணம் பண்ணிக் கொண்டு காங்கயத்தில் காணியும் வாங்கிக்

கொண்டு காங்கயத்துக்கு காணியாட்சிக்காரனாய் இருக்கும் நாளையில் சுவேதவற்ன்னமா யிறுக்கப்பட்ட பெண்பிள்ளைக்கு லிங்கக் கவுண்டன் என்னப்பட்டவன் புறந்து சுகத்திலே யிருந்தார்கள்.

லிங்கக் கவுண்டன் என்னப்பட்டவன் வி...ரஷத்தராயி பிறப் பட்டு சோள தேசாதிபதியான திரிபுவனச் சக்கிரவர்த்தி யென்னப் பட்ட சோள ராசாயிடத்தில் சேர்ந்துயிருக்கும் நாளையில் அக்காலத் தில் பல்லவனென்னப்பட்ட சர்தாற் பொகு சூர நாயி சோள ராசாவுக்கு விரோதமாயி இருக்கும் நாளையில் சோள ராசாவானவர் அந்தப் பல்லவனைச் சம்மாரம் பண்ணி செயிச்சவனுக்கு சகல பொகுமதிகளும் பண்ணி கிதாபும் கொடுக்கிறோமென்று தம்முடைய சேனைங்களுக்கு எல்லாம் அறியப் பண்ணியிருக்கும் நாளையில் மேல் எழுதப்பட்ட லிங்கக் கவுண்டன் நான் பல்லவனை சம்மரிச்சு செயம் பண்ணி வருகுறேன் என்று வெத்திலே பாக்கு வாங்கிக் கொண்டான்.

லிங்கக்கவுண்டன் சிறிது பவுசுகளைக் கூட்டிக்கொண்டு சோள ராசாயிடத்தில் உத்திரவு வாங்கிக் கொண்டு, ராசாயிடத்தில் ஆயுதம் கைக்கொண்டு பல்லவனை கைபிடியாயி பிடிக்க வேணுமென்று யுத்தம் பண்ணுகுறபோது அந்த பல்லவன் பொகுதூரம் வியாபிச்சு வடக்கே உத்திர தேசத்திலும் பல்லவனைத் தொடர்ந்து வெகுநாள் சண்டை பண்ணி பல்லவனைச் சம்மாரம் பண்ணி பல்லவன் தலையெக் கொண்டு வந்து சோள ராசா அவர்களிடத்தில் வச்சபடியனாலே சோள ராசா மிகவும் சந்தோஷப்பட்டு பல்லாக்கு, உபயசாமரம், சூரியபான யிது முதலான சகல வெகுமதிகளும் கொடுத்து லிங்கயபல்லவரென்று பேரும் கொடுத்து தம்மிடத்தில் சகல காரியத்துக்கும் முதன்மைக் காரராய் வச்சுக்கொண்டு யிருந்தார்கள்.

அந்த நாள் முதல் லிங்கய பல்லவரென்று பேர் பிரசித்திப் பட்ட வராயி சோள ராசாயிடத்தில் காரியஸ்தளகர்த்தராயி ராசகெம்பிர வள நாட்டில் வம்ச பரம்பறையாயி குடியிறுப்புகாரராயி சோழ ராசா அவர்கள் இருந்து கொண்டு கட்டளையிட்டபடிக்கு நடந்து கொண்டு யிருந்தார்கள்.

சோளராசா யிடத்தில் தளகர்த்தராகியும் காங்கயத்துக்கு காணியாட்சிக்காரராயும் பிறசுத்திப் புருஷராஇ யிருக்கும் நாளை யில் வம்ச பாரம்பரையிலே சுந்தர பல்லவரெங்குரவர் நாளையிலே காங்கயத்து குடுயிருப்புக்காரரா யிருந்தார்கள்.

மேல் கலத்தில் எழுதப்பட்ட சுந்தர பல்லவ ரென்னப்பட்டவற் குமாரன் சிதம்பற பல்லவ ரென்கிறவற் அதி புத்திசாலியாயி வியா

பிச்சுக் கொண்டு யிருக்கும் நாளையில் அக்காலத்தில் தக்ட்சண சிம்மா சனாதிபதியான நறபதி விஜயநகரம் பெனுகொண்ட ஆளப்பட்ட ராயர் சமுஸ்தானத்துக்குப் போய்ச் சேர்ந்து காத்துயிருந்தார்.

சிறிது நாள் ராயர் சமுஸ்தானத்தில் காத்துயிருக்கும் வேளையில் அக்காலத்தில் னரபதி சமுஸ்தானாதிபதியான பிறபுட தேவராயர் அவர் களிடத்தில் ஒருநாள் பேட்டி பண்ணி கொண்டு தன்னுடை முன்வம்ச பரம்பரையிலே லிங்கயபல்லலவனுடைய செவுரிய காம்பிரியங்க ளெல்லாம் அறிக்கைப் பண்ணிக் கொண்டு யிருக்கும்மிடத்தில் ராயரவர்களுக்கு கடாட்சம் வந்து சிதம்பர பல்லவனுடைய புத்தி குசலங்களுக்கு சந்தோஷப்பட்டு நீ பொகு நாளாயி இந்த சமுஸ்தானத் திலே வியாபிச்சுக் கொண்டு யிருக்குறபடியினாலே ஒன்னிடத்தில் நமக்கு மிகவும் சந்தோஷமாச்சுது என்று பூர்வத்தில் சோள ராசா வாலே சகல பொகுமதிகளும் பெத்து யிருந்தாயே யென்று சொல்லி யுன்னுடைய ஜென்ம பூமி பிரதேசத்துலே யிருமென்று பல்லாக்கு உபயசாமரம் சுருட்டி கொடை முதலான பிறுதுகள் குடுத்து பல்லவராயர் என்குற பேறையும் கொடுத்து சகல விபவத்துடனே பட்டமும் கட்டி தங்களுடைய ராச்சியாதிபத்தியத்துக்குச் சேர்ந்த காங்கய நாட்டில் காங்கயம் கிறமம் ஒண்ணு இனாமாஇ கொடுத்து நாட்டிலே பெரியதனக்காரராயி யிருக்கும் படியாக கட்டளையிட்டு சிறிது சனங்களையும் குடுத்து அனுப்பி விச்சார்கள்.

சாலிவாகன சகாபுதம் 1301க்கு சித்தராவுத்தி ஷு சையித்திர மீ சுக்குல பட்சம் பஞ்சமி சுக்கிரவாரம் ரோகுணி நட்சத்திரம் சுப யோக சுப கரணமும் பெற்ற சுபதினத்தில் காங்கய நாட்டுக்கு பெரியதனக்காரராயி பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டவராயி சிதம்பர பல்லவராயர் என்குற பேர் பிரசுத்திப் பட்டவராய் காங்க யத்திலே யிருந்து பிறபுத்துவம் பண்ண ஷு 131.

இவர் குமாரற் அமராபதி பல்லவராயர் பிறபுத்துவம் ஷு 56 இப்படி அமராபதி பல்லவராயர் என்றும் சிதம்பர பல்லவராய ரென்றும் இந்த ரெண்டு பேர்கள் பட்டபேராயி வச்சுக்கொண்டு வருகிறது. சாலிவாகன சகாபுதம் 1301 முதல் சகாபுதம் 1499 வரைக்கும் பிறபுத்துவம் பண்ணி வந்த பட்டம் 8க்கு ஆண்டு ஷு 199.

சாலிவகான சகாபுதம் 1500 பொகுதான்ய ஷு முதல் சகாபுதம் 1559க்கு ஈசுவற ஷு வரைக்கும் ஷு 60க்கு ஆண்டு வந்த பட்டம் 4க்கு அமராபதி பல்லவராயக் கவுண்டர் பட்டம் 1. இவர் குமாரன் சிதம்பர பல்லவராய கவுண்டற் பட்டம் 1. இவர் குமாரற் சிதம்பர பல்லவராய கவுண்டன் பட்டம் 1.

மேல் எழுதப்பட்ட 12 பேர் பட்டகாரற் வம்ச பரம்பரையாயி அவாளுடைய னடத்தையள் முதலானதுகள் ஒன்றும் தெரியவில்லே.

1. சாலிவாகன சகாபுதம் 1560 பொகு தானிய (வெகு தானிய) ஞு ஆனி மீ 1-ம் தேதி முதல் நந்தன ஞு ஆவணி மீ 30வ வரைக்கும் அமராபதி பல்லவராய கவுண்டற் பட்டம்.

2. இவர் குமாரர் நந்தன ஞு புரட்டாசி மீ முதல் ஸ்ரீ முக ஞு ஆடி மீ வரைக்கும் சிதம்பர பல்லவராய கவுண்டர் பட்டம்.

3. இவர் குமாரர் ஸ்ரீ முக ஞு ஆவணி மீ முதல் நந்தன வருஷம் மாற்களி மாதம் வரைக்கும் அமராபதி பல்லவராய கவுண்டற் பட்டம்.

4. இவர் குமாரர் நந்தன வருஷம் தை மாதம் முதல் ரகுத் காட்சி வருஷம் ஆவணி மாதம் வரைக்கும் சிதம்பர பல்லவராயக் கவுண்டர் பட்டம்.

5. இவர் குமாரர் ரகுத்தாட்சி வருஷம் புரட்டாசி மாதம் முதல் தாது வருஷம் வைய்யாசி மாதம் வரைக்கும் அமராபதி பல்லவராயக் கவுண்டர் பட்டம்

6. இவர் குமாரர் தாது வருஷம் ஆனி மீ முதல் கீலக வருஷம் தை மாச வரைக்கும் சிதம்பர பல்லவராய கவுண்டர் பட்டம்.

7. இவர் குமாரர் கீலகவருஷம் மாசி மாச முதல் விரோதிகுருது வருஷம் கார்த்திகை மீ வரைக்கும் அமராபதி பல்லவராயக் கவுண்டர் பட்டம்.

மேல் எழுதப்பட்ட பட்டம் 7-க்கு சாலிவாகன சகாபுதம் ஞு 1713 வரைக்கும் ஞு 153.

ஏழான்புருஷன் அமராபதி பல்லவராயகவுண்டர் அவர்கள் நாளேயில் அக்காலத்தில் ராச்சியம் பிறபுத்துவமான பாண்டியதேசாதி பதியான சொக்கநாத நாயக்கரவர்கள் நாளேயில் கொங்கு இருவத்தி நாலு நாட்டுக்கும் கட்டமனேயும், கட்டமனே 1க்கு ஆரு நாடுமாக யிருந்ததில் யீரோட்டு கட்டமனேக்கு அமராபதி பல்லவராயகவுண்டற் அவர்களே சுவாதீனம் பண்ணி கொடுத்து யிருந்தபடியனாலே அரமனேயார் கட்டளேயிட்டபடிக்கி பணம் முதலானது செலுத்திக் கொண்டு யீரோட்டு கட்டமனேக்குச் சேர்ந்து ஆரு நாட்டுக்கு பெரிய தனக்காரராயி பெறசித்தி புருஷராய் இருந்தார்கள்.

அதின் பிற்காலம் அஞ்சான் புருஷன் அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் நாளையில் அக்காலத்தில் மதுரை சமுஸ்தானத்துக்குக் கர்த்தராகிய நாயக்கரவர்கள் காரியகர்த்தரான ரங்கா ரெட்டியார் அவர்கள் கணுவாஇகீள் பதினெட்டு கெடிக்கும் அதிகாரமாயி இருக்கும் வேளை அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் இடத்தில் மிகவும் தயவு செயிது அதிபிரிதியாய் இருக்கும் நாளையில் ரங்காரெட்டியார் அவர்களுக்கு சில்லரை பாளையப்பட்டாராலே துவயுத்தம் வந்து நேரிட்டுயிருக்கும் போது அந்த சமயத்திலே அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் சாம பேத தான தண்ட ளுலு உபாயங்களாலேயும் சிறிது சனங்களைக் கூட்டிக் கொண்டு போஇ சில்லரை பாளையப்பட்டாரெல்லாம் செயிச்சு வந்தபடியனாலே ரங்காரெட்டியார் ரொம்பவும் சந்தோஷப்பட்டு கணுவாயிகீள் பதினெட்டு கெடிகளுக்கும் சகல காறியங்களுக்கும் முதன்மைகாரராயி இருந்தார்கள்.

அதின் பிற்காலம் ரெண்டான்புருஷன் பாட்டரான சிதம்பர பல்லவராய கவுண்டற் அவர்கள் நாளையில் அக்காலத்தில் ராச்சியம் பிறப்புத்துவம் பண்ணப்பட்ட அயிதரலிகான் துரைத்தனத்தில் காங்காய நாட்டில் காங்கயம் 1 கண்ணபுரம் 1 வெள்ளை கோவில் 1 பாப்பாணி கிராமத்தில் பாதி கணைந்தே பிறிவு 1 இந்த கிராமங்கள் முன்னுலே பிரிச்சுக்கொண்டு யிருந்தபடிக்கு தம்முடவசம் வச்சுக் கொண்டு அறமனையாற் கட்டளையிட்டபடிக்கு பணம் செலுத்திக் கொண்டு யிருக்கும் நாளையில் டிப்புசுல்தான் அவர்கள் அறமனைக்கு பணம் செல்லவில்லையென்று துராகுறதமாய் சிதம்பர பல்லவராய கவுண்டர் அவர்களையும் அவர் குமாரன் அமராபதி பல்லவராய கவுண்டர் அவற்களையும் செனகக்கிறியில் கையிது வச்சுயிருந்து அதுக்கு மேல் ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு தரிவிச்சு விசாறனை செயிது விடுதலை பண்ணின சமயத்தில் சிதம்பர பல்லவராயக் கவுண்டர் அவர்கள் தெயிவகத்தே அடைஞ்சாற்.

அதின் பிற்க்காலம் என் தோப்பனுர் அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் காங்கயத்தில் வந்து இருக்கும் போது டிப்புசுல்தான் அவர்கள் அங்காமியாயும் சின்னமலை கவுண்டனை தம்பா கவுண்டன் அங்காமியாகவும் இருக்குற சமயத்தில் அமராபதி பல்லவராய கவுண்டன் அவர்களுக்கும் சின்னமலைக் கவுண்டனை தம்பா கவுண்டனுக்கும் விரோதமாயிருந்த படியனாலே விரோதிகிருது ஞூ கார்த்திகை மீ அமற பட்சம் சிறஷ்ட்டி தினத்தில் காங்கயத்தில் சின்னமலைக் கவுண்டனவன் சம்பாரம் பண்ணி போட்டான்.

அந்த நாள் முதல் சிதம்பர பல்லவராய கவுண்டன் என்று பேர் உள்ளவனுயி பாலியாரப்பியமாஇ பளனி சீற்மை தொப்பனப்பட்டி கிறுமத்தில் குடியிருப்புக்காரனுயி மகா ராச ராசஸ்ரீ கும்பினியார் துரையவர்கள் கடாட்சத்துக்கு பாத்திரனுயி காத்துக்கொண்டு யிருக்ரேன்.

மேல் யெளுதப்பட்டதில் தகவலாயி இறுக்கப்பட்ட புராதன மான ஓளுகுகள் முதலானதுகள் காலாந்தரங்களிலே ராசீகங்களிலே கைசோறந்து போஇ விட்டது.

சிதம்பர பல்லவராயன் ஒப்பிதம்

-()-

# காங்கய மன்ருடியார் வமிசாவளி

## டி. 3038

தாராபுரம் துக்குடிக்குச் சேர்ந்த காங்கயம் தாலுக்கா மவுசே காடையூரிலேயிருக்கும் "காங்கயமன்ருடியார்" என்னப்பட்ட பட்டக் காரனுடைய வம்சாவளி முதலான கைபீயத்து யென்னவென்ருல்:-

பூற்வத்தில் சோள தேசத்தில் தொண்டை மண்டலத்து வேளாளர் என்று பேற்ப்பட்ட நற்குடி 48000 பசுங்குடி 12000 ஆக 60000 கோத்திரக்காரர்களில் நற்குடி 48,000 கோத்திரத்தில் 8000 கோத்திரக்காரரை சோளராசரவை சேர ராசா கேட்டுக் கொண்டபடி யினுலே 8000 கோத்திரக்காரரையும் சேர ராசாவுக்குக் கொடுத்தார்.

அப்போ தொண்டை மண்டலத்துலேயிருந்து தென் திசை நோக்கி வரப்பட்ட வேளாளருக்கு தென்திசை வேளாளர் என்று பேர் வரப்பட்டவர்களாஇ சேர தேசத்தில் வந்து யிருந்தவிடத்தில் பூர்வத்தில் இந்த சேர தேசத்தில் குடித்தனம் பண்ணப்பட்ட மாவிலவன், பூவிலவன், காவிலவன், வேடன், வேட்டுவன், இந்த ஜாதிகளுக்கு யிருக்கப்பட்ட காணிகளிலே, யிந்த வேளாளருக்கு பாதி பிறிச்சு யெடம் பண்ணிக் குடுத்தார்கள். அக்காலத்துக்கு கொங்கு வேளாளரென்றும், யிருவத்தி நாலு நாடுயென்றும், பேற்பட்டு குடி யிருக்கும் காலத்தில் அந்த நாளையிலே பூந்துறை நட்டில் கருமாபுரம் என்னப் பட்ட கிராமத்தில் குடியிருப்புக்காரனுயி இருக்கப்பட்ட வேளாள சாதியில் காங்கய னெண்ணப்பட்டவன் மதுரைக்குப் போஇச் சேர்ந்து யிருந்துச் சொக்கநாதர் மீனுட்சிக்குப் பணிவிடை செய்துக் கொண்டு இருந்தான்.

மதுரையில்ச் சொக்கநாதர் மீனுட்சி தேவிக்குப் பணிவிடை செய்துக் கொண்டுயிருந்த காங்கய னெண்ணப்பட்டவனுடைய வம்சத்தில் யென்ண்ணப்பட்டவன் கொசமாட சணுத்தமாஇ பிறப் பட்டு உத்திரை திசைனேக்கி வந்து காங்கயனுட்டுக்குச் சேர்ந்த நட்டூற் யென்னப்பட்ட கிராமத்தில் பசு மாட்டுக்களை மேய்ச்சுக் கொண்டுயிருந்தான்.

அந்தச் சமயத்தில் நட்டூரில் யிறுக்கப்பட்ட சேட குலத்தாளி யெண்ணப்பட்ட வேளாள வம்சத்தில் ஒரு முட பெண் பெரந்து யிறுந்து அந்த முட பெண்ணை கலியாணம் பண்ணிக்கொண்டவனுக்கு

கால்ப்பங்கு காணியாட்சி கொடுக்கிருேமென்று சொல்லியிருந்தார்கள் என்று கேள்விபட்டு பசுமாடுகளை மேச்சிக் கொண்டுயிருக்கப் பட்டவன் அந்த முட பெண்ணை கலியாணம் பண்ணிக் கொண்டு நட்டுறுலே வாசமாயிருக்கும் நாளையில் இந்த முட பெண்ணுக்கு நாலு பிள்ளைகளும் புரந்து அவளுடைய புருஷன் தெய்வகெதி அடஞ்சி யிருக்கும் வேளையில் அந்த பொண்ணுனுடைய சகோதரர்கள் அந்த கால்பங்கு காணியாட்சி கொடுக்கிறது யில்லையென்று சொன்ஞர்கள்.

இந்த முட பெண்ணும் அவளுடைய பிள்ளைகளும் தன் தோப் பஞர் சொன்ன காணியை தன்னுடைய தோப்பஞரும் புருஷனும் தெய்வகதி அடைஞ்ச பிற்பாடு தன்னுடைய சகோதராள் தாமறியோ மென்றும் குடுக்குறது இல்லையென்றும் சொல்லப்பட்ட நியாயத்தை இந்த நாட்டுலே உள்ள சனங்களுடனே சொல்லிக் கொண்ட படியஞலே நாட்டிலுள்ள சனங்களும் இந்த ஙியாயத்தைக் கேட்டு அறிஞ்சு காணிய் உண்டு பண்ணி குடாத போன படியிஞலே இவடத்தில் கேள்வியில்லாத போன படியிஞலே உத்திர திசை நோக்கி யிந்த புள்ளைகளும் முட பெண்ணும் பிறபட்டுப் போற போது அவ்விடத்தில் இருந்த துலுக்க சருதாற்யிடத்தில் இந்த நியாயத்தைச் சொல்லிக் கொள்ளுஓமென்று அவடத்தில் நின்று சர்தாரை யிந்த புள்ளைகள் காண்பிச்சுக் கொண்டயிடத்தில் இந்தப் புள்ளைகளைப் பார்த்து அந்தச் சருதார் நீ யாரு யென்று கேட்டார். நாங்கள் ஓங்களுடைய புள்ளையள் காத்து யிருக்கிருேமென்று சொன் ஞர்கள். அது சேதி சருதாரானவற் மனதினில் வைத்து ஙீயென்னு டைய புள்ளையென்று சொன்னயே என்னுடனே கூட சாப்பிடுவியா என்று கேட்டதில் ஓன்னுடைய புள்ளையென்று சொன்னது மெய்தா னென்றும் ஓங்களுடை மனசுப்படிக்கு வுக்காந்து சாப்புடுகுருேமென் றும் பொகுதய்யிறிய வத்தருகளாயி சொன்ன வாக்கு வசனத்துநாலே சருதாருக்கு ரொம்ப சந்தோஷம் வந்து யிந்தப் புள்ளைகளைப் பாத்து ஓங்களுடைய சாதினீதி முதலானதுகளும் கேழ்க்கும் யிடத்தில் நட்டுறுலே காணியில்லை யென்று சொல்லப்பட்ட வயணங்கள் முத லான சேதிகளும் சொல்லிக் கொண்டார்கள். இந்த புள்ளைகளுடைய சேதிகள் அந்த சருதாற் கேட்டு அந்த நாட்டுறுலே வுள்ள செனங்களை சம்மாரம் பண்ணி போட்டு அந்த காணிகளை யெல்லாம் ஓங்களுக்கு குடுப்பிவிக்குரோ மென்று சொன்ஞற். அதுக்கு அந்த புள்ளையள் நாலு பேரும் அப்படிக்கு துர்குறதமாகி அந்தவூருக் காணியை கட்டி குடுக்க வேண்டிய அக்கரையில்லை. தங்களுக்கு எங்களிடத்தில் தயவு யிருந் தால் சனங்களை தருவிச்சு நியாயங்களை விளங்கி ஙிசமாயி குடுக்கிரோ

மென்று சொல்லப்பட்ட கால் பங்கும் வாங்கி குடுப்பிவிக்க வேணு மென்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போ அந்தப் புள்ளையள் யிடத்தில் ரொம்பவும் தயவு தோணி சிறிது பவுசுகளுடனே கூடா பிறப்பட்டு நட்டூறுக்கு வந்து யிருந்து கொண்டு அந்த துலுக்க சருதாற் ஊருகளிலேயும் நாட்டுகளிலேயும் இருக்கப்பட்ட ஜனங்களையெல்லாம் தரிவிச்சு யிந்த நியாத்தை விளங்கும் இடத்தில் சனங்கள் எல்லாரும் ஒரே பேச்சாயி அந்த முட பெண்ணுடைய தோப்பனுற் கால்பங்கு கொடுக்குரேமென்று சொன்னத்தை நாங்கள் அறியோமென்று சொன்னுர்கள். அந்த சமயத் தில் அந்த முட பெண்ணை அழைச்சு கேளுக்கும் யிடத்தில் யெங்கள் தோப்பனுர் யென்னைக் கலியாணம் பண்ணிக் கொண்டவனுக்கு கால்பங்கு காணியாட்சி கொடுக்கிரேமென்று சொன்னது உண்டு யென்று சொன்னுள். அந்தச் சமயத்தில் நாட்டு சனங்கள் அனவரும் யேககாலத்துலே அவள் சொல்லுகிறது பொய் என்றும் மெய்யானதே யானுல் தெயிவ துவாரத்துலே யிருக்கப்பட்ட விடத்தேற்விருச் சத்தை கூர்மையா செய்விச்சு அந்தப் பெண்பிள்ளை கய்யிலே அறஞ்சு மரம் சஹமூலமாஇ ஒட்டிக்கொண்டு கையிலே காயம்படாமல் யிருந்தால் அந்த பெண்பிள்ளை பேச்சு ஙிசம் யென்று யெண்ணி கால் பங்கு கானியாட்சி கொடுக்கிரேமென்று சொன்னுர்கள். அப்போ முடபெண்ணு ஆனவள் நிசமாயி சொல்லி யிந்தப் பேச்சுக்கு அனுமான மென்ன யென்று ஸ்நானம் பண்ணி ஆசாரத்துடனே தெயிவ துவாரத்துலே விடத்தேரைவிருட்சத்து யெடத்தில் வந்து நின்று விடத்தேற் விருட்சத்தை கூற்மை செயிதுவிச்சு யெங்கள் தோப்பநாற் காணி கொடுக்கிரேமென்று சொன்னது நிசம் யென்று கையாலே அரஞ்சு கையெடுக்கும்போது அந்த விடத்தேற்விருட்சம் சஹ மூலமாஇ கய்யோடே கூர் ஒட்டிக்கொண்டு வந்து காயம் படாமல் யிருந்ததைப் பார்த்து மருபடி அந்த விருட்சம் யெதாஸ்தானமாஇ இருக்குறபடிக்குப் பண்ணிநால் கால்பங்கு காணியாட்சி குடுப்பிவிக் கிரேமென்று சொன்னுர்கள். மறுபடி அந்த முடபெண் தெய்வத்தை னெனச்சு அதிகோபத்துநாலே ஆண்குடி அருக பெண் குடி பெறுக வேணுமென்று வாக்குநாலே சொல்லி விருட்சத்தை கய்யே அறஞ்ச மாத்திரத்துலே விடத்தேற் விருட்சம் யெதா பிறகாரமாச்சுது. அப்போ சகல சனங்களும் ஆச்சரியப்பட்டு சந்தோஷமாஇ நட்டூர் கிராமத்தில் கால்பங்கு காணியாட்சியாஇ சறுதாற் முன்னிலைக்கு குடுத்து விட்டார்கள். அந்த சமயத்தில் துலுக்க சருதாற் இவ்வளவு நாள் பிரயாசப் பட்டதுக்கு வுன் வம்ச பரம்பரையாஇ என் பேர் நிளத்திருக்கும்படியாஇ பண்ண வேணுமென்றும் ஒன் வமிசத்திலே

புள்ளே புள்ளேத் தலேமுறைகளுக்கும் குளந்தைகளுக்கு விபவத்துடனே காது குத்தி கலியாணமென்று பண்ணிக்கொண்டு வரவேணுமென்று சொன்னூர். அதுக்கு முடபெண்ணும் யிவளுடைய புள்ளேயள் நாலு பேரும் நல்லது யென்று சொன்னூர்கள்.

அந்த முடபெண்ணுடைய புள்ளேயள் நாலு பேரும் நட்டூரில் கால் பங்கு காணியாட்சி உண்டானவர்களாயி குடியிருப்புக்காரராயி யிருக்கும் வேளேயில் 1. களுவறஞ்ச காங்கயன், 2. சோமன காங்கயன், 3. தடிக்காளி காங்கயன், 4. சேனியன் காங்கயன் இந்த நாலு பேரும் பெற்ப்பட்டவாளாஇ இருக்கும் நாளேயில் வட தேசத்து ஒட்டிய செகன்னுதராசா தன்னுடைய தண்டு சனங்களுக்கு சம்பளம் கொடுத்து னிறுவாகம் பண்ணமாட்டமல் பொகுதண்டான படியநாலே தன்னுடைய தண்டுகளுக்கு தேசங்களே யெல்லாம் கொள்ளே கொடுத்துக் கொண்டு யிருக்கும் நாளேயில் அக்காலத்தில் ஒட்டிய செகன்னுதராசா பொகு தண்டுகளுடனேயும் புறப்பட்டு கொள்ளேயிட்டுக்கொண்டு திருவுடதேசத்துக்கு வருகிருன் என்று அக்காலத்தில் திராவிட தேசாதிபதிகளான பாண்டிய ராசா சமாசாரம் கேள்விப்பட்டு தம்முடைய தேசத்துலே யிருக்கப்பட்ட சனங்களுக்கெல்லாம் தெரியத்தக்கதாய் அந்த ஒட்டிய செகன்னுத ராசாவை செயம் பண்ணவனுக்கு யென்னுடைய பேரும் கொடுத்து பட்டமும் கட்டிவிக்கிரேமென்று அறிய பண்ணினுன்.

அந்த நாளேயில் நட்டூர் குடியிருப்புக்காரனுயி இருக்கப்பட்ட களுவரஞ்ச காங்கயனுடைய சொற்ப்பனத்தில் ஒரு பிருமண ரூபமாயி வந்து ஒட்டிய ஜெகந்நாதராசாவை செயம் பண்ணுகிரேமென்று பாண்டிராசாவிடத்தில் பாக்கு வெத்திலே வாங்குமென்று சொன்னூர். அதுக்கு நான் எவளவு மனுஷனென்றும் ராசாவை செயம் பண்ணுகுறதுக்கு யென்னுலே ஆகுமா யென்றும் வதிள் சொன்னதுக்கு நான் துணேயிருந்து செயம் பண்ணி தாரோமென்று சொல்லி உறுதியாயிச் சொன்னூர். அன்னேறமே னித்திரை முளிச்சவனுயி கண் திறந்து பாத்து யிது சுவாமி சொன்னூர் என்று மனசுலே யெண்ணிக் கொண்டு மதுரை சமுஸ்தானத்துக்குப் பிறப்பட்டுப் போயி பாண்டியராசா சமுகத்தில் ஒட்டிய ராசாவை நான் செயம் பண்ணுகுறேமென்று சொல்லிக் கொள்ளுகுறபோது ராசாவுக்குச் சதோஷமாஇ நமக்கு சொற்பனமான படிக்கு வந்தான் யென்று சிறிது தளத்தேயும் கொடுத்து தளநாயகனுயி களுவரஞ்ச காங்கயனுக்கு வெத்திலே பாக்கு கொடுத்தார்கள்.

களுவரஞ்ச காங்கயன் பாண்டியராசா தளத்தேயும் கூட்டிக் கொண்டு நட்டூறுக்குச் சமீபமாயி வந்துயிருக்கும் வேளேயில் ஒட்டிய

ஜெகந்நாத ராசா பொகுதண்டுகளுடனே திராவிட தேசத்துக்கு வந்து சேர்ந்து ஆம்பிருவதி காஞ்சிமானதி மத்தியில் வந்து தண்டுயிறங்கி, யிறங்கியிருக்கும் வேளையில் அந்த ஒட்டிய ராசாவினுடைய செனங்கள் பிறப்பட்டு ஊர்களிலே கொள்ளை பண்ணிக்கொண்டு மறுநாள் தக்ட்சணு நோக்கி போர முன்னுக்கு நட்டூற் தேவாலயத்தைக் கண்டு ஒட்டியராசா யிந்த தேவாலயத்துலே என்ன யிருக்குறது யென்று பார்க்கச் சொல்லி ஒரு மனுஷனே அனுப்பிவிச்சார். அந்த மனுஷன் ஆலயத்துக்குள்ளே வந்து பார்க்கும்போது அந்த ஈஸ்வரன் ஒரு தம்பிருன் போலே ரூபமெடுத்துக் கொண்டு செபம் பண்ணிக் கொண்டு உட்கார்ந்து கொண்டு யிருந்தார். அதெ பாத்து யாரொ ஒரு கௌ தம்பிருன் இருக்குருன் என்று ராசாவுடனே சொன்னுன். அந்த ஆலயத் துலே யிருக்குற தம்பிரானெ அளச்சுவரச் சொல்லி ஆளை அனுப்பி விச்சார். தம்பிரானெ அளைக்கும் யிடத்தில் யிவற் வாற்த்தெ சொல் லாமல் கண் திறந்து பாராமல் கய்யெ பிடிச்சு யிளுத்தாலும் யிழு படாமல் யிருந்ததைப் பார்த்து செனங்கள் ராசாவுக்கு அறிக்கை பண்ணிஞர்கள். அப்போ ராசாவானவற்க்கு கோபம் வந்து தன் னுடைய யானைகளை விட்டு தம்பிரான் யிடுப்பிலே சங்கிலி பூட்டி யிளுப் பிக்கும்போது அந்த தம்பிரான் காடை குரிவிகளாயி பறந்து யானை களுடைய துதிக்கைகளிலேயும் காதுகளிலேயும் பூந்தபடியனுலே தண்டுகளை யெல்லாம் அந்த யானைகளானது அடிச்சுது.

அந்த சமயத்தில் ஒட்டிய ராசாவானவர் யானைகளினுலே தண்டு களுக்கு உபத்திரம் வந்தபடியினுலே வுத்திரை திசை நோக்கி போற போது யிந்த யானைகள் கூட துடர்ந்து சனங்களைச் சம்மாரம் பண்ணிக்கொண்டு போறபோது யிது சேதிகள் களுவறஞ்ச காங் கயன் அறிஞ்சு தன்னுடைய தளத்துடனே கூட தொடர்ந்து போற போது நட்டூற்க்கு வடக்கு நாலு நாழிகை தூரத்தில் யானையினுலே ஒட்டியராசா பட்டுபோனுன் என்று கேள்வி பட்டவனுய் மறுபடி நட்டூருக்கு வந்து சேர்ந்தான். ஓட்டிய ராசா பட்டுபோன பிறப் பாடு அந்த யானைகளும் நட்டூற் வந்து சேர்ந்தது. ஓட்டிய ராசா வுத்தர திசை னேக்கி ஓடி போறபோது யினிமேல் யிந்தப் பிர தேசத்துக்கு வாரதுயில்லே யென்று சொல்லப்பட்ட யிடத்தில் வுண் டான வூருக்கு யில்லியமென்று நாமதேயம் வரலாச்சுது. ஒட்டிய ராசாப் பட்டுபோன யிடத்தில் யிருக்கப்பட்ட வூருக்கு பட்டாலி என்று பேர் வரலாச்சுது.

களுவறஞ்ச காங்கய னெண்ணப்பட்டவன் நட்டூறுக்கு வந்து யிருந்த விடத்தில் ஒட்டிய ராசாவை ஈசுபறன் காடை குருவி ரூப மெடுத்து சம்மாரம் பண்ணி போட்ட படியனுலே காடையீசுபரர்

என்றும் காடையூரென்றும் பேற வரலாச்சுது. அக்காலத்தில் கலியுக சகாப்தம். (?)

அதன் பிறகு கலியுக சகாப்தம் (?). காடையூருலேயிருந்து களுவறஞ்ச காங்கயன் தளத்துடனே பிறப்பட்டு மதுரைக்குப் போஇ பாண்டிய ராசா சமூகத்தில் ஒட்டிய ராசாவை சம்மாரம் பண்ணின சமாசாரங்க ளெல்லாம் அறிக்கை பண்ணிக்கொண்டயிடத்தில் ராசா ரொம்பவும் சந்தோஷப்பட்டு தேசத்துக்கு வந்த உபத்திரம் யிவனுலே நிவாரண மாச்சு யென்று யிந்த களுவரஞ்ச காங்கயனைப் பார்த்து எனக்கு நீ சமானமானவன் என்று சகல பொகுமதிகளும் பண்ணி பட்டமுங் கட்டிவிச்சாற்கள்.

களுவறஞ்ச காங்கயன் பாண்டிய ராசாவிடத்திலே சகல பொகு மதிகளும் பெற்று மதுரையில் வாசமாயிருக்கும் நாளையில் தன் னுடைய புத்தியினுலே சகல வித்தையளுங் கற்று வல்லவனுக வேணு மென்று னித்திய கிறுத்தியமாஇ அருணேதய காலத்துலே ஆவின் பால் அதினேமத்துடனே சொக்கநாதர் மீனுட்சி தேவிக்கு அபிஷேகம் பண்ணிக்கொண்டு சகல வித்திகளிலேயும் வல்லவனென்று பெற் பெற்றுயிருந்தான்.

பாண்டிய ராசாவானவர் காங்கயன் சகல வித்தியளிலேயும் வல்லவனென்று சமாசாரம் கேள்விப்பட்டிருந்தார்.

இப்படியிருக்கும் நாளையில் ஒரு நாள் சமயத்தில் பாண்டிய ராசாவானவர் விக்கிறஹம்ங்கள் வாற்ப்பிவிக்குர நிமித்தியமாக சொக்கநாத சுவாமியார் சன்னதிக்கு வந்து யிருந்தான். அந்த சமயத்தில் காங்கயன் னித்திய கிறுத்தியமாயி ஆவின்பால் அபிஷேகம் பண்ணவரும் வேளையில் அந்தச் சமயத்தில் ராசா காங்கயனைப் பார்த்து நீர் சகல கலைகளுக்கும் வல்லவனென்று சொல்லிக் கொள்ளு குராற்களே யிந்த தாம்பிரம் காயிற ஓலை அனலிலே நடனம் பண்ண லாமாவென்று கேட்டார். அப்படியே பண்ணலாமென்று சொல்லி தாமிறம் காயிற ஓலையில் சொக்கநாயகா வென்று குதிச்சு நடனம் பண்ணினுர். அப்போ றுசா மிகவும் சந்தோஷப்பட்டு கிறீடம், ஆறு கால் பீடம், வேப்பமாலை, மட்ச கொடி யிந்த பிறுதுகளும் குடுத்து சகலகலகாங்கய னென்று ஆலிங்கனம் பண்ணிக் கொண்டும் பின்னையும் தனக்குள்ள சுவேதச் சத்திரம் முதலான பிறுதுகள் யெல்லாம் கொடுத்தாற். அந்தச் சமயத்தில் மீனுட்சியம்மன் சன்னதி யில் அசறீர வாக்காயி பொரந்தது யென்னவென்றுல் செங்கோல் மையும், மன்று யெண்ணப்பட்ட சபையில் நடனம் பண்ணின படியினுலே ஓனக்கு மன்றுடி யென்ற நாமதேயமும் ஓன் வம்ச பரம்

பரையாயி கவி வல்லமையும் உண்டாகக் கடவதென்று வாக்கு வுண்டாச்சுது.

சொக்கநாத சுவாமி மீனாக்ஷி தேவி கடாக்ஷத்துனாலேயும் சகலகல காங்கய மன்றாடியார் எண்ணப்பட்ட பேர் உண்டானவராயி பாண்டிய ராசாவிடத்தில் சமானமாக யிருக்கும் னாளையில் அக்காலத்துக்கு சேறராஜியம் பாண்டிய ராஜாவுக்கு சேர்ந்திருந்தபடியினாலே தனக்குச் சமானமாயிருக்கிற சகலகல காங்கய மன்றாடியாருக்கு யிந்த சேறறாஜியம் பிறபுத்துவம் குடுக்க வேணுமென்று மதுராபுறி பட்டணம் விட்டு பாண்டிய ராசாவும் சகலகல காங்கய மன்றாடியாரும் பிறப்பட்டு கொங்கு தாறாபுரத்துக்கு வந்து யிருக்கும் நாளையில் பாண்டிய ராசா கொங்கு யிருவத்தினாலு நாட்டாரையும் தரிவிச்சு யெனக்கு சமானமான சகலகல காங்கய மன்றாடியாருக்கு யிந்த ராச்சியும் பிறபுத்துவம் நாம் குடுத்துயிருக்குறபடியனாலே னீங்கள் அனைவரும் அவருக்கு வணங்கி நடந்து கொண்டு வாருங்கோள் யென்று கட்டளையிட்டு காங்கய நாடு முளுமையும் ஜாகீராயி அனுபவிச்சுக் கொண்டு வரும்படியாயும் மத்த யிருவத்தி மூணு நாட்டிலேயும் கண்டு முதலானதுக்கு பத்திலொறு பங்கு அனுபவிச்சுக் கொண்டு வரும்படியாயும் நேமுகம் செய்து பாண்டிய ராசா மதுரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

கலியுக சகாபுதம் ௲ க்கு மேல்க் கொங்கு யிறுவத்தி நாலு நாட்டுக்கும் பட்டாதிகாரியாஇ சகலகல காங்கய மன்றாடியார் எண்ணப்பட்ட பேர் பெறசுத்திப்பட்டவாறாயி கொங்கு தாறாபுரத்திலும் காடையூருலேயும் யிருந்துகொண்டு பிறபுத்துவம் பண்ணினாற்.

கலியுக சகாபுத்தம் ௲ 557க்கு துற்மகி ௵ கடக மாதம் சுக்குல பட்சம் பச்சமீ சுக்கிரவாரம் சுபதினத்தில் பட்டமாஇ சகலகல காங்கய மன்றாடியார் ராஜியாதிபத்தியம் பண்ணினது ௵ 25 யென்று பூர்வத்தில் உள்ள வித்துவாம்சாள் சொல்லப்பட்ட கவிகள்நாலே தெறியப்பட்டுது.

அந்த நாள் முதல் சகலகல காங்கய மன்றாடியார் குமரற் குமர காங்கய மன்றாடியாற் யிவற் குமாரற் அமராபதி காங்கய மன்றாடியார் இவாள் பட்டம் ஆண்டுக் கொண்டு கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு காடையூர் குடியிருப்புக் காரராகி இருந்து கொண்டு பாண்டிய ராஜாவுக்கு கொங்கு இருபத்து மூணு நாட்டிலேயும் கண்டு முதலான(த்)தில் பத்தில் ஒன்பது பங்கு செலுத்திக்கொண்டு மத்த ஒரு பங்கும் காங்கய நாடு முளுமையும் தாம் அனுபவிச்சுக்கொண்டு யிருந்தார்கள்.

மேல் எழுதப்பட்ட சகலகல காங்கய மன்ருடியார் வம்சத்தில் ஒள்ள ஸ்ரீமத்த புத்திர(ா)ருக்கு பாரம்பரை(க்)யாஇ குமார காங்கய மன்ருடியார் என்றும் அமராபதி காங்கய மன்ருடியார் என்றும் இந்த யிரண்டு பேரும் பட்டாதிகாரிகளுக்கு பேற் பிறசுத்தி பட்டு காடை யூற் குடியிருப்புக் காரருயி யிருந்து பிறபுத்துவம் பண்ணிநார்கள்.

அதின் பிற்க்காலம் கலியுகம் 905க்கு திருமஞ்சு சேற ராசா சுந்திர மூர்த்தி அனுக்கிரஹத்துனலே கைலாசத்துக்குப் போறபோது அந்தந்த யிடத்துக்கு அவாளவாள் பிறபுத்துவம் பண்ணுகுரது யென்று நேமுகம் பண்ணி தன்னுடைய கேரள தேசமான ராச்சியத் துக்கு தன் சொந்த பிரதாணியெ நாம் வருகுர மட்டுக்கும் ராஜீயம் பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு யிருமென்று சொன்ன சமயத்தில் அக்காலத்தில் காடையூர் பட்டக்காரரான குமார காங்க மன்ருடி யாருக்கு பாண்டிய ராசாவாலே ராச்சியம் பிறபுத்துவம் வறப்பட்ட வருயி கிறிடம் முதலான் பிறதுகள் யெல்லாம் பெற்று யிருக்கிறீர்களே இம்முடியும் குடுத்தோம் யென்று தம்முடைய கிறீடத்தைக் குடுத் தார்கள். அதுநாலே யிம்முடி குமார காங்கய மன்ருடியாற் யென்று பேற் பிரசுத்தி யாச்சுது.

யிப்படிக்கு யிம்முடி குமார காங்கய மன்ருடியார் என்றும் யிம்முடி அமராபதி காங்கய மன்ருடியார் என்றும் யிந்த ரெண்டு நாமதேயம் விளங்கிக் கொண்டு காடையூற்ப் பட்டக்காரராயி பாரம் பரையாயி பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு யிருக்கும் நாளையில் பாண்டிய தேசத்துக்கு பாதுஷஹ யெண்ணப்பட்ட துலுக்கற் வந்து அங்காமி பண்ணி ராச்சியம் கட்டிக் கொண்டு பொ:குநாள் துலுக் காணிய பிரபுத்துவமாயி யிருக்கும் நாளையில் பூற்வம் துலுக்கற்நாலே காது குத்தி கலியாணமென்று உண்டு பண்ணிக் கொண்டு யிருந்த படியனுலே அது சேதியள் துலுக்காணியத்துலே கேள்விப்பட்டு தயவு வச்சு நடப்பிவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

அதின் பிற்க்காலம் கன்னடியற் தேசத்துலே யிறுந்து கன்னடியற் வந்து துலுக்கர்களையெல்லாம் அதம் பண்ணி ராச்சியம் பாண்டிய ராசாவுக்கு நிலைனிறுத்திவிச்சு குடுத்து பட்டம் கட்டிப்போட்டு கன்னடியற் கன்னட தேசத்துக்குப் போனர்கள்.

அதின் பிற்க்காலம் பாண்டிய ருசா வெகுநாள் ஆண்டுவரும் காலத்தில் கலியுகம் 4300 வறைக்கும் பாண்டிய ருசா பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

அதின் பிற்காலம் கலியுகம் 4300க்கு மேல் பாண்டிய சமுஷ்தானம் ராயற் சமுஷ்தானத்தில் சேர்ந்து வடுக துரைத்தனமாயி இருக்கும்

நாளையில்அக்காலத்தில் அமராபதி காங்கய மன்ருடியாற், ஞயக்கற் அவர்கள் தயவு சம்பாதிச்சுக்கொண்டு கொங்கு யிருபத்து நாலு நாட்டுக்குப் பெரிய பாளையப்பட்டுக்காரருயி உத்திரவு பண்ணிக் கொண்டு காடையூற் குடியிருப்புக்காருயி முன் பாண்டிய ராஜா நாளையில் நடந்து வந்தபடிக்கு அனுபவிச்சுக்கொண்டு யிருந்தாற்கள்•

கலியுக ச(ா)காபுதம் 4300க்கு மேல் ஆண்டு வறப்பட்டப் பட்டம்ங்களுட வறிசைகளும் அவாள்ளவாளுடைய செவுறியோதாறிய காம்பீறியங்களும் யிதின்கீள் யெளுதியிறுக்குறது.

| | | |
|---|---|---|
| 1. | அமராபதி காங்கய மன்ருடியாற் | ஷூ 15 |
| 2. | யிவர் குமாரர் குமார காங்கய மன்ருடியாற் | ஷூ 12 |
| 3. | யிவற் குமாரற் அமராபதி காங்கய மன்ருடியாற் பட்டம் | ஷூ 11 |
| 4. | இவர் குமாரர் குமார காங்கய மன்ருடியார் | ஷூ 15 |
| 5. | இவர் குமாரர் அமராபதி காங்கய மன்ருடியாற் | ஷூ 10 |
| 6. | இவர் குமாரன் குமார காங்கய மன்ருடியாற் | ஷூ 16 |
| 7. | யிவற் குமாரன் அமராபதி காங்கய மன்ருடியார் | ஷூ 12 |
| | கலியுக சகாபுதம் 4391 வரைக்கும் பட்டம் 7க்கு | ஷூ 91 |

இவாளுக்கு யிம்முடி யென்றும் பேற் வறுகுரது கலியுக சகாபுதம் 4391க்கு மேல்

8. இம்முடி அமராவதி காங்கய மன்ருடியார் குமாரன் யிம்முடி குமார காங்கய மன்ருடியார் பட்டம் ஷூ 15
9. யிவற் காறியத்துக்குக் கர்த்தரான யிவற் தம்பி பெத்தான் காங்கய மன்ருடி-யிவற் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் ஷூ 12
10. யிவற் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியாற் பட்டம் ஷூ 20
11. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் பட்டம் ஷூ 14
12. யிவற் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார் பட்டம் ஷூ 30
13. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியார் பட்டம் ஷூ 25
14. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார் பட்டம் ஷூ 12
15. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் பட்டம் ஷூ 9

8351 a

16. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 11
17. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கேயன் மன்ருடியார்
பட்டம் ஷ 16
18. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 8
19. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 12
20. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 35
21. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 28
22. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 22
23. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 29
24. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார்
பட்டம் ஷ 38
25. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியார் ஷ 22
26. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார் ஷ 18
27. யிவற் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியார் ஷ 34
28. யிவற் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியார் ஷ 9
29. யிவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் ஷ 14
30. யிவற் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியாற் ஷ 8
31. யிவற் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் ஷ 19
32. யிவற் குமாரன் இம்முடி குமார காங்கய மன்ருடியாற் ஷ 44
33. யிவற் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் ஷ 3

கலியுக சகாபுதம் 4887-க்கு பராபவ ஷ வரைக்கும் பட்டம் 26 ஷ 497

யிறுவத்தி ஆரான் புறுஷன் யிம்முடி குமார காங்கய மன்ருடியாற் தம்பி பெத்தான் காங்கய மன்ருடியாற் நாளில் அக்காலத்தில் பல்லவ ராய கவுண்டரும் தென்கறைநாடு வேணஒடையா கவுண்டரும் யிருவரும் கூடி சிதிரம் பண்ணின படியனாலே வேணஒடையா கவுண்டனை கைபிடியாய் பிடிச்சு யானைக்காலிலே யெடறிவிச்சு போட்டார். அந்த சமயத்தில் பல்லவராய கவுண்டன் அகப்படாமல் போய்விட்டர். அப்பொ காங்கயம் பல்லவராய கவுண்டருக்கு ஆதீன

மான வூரில் காங்கயத்தில் கோட்டையைக் கட்டி வைச்சு தம்முடய பட்டாளத்துச் சனம்ங்களையும் போட்டு அந்த சனத்துக்கு தளகற்த்த நான அளப்பிச்சா கவுண்டனுக்கு ரொக்க வும்பளிக்கையும் நேமுகம் பண்ணி காங்கயன் கோட்டை யென்று பேர்வச்ச படியநாலே காங் கயம் கோட்டையென்று பெற்ப்பட்டு கெடிஸ்தலமாஇ பெறசுத்திப் பட்டது.

மேல் யெளுதப்பட்ட யானைக் காலிலே யெடறி வைச்ச வேண ஓடையா கவுண்டனுக்கு தம்முடைய சகோதறமான பெண்ணைக் குடுத்து யிருந்த படியனுளே அந்தப் பெண்ணுனவள் தமயனிடத் தில் வந்து மிகவும் வெசனப்பட்டபடியனுலே அந்தப் பெண் புள்ளைக்கு வெசன பறிஹாரம் பண்ணவேண்டிய னிமித்தியும், உன் புருஷன் கொங்கு யிருவத்திஞலு நாட்டுக்கும் பெரிய வீட்டுக்காரனு யிருந்தானே யிப்பொ ஒன்னுடைய புள்ளைக்கு தென்ங்கரை நாட்டுக்குப் பட்டம் கட்டி விக்கிறேமென்று சொல்லி சகல விபவத் துடேனே பட்டமுங் கட்டிவிச்சார்.

அதின் பிற்க்காலம் மணநாட்டில் தென்னிலே வேட்டுவறில் கொங்குராயன் யென்ங்குறவன் சிறுது சனங்களைச் சேத்திக் கொண்டு ராத்திரி வேளையிலே கள்ளதனம்ங்களாஇ சில்லரை பண்ணிக் கொண்டு கைய்யிக்கு ஆப்புடாமல் யிருத்தபடியனுலே அவனை பிடிச்சு தலையெக் கொண்டு வறப்பட்டவாளுக்கு தம்முடய பேறும் கொடுத்து பட்டமும் கட்டுகிறேமென்று சொல்லியிருந்தார்.

அந்த சமயத்தில் வள்ளியரச்சல் பில்லம்கூட்டத்தில் தொண்ட மாக்கவுண்டன் என்குறவன் சிறிது கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு கொங்கராயனை ஜெயிச்சு அவன் தலையெ வெட்டிக் கொண்டு தன் ஊரு மார்க்கமாய் வார போது அவன் மறுமகனுன அளகன்சக்கரை யெண்ணப்பட்டவன் கூடா யிருந்தப்போது கொங்குருயன் தலையெ மறுமகன் கையிலே கொடுத்து னிக்கச் சொல்லி ஒடம்பிலேப் பட்ட ரத்தக்குறிகளெ யெல்லாம் சுத்திப் பண்ணிக் கொண்டு வறுகுரோ மென்று போனுன். அந்தச் சமயத்தில் அளகன்சக்கரை கொங் கறையன் தலெயெ யெடுத்துக் கொண்டு காடையூறுருக்கு வந்து இம்முடி குமார காங்கய மன்ருடியாற் யிடத்தில் வச்சபடியனுலே கொங்கராயனெ செயிச்சு அவன் தலையெக் கொண்டு வந்து வெச்சான் யென்று சந்தோஷப்பட்டு அந்தட்சணமே சகல பொகுமதிகளும் பண்ணி அளகன்சக்கரை மன்ருடியார் என்று பேற் குடுத்து தமக்கு சமான மானவற் யென்று சொல்லி பட்டமும் கட்டி ஆனை மேலே வைச்சு மெறவனை பண்ணி நாடனவற்க்கும் அறியப்பண்ணிநாற்.

அந்தச் சமயத்தில் இத்தொண்டமாக் கவுண்டன் வந்து செயிச்சவன் நான் யென்று சொன்னவிடத்தில் முந்தி கொங்கராயன் தலையெக் கொண்டு வந்தவனுக்கு பட்டமாச்சுது யென்று சொல்லி அவனுக்குச் சமாதானமாக மன்ருடி யென்னப்பட்ட பேறகொடுத்தோமென்று சொன்ஞர்கள். அதுநாலே தொண்டமா மன்ருடிய் யென்று அவனுக்கு பேற் யிறுந்தது.

மேல் யெளுதப்பட்ட பெத்தான் காங்கய மன்ருடியாற் நாளையில் மேல்பறம் கோயமுத்தூறுக்கு சேந்த ஆனைமலை பாளையப்பட்டில் கோபணக்கவுண்டன் ஆனைகளைப் பிடிச்சு குடுத்துக் கொண்டு யிறுந்த படியநாலே சந்தோஷப்பட்டு தம்முடைய காரியங்களுக்கு அனுகூலமாயிருந்து நடந்து கொண்டபடியஞலேயும் மன்ருடியாற் யென்று பேற் குடுத்தார்கள். அதுநாலே அந்த நாள் முதல் கோபண மன்ருடியாற் யென்று பேற் வறப்பட்டுது.

அவற்ஞளையிலே காங்கயம் சீற்மையிலே காடையூருலே வாசஸ்தராயி யிருந்து பெறசித்தியாஇ கியாதி புருஷஞயி பனிரெண்டு கடகம் யானைகள் கட்டிகொண்டு அனேக சனங்களையும் குதிறைகளையும் வைச்சுக் கொண்டு துஷ்ட னிக்கிறஹ சிஷ்ட பறிபாலனம் பண்ணிக் கொண்டு யிருந்தார்கள்.

அக்காலத்தில் இதற பிற தேசங்களிலே யிருக்கப்பட்ட பிருமணளைத் தரிவிச்சு தம்முடைய பேருல் காங்கய சமுத்திரமென்று பேற் வச்சு பட்டியூறு கிராமத்தை சுத்த சருவமானியமாஇ கிறஹண புண்ணிய காலத்தில் பிராமணுளுக்கு தானம் பண்ணிநாற்கள்.

முன்யிறுவத்தி ஒரான் புருஷன் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் நாளில் அக்காலத்தில் வய்யாபுறி நாடு வேடக்கம்பல பாளையபட்டு யெடுப்பட்டு காங்கய நாடு வந்து சேந்து பொகு நாள் யிருந்த படியநாலே அவாளை ஆதறணை பண்ணி வச்சுக் கொண்டுயிருந்து அக்காலத்தில் காங்கய நாட்டுக்கு பொதுவான மடவளாகத்தில் பட்டமுங் கட்டி விச்சு இம்முடி சின்ஞேப நாய்க்கன் என்று பேற் வச்சு அவனுக்கு விரோதமா யிருக்கப்பட்ட சில்லறை பாளையக்காரறை செயம் பண்ணி விச்சுக் கொடுத்து பளனி பாளையப் பட்டு னிலைனிறுத்திக் குடுத்தபடியநாலே மடவளாகம் இம்முடி சின்ஞேபனுய்க்கன் என்று பேர் வந்தது. அது முதல் யெங்களுக்கும் பளனி பாளையப்பட்டாருக்கும் மிகவும் அன்னியோன்னியமாஇ யிறுக்குறது.

மேல் எழுதப்பட்ட வம்ச பரம்பரையிலே அவாளவாள் நடக்கப் பட்ட நடத்தையள் முதலானதுகளுக்கு தகவலா யிறுக்கப்பட்ட

ஓளுகுகள் முதலான ஆதறவுகள் காலாந்திரங்களிலே ராசீகங்களிலே சீற்மைகள் விட்டு சீற்மைகளிலே வாசமாயிருந்தவா ளானபடியநாலே அது வயணம் பிறிய வில்லை.

யெங்கள் ஆதீனம் உண்டான நாள் முதல் வம்சத்தில் வுள்ள பட்டகாற்களுக்கு கவிவல்லமெயும் உண்டானவாளாயி யிருந்தாற்கள். யெங்கள் வம்சத்திலே சொல்லப்பட்ட வுருச்சொல் யெங்குற னிகண்டு நாளது வரைக்கும் தேசவித னிகண்டிலே ஒரு னிகண்டாக வெளங்கி யிருக்குது.

யென் தோப்பநாற் இம்முடி அமராபதி காங்கய மன்ருடியாற் பூற்வத்தில் பல்லவராயக்கவுண்டற், சக்கறை கவுண்டற் மூன்று பேறும் கிராமங்கள் பிறிச்சுக்கொண்டு யிருந்து தமக்குச் சேந்த காடையூற், பட்டாலி, கீறனூற், பறமஞ்சேற்வள்ளி, ஆலாம்பாடி, ஆருதொளு, யிந்த கிராமங்கள் தாம் வச்சுக்கொண்டு அரமனையாற் கட்டளையிட்ட னிகதிபடிக்கு பணம் செலுத்திக்கொண்டு யிருந்தபடிக்குத் தாமும் டிப்புசுல்தான் அவர்கள் நாளையில் அறமனைக்கு பணம் செல்லவில்லை யென்று துராகுறதமாஇ பிடிச்சுச் செனக்காகிரியிலே பந்து பண்ணி வச்சு யிருந்தாற். அந்த சமயத்தில் கலியுக சகாபுதம் 4887க்கு பராபவ ஹு ஆனி மீ பூற்வ பட்சத்துச் சதுற்த்தி நாள் தெயிவகெதி அடைஞ்சாற்.

காடையூருலே சொந்த ஜனங்களுடனே சிருப்புள்ளையாஇ யிம்முடி குமார காங்கய மன்ருடியாற் யென்று பேற் வுண்டாகி யிருக்கும் யிடத்தில் பருபவ ஹு ஆடி மீ முதல் பிறப்பட்டு பறஷ்தளங்கள் வாசமாஇ கீலக ஹு மாற்கழி மீ வரைக்கும் யிருந்து தை மாசம் காடையூருக்கு வந்து சேந்து தை மாசத்தில் டிப்புசுலுதான் துரைத் தனத்தில் அந்த நாள் அறமனையாற் முன்னிலைக்கு நாடனைவரும் கூடி பட்டாபிஷேகம் பண்ணினுற்கள்.

அந்த நாள் முதல் ருச்சியம் பண்ணப்பட்ட பிரபுக்களுடைய தயவுக்கு பாத்திரனுக காத்து யிருக்கிறேன். காங்கயம் சீற்மையிலே டிப்புசுலுதான் அவர்கள் நாள்முதல் அங்காமிகள் வந்து கொண்டு யிறுந்தபடியநாலே நான் மெத்த யேளையாஇ போஇ பளனி சீற்மையில் தும்பலப்பட்டி கிராமத்தில் குடியிறுப்புக் காரனுயி மகா ராச ராச ஸ்ரீ கும்பினியாற் தயவுக்குப் பாத்திரனுய் காத்துக் கொண்டிருக்கிறேன்.

இம்முடி குமாற காங்கய மன்ருடி ஒப்பிதம்.

–0–

# கொப்பையனுய்க்கனூர் ஜமீன்தாரி வம்முசாவழி

டி. 3847

இந்த கொப்யையனுய்க்கன் வம்முஷா வழி கணக்கும் ஒலேப் பட்டயத்திலிருந் தெழுதினது.

பூறுவ சங்கதிகளுடைய வற்தமானமும் வமுசாவழிகளுடைய விபரமும் ருமசத்திரப்பனுய்க்கர் பாளேயப்பட்டுக்கு:–

சுபஸ்ஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் 1342 கலியுகாற்பிதம் 4521 மகாருசமானிய ஸ்ரீ ருயரவர்கள் ருச்சியப் பரிபாலனம் பண்ணுகிற முன்னுக்கு யெங்கள் பெரியவர் காமவார் கோத்திரத்தில் ருமசந் திரப்பனுய்க்கர் ... ங்கிபட்டுக் கோட்டைக் கிருமத்தில் குடியிருந்து நாட்டாண்மை செய்துக் கொண்டிருக்கையில் ருயரவர்கள் சமஸ் தானத்தில்... துக்குதிரை பகல்மரி கண்டுது. அந்த மரியை சேவுகர்... லுச்ச மாச்சாரஞ்சொல்லி அகில் கிடங்குலே கொண்டுபோய் ... ட்டு விட்டார்கள். அந்தக் குதிரைக் குட்டியை யென்முன் பெரிய ருமசந்திரப்பனுய்க்கர் கண்டு குட்டியை யெடுத்துக்கொண்டு போய் குட்டிக்கிப் பாலூத்தி வளத்து அந்தக் குட்டியும் பெரிய குதிரையாகி நல்ல நடையும் லட்சணமுள்ள குதிரையாய் யிருந்துது. அந்தக் குதிரையை ருயரவர்கள் வேணுமென்று கேட்டார். குதிரையைக் கொடுக்கிறதில்லேயென்று தகருல் செய்துகொண்டு ருயரவர்கள் வலுவந்தமாய்க் கொண்டு போறதாய் யிருக்குதென்பதாய் யெங்கள் குலதெய்வமாகிய காமாட்சியம்மனேத் தோத்திரஞ் செய்ததில் அம்மன் சோரமண்ண விரத்தியாக உத்தரவு கொடுத்தது யென்ன மென்ருல் குதிரையை வந்து கேட்டால் நீ குதிரையைக் குடுக்க வேண்டிய தில்லே. யிருவதுக் கட்டியிரும்பினுலே ஒரு துட்டு தடி செய்து வைச்சுக் கொண்டிரு. வலுவந்தமாய்க் குதிரையைப் பிடிக்க வந்தால் அப்போது துட்டுத்தடியாலே அடித்துச் சேதப்படுத்தி விரட்டிவிடச் சொல்லி நிச உத்திரவாச்சிது. உத்திரவான மேரைக்கி துட்டுத்தடி செய்து வைச்சுக் கொண்டிருந்தார்கள். அப்படி யிருக்கையில் ருயரவர்கள் சேவுகாவிற்தி மனுஷாள் வந்து குதிரையைப் பலுவந்தமாய்ப் பிடிக்க வந்தார்கள். அந்த முன்னிலேயில் யிருபேருக்கும் சல்லியமானதில் யென்பெரியவராகிய ருமசந்திரப்பனுய்க்கர் வந்த சேவுகரை அடிதண்ட

மாய் துட்டுதடியாலே அடித்து வெகு சேதவாத படுத்தி விரட்டித் துரத்திவிட்டார்கள். அப்போது ருயரவர்கள் யிவருடைய சாமாற்தியத்தை யறிந்து சந்தோஷப்பட்டு யெங்கள் பெரியவர் ருமசந்திரப்பனுய்க்கர் ஆகிறவரை வரவளைத்து மகாசந்தோஷப் பட்டு தலைமலைக் கிருமமும் இனுமாகக் குடுத்து சிங்கமுகப் பல்லாக்கும் பஞ்சவற்ண வெட்டுப் பாவாடை, சந்திரகாவி வெட்டுப்பாவடை, உபையவெண்சாமறம், சந்திரகாவிடால், அனுமந்தடால், சூலடால் ... த்தப்பட்டுச்சுருட்டி, உபையப்பூச்சக்கிறகுடை, குடைமேல்க் குடையும் வீரகண்டாமணி விருது, சோமத்தலை விறுது, சாமத்து ரோக வெண்டையம், கையில் பயில்...த தஷுத்தா முதுகில் இமயவலை, யெலித்தோல் விருது, முத்துதுருய் முத்துமோகமாலை கண்டக்கோடாலி கொலுவ...த்தில் ஒத்தைமணிக்கட்டியவாலா இத்தையாதி விருதுகளும் குடுத்து ஒட்டைமேல் நகாரு, ஆணைமேல் அம்பாரியுங் குடுத்து சிறுது வெகுதியளுஞ் செய்து அனுப்பிவிச்சார்கள். அதே மேரைக்கி தலைமலை ருமசந்திரப்பனுய்க்கர் பாளையப்பட்டென்று பேருமிட்டுக் கொண்டிருக்கையில் ருமசந்திரப்பனுய்க்கர் அஞ்சு பிள்ளையள் ஆண் பிள்ளையாக பிறந்தார்கள். அதில் மூத்தவற் காமயனுய்க்கர் அவடத்திலே துரைத்தனஞ்செய்துக் கொண்டுயிருந்தார். அதுக்கு இளையவர்கள் நாலுபேரும் தமையனுரிடத்தில் கோபஞ் செய்துக்கொண்டு தெற்கே பிறப்பட்டு வந்ததில், அதில் மூத்தவர் வரமூற்தி பூசாரினுய்க்கருகுறவர், தெய்வதானம் போய்சேர்ந்தார். அதற்கு யிளையவர் பெத்தளனுய்க்கராகுறவர் பெரியகுளம் வடகரைப்போய் சேர்ந்தார். அதற்கு யிளையவர் தாடிக்கொப்பையனுய்க்கராகுறவர் நாகமலை அடிவாரத்தில் வடக்குச் சார்பில் குள்ளக்கோம்பை ... ஆரண்ணியமான காடாயிருந்தது. அந்தக் காட்டிலே தொழுபோட்டு சிறிது பால் பசுக்கள் அடைத்துக்கொண்டிருந்தார்கள். அதற்கிளையவர் நல்லதாதுனுய்க்கராகுயவர் யெழுந்து கிருமத்தில் போயிருந்தார். தாடிக்கொப்பைய னுய்க்கருகுறவர் பசுமாட்டுக்குத் தொழுப்போட்டுக் கொண்டு குடியிருக்கிற முன்னிலையில் அப்போது பாண்டிய தேசத்தில் பாண்டிய ருசாக்கள் துரைத்தனம் யெடுப்பட்டு ருயரவர்கள் கொட்டிய னுகம னுயக்கரவர்களுடைய குமாரனுய்க்கர் விசுவனுதனுய்க்கரை வரவளைத்து மதுருபுரிக்கி பட்டங்கட்டி அனுப்பிவிச்சார்கள். அவர்கள் பாண்டிய தேசத்துக்கு வந்து தெச்சணத்தில் பஞ்சபாண்டியர் ..விசுவனுத னுய்க்கரவர்கள் மதுரையில் தூரைத்தனஞ் செய்துக்கொண்டு யிருந்தார்கள். அப்போது யென் பெரியவராகிய தாடிக்கொப்பைய னுய்க்கரிடத்துக்கு அரமனை மனுஷரை அனுப்பிவிச்சி வரி குடுக்கச் சொல்லிக் கேட்டார்கள். அப்போது அவர் புல்வரி கொடுக்கிறதில்லை

யென்று குலதெய்வமாகிய காமாட்சி அம்மனை ...[குள்]ளக்கொம்பை கன்னிமாற் அம்மனையும் தோத்திரஞ் செய்ததில் சுவாமி உத்திரவு கொடுத்தது யென்னமென்றால் நீ அரமனைக்கு புல்வரிப் பணங் கொடுக்க வேண்டியதில்லை. வரிப்பணங்கேட்டு வந்த...விச்சுப்போடு அதற்கு மேல் வலுவந்தஞ் செய்தால் நாம் உனக்கு செயஞ்செய்து கொடுக்கிறோ மென்று உத்திரவாய் அந்த உத்திரவு மேரைக்கு யிருக்கையில் அரமனை மனுசாள்ச ... தறத்துடனே வந்து புல்வரிப் பணங்குடுக்கச் சொல்லி மறித்ததில் தொழுவிலிருந்த பசுக்க ளெல்லாம் யேகோவித்து வந்த பேரையெல்லாம் விரட்டிப்பாய்ந்து ரெம்பவும் (சே)தப்படுத்தி வைய்கை ஆத்துக்கு வடக்கே முடிக்கி விட்டுது. அந்த சமாச்சாரம் கற்னுடகத்துரையளாகிய விசுவ னுதனுய்க்கரவர்கள் கேட்டு மகா சந்தோஷப்பட்டுக் கொண்டு தாடிக்கொப்பையனுய்க்கரை வரவழைத்து வெகுமதியுஞ் செய்து மதுரு புரிக்கி மேல்புறம் நாகமலைக்கி வடக்குச்சார்பில் குள்ளக்கோம்பை கன்னிமாற் கோவில் ஸ்தலத்துக்கு சேர்ந்த கம்பத்துமலை அடிவாற கிறுமம் பேற்வழிக் கொப்பையனுய்க்கர் ஊர் றுசதானி ஒண்ணு, சந்தையூர் சேடப்பட்டி ஒண்ணு, ரெங்கப்பனுய்க்கன் பட்டி ஒண்ணு, வலைப்பட்டி ஒண்ணு, பூத்தைய கவுண்டன்பட்டி ஒண்ணு, விறுளை ஒண்ணு, கொன்மனுய்க்கன்பட்டி ஒண்ணு, நரசிங்கபுரம் ஒண்ணு, கேயகவுண்டன் பட்டி ஓண்ணு, செனுமாறு பட்டி ஒண்ணு, மொய்த் தேவன்பட்டி ஒண்ணு, வத்திலுபட்டி ஒண்ணு, சம.. நாய்க்கன்பட்டி ஒண்ணு, நடைக் கோட்டை கணபதிபட்டி ஒண்ணு, பொடியகவுண் டன் பட்டி ஒண்ணு, காவல்க்காறன்பட்டி ஒண்ணு, ... வலிசெட்டிப் பட்டி ஒண்ணு, காமிநாயக்கன்பட்டி ஒண்ணு, வண்டம்பட்டி ஒண்ணு, சின்னுகவுண்டன்பட்டி ஒண்ணு, செக்காம்பட்டி ஒண்ணு ஆக கிறுமம் 24-ம் பாளையப்பட்டாக விட்டுக் குடுத்து கொப்பையனுய்க்கனூர் என்று பேருங்குடுத்து பாளையக்காறப் பட்டமுங் குடுத்து றுயர் சமஸ் தானத்தில் கொடுத்த விருதுகளும் அல்லாமல் மேலும் நரவாகனமும் குடுத்து குதிரைக்கி ஒத்தை முகச்சல்லி, முன்னங்கால் வெண்டயம், வளையில், முன்சல்லி, பின்சல்லி, சிங்கமுகத்துறுய், அ(ண்ட)த்து மணி புலித்தோல், முகமட்டு, வெடிக்கி, ஒத்தை சல்லி, முதுகுசல்லி, முன்கைச் சல்லி இத்தையாதிவருக்கமுங் குடுத்து வேண்டிய வெகுமதியுஞ் செய்து ஊரு இனும் விட்டு குடுத்து அனுப்பிவிச்சார்கள். அதேமேரை ஊருக்கு வந்து சந்தையூர் கொப்பையனுய்க்கரென்று பேரும் விட்டுக்கொண்டு அரமனைக்கி குமாரவற்கமாய் நடந்துக்கொண்டு வருவதில் கற்னுடகத் துரையள் மதுறுபுரிக் கோட்டைப் போட்டுக்கோட்டைக்கி எழுவத்தி ரெண்டு கொத்தளமும் போட்டுவிச்சு எழுவத்திரெண்டு பாளையக்

காரரையும் வரவழைத்து அவர்களுக்கெல்லாம் ஒவ்வொருக் கொத்தள மும் பிரித்துவிட்டு கொப்பையனுய்க்கருக்கு அன்பத்திநூலாங் கொத் தளமும் பிரித்து விட்டு நூறு சனம் வைச்சுக் காற்கச் சொல்லியும் மது ரைத் திண்டிக்கல் சீர்மையில் பாதுகாவல் கிறுமம் விட்டுக்கொடுத்த பேர்வழி மதுரை சீர்மையில் சோள[வந்] தானுக்குச் சேர்ந்த குன்னுரங் கோட்டை உபகிறுமம்...முபடகிறுமம் ஒண்ணு, திண்டிக்கல் சீர்மையில் ...த்தில்க் குண்டுகிறுமம் நஞ்சையும் உபக்கிறுமம் கோட்டைப்படி ஒண்ணு, பழையவத்திலக்குண்டு ஒண்ணு, சத்திரப்பட்டி ஒண்ணு, ஒத்தை அரசுப்பட்டி ஒண்ணு, விராலிப்பட்டி ஒண்ணு, சாமினுய்க்கன் பட்டி ஒண்ணு, பூபன்பட்டி ஒண்ணு, வெரியப்பனுய்க்கன் பட்டி ஒண்ணு. ஆககிறுமம் ஒன்பதும் பாதுகாவல் விட்டுக் கொடுத்து அந்த கிறுமங்களில் நஞ்சைபுஞ்சை உம்பளங்களும் வெடிகை வேண்டு கோலும் விட்டுக்கொடுத்து அனுபவித்துக் கொள்ளச் சொல்லி அனுப் பிவிச்சார்கள். அந்தப்படிக்கி சேர்ந்த பூமியையும் காவல் பூமியை யும் இனுமாக அனுபவிச்சிக்கொண்டு கொத்தளமும் சனம் போட்டு காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துக்கொண்டு முப்பது வருஷம் துரைத்தனஞ் செய்து கொண்டு யிருந்தார்.

2வது பட்டம் அவர் குமாரன் தம்மாச்சினுய்க்கர் சொந்த பூமியும் காவல்ப் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காவல் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 25 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்மேல் தெய்வீக மானுர்.

3வது பட்டம் அவர் குமாரன் நாரமனுய்க்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் யினுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக் கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துக்கொண்டு முப்பத்திரண்டு வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீக மானுர்.

4வது பட்டம் அவர் குமாரன் பொம்மைனுய்க்கர் சொந்தபூமியும் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 50 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர்.

5-வது பட்டம் அவர் குமாரன் தம்மாச்சினுய்க்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காவல் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு இருபது வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய் வீகமானுர்.

6-வது பட்டம் அவர் குமாரன் நாரமனுய்க்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 27 ஷூ துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர்.

7-வது பட்டம் அவர் குமாரன் கொப்பையனுய்க்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துக்கொண்டு 25 ஷூ துரைத்தனம் பண்ணி அதின் பேரில்த் தெய்வீகமானுர்.

8-வது பட்டம் அவர் குமாரன் தம்மாச்சினுய்க்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக் கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 20 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில்த் தெய்வீகமானுர்

9-வது பட்டம் அவர் குமாரன் நாரமனுய்க்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துக்கொண்டு 33 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர்.

10-வது பட்டம் அவர் குமாரன் பொம்மையனுய்க்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு 29 ஷூ துரைத்தனம் பண்ணி அதின்பேரில்த் தெய்வீகமானுர்.

11-வது பட்டம் அவர் குமாரன் நாரமனுய்க்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இனுமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்களுக்கு குமாரவற்கமாக நடந்துகொண்டு 19 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானுர்.

அப்போது கலியுக வருஷம் 4831 சாலிவாகன சகாற்தம் வருஷம் 1652 இந்தப்படிக்கி பதினொரு பட்டக்காரரும் கற்னடக சமஸ்தானம் உள்ளவரைக்கும் மகன் மகன் தலைமுறையாய் சொந்த பூமியுங் காவல் பூமியிலுள்ள உம்பள ஊதியமும் யினுமாக அனுபவித்துக் கொண்டு வருகையில் ஸ்ரீரெங்கபட்டணத்து மைசூர் கற்னடகதுரையவர்கள் திண்டிக்கல் சீர்மையைக் கட்டிக்கொண்ட முன்னிலேக்கி 12-வது அவர் குமாரன் தம்மாச்சினுய்க்கருக்குப் பட்டமாகி மாமூலுள்ளபடிக்கி சொந்த பூமியுங் காவல் பூமியும் யினுமாக அனுபவித்துக்கொண்டு யிருக்கையில் திண்டிக்கல் சீர்மை அமுல்வரிக்கி வெங்கிட்ட ருயரவர்கள்

யிந்தப்பாளையப்பட்டுக்கு தோப்பாப்பணம் நிகுதிசெய்து..300 பணம்.. ஞகத்தீத்துக் குடுத்துப் பிறமலே நாட்டுக்கள்ளர் திண்டிக்கல் சீர்மையில் சல்லியம் செய்கிற நிமித்தியம் கணவாய்க் கட்டுக்கு ஆள்போட்டு காற்கச் சொன்னது. கல்கட்டிக்கணவாய் 1, கள்ளக்கோம்பை கண வாய் 1, ஆத்திமான் கணவாய் 1, புல்லுக் கணவாய் 1, கூந்தாளை முடுக்கு கணவாய் 1. இந்த அஞ்சுக் கணவாய்க்கும் ஆள்போட்டுக் கள்ளர் சல்லியம் நடவாதபடிக்கி காற்து வரச்சொல்லியும் ஷ 1 க்கு... 500 கலம் அரமனையார் சம்பளங் குடுத்து வந்தார்கள். யிந்தப் படிக்கி ஷ 17 பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானர்.

13வது பட்டம் அவர் குமாரன் நாரசிம்மனுய்க்கருக்குப் பட்டமாகி ஐதர்சாய்பு நாளையில் முன்காணிக்கை......100க்கு 200 பணம் உபரிக் கூடக்கூட்டி ஆக ... 500 பணம் தீர்த்து நிகுதி செய்தார்கள். அதே மேரைக்கி ... 500 பணம் காணிக்கைக்குடுத்துக்கொண்டு வந்ததாய்க் கட்டுக்கு ... 500 கலம் நெல்ச்சம்பளம் வாங்கிக்கொண்டு சொந்த பூமியுங் காவல் பூமியும் அனுபவித்துக்கொண்டு கணவாய்க்கட்டுங் காத்து கொண்டு 19 ஷ துரைத்தனம் பண்ணி தெய்வீகமானர்.

14ம் பட்டம் அவர் குமாரன் நாளது நடப்பு பொம்மையனுய்க்க ருக்கு பட்டமாகி மீருசாய்பு நாளையில் சையதுசாய்பு திண்டிக்கல் சீர்மை அமுலுக்கு வந்தபோது சாதாருண வருஷம் வரைக்கும் ... 500 பு குடுத்துக் கொண்டு சொந்த பூமியும் காவல் பூமியும் அனு பவித்தேன். அப்பால் கும்பினியாரவர்கள் திண்டிக்கல் சீர்மை துரைத் தனத்துக்கு வந்ததில் மக்களூட்டு துரையவர்கள் அதிகாரத்தில் என் பாளையபட்டுக்கு வகையருப்பு ... 500 பு ...... 200 பு கூடக்கூட்டி ...700 பு தீர்ப்புச் செய்து யென் தாயாதிக்காரனாகிய தெய்வதானுவற மூற்தி பெத்தளனுய்க்கர் யென்னிடம் வந்து தமக்குப்பிள்ளையில்லை யென்று தமயன் குமாரன் ருமசாமினுய்க்கனைத் தெத்துப் புத்திரனாகக் குடுக்கச் சொல்லி மஞ்சள் நீர்குடித்து வளத்திருக்கையில் தாயாதி பெத்தளனுய்க்கர் தெய்வீகமானர்.

அந்தத் தெய்வதானம் பாளையப்பட்டு பூமிக்கி துரைத்தனத்துக்கு ருமசாமினுய்க்கரை பட்டங்கட்டி வைத்து மக்களூட்டு துரையவர்கள் நாளையில் தெய்வதானம் பாளையப்பட்டுக்கு வருஷம் 1க்கு ...2100 பு தீர்ப்புசெய்தார்கள். அதே மேரைக்கிச் சாதாருண ஷ முதல் ருட்சத வருஷம் வரைக்கும் காணிக்கையும் கொடுத்துக் கொண்டு பாளையப் பட்டை அனுபவித்து வருகையில் உஞ்சிதுரை னளையில் துவாசி வாசுதேவப்பிள்ளையிடத்தில் யெழுமடைனுய்க்கர் குமாரன் நல்லதாது

ஞய்க்கன் மித்திரமாய் 1005 ள யாவிஃன குடுக்கிறேமென்று சொன்ன படியினலே யென்னிடமாக இருந்த பூமியை வலுவந்தத்திலே அவனுக்கு தெய்வதானத்தைக் கட்டிக் குடுத்தார்கள். பின்னும் யென் சொந்தப் பாஃளயப்பட்டையும் சப்தி பண்ணினர்கள். அப்பால் ஆற்டீசுதுரை யவர்கள் நாஃளயில் நள ௵ யென்ஃன வரவஃழத்து உன் பாஃளயப் பட்டு கும்பினியார் சப்தி பண்ணியிருப்பதால் மாதம் 1க்கு 80 ரூபாய்ச்சம்பளம் செய்திருக்கிறேமென்று சொல்லி நள வருஷ முதல் றுதோக்காரி வருஷம் வரைக்கும் சம்பளம் பத்தினேன். ரத்தா ௵ சாரீசு பெரீசு துரையவர்கள் யென்ஃன வரவஃழத்து யென் பாஃளயப்பட்டு சப்தியா யிருந்ததையும் விட்டு குடுத்து யென்க்கு கும்பினியிலிருந்து சிறுது பணமுங் குடுத்து வகையறுப்பு பூவீ 1380... ...268 ஆக திர்ப்பு செய்து அனுப்பினர். அப்படியே குறேதனவருஷம் வரைக்கும் செலுத்தினேன். ஆனல் பைமேஷ் தீர்வை முன்பாரமாக விளுந்தபடியினலே குடியள் 10 வருஷம் தீற்பு அதனங் குடுத்து கை மெலிந்து ஒடுங்கி போய்விட்டபடியினலெ பணம் நிலுவையாச்சுது. அதே மேரைக்கி சப்தி பண்ணி அமீனு நேமுகஞ்செய்துக் கொண்டார். 9 வருஷம் கும்பினியில் சப்தியா யிருப்பதால் வருஷாவருஷம் லுக்கு சானுக்கு உள்ளாய்ப் போறதல்லாமல் அடியேன் பாக்கிதாரனுய்ப் போனேன்-ஆனதால் அடியேன் பேரில் கும்பினியார் தயவு செய்து காப்பாத்த வேண்டியது.

☆

# கோட்டைக்காடு ஒடுக்கம் கறுப்பதம்புரன் வமுசாவழி விபரம்

டி. 3849

*1816 ௵ சூன் மீ 3உ அடியனூத்து மிட்டாசேகரம்.*

கலியுகசகார்த்தம் 4833க்கு சாலிவாகன சகார்த்தம் 1653க்கு மேல் செல்லா நின்ற விரோதிக்கிறுது வருஷத்துக்கு விசையரங்க சொக்கனாத லிங்கனாய்க்கர் பட்டம். அதின் பிறகு அவருடைய பெண்சாதி பட்ட(ம்) ஸ்திரீ மீனாட்சி அம்மாள் அதிகாரத்தில் ஷை அம்மாள் தமையன் வெங்கிடப்பெருமாள் னாய்க்கர் திண்டுக்கல் சீர்மை அதிகாரஞ் செய்குற னாளையில் திண்டுக்கல்லுக்குச் சேர்ந்த கஸ்பா அடியனூத்து கிருமத்தில் மேல்ப்படியூர் கிருமத்துக் குளத்துக்கு மேற்கே ஆறணியமான காடாய் காட்டுக்கொட்டைச் செடியும் மிறுக செஞ்சாரமா வன மத்தியத்தில் வெள்ளாள திருமேனிக் கறுப்பண்ணப்பரதேசி யென்குறவர் கிறகஸ்தமார்க்கமாய் கொடிக்காலில் சீவனம் பண்ணிக்கொண்டு யிருக்கிற னாளையில் மூன்றுபேர் சித்தாதிகள் மேலேளுதிய அடியனூத்து ஆறண்ணியத்தில் ஒரு ஆலமரத்தடியில் வந்திருந்து இவரை வரவளைத்து இவருக்கு உபதேசம் பண்ணிவித்துப் போட்டுப் போனார்கள். அதின் பேரில் சிறுதுனாள் திண்டுக்கல்லிலிருந்து சீவனம் பண்ணிக்கொண்டிருந்தார். மேலெளுதிய சித்தாதிகள் பின்னு மவடத்தில் வந்திருந்து யிவரை வரவளைத்து காசியாத்திரைப் போய் கெங்காஸ்தானம் பண்ணிவிச்சிக்கொண்டு மறுபடி மேளெுதிய வனத்தில் ஒரு அத்திமரமும் அத்திஊத்து யென்றொரு ஊத்தும் யிருக்குது அதிலிருந்து தவசு பண்ணிக் கொண்டிருமென்று உத்தரவு கொடுத்தார்கள். அதில் ஒடுக்கங் கட்டி வைத்து நந்தவனமும் செய்விச்சுக் கொண்டு இருக்குற நாளையில் மேலெளுதிய மீனாட்சியம்மாள் யிறந்துப்போய்ச் சீர்மையும் மைசூராற் வசமாகி ரெகுனாதப்பண்டிதர் அதிகாரத்தில் மேலெளுதியக் கறுப்பண்ணப்பரதேசி யென்குறவர் பாம்புகள் கூட விளையாடுகிறது, தேசத்தில் தூரதிஷ்டியாய் நடக்கிற அதிசயங்கள் யெல்லாஞ் சொல்லுகிறது, இப்படி கெவுன சித்தாதியாயிருக்கிற சமாச்சாரம் மேல்ப்படி ரெகுனாதப்பண்டிதர் இந்தப் பெரியவரிடத்தில் அவருடைய சித்து மகுத்துவத்தை அறியவேணு

மென்று அவரிடத்தில் ரெகுநாதர் பண்டிதர் வந்து சாப்பாட்டுக்கு வரவேணுமென்று பல்லக்கு மேலேறச் சொல்லி சொன்னுர்.

அதற்கு பல்லக்கு மேல் நாமேறினுல் பல்லக்குக் கொம்பு முறிந்துபோகு மென்று சொன்னுர். அதற்கு ரெகுனுதபண்டிதர் அப்படியல்ல பல்லக்குமேலேறிக் கொள்ளுமென்று சொன்னுர். இவர் பல்லக்கு மேலேற பல்லக்குக் கொம்பு முறிந்து போச்சுது. பின்னும் ரெகுநாத பண்டிதர் நாம் பல்லக்கு யேறிக்கொண்டு போகவேணும் பல்லக்குச் செம்மையாயிருக்க வேணுமென்று கேள்க அப்படியே செம்மையாகுமென்று உத்திரவு கொடுத்தார். பல்லக்குமேலேறிக் கொண்டு போனுர். அதின் மேல் கோட்டைக்குள்ளே தன்வீட்டி லழைத்து வந்து சாப்பாடு பண்ணிவிச்சு ஒரு மச்சு வீட்டில் படுக்கை யமத்திக் குடுத்து கதவு சாத்திப் பூட்டுப்போட்டுப் பாரு வைத்து காலமே பாற்குமிடத்தில் இவர் ஒடுக்கத்தில் வந்திருந்தார்.

அதின் பிறகு ரெகுனுத பண்டிதர் தான்செய்தது அபசார மாச்சுதுயென்று ஆயிரம் பேருக்கு பிருமனுள் போசனஞ்[ம்]பண்ணி விச்சு இவருக்கு காரையினுலே ஒடுக்கமுங் கட்டிவிச்சு பின்னும் மேலெழுதிய அடியனூத்து கிருமத்தில் மானியம் புஞ்சைக்குளி 54, நஞ்சைக்குளி10-ம், தொட்டனூத்தில் புஞ்சைக்குளி 12. இவளவும் சறுவமானியமாக செய்து குடுத்தார்கள். அதின்பிறகு தவசிமடு பாளையப்பட்டில் புஞ்சைக்குளி 50 நஞ்சை பெரியனுய்க்கன் குளம் நஞ்சைவிதைப்பறவு கலம், இமக்கலாபுறம் பாளையப்பட்டில் புஞ்சைக் குளி 50 நஞ்சை நத்தம்பாடிப்பட்டிக் குளத்தில் நஞ்சை விதைப்பறவு கலம், அம்மையனுயக்கர் பாளையப்பட்டில் புஞ்சைக்குளி 7 இவளவுஞ் சறுவமானியமாய் விட்டு கட்டின யேறுக்கு போகத்துக்கு குறுணி தவசம் சமுசாரியளை வற்தனைக் குடுக்கச்சொல்லி ரெகுனுத பண்டிதர் உத்திரவு குடுத்தார். அந்தப்படியே நடந்து வந்துது. இப்படி யிருந்து சறுவசித்து வருஷம் தை மீ˝ றதசதமியில் அடைந்து போனுர். அவருக்குச் சமாதியும் வைத்து ஒடுக்கங்கட்டி அவருடைய சிஷன் மடூர்சீர்மையில் செட்டித்திருமேனி பளனிச்சாமியாரென்று வந்து அவருக்கு சகல கருமங்களும் செய்துவிச்சு நித்தியப்படி பூசைசெய் விச்சுக்கொண்டு அவர் பட்டத்துக்கு யிருந்தார். அவரும் முன்னிருந்த சுவாமியார் கிடாஷ்சத்தினுல் சகல வியாதிகளுக்கும் விபூதி குடுத்தால் சொஸ்தமாகும்.

அப்படி காளயுக்தி ஷூ வரைக்குமிருந்து அவர் சமாதியாகி அவருக்கு ஒடுக்கங்கட்டி நித்தியப்பூசை நடந்து வருகுது.

அவருடைய சீஷன் வெள்ளாளத்திருமேனி அருணாச்சலப்பரதேசி யென்று பிறமலையிலிருந்து வந்து அவருக்கு ஆகவேண்டிய கருமங் களுஞ்செய்து மறுபடி பட்டங்கட்டிக்கொண்டு சித்தார்த்தி ஷூ முதல்க்கொண்டு யின்னேரம் வரைக்கும் (ஆக வருஷம் 84) அவருடைய கிறுபாகடாக்ஷசத்தினாலே சகல வியாதிகளுக்கும் விபூதி குடுத்தால் சொஸ்தமாகும்.

ஷை ஒடுக்கத்தில் சுப்பிறமணியசுவாமிக்கும் விநாயகருக்கும் வயிரவருக்கும் நித்தியப்படிப் பூசையாகுது. சமாதி ரெண்டுக்கும் பூசை யாகுது.

வந்த பரதேசியளுக்கு அன்னங்குடுத்து வருகிறது. முன் அடைந்து போன பெரியோர்களுக்கு அவரவர் அடைந்த தினத்தில் குருபூசை செய்து அன்னதானம் நடந்து வருகுது. இந்த ஸ்தலத்தில் மேலெளுதிய மானுபத்தில் இப்போ பாதிமானுபம் நடந்து வருது. யேதுனாலே யெண்ணால் ஸ்ரீ ஆற்டீசு துரையவர்கள் ஜாயில் பைமேஷ் முன்னுக்கு கிறுமத்தார் பயந்து பொருப்பு வருமென்று பாதிமானுபம் யெளுதி விச்சார்கள்.

*[அதியனூத்து பாலகிருஷ்ணய்யா கையெழுத்து. தெலுங்கில் உள்ளது.]*

பாதிமானுபங் கட்டுபட்டுபோச்சுது. நீக்கிக் கொஞ்சம் மானுபம் நடந்து வருகுது. கும்பினியாரவர்கள் தயவுசெய்து பளையப்படி மானு பங்கள் நடத்தும்படியாக உத்திரவு குடுத்தால் பறதேசிகளுக்கு அன்னதானம் நடந்து வரும். கும்பினியாரவர்கள் எங்கள்மேல் கிறுபை செய்யும்படியாய் தயவு செய்து ரட்சிக்கவேண்டியது. இப்போ நடந்து வருகிறது சற்காரிலே புஞ்சை குளி... 1000 பணம் நஞ்சைகுளி $2\frac{1}{4}$ குழி இவளவும் நடந்து வருகுது.

★

# சல்லிப்பட்டி பாளையக்காரன் எரம நாய்க்கன் வமிசாவளி

## டி. 3130

தாராபுரம் துக்குடி புள்ளாச்சி தாலுகா சல்லிப்பட்டி யெறம ஞய்க்கன் யென்னப்பட்ட பாளையக்காறுடைய வம்சாவளி முதலான கைபீது யென்னவென்ருல் :-

பூற்வத்தில் யாதவ வம்சத்தில் உத்ப்பத்தியான ஒன்பது கம்பளத்தில் தொட்டிய கம்பள சாதியான குச்சல பொம்(ம) நாய்க்கன் நாளையில்வடக்கு ருஜீயத்தில் டில்லிபாதுஷ்ஹா சீற்மையிலே குறுச்சி யெண்ணப்பட்ட பாளையப்பட்டுக்கு மன்னதனமாக ஆண்டுக்கொண்டு யிறுக்கும் நாளையில், அக்காலத்துக்கு டில்லிபாதுஷ்ஹா கம்பள சாதியில் பெண்வா[க]ங்கிக்கொள்ள வேணுமென்று னினைச்சு யிறுந்த படியனுலே துலுக்கனுக்குப் பெண் குடுக்கமாட்டாமல் கம்பளசாதி அனஒறும் யேககூட்டமாஇ பிறப்பட்டு பறராஷ்ட்டறத்துக்கு போஇ சேற வேணு மென்று யேகருத்திரிஇலே பிறப்பட்டு வறுகுரபோது மாற்க்கத்தில் கேண்டாறு பூற்ன்னபிறவாஹமாஇ இறுந்து அந்த சமயத்தில் அதிவெசனத்துனுலே கம்பளசாதி கூட்டங்கள் யெல்லாம் நதி பிறவேசம் பண்ணவேணுமென்று னினைத்து யிறுந்தார்கள். அந்த சமயத்தில் இருகரையிலேயும் இருக்கப்பட்ட புங்கமறங்கள் ஒன்ருக சாஞ்சபடியனுலே அந்த ஆதரவுலே னதி தாண்டி இக்கரை சேந்தார் கள். அப்போ அந்த புங்கமறங்களை தங்களுடைய இஷ்ட்டதைய்வ மாக யெண்ணிக்கொண்டு அக்காலத்து ருய சமுஸ்தானமான விஜய நகரப்பட்டணம் பிரவேசிச்சு யிறுந்தார்கள்.

விஜயநகறப்பட்டணத்துலே கம்பளத்தாற் கூட்டம் அனவறும் வந்துயிருக்கும் நாளையில், அக்காளத்து ராயர் ஸமுஸ்தாஞதிபதியான ......ருயற் அவற்கள் கம்பளசாதியாற் அனவரையும் தறிவிச்சு அவாளவாளை அவாளவாளுடைய சாஹஸாதி விதான குணுதிசயங்களை [illegible]ட்டு தெறிஞ்சி கொண்டு அவாளவாளுக்குத் தக்கின யோக்கியதானு [illegible]யாஇ சீவனங்கள் உண்டு பண்ணிக்கொடுக்குற சமயத்தில் [illegible]ஸ்தனை குச்சல பொம்ம நாயக்கனை தறிவிச்சு யோகட் [illegible]ல்லாம் விசாறிச்சு தெறிஞ்சு கொண்டு அவற் சொல்லப் [illegible]கள்ளுலே கெம்பீர புறுஷனென்று தோணப்பட்டு

நம்ம சமுஸ்தானத்துலே தானே இறுமென்று பீறதி பண்ணி யிருந்தார்கள்.

அதின் பிறக்காலும் ரூயற் சமுஸ்தானத்தில் பட்டத்து குதிரை களவில், டில்லி சமுஸ்தானத்தாற் வைரவற்க்கத்துனுலே கொண்டு போனபடியனுலே அந்த குதிரையயை சாஹஸம் பண்ணி கொண்டு வறவேணுமென்று நினச்சு ரூயற் தம்மிடத்தில் யிறுக்கப்பட்ட செனங்களை யெல்லாம் தறிவிச்சு களவு போன குதிரைய்யைத் தரிவிக்கப்பட்டவனுக்கு அனேகம் வெகுமதி பண்ணிவிக்கிரோமென்று உத்திரவு செயித சமயத்தில் யென் பெறியோற்களில் குச்சல பொம்ம ஞய்க்கன், களவு குதிரைய்யை நான் கொண்டு வந்து ஒப்புவிக்குரே மென்று வெத்திலை பாக்கும் வாங்கி கொண்டு டில்லி சீற்மைக்கு போஇ தன்னுடைய மனத்தீர சாஹஸ தயிறியங்கள்நாலே பட்டத்து குதிரைய்யை கண்டு பிடிச்சு டில்லியிலே யிறுந்து ருத்திறி-ருத்திரியாஇ பிறப்பட்டு விஜயநகரபட்டணம் வந்து சேந்து ரூயற் சமுஸ்தானத் திலே பட்டத்து குதிரைய்யை கொண்டு வந்து ஒப்புவிச்சார்கள். ரூயற் சந்தோஷப்பட்டு சகல பொகுமதிகள் செய்து ஒரு கிராமமும் உம்பளிக்கையும் குடுத்து பீறதியா வச்சுக்கொண்டு யிறுந்தார்கள்.

அதின் பிறக்காலும் ரூயற் சமுஸ்தானத்திலே சேந்த சில்லரை பாளையகற் முதலான பேற்கள் சமுஸ்தானத்துக்கு அஹிதமாக நடந்து கொண்டு சில்லரை பண்ணிக் கொண்டு இருந்தபடியனுலே என் வம்சஸ்தனுன-குச்சல பொம்ம ஞயக்கன் தன்னுடைய செவுரிய பறுக்கிறமத்திநாலே அந்தச்சில்லரை மறுமன னற்களை யெல்லாம் மட்டு அடக்கி ரூயற் சமுஸ்தானத்துக்குப் பகுதிபணம் செலுத்தி வறும் படியாக நேமுகம் பண்ணின படியனுலே ... ரூயற் மிகவும் சந்தோஷப் பட்டு ஒன்னுடைய செவுறிய பறுக்கிறமத்துக்கு நமக்கு ரொம்பவும் சந்தோஷமானபடியனுலே னீ நம்முடய சமுஸ்தானத்துக்கு சேந்த சில்லரை பாளையக்கறுக்கு யெல்லாம் முதமைக்காரனுக யிறுமென்று சொல்லி, பல்லாக்கு, உபயசாமறம் குடுத்து சகசம்பு குடை, பூசக்கிற குடை, பசவசக்கறடால், சக்குசக்கிறடால், சந்திரகாவிடால், மகரடால், கெறுட டால், அனுமந்த டால், பறுன்குசடால், பஞ்சவர் னடால், வெள்ளபக்கறடால், ஆனைமேலம்பாறி, ரணபாஷிங்கம், கமட்டசறம், முத்துசறம், வீரசங்கிலி, பாறினிகளம், சாமதொரொ ஹா வெண்டயம், சோமத்தலை, வீரகண்டாமணி இப்படிக்கு சக பிறுதுகளுடனே வெகுமதிகள் பண்ணி பாளையகறுக்கு யெ முதமைகாரனுக கிறீட்டாதிபதியாக இறுமென்று, ஆனை மே ஆணேமேல் பேறிகை, ஒட்டகைமேல் நகாறு, குதிரை எறுத்து மேல் தம்பட்டம், நவபத்து சங்கீதவாத்

குதிரை இப்படிக்கு சகல வாத்தியங்களுடனே பட்டத்து ஆனைமேல் பட்டணபிறவேசமும் வந்து பட்டம் கட்டிநாற்கள்.

அந்த நாள் முதல் வடக்கு பிறதேசத்துக்கு சில்லரை பாளையக் கறுக்கு எல்லாம் முதமைக்காற பாளையக்கற் என்ங்குற பேர் பிறசுத்திப்பட்டவராயி குச்சலிப் பொம்மநாய்க்கற் இருக்கும் நாளையில் அவற் குமாறன் பரபேதாதுலநாய்க்கன், இவருக்குப் புள்ளைகள்...... 1. எத்துலமுத்தே ஞய்க்கன். 1. யெறம ஞய்க்கன்.

ரூயர் சமுஸ்தானத்துலே அதிபருக்கிறம சாலிகளாஇ இருக்கும் நாளையில் தட்சணபிறதேசத்தில் கம்பளத்தாற் அனவரையும் அவா ளவாளுக்கு பாளையப்பட்டு நேமுகம் செயிது தட்சிணபிருத்தியத்துக்கு அனுப்பிவிச்ச சமயத்தில் என் வம்சத்தில் யெறமஞய்க்கர் யென்குற வறுக்கு நல்லுறுக்க நாட்டுலே நல்லாறு அக்காதங்கச்சிமலைக்கு மேற்க்கு, குடமறுட்டி சீத்தகல்லுக்கும் கிளக்கு, தளவாஇ பேட்டை கரைக்கும் தெற்க்கு, முதுவற் சீற்மையெல்லே யெடைமலைக்கு வடக்கு யிந்தநாங்கெல்லைக்கு வுள்பட்ட காளமலே வுள்பட கிளமேல் பத்து நாளிகை வளியும் தென்வடல் ஞலு காதவளி யிந்த நால்பாங்கு பூமிக்கு நீயே பாளையக்காருக யிறுமென்று உத்திரவு செய்தபடியனுலே என் வம்சத்துலே யெறம நாய்க்கற் பிறப்பட்டு யிவடத்துக்கு வந்து சேந்து நல்லுறுக்க நாட்டுலே அளகாபுறி யென்ங்குற வூருக்குச் சேந்து ரூயற் அவர்கள் சமுகத்தில் உத்திரவுபடிக்குத் தம்முடைய அத்துக்குச் சேந்த கானல்கள் வெட்டிவைச்சு சல்லிப்பட்டி என்ங்குற வூற் உண்டு பண்ணி அதுக்கு சேந்த கிராமமும் 14... சல்லிபட்டி பாளையக்கற் யென்று பேற் பிறசுத்திப்பட்டவர்களாஇ சகல பிறுதுகளுடனே பாளையகற் ஆண்டு கொண்டு வந்தார்.

அந்த நாள் முதல் சாலிவாகன சகாபுதம் 1268 முதல் சகாபுதம் 1723 வரைக்கும் வஷ 455க்கு பட்டங்களுடைய வரிசையும் அவாளவா ளுடைய நடத்தைகளும் இதின் கீளே எளுதிவறுகுரது.

| | | |
|---|---|---|
| 1. | யெறம ஞய்க்கன் பட்டம் ஆண்ட | வஷ 30 |
| 2. | சம்பால ஞய்க்கற் பட்டம் ஆண்ட | வஷ 24 |
| 3. | யிவற் குமாரன் சகசம்பாலஞய்க்கன் பட்டம் ஆண்ட | வஷ 18 |
| 4. | யிவற் குமாரன் மயிலப்பஞய்க்கற் பட்டம் ஆண்ட | வஷ 14 |
| 5. | யிவற் குமாரன் குறிச்சி ஞய்க்கன் பட்டம் ஆண்ட | வஷ 32 |
| 6. | யிவற் குமாரன் கதிற் ஞய்க்கற் பட்டம் ஆண்ட | வஷ 27 |
| 7. | யிவற் குமாரன் கணக்காண்டி ஞய்க்கற்பட்டம் ஆண்ட | வஷ 19 |
| 8. | யிவற் குமாரன் ரணவீரூண்டி ஞய்க்கன் பட்டம் ஆண்ட | வஷ 22 |
| 9. | யிவற் குமாரன் அமஞண்டி ஞய்க்கர் பட்டம் ஆண்ட | வஷ ... |
| 10. | யிவற் குமாரன் சல்லி வீரப்ப ஞய்க்கற் பட்டம் ஆண்ட | வஷ 26 |

11. யிவற் குமாரன் கும்மனாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ ...
12. யிவற் குமாரன் பெறியமலையாண்டி னாய்க்கன் பட்டம் ஆண்ட ௵ 9
13. யிவற் குமாரன் ராமலிங்கமலையாண்டி நாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 24
14. யிவற் குமாரன் சின்னமலையாண்டி னாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 15
15. யிவற் குமாரன் அமணலிங்கமனாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 26
16. யிவற் குமாரன் லிங்காண்டி னாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 12
17. யிவற் குமாரன் நல்லமுத்து னாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 29
18. யிவற் குமாரன் அமனாண்டி னாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 19
19. யிவற் குமாரன் வேங்குடபதி னாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 40
20. யிவற் குமாரன் ரங்கப்ப னாய்க்கன் பட்டம் ஆண்ட ௵ 30
21. யிவற் குமாரன் பெறிய நல்லமுத்து நாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 10

21 — 455

முதல் பட்டக்காற் யெறம னாய்க்கர் நாளையிலே பாலாத்தன் கரையில் யிந்த ஆத்து நடுவில் பெறிய குண்ணில் சடாரூபமும் பாத்தற்சினமும் யிப்படி அதிசயம் கண்டு அதுக்கு வடபால் புஷ்பவனமும் தெற்கு மலைமேலே கதிறனாய பெறுமாள் இருக்கிற மகுத்துவம் கண்டு பங்குனி மாசத்தில் மலை சுத்தி தேற் உண்டுபண்ணி ரதோச்சவம்மும் செய்விச்சு தன்னுடைய பாளையப்பட்டு கிராமங்களுலே கிராம தேவதை முதலானதுகளுக்கு மானியங்கள் விட்டு பாளையப்பட்டுக்கு பிறசித்தி புறுஷனாயி பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வந்தார்.

ரெண்டாண் பட்டம் சம்பாலனாய்க்கர் நாள் முதல் பதினெட்டான் தலைமுறை அமனான்டி நாய்க்கர் நாள்வரைக்கும் யெங்கள் பெறியவாள் சம்பாதிக்கப்பட்ட பிருதுகள் ஆயுதங்களுடனே அக்காலத்துக்கு ராஜியாதிபதிகள் கட்டளை செய்தபடிக்கு நிகதி செலுத்தி விச்சுக் கொண்டு மதுரை சமுஸ்தானத்துக்கு நிகுதி பணத்தில் வருஷம் 1க்கு (ஒ) ஒரு யானை குடுத்துக் கொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவித்துக்கொண்டு பிறபுக்கள் தயவுக்குப் பாத்திரனாயி நடந்து கொண்டு வந்தார்கள்.

பத்தொன்பதாம் பட்டமான வேங்குடபதி னாய்க்கற் நாளையில் அக்காலத்து ராஜீயாதிபதிகளான மைசூறு சமுஸ்தானத்தில் அயிதற்

அல்லிகான் அவற்கள் நாளையில் அறமனையாற் உத்திரவுபடிக்கு அறமனை குமுக்கு சனம் 1000 சேர்த்த சனம் 500 யிந்த சனத்துடனே பாலக்காட்டு ருசா வுன்பேறிலே தண்டுயெடுத்து பாலகாட்டுக்கு சேந்தயெல்லை புளிக்[கோட்டை]யில் டாணியும் போட்டுயிறுந்த யிடத்தில் பாலக்காட்டு ருசா செனத்தை யெல்லாம் சேதம் பண்ணி போட்டு கோட்டை கைவசம் பண்ணிகொண்டு அந்த யுத்த சண்ணு கத்தில் வெட்டுப்பட்டு பே... விட்டான்.

யிருவதான் பட்டம் ரங்கப்ப ஞய்க்கன் நாளையில் அக்காலத்தில் டிப்புசுல்தான் அவற்கள் சறுக்காறுக்கு சல்லிப்பட்டுபாளையப்பட்டுக்கு வருஷம் 1க்கு கண்டிருயன் வருஷம் 1க்கு 9010 பணம் நிகுதி செய்த படியனுலே நிகுதிபடிக்கு அறமனைக்கு பணம் செலுத்திவிச்சுக் கொண்டு சல்லிப்பட்டி பாளையப்பட்டுக்கு சேர்ந்த பதிஞலு கிராமமும் பாளையப் பட்டாஇ ஆண்டு அனுபவித்துக்கொண்டு வந்தாற்.

யென்தேப்பஞற் பெறிய நல்லமுத்து நாய்க்கர் நாளையில் அறமனையாற் யிட்ட கட்டளைப்படிக்கு நிகுதி பணம் செலுத்திவிச்சுக் கொண்டுவறும் நாளையில் மஹா ராஜ ராஜ ஸ்ரீ கும்பினி சற்காறுலே சல்லிப்பட்டி பாளையகறுக்குக்கு பத்தில் மூணுசாறி நிகுதி செய்து யிறுந்த சமயத்தில் சறுக்காறுலே றுசுவுயில்லாமல் பாருறியான படியனுலே நெகமத்துலே யிறுக்கப்பட்டவனை சறுகாறுலே கண்டு பிடிச்சு சறுகாறுக்கு குத்தவாளியான படியனுலே கும்பிணி சறுகாறுக்கு றொம்பவும் குத்தவாளியாஇ தெயிவகதி அடைஞ்சான்.

மஹா ராச ராச ஸ்ரீ கும்பினி சறுகாறுலே யென்னையும் யென்னை சேற்ந்த செனத்தையும் திண்டுக்கல் முதலான யிடங்களுலே கைதுலே வச்சுயிறுந்து தொரைகள் தயவு செயிது யெனக்கும் யென்னைச் சேர்ந்த சனத்துக்கு மாசம் 1க்கு படி வீருயன் யிறுவத்திஞலு பொன் நிகுதி செயிது வூறுலே போஇ யிறுக்கச் சொல்லி உத்திரவு செய்த படியனுலே அறமனையாற் கட்டளையிட்ட படிக்கு மாசம் மாசம் படியும் பத்திகொண்டு யிறுக்குரேன்.

நான் பதிஞலு வயசு சிறு புள்ளையாஇ யென்னைச் சேர்ந்த குஞ்சு குளந்தை சயிதமாஇ பருறியாஇ போஇயிருந்து வந்து செனத்துடனே ஞற்பது சனத்துடனே தயவு செயிது யிருக்குரபடியிலே சீவனம் பண்ணிகொண்டு சல்லிப்பட்டிக்கு சேந்த தொண்டைமான் புத்தூரு கிருமத்திலே ஆசறுலே யிறுந்து.

மஹா ருஜ ஸ்ரீ கும்பிணி துரைகள் தயவுக்கு பாத்திரஞயி காத்துக் கொண்டு யிறுக்கிரேன். யெற்றமஞயக்க ருசு.

★

# சிஞ்சுவாடி பாளையக்காரர் சம்பே நாய்க்கர் வமிசாவளி

## டி. 3131

பொள்ளாச்சி தாலுக்கா சுஞ்ச்சுவாடி பாளையக்காற் சம்பே நாய்க்கர் என்ங்குற பாளையக்காற் வம்சாவளி முதலான கைபீது என்னவென்றால் :-

பூற்வத்தில் பாதுஷ்ஹா சீற்மையில் பாளையக்காற் பாளையப் பட்டாயிறுக்கப்பட்ட கம்பள சாதி அனைவரும் ருயற் சமுஸ்தானத் துக்கு வந்த தறுணத்தில் ருயற் சமுஸ்தானத்தாற் எங்கள் வம்சஸ்த்த ரான பாலாலசித்தம னாய்க்கன் ருயற் சமுஸ்தானத்தில் குமார வற்க்க மென்று பேற் பிறசுத்திபட்டவற்களாஇ யிறுக்கும் நாளையில் அவ றுடைய புள்ளையள் யேளு பேறிலேயும் ரெண்டான் புள்ளை புரந்துது. யெத்துலமுத்த னாய்க்கறுக்கு ஒரு புள்ளை புரந்து வுடனே அந்த புள்ளைக்குத் தாயாற் தெயிவகெதியானாள். அந்த தாயி இல்லாத குளந்தையயை வச்சுக்கொண்டு பறிதாபத்துநாலே ஈனாத பத்துனிப் பசு வுடத்தில் கொளந்தையை போட்டுப் பிறதட்சண நமஸ்காரம் பண்ணி வேண்டிக்கொண்டபடியனாலே அந்த பசுவு தினபிறிதியும் தானாக குளந்தையிடத்துக்கு வந்து மூணு காலமும் பால் குடுத்துக் கொண்டு இருக்குறபடியனாலே இது சேதிகள் ருயற் ஸமுஸ்தானாதிபதிகளான சோமதேவருயற் அவற்கள் கேட்டு அந்த பசுமாட்டையும் குளந்தைய யெயும் தறிவிச்சுப் பாத்து மஹா ஆச்சிறியப்பட்டு அந்தக் குளந்தை யிடத்தில் ரொம்பவும் பிறிதியாக அபிமானம் வச்சபடியினாலே தினம் தினம் பிறவற்த்தமாஇ வளந்து கொண்டு இருந்தான். ருயற் அவற் களும் தினகாலமும் அந்த குளந்தை சுகமாயென்று விசாறிச்சுக் கொண்டுயிறுப்பார்கள் அந்த குளந்தை பசுவுபால் குடுத்து வளந்த சின்னம நாய்க்கன் என்ங்குறவனுக்கு மூணு வயசு ஆனஓடனே ருயற் சமுஸ்தானத்தில் அறமனைக்குக் கூட்டிபோஇ வச்சுக்கொண்டு பிதுற்பாவியமாஇ அபிமானமாயி வளந்துக் கொண்டு யிறுக்கும் நாளையில் விபாவாதி சுப யோகங்கள் பண்ணிவிச்சு கொண்டு வித்தியா பியாசம் தனுற்வித்தியாதிகள் முதலானதுகளிலே மிகவும் வல்லவனாயி அப்பியாசித்துக் குடுத்து பசுவன்பால் உண்டு வளந்தபடியினாலே ருயற் அவற்கள் வுண்டாடி கோத்திரம் சின்னம னாய்க்கற் யென்று பேறும் குடுத்து நம்பிபுத்தூற் இடங்களில் இவறுக்கு மன்னவேட்டாஇ

விடவேணுமென்று னினைச்சு பதினாறு வயிசான உடனே பல்லாக்கு உபயசாமரம், ருயக்காணு, ரணபாக்ஷிங்கம், முத்துதுராயி, பூசக்கிற கொடை, முத்தொண்டி, பச்சொண்டி, சோடுசாலுவை, வெள்ளை பக்குறடால், சங்குசக்கிறடால், சுறுட்டி, தீபட்டி முதல் பின்னும் முப்பத்திரண்டு பிறுதும் பதினெட்டு மேளவாத்தியமும் குடுத்து வேண்டிய வெகுமதியும் பண்ணித் தட்சணப் பிறதேசத்தில் நம்பிபுத்தூற் கெடியும், கோறிக்கடவு கெடியும் இந்த இரண்டு கெடி களுக்கும் சேந்த சீமைக்கு னீயே மன்சுபைதாரனுயி இறுமென்று பட்டாபிஷேகம் பண்ணினாற்கள்.

வுண்டாடிசின்னம நாய்க்கற் என்று பேற் பிறசுத்திப்பட்டவருயி சகல பிறிதுகள் வாத்தியங்களுடனே சிறுது பவுசுகளையும் கூட்டிக் கொண்டு தெற்கு நோக்கி வந்து கருவூருக்கு மேற்கு நம்பிபுத்தூறில் வாசமாயிருந்துக்கொண்டு நம்பிபுத்தூற் கெடியும் கோறிக்கடவு கெடியும் ரெண்டு கெடிக்கும் சேந்த சீமையும் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு மன்னறிக்கமாஇ பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தாற்.

இவற் ரெண்டான் குமாரன் சம்பே னுய்க்கன் செவுறியோதாறிய காம்பிறியங்களிலே பிறபலிச்சு பவுற்ஷம் உண்டு பண்ணிக்கொள்ள வேணுமென்று யோசிச்சு தாமாக விங்கடமாஇ ருய சமுஸ்தானத் துக்குப்போஇ தம்முடய பவுறுஷம் நல்லாண்மை யெல்லாம் காண்பி விச்சு மெப்புதலைபண்ணி சிஞ்சிவாடி பாளையகருயி பட்டமும் கட்டிக்கொண்டு சகல பிறுதுகளுடனே வந்து விங்கடமாஇ சிஞ்சிவாடி பாளையக்கற் என்று பேற்பட்டவருயி இறுந்தாற்.

அந்த நாள் முதல் சாலீவாகன சகாபுதம் 1212 முதல் 1722 வருஷம் வரைக்கும் ஷூ 510க்கு பட்டம்ங்களுடைய வறிசைகளும் அவாளவாளுடைய நடத்தையளும் இதன் கீள் எழுதிவருகுறது.

1. சம்ப்பே னுய்க்கன் பட்டம் ஆண்டு கொண்டு வந்த ஷூ 32
2. யிவற் குமாரன் பெத்த னுய்க்கன் பட்டம் ஆண்ட ஷூ 18
3. யிவற் குமாரன் பொம்மைய னுயக்கன் பட்டம் ஆண்ட ஷூ 12
4. யிவற் குமாரன் முத்துமலையாண்டி னுய்க்கற் பட்டம் ஆண்ட ஷூ 11
5. யிவற் குமாரன் வல்லகொண்டம னுய்க்கற் பட்டம் ஆண்ட ஷூ 29
6. யிவற் குமாரன் முத்துவேல்லாயுத னுய்க்கன் பட்டம் ஆண்ட ஷூ 15
7. யிவற் குமாரன் குமார பொம்ம னுய்க்கற் பட்டம் ஆண்ட ஷூ 19
8. யிவற் குமாரன் பொன்னுசாமி னுய்க்கன் பட்டம் ஆண்ட ஷூ 28

9. யிவற் குமாரன் காமலு நாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 26
10. யிவற் குமாரன் கோபால ஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 14
11. யிவற் குமாரன் வறதரும ஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 9
12. யிவற் குமாரன் குமாருவேலு ஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 17
13. யிவற் குமாரன் தொப்பஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 25
14. யிவற் குமாரன் பெரியமலையாண்டி நாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 22
15. யிவற் குமாரன் சின்ன பொம்மஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 20
16. யிவற் குமாரன் கஞ்சிவறத ஞய்க்கன் பட்டம் ஆண்ட ௵ 10
17. யிவற் குமாரன் வெங்கிட்டரும ஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 26
18. யிவற் குமாரன் முத்தே ஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 20
19. யிவற் குமாரன் குமாரவேலாயுத ஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 16
20. யிவற் குமாரன் தாதுலஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 19
21. யிவற் குமாரன் யெத்துலப்பஞய்க்கற்பட்டம் ஆண்ட ௵ 11
22. யிவற் குமாரன் ரங்கசாமிஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 60
23. யிவற் குமாரன் பொன்னுமலையாண்டி நாய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 40
24. யிவற் குமாரன் சின்னபொம்மஞய்க்கற் பட்டம் ஆண்ட ௵ 11

24 முதல் பட்டக்காறஞன சம்பேஞய்க்கற் நாளையிலே ருயற் சமுஸ்தானத்துலே பிறுதுகள் உண்டுபண்ணிக்கொண்டு பாளையகற் பிறபுத்துவமாஇ நேமுகம் செய்து கொண்டு பாளையப்பட்டு எல்லைக்கு விபறம் யெறம [நாய்க்கன்] பாளையப்பட்டு யெல்லைக்கு தெற்க்கு தளி பாளையப்பட்டு எல்லைக்கு மேற்கு யெறமஞய்க்கன் பாளையப்பட்டு யெல்லைக்கு கிளக்கு ஷை யெத்துலஞய்க்கன் பாளையப்பட்டுக்குத் தெற்கு யிந்த சதிரத்துக்கு உள்பட்ட பூமியில் கௌமேல் காதவளி தென்வடல் மூணு நாளிகைவளி யிந்த பூமியில் சுச்சுவாடிக்கு சேந்த உபகிறுமமும் சயிதம் கிறுமமும் 14 யிந்த பதிஞலு கிறுமமும் உண்டு பண்ணி சுஞ்சுவாடி பாளையப்பட்டாஇ அனுபவிச்சு கொண்டு வந்தாற்.

ரெண்டான் பட்டக்காரஞன பெத்த ஞய்க்கன் நாள் முதல் யிறுவத்தி மூணும் பட்டம் பொன்னுமலையாண்டி நாய்க்கற் நாள் வரைக்கும் யெங்களுடைய பெரியவாள் சம்பாதிக்கப்பட்ட பாளையப் பட்டு ஆண்டுக் கொண்டு அறமனையாற் கட்டு செய்தபடிக்கு னிகுதிபடிக்கு பணம் செலுத்திக் கொண்டு வந்தது...

மதுரை சமுஸ்தானத்தில் வறுஷம் 1க்கு னிகுதி...ருச கோபாலி [பணம்] 500 மயிசூறு சமுஸ்தானத்தில் ௵ 1க்கு நிகுதிவீருயன் [பணம்] 7004 பணம் யிந்த நிகுதிபடிக்கு பணம் செலுத்திக் கொண்டு பாளையகற் பட்டம் ஆண்டு கொண்டு வந்தாற்கள்.

யென் தோப்பனுருனவன் சின்ன பொம்ம னுய்க்கன் மஹா ராச ராசஸ்ரீ கும்பினிதுரை யவற்கள் சறுக்காறுக்கு மிகவும் குத்தவாளியாஇ நடந்து கொண்டபடியனுலேயும் பருறியாஇ சறுக்காறுலே அகப் பட்ட படியனுலே மிகவும் குத்தவாளியானபடியனுலே கும்பினியாற் உத்திரவுபடிக்கு தெயிவகதியானுன்.

நாளது ஆசறுலே யிறுக்கப்பட்ட முத்துமலேயாண்டி சம்பே னுயக்கன் நானும் என்னேச் சேந்த சனமும் திண்டுக்கல் முதலான யிடங்களிலே கைதுலேயிறுந்து மகா-ராச ராச ஸ்ரீ காரோ சாயபு துரை யவற்கள் கடாட்சம் செயிது மாசம் 1க்கு ஷி வீருயன் பணம் 13 பணம் ரு பணம் உத்திரவு செயிது ஊறுலே போஇ இருக்கச் சொல்லி உத்திரவு செயிதபடியனுலே நிக்குதிபடிக்கு செலுத்தி கொண்டு ஆசறுலே யென்னே சேந்த செனம் பதனஞ்சு சனத்துடனே மகா-ராச-ராச ஸ்ரீ துரை யவர்கள் கட்டுபண்ணின படியிலே சீவனம் பண்ணிக்கொண்டு சுஞ்சுவாடி குடியிறுப்புக்காரனுயி கும்பினியார் தயவுக்கு பாத்திரனுயி காத்துக்கொண்டு யிறுக்குரேன்.

சம்பே நாயக்கன் ருசுவு.

★

# தவசிமடு ஜமீன்தாறி வம்முசாவழி கணக்கு

## டி. 3843

இந்தத் தவசிமடு வம்முஷாவழிக் கணக்கு ஓலைப்பட்டயத்திலிருந்து எழுதினது.

முன் யெங்களுக்குப்பாளையப்பட்டு வந்தது. முன் நாங்களிருந்தது குத்தி தேசம். அவடத்தில் யெங்களை துலுக்கர் பெண்கேட்ட நிமித்தியமாக எங்களுடைய பொக்கிஷம் பூஷுணுதிகள் சகலத்தையும் யெடுக்காமல் விட்டுப்போட்டு தெட்சணம் பாண்டிய தேசத்துக்கு எங்களுடைய குஞ்சு குழந்தை வலசையும் கூட்டிக் கொண்டு வருகையில் குறுக்கே ஆத்தில் பிறவாகம் மிகுதியாய் வந்து மறித்துக் கொண்டது. அந்த முன்னுக்கு வெள்ளத்தில் வரமாட்டாமல் எங்களுடைய தேவதைகளை ஆருதனைப்பண்ணுகிற முன்னுக்கு தேவதைகள் பிறத்தியட்சமாய் வந்து ஆத்தங்கரையில் ஒரு புங்க மரத்தை வளைத்து குடுத்தது. அந்த மரம் குறுக்கே வளைந்து குடுத்தது. அந்த மரத்தின் பேரில் நாங்கள் சகலபேரும் ஆறுதாண்டி தென்கரை சேர்ந்தோம். எங்களிடத்தில் பெண்கேட்ட துலுக்கன் எங்களைப்பிறகே துடர்ந்து வருகிற முன்னுக்கு அதில் குறுக்கேயிருந்த புங்கமரம் துலுக்கரைக் கண்டமாத்திரத்திலே அந்த தூரம் அவர்களுக்கு வளைந்து கொடாததினாலே அந்த துலுக்கர் திரும்பிப் போய் விட்டார்கள்.

அதின் பிறகு நாங்கள் சகலமான பேருங்கூட்டித் தெட்சணம் பாண்டியன் தேசமாகிய மதுருபுரிக்கு வடமேற்கு மூலையில் சிறுமலைச் சார்பில் எங்களுடைய வலசை குஞ்சு குழந்தைகள் சகலரையும் யிறக்கிக்கொண்டு எங்களுடைய பெரியவர்கள் சோத்தழனுய்க்கர் எங்களுடைய தெய்வங்களை நோக்கி ஆருதனைப்பண்ணி மகாதவசு பண்ணிக்கொண்டிருந்தார்கள். மேலும் ருத்திரி பகல் அறுபது னாளிகையும் சோதியை வைத்துக்கொண்டு தபசு பண்ணுகையில் எங்களுடைய தேவதை பிறத்தியட்சமாய் வந்து அவனை நோக்கி மகா தபசு பண்ணினதாலே இந்த இடத்தில் தானே யிருந்துக் காட்டுச் செடியளை வெட்டி ருசுவுபண்ணி கிருமம் உண்டுபண்ணி அந்த கிருமத்துக்குப் பேர் நீ தவசு பண்ணின யிடமானதுனாலேயும் சன்னாசி தவசியள் பெரியவர்களிருக்குற மலையாகச்சேயும் பேர் தவசி மடுவென்று சொல்லியும் எங்கள் பெரியவர்கள் தவசு பண்ணினவர்

களுக்கும் பேர் சோத்தழனுய்க்கர் யென்று பேருங்குடுத்துயிருந்தார் கள். அதே மேரைக்கிக் காடுகரை வெட்டி ருசுவு பண்ணி பயிர் பச்சை வருகையில் அப்போது பாண்டிய ருச்சியத்துக்கு கற்தருன கற்தாக்களாகிய னுகமனுய்க்கரவர்கள் சந்திரசேகரபாண்டியன் வீர சேகர சோழனுக்கும் ஒன்றுக்கொன்று சல்லியமாய் இருந்து அந்த சல்லியம் தீருகிறதற்கு இந்த மாற்கமாக வந்து திண்டிக்கல்லுக்கு வந்து பழனிக்கி சுவாமி தெரிசனத்துக்குப் போக பயணமாகையில் னுகம னுய்க்கரவர்களுக்கு உடம்பில் சரீர சொஸ்த்தமில்லாமல் இருந்து அத்த முன்னுக்கு அவர்களிடத்திலிருந்து பெரிய மனுஷாள் நாகம னுய்க்கர் அவர்கள் சமட் ஸமத்தில்ச் சொன்ன சமாச்சாரம் நாம் வந்த வழியில் தவசிமடு வென்று ஒரு பாளையப்பட்டு யிருக்குது, அந்த ஊரில் ஒரு கம்பளத்தான் சுவாமியை வைத்துக் கொண்டு யென்னேர மும் தவசு பண்ணிக்கொண்டிருக்கிருன். அவனை வரவளைத்தால் சரீர பீடையானதுக்கு பிறிதி சொல்லுவானென்று சொன்ன முன்னுக்கு அந்த கம்பளத்தானை சீக்கிரம் அழைத்துவரச் சொல்லி உத்திரவாகி அவர்களுடைய மனுஷாள் வந்து எங்களுடைய பெரிய மனுஷாள் சோத்தளனுய்க்கன் தவசு பண்ணிக்கொண்டிருந்தவரைக் கூட்டிக்கொண்டு போய் கற்தாக்களுடைய சமுகத்தில் விட்டார்கள். அந்த முன்னுக்கு நாகமனுய்க்கர் அவர்களுக்கு உடம்பில் சரீர பீடையா யிருக்குது. அதுகாரியம் பார்க்கச் சொல்லி உத்திரவு ஆச்சுது. அதின் பேரில் எங்களுடைய பெரிய மனுஷன் சோத்தள னுய்க்கன் தேவதையை பிருத்தினைப்பண்ணி விபூதியை மேலில்ப் போட்டவுடனே உடம்பில்க் கண்டிருந்த பீடை நிவாறணமாய்ப் போய் விட்டுது. அந்த முன்னுக்கு விபூதி போட்டவர் பேரில் மிகுந்த சந்தோஷமாகி கற்தாக்கள் உத்திரவு ஆனது. நீ தவசு பண்ணிக்கொண்டிருந்த இடத்தில் காடு செடிகள் யிருக்குறதெல் லாம் வெட்டி ருசுவுபண்ணி வைத்துக் கிருமங்கள் உண்டுபண்ணிக் கொண்டு தவசிமடு பாளையக்காரனென்று பேரென்பிச்சுக் கொண்டு எங்களுடைய உத்திரவு மேரைக்கிச் சொன்னபடி கேட்டு நடந்துக் கொண்டிரு வென்று உடுபிரையுங் குடுத்து அனுப்பிவிச்சார்கள்.

அதே மேரைக்கி எங்களுடைய பெரியவர் சோத்தளனுய்க்கர் தவசுமடு பாளையத்துக்கு வந்து உபரி செடிகாடு யிருந்ததெல்லாம் அறுவுப்பண்ணி பின்னும் அதிக கிருமம் உண்டுபண்ணி அந்த கிருமங் களுக்கெல்லாம் குடியளும் வரவளைத்து வைச்சு ருசுவுபண்ணி வைத் தோம். ஆனதினுலே தவசிமடுபாளையம் என்றும் கற்தாக்கள் பேரும் கொடுத்து என்னைக்கும் கோத்திருகோத்திரம் வரைக்கும் பூற்வீக மாயிருக்கச் சொல்லிக் கற்தாக்கள் உத்திரவு செய்தார்கள். அதே

மேரைக்கி எங்களுடைய பெரிய மனுஷன் சோத்தளனுய்க்கர் நடந்து கொண்டு வந்தார்.

அந்த முன்னுக்கு நாகமனுய்க்கர் குமாரன் விசுவனுதனுய்க்கர் அவர்கள் பாண்டிதேசத்துக்கு கற்தனுக ஆனதுக்கு மேல் அரியனுயக முதலியாருங் கற்தாக்களும் பாண்டியன் கோட்டையை வெளியாக எழுபத்திரெண்டு கொத்தளத்துடனே கோட்டையும் போட்டு திருமஞ்சன வாசலுக்கு பிறதெட்சணமாகிய யெழுபத்து ரெண்டாங் கொத்தளங் காத்துக்கொண்டிருக்கச் சொல்லி உத்திரவு கட்டளை யிட்டார்கள். அதே மேரைக்கி அந்தக் கொத்தளமுங் காத்துக் கொண்டு அறுபது வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில் விசுவனுதனுய்க்கர் அவர்களும் அரியனுயக முதலியாரும் கயத்தாத்து மேல் சண்டைக்கிப் போகையில் எங்களுடைய சோத்தளனுய்க்கரை வரவழைத்து கற்தாக்கள் கூடாரத்தை ஆசீருகக் காத்துக் கொண் டிருக்கச் சொல்லி உத்தாரம்பண்ணி அந்தக் கூடாரத்துடனே போர முன்னுக்கு சண்டையானதில் சோத்தளனுய்க்கர் சிவலோக பிறுப்தி யானுர்கள்.

ரெண்டாம் பட்டம் சோத்தளனுய்க்கர் குமாரன் றெகுறும சோத்தளனுய்க்கர் கற்தாக்கள் உத்திரவுபடிக்கு நடந்துக்கொண்டு காணியாட்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு நாற்பத்தி ரெண்டு வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

மூணும்பட்டம் அவர் குமாரன் றெகுறுமுசோத்தளனுய்க்கர் பட்டத்துக்கு வந்ததுக்குமேல் காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்கள் உத்தரவுபடிக்கி நாற்பத்தொன்பது வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

4ம் பட்டம் அவர் மகன் றெகுறுமுசோத்தளனுய்க்கர் காணியாச்சி யாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்கள் உத்திரவுபடிக்கி நடந்துக்கொண்டு ஐம்பது வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண் டிருந்தார்.

5ம் பட்டம் அவர் மகன் றெகுறுமுசோத்தளனுய்க்கர் காணியாச்சி யாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்கள் உத்திரவுபடியே நடத்துகொண்டு 2 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டு யிருந்தார்,

6ம் பட்டம் அவர் மகன் பொன்னுசாமி சோத்தளனுய்க்கர் காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்கள்

உத்திரவுபடியே நடந்துக்கொண்டிருந்து பத்து வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

7ம் பட்டம் அவர் மகன் றெகுருமு சோத்தளனுய்க்கர்ப் பட்டத்தில் கற்தாக்களாகிய திருமலேனுய்க்கர் அவர்கள் அதிகாரத்தில் ருமபப்பய்யன் தளகற்தம் பண்ணு கையில் சேதுபதிபேரில் தண்டெடுத்து போகையில் எங்களேயும் வரச்சொல்லி உத்திரவாகி நாங்களும் போய் அந்தச் சண்டையிலிருந்து உத்திரவுவாதம் பண்ணித் திரும்ப ருமபப்பய்யன் மதுரைக்கி வருகிற முன்னுக்கு கூடவே வந்து கற்தாக்களிடத்தில் ருமபப்பய்யரவர்கள் எங்களுக்கு வெகுமதி வஸ்திர பூஷணுதிகள் வாங்கிக்குடுத்து தவசிமடுவுக்கு எங்களே அனுப்பிவிச்சார்கள். அதே மேரைக்கி எங்கள் காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக் கொண்டு கற்தாக்கள் உத்திரவுபடியே நடந்துகொண்டு 42 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டு யிருந்தார்கள்.

8-ம் பட்டம் சோத்தளனுய்க்கர் பட்டத்தில் தானதற்மம் பண்ணிக்கொண்டு காணியாட்சியாகிய கொத்தளமுங் காத்துகொண்டு கற்தாக்கள் உத்திரவுபடியே நடந்துக்கொண்டு 40 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டு இருந்தார்.

9ம் பட்டம் அவர் மகன் றெகுருமு சோத்தளனுய்க்கர் பட்டத்தில் அவரைச் சொக்கனுத னுய்க்கர் அவர்கள் வரவழைத்து தஞ்சாவூர் கோட்டையின் பேரில் படையெக்குற முன்னுக்கு கூடாரம் காவலாக வரச்சொல்லிக் கூட்டிக் கொண்டு பொய்ச் செயமாகிப் பாளேயம் வந்ததின் பேரில் றெகுருமு சோத்தளனுய்க்கரை கற்தாக்கள் குமார வற்கமென்று ரொம்பவுஞ் சந்தோஷமாகி வெகுமதி வஸ்திர பூஷணுதியளுங் குடுத்து அனுப்பிவிச்சார்கள். அதே மேரைக்கிக் காணியாச்சியாகி கொத்தளமுங் காத்துக் கொண்டு கற்தாக்கள் உத்திரவு படி நடந்துக்கொண்டு 45 வருஷம் துரைத்தனம் பண்ணிக் கொண்டியிருந்தார்.

10ம் பட்டம் அவர் மகன் சோத்தளனுய்க்கர் தான தற்மம் செய்துக்கொண்டு காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்கள் உத்திரவுபடியே நடந்துக்கொண்டு 33 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டியிருந்தார்.

11ம் பட்டம் சோத்தளனுய்க்கர் மகன் றெகுனுத சோத்தளனுய்க்கர் தானதற்மங்கள் அநேகங்கள் செய்துக்கொண்டு கற்தாக்கள் உத்திரவுபடியே நடந்துகொண்டு 31 வருஷம் துரைத்தனம் செய்துக் கொண்டிருந்தார்.

12ம் பட்டம் றெகுனத சோத்தளனுய்க்கர் குமாரன் சோத்தளனுய்க்கர் 19 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டு கற்தாக்கள் உத்திரவுபடியே நடந்துக்கொண்டு தானதற்மத்துடனே துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

-0-